
நேற்றுவரை
- சிபா -
MITHRAVINTHA

# நேற்றுவரை

## 1

ஆயிரம் ஆயிரம் மக்கள் திரையரங்கில் நுழைய நுழைவுச்சீட்டு கிடைக்காதபோது, பொருட்காட்சியில் நுழைந்து வாங்க போதிய பணமில்லாதபோது, கோயில் களுக்குச் சென்று சாமி கும்பிட சரியான மனநிலையில் இல்லாதபோது, மாத கடைசி என்பதால் பையிலும், பருப்பு டப்பாவிலும் சில்லரை புரளாதபோது, வந்து அமரும் கடற்கரை.

பின்னிரவு நேரம். அதனால் மக்கள் கரைந்திருந் தார்கள். வீடு திரும்பியே ஆகவேண்டும் என்ற கட்டா யத்தில் இல்லாத விடுதியில் தங்கிப் படிக்கும் பணம் படைத்த காளைகளும், கன்னிகளும் கடற்கரை ஓரத்தில் மணல் பிரதேசத்தில் அமைந்திருந்த உணவு விடுதியில் குளிர்பானம் அருந்திக் கொண்டிருந்தார்கள். புகைத்துக் கொண்டிருந்தார்கள்.

பஞ்சையும், நெருப்பையும் பக்கத்தில் வைக்கக் கூடாது என்று, பாரதப் பெரியோர்கள் விதித்த விதியை மாற்றி குமரன்களும், குமரிகளும் தொடையில் தட்டி, இடையில் கிள்ளி ஆரவாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்

MITHRAVINTHA

கள். சிரிப்பும், உற்சாகமும் அவர்கள் கூடியிருந்த இடத்தில் பொங்கி வழிந்தது.

அவர்களுக்குச் சற்றுத் தள்ளி அலைகள் அசைந்து அசைந்து ஆடிக்கொண்டிருந்த இடத்தில் தனிமை தனித்திருந்தது. அலைகள் வந்து தழுவிவிட்டுச் சென்றதால் ஈரம்படிந்த மண்ணில் நண்டுகள் ஒன்றை ஒன்று துரத்தி ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. ஈரத்தில் நனைந்த கடற்காற்று சுகமாக மிதந்து மிதந்து, உலவிக் கொண்டிருந்தது.

தண்ணீரில் நிலைத்து கொண்டிருந்த கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டிருந்த விளக்குகளின் வெளிச்சம் கடல்நீரில் பிரதிபலித்தது. தொடுவானில் தொடங்கிய தாரகைகளின் குழு வானக் கடல் எங்கும் இறைந்து நிலவழகிக்கு வாழ்த்துப் பாடிக் கொண்டிருந்தன.

அலைகளுக்குச் சற்றுத் தள்ளி அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

இனியா, உதய்.

இருவரும் தனியாக உட்கார்ந்திருந்தார்கள். மேலே நிலா அவர்கள் இருவரும் ஏதாவது காதல் விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள், அதை நாம் பார்க்கலாம் என்று ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது. மேகங்கள்கூடத் தங்களுடைய வழக்கமான விரைந்து செல்லும் பணியை ஒதுக்கி வைத்துவிட்டு வானில் நங்கூரம் அடித்து நிறுத்தப்பட்ட கப்பல்கள் போல தள்ளாடித் தள்ளாடி நின்றிருந்தன.

இனியா எலுமிச்சை மஞ்சளில் சேலை அணிந்திருந்தாள். அதே நிறத்தில் ரவிக்கை. அதே நிறத்தில் காதில் பிளாஸ்டிக் தோடுகள். அதே நிறத்தில் பொட்டு. ரவிக்கை முன்பக்கமும், பின்பக்கமும் ஆழமாக வெட்டப்பட்டிருந்தது. இனியாவின் பாக மருவற்ற மேனியை வெளிச்சம்



போட்டுக் காட்டியது. முதுகில், ரவிக்கை மூடாமல் தெரிந்த உடல் பகுதியில் பவுடர் பூசியிருந்தாள். முன்னால் கழுத்து, மார்புகளின் தொடக்கம் என்று கவர்ச்சி கவர்ச்சியாய்த் தெரிந்த இடங்களிலும் பவுடர் பூசியிருந்தாள். தரைத் தரைப் பின்னி இருந்தாள். ஆயிரம் அந்தி முல்லைகளைத் தொடுத்து சரமாக்கித் தொங்கவிட்டிருந்தாள். முன்னால் ஒருகொத்து தலைமுடி அழகாய் வளைந்து பின்னலுடன் சேராமல் கோபித்துக் கொண்டு தனியாய், கன்வெறி கொண்டது போல் காற்றில் லேசாய் தள்ளாடியது. மொத்தத்தில் ஆகாயத்திலிருந்து ஓர் அழகு நிலா. தரையில் இறங்கி உலா வந்து ஓய்வெடுக்க உட்கார்ந்தது போல் அவள் தெரிந்தாள்.

உதய் வெள்ளை பேண்ட் அணிந்திருந்தான். இன்றைய நாகரீகத்தின் எதிரொலியாய் லூசான ஊதாநிறமுழுக்கை சட்டை அணிந்திருந்தான். ஷாம்பூ போடப்பட்ட அவனது தலைமுடி அலை அலையாய் இருந்தது. மீசை திருத்தமாக இருந்தது. உதடுகள் ரோஸ் நிறத்தில் இருந்தன. பவுடர் பூசியிருந்தான். சட்டையின் மேல் இரண்டு பித்தான்களைப் போடாமல் விட்டிருந்தான், அவனுடைய மார்பில் சுருள் சுருளாய் கருகரு என்று வளர்ந்திருந்த முடி அவனுடைய ஆண்மையை அறிவித்துக் கொண்டிருந்தது.

இனியாவின் அருகில் நெருங்கி அமர்ந்தான்.

இனியா அவனிடமிருந்து விலகப் பார்த்தாள். உதய் சட்டென்று இனியாவின் தோளில் கைவைத்து, அவள் கழுத்தை வளைத்துத் தன் பக்கமாகத் திருப்பினான். அவளை ஏக்கமாகப் பார்த்தான்.

இனியாவின் கண்களிலும் அந்த ஏக்கம் பிரதிபலித்தது. உதய் தன் முகத்தை மெல்ல மெல்ல அவள் முகத்தருகே கொண்டு சென்றான். இனியாவின் கண்களைப் பற்றி,

MITHRAVINTHA

[illegible] கனைகளைப் [illegible] [illegible] [illegible] பக்கக் கவர்ச்சிக் கட்டு இனியா கனவுகளைப் பற்றி [illegible] இருக்கும்போது இனியா எழுதும் அளவு நெருக்கத்தில் [illegible] விலகினாள்.

"ஏன் டார்லிங்? ஏன் விலகிட்டே?" என்று குரலில் ஆச்சரியம் வெளிப்படக் கேட்டான் உதய்.

"வேண்டாங்க..."

"அதான் ஏன்னு கேக்கறேன். எம்மேல நம்பிக்கை இல்லையா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்காம ஏமாத் திட்டுப் போயிடுவேன்னு நினைக்கறியா? அப்படியே இருந்தாலும் சும்மா வெறும் முத்தத்தால் எந்தப் பெண் ணும் கர்ப்பம் ஆனதா எந்த விஞ்ஞானச் செய்தியும் இது வரைக்கும் வரலை."

"ச்சீ...பேச்சைப் பாரு உங்கமேல நம்பிக்கை இல்லா மயா நான் உங்க கூட இவ்வளவு தூரம் தனியா வந்திருக் கேன்? அய்யா இதுவரைக்கும் முத்தமே தராத மாதிரி கேள்வி வேற. முத்தத்தால் கர்ப்பம்னா இதுவரைக்கும் நான் ஆயிரம் முறையாவது கரு தரிச்சிருக்கணும்."

"ஏய்...எண்ணிக்கிட்டு வேற இருக்கியா?"

"போங்க" என்று சிணுங்கிய இனியா தன் கரங்க ளால் முகத்தைப் பொத்திக் கொண்டாள். விரல் இடுக்கு களின் வழியே அவனைப் பார்த்தாள்.

உதயின் முகத்தில் லேசான வருத்தமும், கோபமும் இருந்தது.

"இப்ப ஏன் வேண்டான்னு மறுத்தே? அதுக்கான காரணத்தைச் சொல்லு" என்றான்.

"பின்ன என்னவாம்? இன்னிக்கு ஒருநாள் வருவீங்க. என்னைத் தொடுவீங்க என்கூட உல்லாசமாகப் பேசிக் கிட்டு இருப்பீங்க. முத்தமெல்லாம் கொடுப்பீங்க.



போய்டுவீங்க. அப்புறம் நீங்க எப்ப வருவீங்களோன்னு நான் ஏக்கத்துடன் காத்திருக்கணும். அப்பா கேக்கறாரு 'எம்மா நீ காதலிக்கற பையன் என்ன வேலை செய்யு றான்'னு. உங்களைப் பத்தி நினைச்சிக்கிட்டு நான் கனவு கண்டுக்கிட்டிருப்பேன். தலையணை எல்லாம் பாழாப் போவுது. அப்பா கேக்கற கேள்விக்கு நான் என்ன பதில் சொல்றது? 'எனக்கே தெரியலப்பா. உங்க மாப்பிள்ளை ஒரு புரட்சி வீரர்னுதான் எனக்கு தெரியும்'னு சொல்றதா? நமக்கு வேண்டாங்க இதெல்லாம். ஒரு தனி மனிதனா இருந்து புரட்சி பண்ணி உங்களால சமு தாயத்தை மாத்த முடியாதுங்க. உங்களை யாரும் புரட்சி வீரர்னு சொல்லமாட்டாங்க. தீவிரவாதி, நக்ச லைட்டு, பயங்கரவாதின்னுதான் சொல்லுவாங்க. எந்தப் பொண்ணுக்குத் தன் கணவன் பயங்கரவாதின்னு சொல் றதைக் கேக்கப் பிடிக்கும்? சொல்லுங்க."

"ஏய்...அழாதே. அழாதம்மா. அழாதடி கண்ணு காதலுக்காக கொள்கையை விடச் சொல்றியே. உனக்கே இது நியாயமாப்படுதா? என் கொள்கையில் இருக்கற நியாயம் உனக்குத் தெரியலையா? இல்ல தெரிஞ்சும் தெரியாத மாதிரி பேசறியா? எனக்கு வாழ் நாள் எல்லாம் துணையா இருக்க வேண்டிய நீயே இப்படிப் பேசினா..." என்று உதய் சொல்லிக் கொண்டிருந்தவன், பாதியில் நிறுத்தினான்.

அவன் முகம் மாறியது. கடலில் இருந்து கரை நோக்கி சத்தமேயின்றி அந்தப் படகு வந்து மணலில் செருகியதுதான். அது வேகமாக செல்லக்கூடிய எந்திரப் படகு. கரையை நெருங்கும்போது எந்திரத்தின் ஒலி கேட்கக்கூடாது என்பதற்காகப் படகோட்டி அதன் எந்திரத்தைச் செயல் இழக்கச் செய்திருந்தான்.

படகில் இருந்து நான்கு பேர் குதித்தார்கள். படகின் இருபுறங்களில் இருந்தும் இரண்டிரண்டு பேராக வெகு

MITHRAVINTHA

விரைவாக அதே நேரத்தில் பூனையைப் போலக் குதித்தார்கள். அவர்கள் நான்கு பேரும் கைகளில் துப்பாக்கி வைத்திருந்தார்கள். இறுதியாகப் படகிலிருந்து அவன் இறங்கினான்.

ஆறடி உயரமும், சிங்கம் போன்ற நடையும். அந்த இரவிலும் குளிர்கண்ணாடி அணிந்திருந்தான் அவன் உதடுகளில் ஒரு சுருட்டுப் பொருத்தியிருந்தது அது கொள்ளிக்கட்டையைப் போல ஒளிர்ந்தது அவன் முகத்தைச் சுற்றி சுருட்டுப்புகை ஒரு மேகம்போல் படர்ந்தது. இனியா, உதய் இருந்த இடம் நோக்கி வந்தான். வரும்போதே சிரித்தான். அடக்கப்பட்ட அச்சுறுத்தலான சிரிப்பு.

துப்பாக்கி ஏந்திய நால்வரும் உதயையும், இனியாவையும் குறிவைத்துக் கொண்டு ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தார்கள்.

இனியா முகத்தில் திகில் படர்ந்தது.

உதய், அவள் கையைப் பற்றினான்.

துப்பாக்கி 'டுமீல்' என்று வெடித்தது. மணல் சிதறியது.

"அசையக்கூடாது" என்றான் துப்பாக்கி வைத்திருந்தவர்களில் ஒருவன்.

ஆயுதம் எதுவுமின்றி நடந்து வந்தவன் இனியாவை நெருங்கினான்.

ஒற்றை விரலால் அவளுடைய மோவாயைப் பிடித்து உயர்த்தினான்.

"புரட்சிக்காரன் காதலிதானா நீ?" என்றான்.

"அவளை விடு" என்று உதய் கத்தினான். கத்திய உதயின் வயிற்றில் துப்பாக்கியின் பின்பக்கம் வந்து



மோதியது. உதய் இரண்டாய் மடித்தான். கீழே விழுந்தான்.

வந்தவன் சரேலென்று இனியாவின் புடவைத் தலைப்பைப் பற்றி இழுத்தான்.

"அய்யோ" என்று இனியா அலறினாள்.

"கட்" என்றார் இயக்குநர்

அதுவரை அங்கங்கே அவர்களை நோக்கி வைக்கப்பட்டு, எரிந்துகொண்டு, இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த விளக்குகள் அணைந்தன.

இனியா புடவைத் தலைப்பை சரியாகப் போட்டுக்கொண்டு, "புடவையை உருவி ரொம்பப் பழக்கமா திலக்? ஒரு சொடக்குல என் புடவையே அவுத்திட்டீங்களே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

உதய் எழுந்துகொண்டான்.

புது வில்லன் நடிகனான திலக் அடக்கமாகப் பணிவாகச் சிரித்தான். "மன்னிச்சிடுங்க இனியா. நல்லா நடிக்கணுமேங்கற கவலையில, நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுட்டேன்."

"பரவால்ல..." என்ற இனியாவிற்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போடப்பட்டது. இனியா அமர்ந்தாள்.

"உக்காருங்க உதய்" என்றாள்.

உதய் அவனுக்குக் கொண்டு வந்து போடப்பட்ட நாற்காலியில் உட்கார்ந்தான்.

இனியாவின் உதவிப்பெண் ஓடிவந்து இனியாவின் முகத்தில், கழுத்தில், முதுகில் என்று எல்லாம் பவுடர் பூசப்பட்ட இடங்களிலும் ஈரத்துணியால் ஒத்தடம் கொடுத்தாள்.

MITHRAVINTHA

இயக்குநர் முகத்தில் மகிழ்ச்சி பொங்க அருகில் வந்தார்.

''கடற்கரை காட்சி மட்டும் நான்கு நாளாவது ஆகும்னு நினைச்சிக்கிட்டிருந்தேன் இனியா. ஒரே டேக்கில் காட்சி ஓ. கே. ஆயிடிச்சி. எல்லாம் உங்க ஒத்துழைப்பு தான் காரணம். ரொம்ப நன்றியம்மா.''

''வீட்டுக்குப் போகலாமா சார்?'' என்று கொஞ்சலாகக் கேட்டாள் இனியா.

''ரெண்டு மூணு குளோசப் மட்டும் எடுத்துக்கறேம்மா, என்னப்பா? லைட்டெல்லாம் அரேன்ஜ் பண்ணிட்டீங்களா? நீங்கள் வேணும்னா கொஞ்ச நேரம் போய் ஓய்வெடுத்துக்குங்கம்மா.''

இனியா இடை அசைய அசைய மணலில் நடந்தாள். கால்கள் புதைத்து புதைந்து மணலில் இருந்து வெளிப்பட காலால் விசிறப்பட்ட மணல் இனியாவின் அழகை அண்ணாந்து பார்த்துக் கொண்டே மல்லாந்து விழுந்தது.

இனியா கடற்கரைச்சாலைக்கு வந்தாள்.

அவளுடைய காரியதரிசி மோகன் அவளைப் பரபரப்புடன் நெருங்கினான்.

''என்ன மோகன்?''

''உங்களுக்கு ஒரு போன் வந்திருக்கு மேடம்.''

''இந்த இடத்திலயா.''

''ஆமாம் மேடம். இங்க ஷூட்டிங் நடத்தறதுக்காக ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்திருக்காங்க. அங்க இருக்கிற போன்லதான் உங்களைக் கூப்புடறாங்க. யாருன்னு கேட்டேன். சொல்ல முடியாதாம். உங்ககிட்ட தான் முக்கியமாப் பேசணுமாம்.''



இனியா முகத்தில் வியப்புடன் மோகனைப் பின் தொடர்ந்து சென்று தொலைபேசியை நெருங்கினாள், ஒலிவாங்கியைக் காதில் பொருத்தி, ''இனியா'' என்றாள்.

''அடி இனியா...என்னவளே... நேற்றுவரைக்கும் இனிச்சவளே...உன் கடைசி ஆசைன்னு ஏதாவது இருந்தா உடனே நிறைவேத்திக்கம்மா. உடனே நிறைவேத்த லேன்னா எப்பவுமே நிறைவேத்த முடியாது. ஏன்னு கேக்கறியா? ஏன்னா, நான் உன்னைக் கொல்லப் போறேன்'' என்றது போன் குரல்.

## 2

''ஏன்னா, நான் உன்னைக் கொல்லப் போறேன்'' என்றது போன் குரல்.

இனியாவிற்குக் கோபம் வந்தது. தொலைபேசியில் அவளுக்கு இந்தமாதிரி மிரட்டல்கள் வருவது அவளுக்குப் புதிதல்ல. நடிகை என்றாலே ரசிகர்கள் அவளைப் பொதுச் சொத்தாக நினைக்கத் தொடங்குகிறார்கள். ஒவ்வொரு ரசிகனும் தனது எண்ணப்படிதான் தனது அபிமான நடிகை செயல்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

அந்த எதிர்பார்ப்பு பொய்த்துப் போனால் உடனே அவனுக்கு நடிகையின் மீது தாங்க முடியாத வெறுப்பு வருகிறது. ஆத்திரம் வருகிறது, கோபம் வருகிறது. உடனே ஒரு கடிதம் எடுத்து, ''உன்னை வெட்டுவேன், குத்துவேன்'' என்று எழுதி விடுகிறான். இல்லையென்றால் தொலைபேசியில் அழைத்து இந்த மாதிரி மிரட்டத் தொடங்கி விடுவான்.

MITHRAVINTHA

இனியா ஏறக்குறைய இருபது படங்களில் கதாநாயகி யாக நடித்துவிட்டாள். பெரும்பாலும் அவளுக்கு வீராங்கனை, அல்லது புதுமைப்பெண் போன்ற கதா பாத்திரங்கள்தான் தரப்படும். இனியா அந்த பாத்திரங் களில் இயல்பாகவே மிளிர்ந்தாள்.

அவளைப் புதுமைப் பெண்ணாகக் காட்டும் முயற்சி யில் இயக்குநர்கள் அவளுடைய கதாபாத்திரத்தை சமயங் களில் இரு ஆண்களுக்கு மனைவியாய் வாழ்வது போல் அமைத்துவிடுவார்கள். அந்த சமயங்களில் அவள் தமிழ்ப் பண்பாட்டையே சிதைத்துவிட்டதாகக் கோபம் கொண்டு ஏசுவார்கள். தொலைபேசியில் மிரட்டுவார்கள்.

எப்போதாவது பத்திரிகைகளில் அவளை வேறொரு நடிகருடன் இணைத்து கிளுகிளுப்பான இரகசியச் செய்தி எழுதப்பட்டிருந்தால் அவ்வளவுதான். மறுநாளில் இருந்து அந்த நடிகரின் மனைவி குழந்தைகள் மேல் பரிதாபம் கொண்டு, இனியாவை எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாக்குவார்கள்.

இனியாவிற்கு அப்போதெல்லாம் கோபம் வராது. இப்போது தன் உதவியாளர் மோகன் மீது கோபம் வந்தது. தொலைபேசியின் ஒலிவாங்கியை வீசிஎறிந்தாள்.

"மோகன், மோகன் பிசாசே" என்று கத்தினாள்.

"என்ன மேடம்?" என்று அவள் எதிரே பணிவாக வந்து நின்ற மோகன் இளைஞன். இன்றைக்கெல்லாம் பார்த்தால் இருபத்தாறு வயதிருக்கலாம். அவனுடைய பணிவு செயற்கையானது என்பதை அவன் வந்து நின்ற விதத்தில் தெரியவில்லை. என்றாலும் இனியாவின் உள்ளுணர்வு சொல்லியது.

"நான் என்ன சொல்லியிருக்கிறேன்?" என்று குரலை உயர்த்தி கேட்டாள் இனியா.



"என்ன சொல்லியிருக்கீங்க மேடம்?" என்று புன்னகை மாறாமல் கேட்டான் மோகன். வெள்ளை வெளேரென்று இருந்தான். தலைமுடி பம்மென்று முன் நெற்றியில் வந்து விழுந்திருந்தது. மெலிதான மீசை வைத்திருந்தான். செக்கச் செவேல் என்ற உதடுகள். கண்கள் கரும்பழுப்பு நிறத்தில் இருந்தன. மொத்தத்தில் அவனைப் பார்த்தால் பெண்ணுக்கு ஆண் வேடம் இட்டது போல் காட்சியளித்தான்.

"இந்த மாதிரி ரசிகர்கள் கிட்டேர்ந்து போன் வரும் போது வளர்மதியை விட்டுப் பதில் கொடுக்கச் சொல்லி யிருக்கேனா இல்லையா?"

வளர்மதி, இனியாவின் ஒப்பனைப் பெண்.

"சொல்லியிருக்கீங்க மேடம். ஆனால், வளர்மதி இப்பத்தான் உங்கள் நிம்மிகூட வாக்கிங் போயிருக்குது. நீங்கள்தான் நிம்மியை இங்க கூட்டிட்டு வரணும்னு சொன்னீங்க. நிம்மிக்கு ஒரே இடத்துல உட்காரப் பிடிக்கல. கட்டியிருந்த சங்கிலியை அறுத்துக்கற மாதிரி ஒரே கூச்சல். தரையைப் பிராண்டிக்கிட்டே இருந்தது. அதனால வளர்மதி அதை இழுத்துக்கிட்டு வாக்கிங் போயிருக்குது. போன்ல என்ன செய்தி மேடம்?"

"உனக்குத் தேவையான செய்தின்னா நானே சொல்லியிருப்பேன். சரஸ்வதி யூனிட்லேர்ந்து மதிமாறன் வந்து உன்னைப் பார்த்தாராமே."

"ஆமா மேடம். நானே உங்ககிட்ட அதுபத்தி சொல்லணும்னு இருந்தேன்."

"எவ்வளவு பணம் கொடுத்தாரு."

"வழக்கம் போலத்தான்."

"எவ்வளவு?"

"வெள்ளையில மூணு கறுப்புல ஒண்ணு."

MITHRAVINTHA

''பொய் சொல்லாதே. கறுப்புல அவர் ஒன்றரை இலட்ச ரூபாய் கொடுத்ததாச் சொன்னாரு. நீ ஒண்ணுன்னு சொல்றே.''

''மறந்துட்டேன் மேடம்.''

''இதுக்குப் பேரு மறதியா? முழுசா ஐம்பதாயிரம் ரூபாய் மறந்துடுமா மோகன்? எங்கே அந்தப் பணம்?''

''வீட்ல வைச்சிருக்கேன்.''

''எனக்கு இப்ப வேணும். உன் குடிக்கும், சூதுக்கும் பணம் வேணும்னா அது வேற எங்கயாவது போய் திருடு. என் பணம்தான் கிடைச்சதா?''

''இனியா'' என்று கடுமையான குரலில் சொன்னான் மோகன்.

''என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடுகிற அளவுக்கு உனக்குத் தைரியம் வந்துடுச்சா?'' என்று கேட்ட இனியா சட்டென்று கைநீட்டி மோகனின் கன்னத்தில் அறைந்தான்.

'பளார்' என்ற சத்தம் கேட்டு சுற்றி இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

மோகன் கன்னத்தைத் துடைத்துக் கொண்டான். அவளை முறைத்தான்.

''என்ன முறைக்கிறே?'' என்று கேட்டாள் இனியா. ''இதுவும் நடிப்புன்னு நினைச்சியா? இல்ல இது உண்மை. நான் என்ன பணம் காய்ச்சி மரமா? ஒரு பொம்பளை சம்பாதிக்கற பணத்துல கை வைக்கிறியே உனக்கு வெக்கமாயில்ல?''

மோகன் அவளை சட்டென்று நெருங்கினான்.

''ரொம்ப ஆடாதே இனியா. உனக்கு நான் பழசைக் கொஞ்சம் நினைவுபடுத்த விரும்பறேன். நீ யாரு?



எங்கேர்ந்து வந்தவங்கறதை நினைச்சிப்பாரு. ஐம்பது. நூறுக்குப் போய் காமிரா முன்னால நின்னுமேலாடையை எடுத்து விட்டவதானே நீ? என்கூட உனக்கு இருக்கற ஒப்பந்தத்தை நீ மறந்திருக்கமாட்டேன்னு நினைக்கிறேன்.

அந்த ஒப்பந்தத்துக்கு இன்னும் இரண்டு ஆண்டு உயிர் இருக்கு அதுவரைக்கும் நீ சம்பாதிக்கற பணத்துல இருபது சதவீதம் எனக்குத்தான் சேரணும். என்னை ஏமாத்தலாம்னு நினைச்சி தயாரிப்பாளருங்ககிட்ட தனியா பேசி ஒரு தொகையை வாங்கிக்கறது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா? இந்த மோகன் பார்க்கறதுக்குத்தான் அப்பாவி. ஆனால், பாஞ்சா புலி, உன்னை நார் நாராக் கிழிச்சிடுவேன். சினிமாவுக்கு ஒரு இனியா இல்லைன்னா இன்னொரு தனியா கிடைச்சிருவா.

சென்னைக்கு தினம் தினம் எவ்வளவு அழகிக்க சினிமா ஆசையோட ரெயில்ல வந்து இறங்கறாங்கன்னு எனக்குத் தெரியும். அவங்கள்ள ஒருத்தியை என்னால உனக்குமேல நடிகையாக கொண்டு வர்றது எப்படின்னு தெரியும். மத்தவங்க முன்னால என்னை அவமானப்படுத்துனே... இதுதான் கடைசி எச்சரிக்கை. உன்னைக் கொன்னுடுவேன். ஞாபகத்துல வைச்சிக்க.''

மோகனின் குரலில் இருந்த கடுமை அவன் முகத்தில் இல்லை. சிரித்தக் கொண்டே பேசினான். சுற்றி இருந்தவர்கள் எல்லாம், மோகன் இனியாவிடம் இவ்வளவு பணிவாகப் பேசுவது பார்த்து வியந்தார்கள். இனியாவின் கையால் அடிவாங்கியும், அவனால் எப்படி அவ்வளவு பணிவுடன் இருக்க முடிகிறது என்று சிந்தித்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு சற்று தூரத்தில் இருந்த ஒலிப்பதிவாளர் கண்ணன் மட்டும் முகத்தில் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தான். இனியாவையும் மோகனையும் மாறி மாறிப் பார்த்தான். அவர்கள் முகத்தில் இருந்து அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

MITHRAVINTHA

அதே நேரத்தில் வளர்மதியுடன் வந்து கொண்டிருந்த நிம்மி, இனியாவைப் பார்த்து விட்டது. நிம்மியின் தலைப்பாகம் எது, வால் பாகம் எது என்று பார்ப்பவர்களுக்குத்தான் தெரியாதே தவிர நிம்மிக்குத் தெரியும். அந்த அளவு உடல் நிறைய சடையுடன் இருந்த நிம்மி, 'பவ்' 'பவ்' என்று சின்னக் குழந்தைகள் தங்கள் வாயால் வெளிப்படுத்துகிற பேருந்தின் ஊதுகுழல் சத்தத்தை மாதிரி குரைத்தது. வளர்மதியிடம் இருந்து பிய்த்துக் கொண்டு வந்து இனியாவின் கால்களைக் கட்டிக் கொண்டது.

இனியா அதை இரு கைகளாலும் அள்ளி எடுத்தாள். நிம்மியைக் கட்டிப் பிடித்து அதற்கொரு முத்தம் கொடுத்தாள்.

"இந்த நிம்மிக்கு என்கிட்ட இருக்கிற நன்றி உணர்வு கூட மனிதர்களுக்கு இல்லை." என்று மெல்லிய குரலில் அவள் சொன்னபோது அவள் கண்களில் இரண்டு சொட்டு நீர் திரண்டது. யாரும் அறியாதவண்ணம் துடைத்துக் கொண்டாள்.

"இனியாம்மா, வர்றீங்களாம்மா, ஷாட் ரெடி" என்றார் இயக்குனர்.

"குளோசப்தானே டைரக்டர் சார்?"

"ஆமம்மா, அதுவும் சோக பாவம். உங்க முகம் இப்ப ரொம்பப் பொருத்தமா இருக்கு. வந்து முடிச்சுக் கொடுத்துடுங்கம்மா. அப்புறம்மா தொடர்ச்சி விட்டுப் போயிடும்."

இனியா அரைமனதுடன் இயக்குநருடன் சென்றாள்.

'ஆக்ஷன்' என்று குரல் கொடுத்தவுடன் இயக்குநர் விருப்பப்படி சோகமான முகபாவம் காட்டினாள்.



"அப்படியே கொஞ்சம் அழுதுட்டே சிரிங்கம்மா. அப்படித்தான். சரி அப்புறம் விரக்தியா ஒரு புன்னகை காட்டுங்கம்மா. அப்படித்தாம்மா, அப்புறம் இன்னும் ஒரேயொரு குளோசப்பும்மா. நீங்க கதைப்படி நாளைக்கு செத்துப் போகப் போறீங்க. அந்த செய்தி உங்களுக்கு முன்னாலேயே தெரிஞ்சி போயிடுச்சி. உங்கள் வாழ்க்கையில அப்படி ஒரு சூழ்நிலை வந்தால் எப்படி முகத்தை வைச்சிருப்பீங்களோ, அப்படி ஒரு உணர்ச்சி காட்டுங்கம்மா."

இனியா அப்போதிருந்த தன் இயல்பான முகத்தை நிழற்படக் கருவியின் கண்ணுக்கெதிரில் போய் நிறுத்திக் காண்பித்தாள்.

"சபாஷ்மா. நான் எப்படி நினைச்சிருந்தேனோ அதே மாதிரி பண்ணிட்டீங்க. நீங்கள் போகலாம்மா. குட்நைட்."

இனியா கொண்டையை அவிழ்த்தாள்.

"மேக்கப்பை இங்கேயே கலைச்சிடறீங்களாக்கா?" என்று வளர்மதி கண்ணாடியுடன் அருகில் வந்து கேட்டாள்.

"வேண்டாண்டி. வீட்டுக்குப் போயிடலாம் வா. அம்மா தூங்காமக் காத்துக்கிட்டிருப்பாங்க" என்று காரின் கதவைத் திறந்து ஏறினாள். விளக்கைப் போட்டாள். வளர்மதி நிம்மியுடன் முன்னிருக்கையில் வந்து அமர்ந்தாள். ஓட்டுநரைக் காணவில்லை. இனியா கண்ணாடி வழியாகப் பின்னால் பார்த்தாள். டிரைவர் ராமு அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"ஏய்...வளர்மதி அவனை மெதுவா சாப்பிட்டுவிட்டு வரச்சொல்லுடி" என்றாள்.

MITHRAVINTHA

வளர்மதி இறங்கியதும், கைப்பையைத் திறந்தான். அதில் ஒரு சிறு கைபேடு இருந்தது. அது ஒன்றும் அவ்வளவு விலை மதிப்பற்றது என்று சொல்ல முடியாது. சாதாரண கைபேடுதான். அதைத் திறந்தான். முதல் பக்கத்தில், 'என்னவனே... உனக்குக் காதலுடன் நான் அளிக்கும் காதல் பரிசு' என்று முத்து முத்தான எழுத்துக்களில் எழுதப்பட்டு அதன்கீழ் சேர இளவல் கையெழுத்தும் போடப்பட்டிருந்தது.

இனியாவிற்கு தொலைபேசியில் கேட்ட குரல் நினைவுக்கு வந்தது.

"நீயா அப்படிச் சொன்னாய்? உன் குரல் போலத் தான் இருந்தது. உனக்கும் எனக்கும் இடையில் என்ன தான் இடைவெளியிருந்தாலும் நீ அப்படிச் சொல்லியிருக்கக் மாட்டாய். ஆனால் அது உன் குரல் போலவே ஒலித்ததே. ஏன்? ஒருவேளை போன் குரல் என்னவனே என்று அழைத்ததால் எனக்கு உன் நினைவு வந்ததா?" என்று யோசித்தாள்.

தயங்கினாள். கண்ணுக்கு மை தீட்டும் ஐப்ரோ பென்சிலை எடுத்து, சேர இளவல் என்ற கையெழுத்திற்குக் கீழ் 'அடி இனியா, என்னவனே. நேற்று வரைக்கும் இனிச்சவனே, உன் கடைசி ஆசைன்னு ஏதாவது இருந்தால் உடனே நிறைவேத்திக்கம்மா. உடனே நிறைவேத்த லேன்னா எப்பவுமே நிறைவேத்த முடியாது. ஏன்னு கேக்கறியா? ஏன்னா, நான் உன்னைக் கொல்லப் போறேன்' என்று எழுதினாள்.

மூடி முன் போல் வைத்தாள். பெருமூச்சு விட்டாள். விட்டத்தில் அவளுடைய அழகான இரு மார்பகங்களும் ஒருமுறை ஏறித் தாழ்ந்தன. மனதில் வீசும் புயலை அவை எடுத்துக் காட்டுவதற்குப் பதில், காளையரைக் கண் இறங்க வைக்கும் மதுக் கிண்ணங்களாக அவை செயல் பட்டன.



திடீரென்று ஏன் எல்லோரும் என்னைக் கொல்லப் போவதாகப் பேசவேண்டும்? இயக்குநர்கூடவா இன்றைக் கென்று அப்படிச் சொல்ல வேண்டும்?

அப்படி யாராவது அவனைக் கொலை செய்து விட்டால் கூடப் பரவாயில்லை என்று தோன்றியது. ஐம்பது நூறு சம்பாதித்த பொழுதில் இருந்த நிம்மதி இப்போது ஐந்து இலட்சம், பத்து இலட்சம் என்று சம்பாதிக்கும்போது எங்கே போய் விட்டது? ஏன் எல்லோரும் என்னைப் பணங்காய்ச்சி மரமாக நினைக்கிறார்கள்?

அவளுக்கு கார் புறப்பட்டது கூடத் தெரியவில்லை. கண்மூடி அமர்ந்திருந்தாள். அவள் மனதில் நினைவுகள் மலர்ந்தன. முதன் முதலில் அவள் 'என்னவனே' என்று அழைத்தவனைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.

திரைப்படக் காட்சி போல் அவன் தோன்றித் தோன்றி தேய்ந்தான். அவன் அவளுக்குத் தந்த முதல் முத்தம் நினைவுக்கு வந்தது. அவள் உடல் சூடேறியது. உதடுகள் துடித்தன. அவன் பெயரை அவளது உதடுகள் ஒரு மந்திர வார்த்தை போல சொல்வதற்குத் தொடங்கிய வேளையில் கார் கிரீச்சிட்டு நின்றது.

திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

"என்ன ராமு?"

"நாய்மா" என்று ராமு மறுபடி காரைக் கிளப்பினான்.

சாலை ஓரத்தில் இத்தனை நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த ஒரு மோட்டார் பைக் சட்டென்று விழித்துக் கொண்டது. அதன் மீது முகம் முழுக்க மூடியபடி தலைக்கவசம் அணிந்திருந்த அவன், இனியாவின் காரைத் தொடர்ந்து வரத் தொடங்கினான்.



MITHRAVINTHA

# 3

தன் காருக்குப் பின்னால் ஒரு மோட்டார் சைக்கிள்
தொடர்ந்து வருவதை உணராமல் இனியா, காரின் பின்
இருக்கையில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்
டான் தன்னுடைய முதல் முத்தத்தைப் பற்றிய கனவில்
மறுபடி கண்மூடும் மனநிலையில் அவன் இல்லை.

மனித மனம் மிகவும் விந்தையானது. ஒரு விநாடி
யில் விரும்பும் ஒரு நிகழ்வை,, அடுத்த விநாடியே வெறுக்
கும். அந்த மாதிரிதான் இனியாவின் மனநிலையும்
பிளவுபட்டு செயல்பட்டது.

டிரைவர் ராமு காரின் பிரேக்கை 'அழுத்துவதற்கு
முந்தின விநாடி தன்னுடைய கடந்த காலத்தை ஒருமுறை
எட்டிப்பார்க்க விரும்பினான். தனது மகிழ்ச்சியான
தருணங்களில் ஒருமுறை மனதால் வாழ்ந்துவிட்டு வர
ஆசைப்பட்டான். கார் பிரேக் அடித்துக் கார் நிறந்
ததும் அவனுக்கு அந்த ஆசை போய்விட்டது. மறுநாள்
கவலை மனதை ஆக்கிரமித்தது.

இப்போதே மணி நள்ளிரவு பன்னிரண்டை நெருங்கிக்
கொண்டிருந்தது. இதற்குமேல் வீட்டுக்குப் போய் சாப்
பிட வேண்டும். சாப்பிடாமல் தூங்குவதற்கு அம்மா
ஒத்துக்கொள்ளவே மாட்டாள். இனியா ரொம்பப்
பிடிவாதம் பிடித்தால், அவனை ஓர் இரண்டு பேர் அசை
யாமல் பிடித்துக் கொள்வார்கள். அம்மா பிசைந்த
சாதத்தை அவனுக்கு ஊட்டிவிடுவாள். வீட்டில் இருக்கும்
நடிபன்கள் அவனுடைய உடல் எல்லாம் கன்னிப் போய்
சிவக்கிற மாதிரி, அவனைப் பற்றுவதை இனியாவால்
ஒத்துக்கொள்ளவே முடியாது. அதனால் அவனும் யாரும்



வந்து பிடிப்பதற்கு முன்னாலேயே சாப்பிடத் தொடங்கி
விடுவான். ஆனால், அம்மாவிடம் ஒரு நிபந்தனையைப்
போடுவான். இனியா ஒழுங்காக சாப்பிட்டு முடித்து
விட்டால், அவன் சொல்லும் எதையும் அம்மா செய்து
முடிக்க வேண்டும். இனியா ஒரு நாள் அம்மாவை நடனம்
ஆடச் சொல்லுவான். ஒத்துக் கொண்டு அம்மா நடனம்
ஆடுவாள். இன்னொரு நாள், அம்மா நீச்சல் உடையில்
நீச்சல் குளத்தில் அரைமணி நேரம் நீந்திக் கரையேற
வேண்டும் என்பான். அம்மா அதையும் ஒத்துக்கொண்டு
செய்வாள். அன்றைக்கு முடியாவிட்டால் இன்னொரு
நாள் என்று ஏதாவது ஒரு நாளில் அம்மா, இனியா
எந்த வகையிலும் செய்யச் சொன்னதை செய்துவிடுவாள்.

அம்மா, நல்ல அம்மா!

இனியா காரின் 'உள் விளக்கைப் போட்டான்.
காரின் பின்பக்கம் சன்னமாக வெளிச்சம் பரவியது. அந்த
வெளிச்சம் ஓட்டுநருக்கு இடையூறாக இருக்காதபடி பின்
இருக்கையில் அமர்ந்திருப்பவர்களை மட்டுமே நலம்
விசாரித்தது. மஞ்சள் வெளிச்சம். இனியாவின் முகம்
பொன் நிறத்தில் மின்னியது. இருக்கையில் தனது பக்கத்
தில் வைக்கப்பட்டிருந்த பத்திரிகைகளை எடுத்தான்.

அவை பெரும்பாலும் சினிமாப் பத்திரிகைகள்.
அவற்றில் இனியாவைப் பற்றிய செய்தி இடம் பெற்றி
ருக்கும் பத்திரிகைகளை எல்லாம் திரட்டி அவன் படிப்
பதற்கென்றே காரில் அவன் உட்காரும் இடத்திற்கு
அருகில் வைப்பது மோகனின் கடமைகளில் ஒன்று.

எடுத்தான்.

முதல் பத்திரிகையில் இனியாவிற்கு மார்க்கெட்
சரிகிறது என்று செய்தி வந்திருக்கிறது. அவனை விட
மிகவும் முன்னுக்கு வர வாய்ப்பே இல்லாத, பின்தங்கி
யிருக்கும் ஒரு நடிகைக்குத்தான் மார்க்கெட் நன்றாக

MITHRAVINTHA

இருக்கிறது என்று பத்திரிகையின் நிருபர் சரடு விட்டிருந்தார். பத்திரிகையின் அட்டையைப் பார்த்தாள்.

தேனருவி.

தேனருவி பத்திரிகையின் சினிமா நிருபர் செல்வமணியை இனியாவிற்கு நன்றாகத் தெரியும். ஒரு பாட்டில் விஸ்கிக்காக அவர் சரித்திரத்தையே தலைகீழாக மாற்றி எழுதிவிடுவார். இனியாவிடம் கூட அவர் விஸ்கி கேட்டார். இனியா அவருக்குப் பணம் தரவில்லை. மாறாக அவருடைய மனைவியிடம் குடும்பச் செலவுக்கு என்று பணம் கொடுத்தனுப்பினாள், ஒப்பனைப் பெண் மூலம். அவளிடமிருந்து விஸ்கி பாட்டிலுக்குப் பணம் கிடைக்காத கோபம்தான் செல்வமணியை இவ்வாறு எழுதிவைத்திருக்கிறது என்றுபுரிந்தபோது சிரிப்புவந்தது.

திறமையே இல்லாத சித்தினி அவருடைய போதை தாகத்தைத் தீர்த்து வைத்து விட்டதால், அவளை உயர்த்தி எழுதிவிட்டார் போலும். செல்வமணியை நினைத்தால் பரிதாபமாய் இருந்தது. அடுத்தமுறை பார்க்கும்போது, ''இப்படிக் குடித்துக் குடித்துக் குடும்பத்தையும் கவனிக்காமல், உங்களையும் சீரழித்துக் கொண்டு இருக்காதீர்கள்' என்று சொல்ல வேண்டும் என நினைத்துக்கொண்டு, தேனருவியை மடித்து வைத்தாள்.

இன்னொரு பத்திரிகையை எடுத்தாள். கலைநிலா பத்திரிகை. பெண்கள் அத்தனை பேரும் விரும்பிப் படிக்கும் பொழுதுபோக்கு இதழ். அதில அவளைப் பற்றிய செய்தி வருகிறதெனில் அவளுக்குப் பெருமைதான். நல்லதாகவோ, அல்லதாகவோ, கலைநிலாவில் எப்படிச் செய்தி வந்தாலும் சரி. செய்தியில் இடம் பெறுகிறவர்களுக்கு அது இலவச விளம்பரம். மேலும் திரைப் படத்துறையில் இன்றைக்கு வெற்றிக்கொடி நாட்டிக் கொண்டிருப்பவர்களை பற்றி மட்டுமே அது செய்தி வெளியிடும் என்பதால், இனியா அதை ஆவலுடனும்,

T/ 47680



பரபரப்பாகவும் புரட்டினாள். மோகன் எந்தப் பக்கத்தில் கட்டம் கட்டி வைத்திருக்கிறான் என்று தேடினாள்.

நடுப்பக்கத்தில் செய்தி வந்திருந்தது. அது ஒரு கிசுகிசு போல் இடம் பெற்றிருந்தது.

தேன்சுவை நடிகைக்கும், வள்ளல் நடிகருக்கும் இடையே இருந்த நெருக்கமான உறவு, வள்ளல் நடிகர் வீட்டில் பூகம்பத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

வள்ளல் நடிகரின் மனைவி, கோபத்தில் நடிகரின் முடியைப் பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கிறார்

வள்ளல் நடிகர் கோபித்துக்கொண்டு, இப்போதெல்லாம் இரவில் வீட்டிலேயே தங்குவதில்லை. மேலும் அவர் தேன்சுவை நடிகையை இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டு விட்டதாக நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து செய்திகள் கசிகின்றன.

இனியாவிற்கு பகீர் என்று இருந்தது. நெருப்புத் தகட்டைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிற மாதிரி அந்தப் பத்திரிகையே சுட்டது. தேன்சுவை நடிகை என்று அவளைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள் என குழந்தை கூடச் சொல்லும். வள்ளல் நடிகர் என்பது பாரிவேளைக் குறிக்கும் என்பதும் ஊரறிந்த செய்தி.

பாரிவேளுடன், இனியா நெருக்கமாக இருப்பது உண்மைதான். அவ்வப்போது அவள் இரகசியமாகச் சென்று பாரிவேளை சந்தித்துவிட்டு வருகிறாள் என்பதும் உண்மைதான். ஆனால், இந்தத் திருமணச் செய்தி?

பாரிவேள் தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி அவளுடைய விரலில் மாட்டிவிட்டிருக்கிறார். பதிலுக்கு அவள் தன் மோதிரத்தைக் கழற்றி பாரிவேளுக்கு மாட்டி

MITHRAVINTHA

விட்டிருக்கிறான். அவ்வளவுதான். இது எப்படி திருமணமாக முடியும்?

'கலைநிலா'வுக்கு இந்தச் செய்தி எப்படிக் கிடைத்தது? இந்தச் செய்தி வெளிவந்திருப்பது தெரிந்தால் பாரிவேள் என்ன சொல்வார்? அவனுடன் அவருக்கு இருக்கும் தொடர்பை மிக இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று திருப்பத் திரும்ப சொல்லியிருக்கிறாரே. இப்போது திருமணமே நடந்துவிட்டதாகச் செய்தி வெளியாகி இருப்பதை அறிந்தால் பாரிவேள் எக்கச்சக்கமாகக் கோபப்படுவாரே!

கலைநிலாவுக்கு இனியாவோ, இனியாவைச் சேர்ந்த யாராவதோதான் இந்தச் செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சந்தேகப்படுவாரே. அவர் கோபம் மிகவும் அறிமுகமான ஒன்று. பாரிவேள் பற்றிய தவறான செய்தி ஏதாவது மக்களைச் சென்றடைந்தால், செய்தியை அனுப்பியவர்களை அவர் சும்மா விடமாட்டார். தேவைப்பட்டால் உயிரை வாங்கக்கூட அவர் தயங்க மாட்டார். அவர் ஒருமுறை 'குழந்தை இல்லை என்ற குறைக்காக, மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொண்டார்' என்ற செய்தியை வெளியிட்ட வேர்ப்பலா நிருபரையும், பத்திரிகை ஆசிரியரையும் மருத்துவமனையில் ஆறு மாதம் படுக்கையில் கிடக்கும்படி செய்தவர்.

இனியாவிற்கு உடல் வெகு தன்னிச்சையாக நடுங்கியது. வீட்டுக்குப் போனவுடன் முதல் வேலையாகப் பாரிவேளுடன் தொடர்பு கொண்டு பேச வேண்டுமென நினைத்தான்.

மேலே எந்தப் பத்திரிகையைப் புரட்டவும் அவனுக்கு மனம் வரவில்லை.

விளக்கை அணைத்துவிட்டு அப்படியே இருக்கையில் சாய்ந்துகொண்டான். நெஞ்சம் படபடவென்று அடித்



துக் கொண்டது. வயிற்றில் ஒரு திகில் பந்து உருவாகி தொண்டை வரை மேலேறி, இனியாவிற்கு எக்கச்சக்கமாக வியர்த்துவிட்டது.

காரின் கறுப்புக் கண்ணாடியைக் கீழே இறக்கினான். வெளியே சுவரில் தெரிந்த சுவரொட்டிகள், வீடு நெருங்கி விட்டதை அறிவித்தன. சுவரொட்டிகளில் அவனுடைய முகமே அதிகமாக ஆக்ரமித்திருந்தது. சுவரொட்டி ஒட்டுபவர்கள் எல்லாரும் ஒரு வகையில் வல்லவர்கள். அந்தத் தெருவில் அவன் வசிப்பதை அறிந்து, அவன் முகம் அச்சிடப்பட்டிருக்கும் சுவரொட்டிகளை எல்லாம் தெருவில் காலியாக இருக்கும் சுவர்களில் எல்லாம் ஒட்டி விட்டுச் சென்றுவிடுகிறார்கள்.

கார் வீட்டை நெருங்கும்போது, ஒரு மோட்டார் பைக் அவனுடைய காரை வெகு வேகமாகக் கடந்தது. அவனுடைய வீட்டு வாசலில் தூங்கிவழிந்துகொண்டிருந்த காவல்காரன் இனியாவின் காரோசை கேட்டு இரண்டு கம்பிக் கதவுகளையும் அகலமாகத் திறக்க, இனியாவின் கார், அதன் வழியே உள்ளே நுழையுமுன், மோட்டார் பைக் உள்ளே நுழைந்துவிட்டது

காவல்காரன் மோட்டார்பைக்கைத் தடுக்கப் பார்ப்பதற்குள், அது உள்ளே சென்று, வளைந்து நெளிந்து ஓடி தோட்டப் பாதையில் விரைந்து, கார் சென்று நிற்கும் இடத்தினை தாண்டி நின்றது.

நள்ளிரவு நேரம் என்பதால் வாசலில் யாரும் இல்லை. காவல்காரன் மோட்டார்பைக்கைத் துரத்திக்கொண்டு, 'ஏய், ஏய்' என்று ஓடினான்.

இனியா ஒரு திகிலான ஆவலுடன் நடப்பதை கார் சன்னல் வழியே பார்த்தான். கார் அது எப்போதும் நிற்கும் இடத்தில் கத்தி செருகுகிறமாதிரி செருகி நின்றது.

MITHRAVINTHA

காவல்காரன் மோட்டார் பைக் ஓட்டியை நெருங்கி, "ஏய்...யாருப்பா நீ...என்னவோ திறந்த வீட்ல, எதுவோ நுழையற மாதிரி நுழையறியே...மொதல்ல வெளியே போ" என்று சத்தம் போட்டான்.

மோட்டார் பைக் ஓட்டி இன்னும் தலைக்கவசத்தைக் கழற்றாமல் இருந்தான்.

"நான் இனியாவைப் பார்க்கணும். அவங்ககிட்ட தான் பேசணும்" என்றான். அவன் குரல் கரகரப்பாய் இருந்தது.

"அதுக்கு இதான் நேரமா? போய்யா வெளியே" என்று மோட்டார் பைக் ஓட்டியை நெருங்கிய காவல் காரன் அப்படியே அதிர்ந்துபோய் பின் வாங்கினான்.

காரணம், மோட்டார் பைக் ஓட்டியின் கையில் முளைத்திருந்த துப்பாக்கி.

"அப்படியே பின்னால் போ. சுவரில் சாய்ந்து நில்லு" என்று துப்பாக்கியை ஆட்டிக் கொண்டே ஆணையிட காவல்காரன் அகன்ற விழிகளுடன் பின்னடைந்தான்.

"இனியா, நீங்கள் மட்டும் இறங்குங்க."

இனியா இறங்கினாள். அவன் அவளை நெருங்கி னான். சட்டென்று அவளிடம் ஒரு கையேட்டையும், பேனாவையும் நீட்டி, "உங்க ஆட்டோகிராப் மேடம்" என்றான் கெஞ்சும் குரலில்.

இனியாவைக் கோபம் தாக்கு தாக்கு என்று தாக்கி யது.

"நல்லா இருக்கு. துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தி நீங்கள் ஆட்டோகிராப் கேக்கற அழகு. மொதல்ல அந்த கவசத்தைக் கழட்டுங்க" என்றாள்.

தலைக்கவசம் கழட்டப்பட்டது.



"திலக்!" என்றாள் இனியா வியப்புடன். சற்று முன் கடற்கரையில் அவளுடன் நடித்த வில்லன் நடிகன். இத்தனை நேரம் குரலை மாற்றிப் பேசியிருக்கான். "இது என்ன கூத்து? மொதல்ல துப்பாக்கியை உள்ளே வையுங்க."

"இது சினிமா துப்பாக்கி மேடம். நான் உங்களோட நீண்டநாள் ரசிகன். உங்கள் கிட்ட ஆட்டோகிராப் வாங்கணுங்கறது என்னோட ரொம்ப நாள் ஆசை. உங்களோட நடிக்கவே வந்துட்டேன்னு நினைக்கிறப்ப எனக்குப் பெருமையா இருக்கு. ஆனால் ஒரு நடிகனா ஆட்டோகிராப் கேட்டா தருவீங்களோ மாட்டீங் களோன்னுதான் ஒரு ரசிகனா வந்து கேட்டேன். துப்பாக்கி சும்மா காவல்காரரை மிரட்ட. நீங்கள் ஆட்டோகிராப் போட்டிருந்தா ஓடியே போயிருப்பேன், நான் யாருன்னு காட்டிக்காமயே."

"இவ்வளவு தூரம் எம்மேல மரியாதை வைச்சிருக்கிற உங்களுக்குப் போய் நான் ஆட்டோகிராப் போட மாட்டேன்னு சொல்வேனா? உள்ளே வாங்க ஒண்ணு என்ன? ஆயிரம் கையெழுத்து போடறேன்" என்று இனியா வீட்டுக்குள் நுழைய, திலக் நாய்க்குட்டி போல அவளை பின்தொடர்ந்தான்.

இனியாவின் படுக்கை அறை. சுவரில் பதித்திருந்த மரக்கூண்டுகளில் அவள் பல படங்களுக்கு வாங்கியிருந்த கேடயங்களும், நினைவுப் பரிசுகளும், கோப்பைகளும், விருதுகளும். திலக் சோபாவில் அமர்ந்திருந்தான். இனியா அவனுக்கு எதிரிலேயே சேலையில் இருந்து நைட்டிக்கு வெகு இயல்பாக மாறினாள். நைட்டி சன்னமான துணி. இனியாவின் வளைவுகளை அது எடுப்பாகக் காட்டியது.

"கொடுங்க. கையெழுத்துப் போடறேன்" என்றாள்.

MITHRAVINTHA

திலக் பொம்மை போல, வைத்த கண் எடுக்காது நீட்டிய அத்தனை தாள்களிலும் இனியா கையெழுத்துப் போட்டான்.

"அவ்வளவுதானா? இன்னும் ஏதாவது இருக்கா?" என்று கேட்டான் குறும்புச் சிரிப்புடன்.

"ஒரு முத்தம்."

"என்னது?"

"நெற்றியில் இனியா ப்ளீஸ். மாட்டேன்னு சொல்லிடாதீங்க."

"உம்" என்று இனியா நிமிர, அவளோடு அவளது இமைகளும் காளைத் திமில்களாய்த் திமிர்ந்தன.

திலக் அவளை நெருங்கினான். அவள் கழுத்தை வளைத்தான்.

அவன் நெற்றியில் முத்தமிடப் போகிறான் என்று இனியா காத்திருக்க, திலக் வெகு திடீரென்று அவள் கழுத்தை அப்படியே வளைத்துப் பிடித்து அழுத்தத் தொடங்கினான்.

# 4

இனியா அப்படி நேரும் என்று எதிர்பார்க்கவே இல்லை. திலக்கின் கைகளில் அழுத்தம் கூடிக்கொண்டே போனது. ஒரு வினாடியின் சிதறலில் திலக்தான் அவளோடு போனில் பேசி, 'உன்னைக் கொல்லப் போகிறேன்' என்று சொன்னானோ என்றும் நினைக்கத் தோன்றியது.



அவளுடைய மூச்சுத் திணறத் தொடங்கியது. அவளது நுரையீரல் மூச்சுக்காக, ஒரு பந்து நிறைய உயிர்க் காற்றுக்காக உலகைக் கெஞ்சியது.

அவள் திமிறினாள். கால்களைத் தரையில் உதைத்தாள். அவள் வாழ்வு, அவளுடைய படுக்கையறையில், வீட்டில் இருக்கும் அத்தனை பேரையும் சாட்சியாக வைத்துக்கொண்டே முடிந்துவிடப்போகிறது என நினைத்தாள். அப்போதுதான் அது நிகழ்ந்தது.

திலக் அவளை விடுவித்தான். விடுவித்த அதே வினாடியில் மறுபடி அவளைத் தன்பால் இழுத்து இறுக்கினான்.

என்ன நடக்கிறது? அய்யோ...என்னதான் நடக்கிறது?

அம்மா, தம்பி, வளர்மதி, மோகன் எங்கே போய்த் தொலைந்தீர்கள் எல்லோரும்?

இங்கே என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று யாராவது பார்த்தீர்களா?

படுக்கையறை வாசலுக்கு, தட்டில் குளிர்பானத்துடன் வந்த வளர்மதி அறைக்குள் நிகழ்ந்துகொண்டிருந்த பூகம்பத்தைப் பார்த்துவிட்டாள்.

தட்டைக் கீழே போட்டாள். பானம் திவலைகளாய்ச் சிதறியது. கண்ணாடி குவளைகள் துகள் துகள்களாக உடைந்தன. தட்டு 'ணங் ணங் ணங் ணங்' என்று தரையில் உருண்டு உருண்டு ஒரு உவமைக்கு எட்டாத சத்தத்தை ஏற்படுத்தியது

வளர்மதி காதுகள் இரண்டையும் பொத்திக் கொண்டு, கண்கள் இரண்டையும் பேய்படக் கதாநாயகி போல் விரித்து, வாயை நீர்யானை வாயளவு திறந்து கத்தினாள்.

'ஆ-ஆ-ஆ-ஆ-ஆ-ஆ-ஆ-ஆ...'

MITHRAVINTHA

அந்த அலறல் சாலையில் நடந்து கொண்டிருந்த ஒன்றிருவரையும் நிற்கவைத்தது. திரும்பிப் பார்க்க வைத்தது. நடிகையின் வீடு என்பதால் 'என்னவோ ஒத்திகை' என்று யோசிக்க வைத்து, உதட்டைப் பிதுக்க வைத்து நடக்க வைத்தது.

வீட்டினுள் அங்கங்கே அறைக்கதவுகள் 'க்ளக் களக்' என்று திறக்கப்பட்டு, காலடிகள் இனியாவின் அறை நோக்கி கடலில் சேரும் ஆறுகளாக ஓடிவந்தன.

திலக் இன்னும் இனியாவைப் பிடித்த பிடியை விடாமல் பற்றியிருந்தான். அவனது கூந்தலில் பெரும்பகுதி அவனது விரல் இடுக்குகளில் சிறைப்பட்டிருக்க, இப்போது திலக்கின் கைகளும், கால்களும் ஒரு சீரான நேர இடைவெளியில் வெட்டிக் கொண்டன.

வெட்டிக் கொண்டன. சிர பக்.

வெட்டிக் கொண்டன. சிர பக்.

வெட்டிக் கொண்டன. சிர பக்

அவன் வாயின் ஓரத்தில் சின்னச் சின்னக் குமிழ்களாக நுரை தள்ளின. வேலைக்காரர்கள் ஓடிவந்து அவனை அவளிடமிருந்து பிய்த்து கீழே தள்ளினார்கள். திலக் அப்படியே வெட்டப்பட்ட மரமாக வீழ்ந்தான். அவன் கண்கள் அறைக்கூரையின் ஒரு மூலையில் குத்திட்டு நின்றன. கழுத்து உதறியது. கால்கள் இழுத்தன. கைகள் மேலேறி மேலேறி தரை அறைந்தன.

இனியா திகில் மூச்சுடன் கீழே கிடந்த திலக்கைப் பார்த்தாள்.

சற்று முன் அவளுடைய கழுத்தைப் பற்றி அழுத்திய திலக் இப்போது யார் பார்ப்பதையும் உணராது அப்படி உதைத்துக்கொண்டு கிடப்பதைப் பார்த்தவுடன் இனியாவிற்கு சந்தேகம் வந்தது.



திலக் திடீரென தனது சுய கட்டுப்பாட்டில் இருந்து விழுந்து இருக்கிறான். அவனை காக்காய் வலிப்பு நோய் ஆக்கிரமித்திருக்கிறது.

திலக்கை அந்த நோய்தான் இப்படி வெட்டி வெட்டி இழுக்கிறது என்று தெரிந்தவுடன், இனியா அறையின் ஒரு பீரோவில் தொங்கிக் கொண்டிருந்த சாவிக்கொத்தை அதன் சாவித் துவாரத்தில் இருந்து பிய்த்தாள்.

திலக்கின் கையில் அந்த சாவிக் கொத்தை கொடுத்தாள். அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். நாக்கு பற்களின் இடையில் கடிக்கப்பட்டு ஒரு இரத்தப் பொட்டு தெரிந்தது.

சுவரில் சிறிய அளவில் அலங்கார வாள் ஒன்று இருந்தது. அதை எடுத்து திலக்கின் பற்களுக்கிடையில் வைத்தாள்.

விநாடிகள் . நகர்ந்தன. திலக்கின் உடலில் இருந்த ஆவேசமான உதறல்கள் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கின. அப்படியே படுத்துக் கிடந்தான்.

வளர்மதி அவன் முகத்தில் உள்ளங்கை நிறைய தண்ணீரை சேகரித்து கோடைமழை போல் தெளித்தாள். திலக் விழித்துக் கொண்டான். சுற்றிலும் இருந்த முகங்களைக் கண்டு சட்டென எழுந்து அமர்ந்தான். இனியாவைப் பார்த்தான். வெட்கப்பட்டான். எழுந்து நின்று தலைகுனிந்தான்.

''என்ன திலக் இது?'' என்று இனியாதான் முதலில் கேட்டாள்.

இனியாவின் அம்மா மாதவியின் முகத்தில் கடுமை என்றால் அப்படி ஒரு கடுமை. ரொட்டி மாவைத் தட்டி அந்த முகத்தின் மேல் போட்டால் அது அழகாக உப்பி

MITHRAVINTHA

வெந்து போன நிறமாய்ச் சிவக்கும் அளவு அந்த முகத்தில் குருதி பரந்தது.

திலக் பதில் சொல்லும் வரை அவள் காத்திருக்கவில்லை. முன்னால் பாய்ந்து திலக்கின் சட்டையை ஒரு கொத்தாகப் பற்றினாள்.

"ஏண்டா டேய்... எம் பொண்ணு இனிடா. தங்க முட்டை வாத்துடா. அவனை நம்பி கோடி கோடியா பணம் போட்டிருக்காங்க. சும்மா கை சொடக்கற நேரத்தில் அவனைச் சாவடிக்க இருந்தியே. உன்னை... உன்னை...ஏண்டா வேடிக்கை பார்க்கறீங்க தீவட்டி தடியனுங்களா. இவன் எலும்பை எண்ணுங்கடா" என்று அவள் சொன்னதுதான் தெரியும்.

வேலையாட்கள் திலக் மேல் பாய்ந்தார்கள்.

"நிறுத்துங்க" என்று உயர் குரலில் ஆணையிட்டாள் இனியா.

அவனை நோக்கிப் பாய்ந்தவர்கள் அப்படியே உறைந்துபோய் நின்றார்கள்.

"என்ன திலக் இது?" என்று இரண்டாவது முறையாக முன்பைக் காட்டிலும் மென்குரலில் கேட்டாள்.

"என்னை மன்னிச்சிடுங்க இனியா. நான் உங்களை இவ்வளவு எளிமையா எதிர்பார்க்கலை நீங்க கையெழுத்துப் போட்டுந் தந்திங்க. அதுக்கு மேல நான் கேட்டதுக்கு அனுமதி தந்தீங்க. உங்களை இவ்வளவு நெருக்கமா, இவ்வளவு எளிமையா, இவ்வளவு அன்பாய் பார்த்ததால நான் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.

எனக்கு இந்த நோய் சின்ன வயசுலேர்ந்தே இருக்கு. வெளில யாருக்குமே தெரியாது. நான் ரொம்ப ரொம்ப உணர்ச்சிவசப்பட்டால் ஒழிய இந்த வலிப்பு நோய் என்னை நெருங்காது. இன்னிக்கு வந்துடுச்சி. என்னை மன்னிச்சிடுங்க.



உங்க கழுத்தை அழுத்திட்டேங்கற உண்மை தெரிஞ்சதுக்கப்புறம் எனக்கே எம்மேல் கோபம் கோபமா வருது. உங்களைப் போய் நானு...ஐயோ...யாரும் பார்க்கலைன்னா என்ன ஆயிருக்கும். உங்க அம்மாவோட கோபம் நியாயமான கோபம். அவங்க என்னை அடிச்சி உதைக்கட்டும் அப்பத்தான் என்னோட தவறுக்கும் தண்டனை கிடைச்ச மாதிரி இருக்கும்" என்றான் திலக் உருக்கமான குரலில். தலைகுனிந்தான். அவன் உடல் குலுங்கியது. அழுகிறானா என்ன?

இவ்வளவு பெரிய ஆண்மகன், தன் முன் கூனிக் குறுகி நின்று அழுவது இனியாவிற்குப் பரிதாபமாக இருந்தது. அவனுடைய நோய் அவனை அப்படி நடந்து கொள்ளச் செய்திருக்கிறது. அவனை அறியாது நடந்த ஒரு செயல். அதற்குப் போய் அவனை எப்படிக் காரணமாக்குவது? சற்று நேரத்திற்கு முன் அவனையே கொலைகாரனாக நினைத்ததற்காக இனியா வெட்கப்பட்டாள்.

"எல்லாரும் போங்க... அவுங்கவுங்க வேலையைப் பாருங்க. ஏய் வளர்மதி. போடி போய் சூடா ஒரு கப் காப்பி கொண்டுவா."

அவர்கள் கல்லடிபட்ட மரத்துப் பறவைகள் போலக் கலைந்தார்கள்.

திலக் இன்னும் தலை குனிந்திருந்தான். இனியா அவன் தலைமுடியைக் கொத்தாகப் பற்றி உயர்த்தினாள். கலங்கிய திலக்கின் கண்களின் ஊடே பார்த்தாள்.

"தெரியாம செஞ்ச தப்புக்காக இவ்வளவு தூரம் நொந்துக்கணுமா திலக்?" என்று கேட்டான்.

திலக் பதில் சொல்லவில்லை.

MITHRAVINTHA

அவன் கழுத்தைப் பற்றியிழுத்து அவன் நெற்றியில் இதழ் பதித்தாள்.

திலக் அதிர்ந்துபோய் அவளைப் பார்த்தான்.

''இன்னொரு தடவை உணர்ச்சிவசப்படாதீங்க.''

சிரித்தான். சிரித்தாள். வளர்மதி கொண்டு வந்து கொடுத்த காப்பியை ஒரே மடக்கில் குடித்துவிட்டு திலக் வீட்டை விட்டு வெளியேறினான்.

இனியா சிரித்துக் கொண்டாள்.

திலக் வெளியே வந்து மோட்டார் சைக்கிளை எழுப்பினான். தலைக் கவசத்தை அணிந்தான். பைக் மீது உட்கார்ந்து அதைச் செலுத்தினான்.

அவனுக்கு உள்ளூர சிரிப்பு சிரிப்பாய் வந்தது. தன்னுடைய நடிப்புத் திறமையைத் தானே வியந்து கொண்டான்.

அவ்வப்போது பின்னால் காட்டும் கண்ணாடியில் தன் வாகனத்தை வேறு யாராவது பின் தொடர்கிறார்களா என்று பார்த்தான்.

இல்லை என்பது உறுதியானவுடன், ஒரு பொதுத் தொலைபேசிக் கூண்டருகே சென்று வண்டியை நிறுத்தி இறங்கினான்.

உள்ளே நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். எண்களைச் சுழற்றினான். எதிர்முனை ரீங்காரத்தைக் காதில் கேட்டுக் காத்திருந்தான்.

சில வினாடிகளுக்குப் பின் எதிர்முனையில் தொலைபேசி எடுக்கப்பட்டது.

''அலோ நான்தான் பேசறேன். என் பெயரைச் சொல்லாதே'' என்றான்.

''அலோ. என்ன ஆச்சி?''



''நீ முழிச்சிக்கிட்டிருக்கியா, இல்லையான்னு பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன். எனக்காகக் காத்துக்கிட்டிரு. நான் நேர்ல வந்து எல்லாத்தையும் சொல்றேன்.''

''சரி'' என்றான்.

திலக் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தான்.

வெளியே வந்து மோட்டார் பைக்கைக் கிளப்பினான்.

கால் மணி நேரப் பயணத்திற்குப் பின் மோட்டார் பைக் அந்த நெருக்கமான பிரதேசத்தில் நுழைந்தது. பகல் நேரங்களில் நடக்கவே முடியாத அளவு மனிதர்களும் மாடுகளும், வாகனங்களும் நிறைந்திருக்கும் பிரதேசம் அது. சென்னை முழுக்க இங்கேயே சாக்கடை தண்ணீர் கொசுக்களாகக் குவிந்திருக்கிறதோ என்று தோன்ற வைக்கும் சந்துகள், மேலும் சந்துகள், மேலும் மேலும் சந்துகள்.

திலக் சந்து சந்தாய் நுழைந்து ஒரு சந்தில் கடை போல் தோற்றமளித்த, இரும்புக் கதவு இறக்கப்பட்ட ஒரு நீள செல்வகத்தின் முன் வண்டியை நிறுத்தினான்

கதவுக்கு வலதுபுறத்தில் மாடிப்படிகள் மேலேற ஏறினான்.

அவனுடைய காலடிச் சத்தத்தில், அவன் படிகளை முடித்ததும் அடைத்து வைக்கப்பட்ட கதவு திறந்து கொண்டது.

கதவு திறந்தவன் திலக்கை அப்படியே கட்டிப்பிடித்து உள்வாங்கிக்கொண்டான்.

''சொல்லு திலக். என்ன ஆச்சி?''

''இனியா தனியாவே கிடைக்கறதில்ல இளங்கோ. அவன் படப்பிடிப்புக்குப் போனா அவனுடைய



MITHRAVINTHA

ஒப்பனைப் போன்னு, பர்சனல் செக்ரட்டரின்னு அவனைச் சுற்றி ஒரு படையே இருக்கு.

வீட்டுல அவனுடைய படுக்கையறை ஒண்ணுதான் அவனுக்குன்னு தனியா இருக்கு. ஆனால் அந்தப் படுக்கை அறைக்குள்ளேயும் திருட்டுத்தனமாய்ப்போனாத் தான் அவனைத் தனியா சந்திக்க முடியும். நான் அவனோட ரசிகன்னு வேடம் போட்டேன். தனியா இருக்கறப்ப சும்மா அவன் கழுத்தை நெரிச்சேன். வீடு மொத்தமும் எனக்கெதிரா சேர்ந்தடிச்சு. காக்காவலிப்பு வேடம் போட்டு, வாயில நுரைய வரவழைச்சி, நாக்குல ரத்தத்தை வரவழைச்சி ரொம்ப சிரமப்பட்டுத்தான் தப்பிச்சேன். அவனை நீ அவன் வீட்ல ஒண்ணுமே பண்ண முடியாது.''

''இருக்கட்டும் திலக் எங்கே போயிடுவா? அவனை எப்படியாவது தனிப்படுத்தறேன். எங்கேயாவது தனியா சந்திக்கிறேன். என்னை அழிச்ச அவனை உயிரோட விட்டுவைச்சிருக்கறதுதான் தப்பு. எப்படியும் நான் அவனைக் கொல்லத்தான் போறேன். நேற்று வரைக்கும் இனிப்பா இருந்தவனைக் கதறக் கதற கொல்லத்தான் போகிறேன்'' என்றான் இளங்கோ என்று அழைக்கப் பட்டவன்.

# 5

''நேத்து வரைக்கும் இனிப்பா இருந்தவனைக் கதறக் கதறக் கொல்லத்தான் போறேன்'' என்று சொன்ன இளங்கோவிற்கு பெண்மை கலந்த முகம்.

சற்று உற்றுப் பார்த்தால் மைக்கல் ஜாக்சனை நினைவு படுத்துவான். ஒல்லியான முகம்' என்றுகூடச்



சொல்லலாம். அவன் தலைமுடி சுருள் சுருளாக வழிந் தது அது ஒழுங்காகச் சீவப்படவில்லை. முகத்தில் மீசை இல்லை. ஆனால் மூன்று நான்கு நாளாக அவன் முடியை மழித்துக்கொள்ள வில்லை என்பது அவனைப் பார்த்தாலே தெரிந்தது.

பொதுவாக சுத்தத்தில் அக்கறையற்றவன் என்பது அவனையும் அவன் இருந்த சூழலையும் பார்த்தால் உணரமுடிந்தது. ஒரு மாதிரி சாயம்போன, கை வைக் காத, தொளதொளப்பான சிவப்பு பனியன் ஒன்றை அணிந்திருந்தான். இடுப்பில் அரைக்கால் சட்டை. கையில் ஒரு செப்பு வளையம் தரித்திருந்தான். கழுத்தில் மறுபடி ஒரு செப்பு வளையம்.

இளங்கோ எந்த நேரத்தில் எப்படி மாறுவான் என்றே சொல்ல முடியாது. இன்றைக்குக் கழுத்தில் செப்பு வளையம் மாட்டியிருப்பவன் நாளைக்கு பிளாஸ் டிக் முத்து மாலை அணிவான். திடீரென்று மனநிலை மாறினால் எல்லாவற்றையும் கழட்டிப் போட்டு விட்டு ஒரு ருத்திராட்ச மாலை அணிவான். எந்த நேரம் எப்படி நடந்துகொள்வான் என்று சொல்ல முடியாத பச்சோந்தி மன நிலைக்காரனாக இருந்தான்.

'கதறக் கதறக் கொல்லத்தான் போறேன்' என்று சொன்னபோது கைகளை ,உயர்த்திப் பேசினான். அவ னது அக்குளில் வளர்ந்திருந்த முடி ஒருநாள், கூட தண் ணீர் விட்டுக் கழுவப் படாதது போல் தெரிந்தது கருப் பாக இன்றி, செம்பட்டைப் பழுப்பாக, அழுக்குத் திரிக ளாகத் தெரிந்தது. உவ்வே.

அவன் இருந்த அறைத்தரையில் வேர்க்கடலை முத் துக்கள் சிதறின மாதிரி உயிரிழந்த சிகரெட்டுத் துண்டு கள்.

MITHRAVINTHA

சுவர்களில் ஓர் ஒழுங்கின்றி பெண்களின் வண்ணப் படங்கள் அங்கங்கே சிலுவையில் அறையப்பட்டிருந்தன. அந்தப் பெண்கள் மிகக் கவர்ச்சிகரமாக உடை உடுத்தியிருந்தார்கள். ஆடை என்று ஒன்று இருப்பதையே அறியாதவர்களாகக் காட்சியளித்தார்கள்.

திலக், இளங்கோவைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தான்.

''ஏன் இளங்கோ, அவள் மேல் அவ்வளவு காழ்ப்புணர்ச்சியோட இருக்கே? அவள் உனக்கு என்ன பண்ணிட்டா? அவளோ புகழ் பெற்ற நடிகை. நீ ஒரு சாதாரண புகைப்படக்காரன். உனக்கும் அவளுக்கும் நடுவுல என்ன அவ்வளவு பெரிய பகை?''

''நீயும் நிறைய தடவை கேட்டுட்டே. சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்க திலக். சொல்றேன் கேளு. உனக்குத் தெரிஞ்ச இனியா இன்னிக்குப் பெரிய ஆளு. இலட்சம் இலட்சமா சம்பாதிக்கிற நடிகை. ரஜினி, கமல் கூட எல்லாம் ஜோடியா நடிக்கிறவ. ஆனால்" ஒரு காலத்துல அவள் என் அடிமை மாதிரி. நான் நில்லுன்னா நிப்பா, உக்காருன்னா உக்காருவா. படுன்னா படுப்பா''

''இளங்கோ. பொய் சொல்றதுக்கும் ஒரு அளவு வேணும்'' என்றான் திலக் , சிகரெட்டு ஒன்றைப் பற்ற வைத்தபடி.

இளங்கோ திலக்கின் கையிலிருந்த சிகரெட்டுப் பெட்டியிலிருந்து ஒன்றை உருவி பற்ற வைத்துக்கொண்டான். புகையை உள்ளுக்கு இழுத்து வளையம் வளையமாக வெளியே விட்டான். ''நம்பமாட்டேங்கறே பார்த்தியா. அதுக்குத்தான் சொல்லலை. ஆனால் அதான் உண்மை. இனியாவோட அம்மா மாதவி, கணவனை விவாகரத்து பண்ணினவள்.



நான் இருந்த வீட்டுக்குப் பக்கத்துல ஒரு பங்களாவோட அவுட் அவுசில் இருந்தாள். அவளும் இனியாவும் மட்டுந்தான். இனியாவுக்கு அப்ப பதினாலு, பதினஞ்சி வயசிருக்கும். பாவாடை சட்டை போட்டிருப்பாள் தளதளன்னு இருப்பாள். அந்த உடையில அவள் ஸ்கிப்பிங் ஆடுவா. கயிறை உயர்த்தி உயர்த்தி அவள் குதிக்கறப்ப அவளை நீ பார்த்திருக்கணும். கழுத்துல வேர்வை வடிஞ்சி சட்டையை நனைக்கும். வேர்வையில நனைஞ்ச சட்டை அவளோட உடம்பைக் காட்டும்.

அவள் குதிக்கறப்ப அவள் உடம்புல அங்கங்க சில பாகங்கள் குலுங்கும். நான் அப்பவே புகைப்படக்காரன் தான். அவளை வெறிச்சுப் பார்ப்பேன். இவளை மாடலா உபயோகிச்சா எவ்வளவு நல்லாயிருக்கும்னு கற்பனை பண்ணுவேன். நான் பார்க்கறேன்னு இனியாவுக்குத் தெரியும். அவளும் கடைக்கண்ணால என்னைப் பார்ப்பாள்.

எங்கயாவது கடைக்குப் போக நேர்ந்தா நான் அவள் பின்னாடியே போவேன். 'பேரு என்ன?', 'என்ன படிக்கிறே?"ன்னு சின்னச் சின்னதா கேள்வி கேப்பேன். புன்னகையோட பதில் சொல்வாள். நான் அவளை வெறிச்சிப் பாக்கறதைப் புரிஞ்சிக்க முடியாத அளவுக்கு கள்ளங்கபடு தெரியாதவளா இருந்தாள்.

நான் இனியா வீட்டுக்குப் போக ஆரம்பிச்சேன். அவங்கம்மா தையல் வேலை, எம்ப்ராய்டரி வேலை, அடிப்பாவாடை தைச்சிக் கொடுக்கற வேலைன்னு என்னென்னவோ செய்ஞ்சி சம்பாதிச்சுக்கிட்டிருந்தாள். அவள்கிட்டப் போய் இனியாவை புகைப்படம் எடுக்க அனுமதி கேட்டேன். நிறைய பணம் வரும்னு சொன்னேன். அம்மாவும், பொண்ணும் முதல்ல தயங்கி அப்புறம் ஒத்துக்கிட்டாங்க.

MITHRAVINTHA

இனியாவை, என் ஸ்டுடியோவுக்குக் கூட்டிட்டுப் போய் விதவிதமாகப் படம் எடுத்தேன்.

ஒவ்வொரு படமும் லட்டுன்னா, லட்டுதான். ஒவ்வொண்ணும் இனியாவோட அழகை ஒவ்வொரு விதமா வெளிப்படுத்தற படம். அப்படி இனியாவோட அழகை நான் வெளிப்படுத்தினதாலத்தான் பாரிவேல் அவளை ஒரு புத்தகத்துல பார்த்து மயங்கிட்டான்.

தமிழ்ல மோகனு ஒருத்தன், பாரிவேல்கிட்ட கமிசனுக்கு வேலை பண்ணிகிட்டிருந்தவன்; சும்மா எடுபிடி. அவன் இனியாவை பாரிவேல சார்புல கொண்டுபோய தயாரிப்பாளருங்ககிட்ட அறிமுகப்படுத்தினான். இனியா ஒரு இராத்திரியில பெரிய நடிகை ஆயிட்டா.

சொன்னா நம்பமாட்டே திலக். என்னைக் காதலிக்கிறேன்னு சொன்னவள் இந்த இனியா. எம்மேல பைத்தியமா இருந்தாள். எந்நேரமும் என் வீட்லயேதான் இருப்பாள். இன்னிக்கு என்னை கறிவேப்பிலை மாதிரி தூக்கி எறிஞ்சி பேசறா.

என்னுடைய ஸ்டுடியோ தீ விபத்துல நாசமாயிடுச்சி. என்னோட காமிரா, லைட் எல்லாமே பாழாயிடுச்சி. இப்ப நான் இந்த கண்டுல இருக்கேன். என் ஸ்டுடியோவுக்கு நெருப்பு வைச்சி என் வாழ்க்கையை பாலைவனமாக்கினவள் இந்த இனியாதான். கூர்க்காவை விட்டு என்னைத் தொரத்தியடிக்கிறாள் திலக். குப்பைக்காகிதம் கோபுரத்து மேல போய் உக்காந்துட்டா அது உயர்ந்ததா மாறிடுமா?

என்னை இந்த நிலைக்கு ஆளாக்கின அவளைச் சும்மாவிட முடியுமா? சொல்லு. நீ என் பழைய நண்பன் இன்னிக்கு சினிமால நுழைஞ்சுட்டே. வில்லன் வேடம் போட்டே கொஞ்சநாள்ல கதாநாயகன் ஆயிடுவே. ஆனால் என் நட்பை நீ இன்னும் மறக்கலியே.



இனியாவைப் பற்றின விவகாரங்களை எல்லாம் துப்பறிஞ்சி எனக்கு சொல்றியே. அந்த நன்றி வேணாம் அவளுக்கு? நன்றிகெட்டவள். உண்ட வீட்டுக்கு துரோகம் நினைக்கிறவள். அவள் வாழலாமா திலக்? அவளைப் பற்றின விவரங்களை எனக்கு நீ சேகரிச்சு கொடு. அவள் எங்க போறா? வரா? தனியா எப்ப இருப்பாள்? அத்தனையும் சொல்லு. நான் என் வேலையை முடிக்கிறேன். இந்த உதவி மட்டும் நீ பண்ணிட்டா, நான உனக்கு வாழ்நாள் முழுக்க செருப்பா தேயறேன் திலக்'' என்று இளங்கோ உணர்ச்சி பூர்வமாக கத்தி விட்டுக் கையில் இருந்த சிகரெட்டைக் கீழே போட்டு நசுக்கிப் பாழாக்கினான்.

திலக் அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இளங்கோ சொன்னபடி செய்து காட்டுவான்போல் உணர்ந்தான். இனியாவின்மீது இளங்கோவிற்கு இருந்த அளவிட முடியாத வெறுப்பை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

திலக்கின் உடல் சிலிர்த்தது.

இனியாவின் வீடு காலைநேரப்பரபரப்பில் இருந்தது. முதல்நாள் இரவு திலக் வந்து ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டு போனபோது ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் பாதிப்பிலிருந்து இனியா விடுபட்டிருந்தாள்.

அவள் மனம் படபடப்பில் இருந்தது. காலையில் எழுந்தவுடனேயே குளியல் அறைக்குப்போய் பிளாஸ்டிக் இருக்கைமீது உட்கார்ந்து கொண்டு அம்மாவை அழைத்தாள்.

மாதவி கையில் போர்ன்விடாவுடன் வந்தவள் இனியா குளியல் அறையில் நுழைந்துவிட்டதை அறிந்து

MITHRAVINTHA

அவனுக்கு அவசர அவசரமாக சாம்பூ தேய்த்துக் குளிப்பாட்டினாள்.

இன்றைக்கு இயக்குநர் அவனை தளர்ந்த முடியுடன் வரச்சொல்லியிருந்தார். பம்மென்று அடர்ந்து படர்ந்த முடியை ஒரு நைலான் நாடாவால் கட்டிவிட்டபோது, "தலைமுடி ரொம்ப அதிகமா இருக்கும்மா, வெட்டிடட்டுமா?" என்று அம்மாவைக் கேட்டான்.

"பாவிப் பொண்ணே,தலைமுடி அதிகமா இருக்குன்னு ஏண்டி கண்ணை வைக்கறே? உன் முடிதான் உனக்கு அழகு. நீயே கெடுத்துக்குவே போல இருக்கே. கல்லடி பட்டாலும் சொல்லடிபடக்கூடாதுன்னு சொல்லுவாங்க. அப்புறம் தலைமுடி எலிவால் மாதிரி ஆய்டப் போவுது. இன்னொரு தடவை இந்த மாதிரி சொல்லாதே"என்றாள்.

படுக்கையறைக்குள் அவனுக்கு சாம்பிராணிபோட்டுக் கொண்டிருந்தபோது மோகன் உள்ளே வந்தான்.

"குட்மானிங் இனியா" என்றான்.

"மார்னிங்" என்றாள் இனியா சலிப்புடன்.

அவன் குரலில் இருந்த சலிப்பைக் கவனிக்காமல் மோகன் அந்த அறையில் இருந்த அலமாரியை நோக்கிச் சென்றான். அலமாரி தரையில் இருந்து கூரை வரைக்கும் உயர்ந்திருந்தது. திறந்தான். வரிசையாய் உடைகள் வெள்ளம். அவற்றை விரலால் தள்ளிப் பார்த்துக் கொண்டே வந்து ஒரு செட்டைக் கையில் எடுத்தான்.

"இதுதான் இன்னிக்கு தொடர்ச்சியான உடை" என்று சொல்லிக்கொண்டே அந்த ஆடையைப் படுக்கையில் வைத்தான். "சீக்கிரம் டிரஸ் பண்ணிக்கிட்டு வா. மேக்கப் மேன் காத்துக்கிட்டிருக்காரு. லொகேஷன்லேர்ந்து நாலு தடவை போன் வந்திரிச்சி" என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.



நான்கு பேருக்கு நடுவில் மரியாதை கலந்து 'நீங்க, வாங்க' என்று பேசும் மோகன், வீட்டில் அவனை மரியாதையின்றி ஒருமையில் அதிகாரத் தோரணையுடன் பேசுவதை இனியாவால் ரசிக்க முடியவில்லை. அவளுக்குக் கண்ணில் நீர் படர்ந்தது.

அவனுடன் முட்டாள்தனமாகப் போட்ட ஒப்பந்தத்தை நினைத்துக் கொண்டாள். தன் கையாலாகாத்தனத்தை நினைத்தால் இனியாவிற்குத் தன் மீதே கோபம் வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு ஆடைகளை அணிந்தாள். மாதவிக்கு மகளின் மனதில் ஓடும் எண்ணங்களை அறிந்து கொள்ளும் சக்தியில்லை. தலையை வாரி விட்டு ஈரத்துணியால் மகளின் முகத்தை ஒற்றியெடுத்தாள். அறை முழுக்க ஓடிகோலன் வாசனை கும்மென்று பரவியது.

இனியா மிடி ஒன்றை அணிந்தாள். மேல் உடையை அணிந்தாள். மேல் உடை தலையணை உறைபோல் இறுக்கமாக இருந்தது. மேல் உடையில் ஒரு ஒற்றை ரோஜா மலர்ந்திருந்தது. அது மலர்ந்திருந்த இடம் திரையில் பிரம்மாண்டமாகத் தெரிந்தால் எத்தனை ரசிகர்களின் மனங்களைச் சுண்டி இழுக்குமோ தெரியவில்லை.

'இனியா, 'ப்ச்' என்று ஒரு விரக்திப் புன்னகையை உதிர்த்துக் கொண்டு படுக்கையறையில் இருந்து வெளிப்பட்டவள், அறை சோபாவில் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தினாள்.

"அம்மா... யார் வந்திருக்கான்னு பாரு" என்று படுக்கையறையை நோக்கி உற்சாகமாகக் கூவினாள்.

சில வினாடிகளுக்கு முன் அவளிடம் இருந்த விரக்தி எல்லாம் சூரியக்கதிர் பட்ட பனித்துளி போல் மறைந்து போய் உற்சாகப் பந்தாக அவள் மாறினாள்.

"ஏய்... சுதம்பா" என்று கூவிக்கொண்டே ஓடினாள்.

MITHRAVINTHA

சோபாவில் உட்கார்ந்திருந்த கதம்பா, இனியாவின் அழைப்பைக் கேட்டு மலர்ந்த முகத்துடன் திரும்பினாள். திரும்பியபோது அவள் பின்னிக் கொண்டிருந்த இரட்டை பின்னல்களும் ஒருமாதிரி வசீகரிக்கும் கோணத்தில் ஒருமுறை ஆடி அவள் மார்பும் பகுதிகளில் விழுந்து ஓய்வெடுத்தன. உட்கார்ந்திருந்த கதம்பா எழுந்து ஓடிவந்து இனியாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

"எப்படி இருக்கே இனியா?" என்று கேட்டாள்.

இனியா முகத்தில் சட்டென்று பொய்க் கோபத்தைக் காட்டினாள். "என்னடி இது. என்னோட ஒரே தோழி. நெருக்கமான தோழி. என்கூட போன்லகூடப் பேசக் கூடாதா? இப்படி திடுதிப்பின்னு வந்து நின்னு எனக்கு அதிர்ச்சியைத் தரணுமா?"

"உன் போன் கிடைப்பதே இல்லை. பேசலாம்னா முதல்ல உன் இணைப்பு கிடைக்கணுமில்ல இனியா?"

"சரி லெட்டராவது போடலாம் இல்ல?"

"உனக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் ரசிகரிடம் இருந்து லெட்டர் வரும். அதில் என் லெட்டர் கலந்து காணாமப் போயிடும். ஏற்கனவே ரெண்டுதடவை அப்படி ஆயிருக்கு. அதான் பெங்களூர்லேர்ந்து சொல்லாம கொள்ளாம ஓடிவந்துட்டேன்" என்ற கதம்பா பட்டுப்பாவாடையும் தாவணியும் அணிந்திருந்தாள். இளமை வழியும் முகம். குறும்பு கொப்பளிக்கும் கண்கள். தேன் வழியும் உதடுகள்.

அவள் மட்டும் திரைக்கு வந்திருந்தால் தான் எப்போதோ காணாமல் போயிருப்போம் என்று நினைத்த இனியா, "அம்மா அப்பால்லாம் எப்படி இருக்காங்க?" என்று கேட்டாள். கதம்பாவைக் கைபிடித்து அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்தாள். எதிரில் உட்கார்ந்து கொண்டாள்.



"வா கதம்பா" என்று வாய் நிறைய வரவேற்றுக் கொண்டே மாதவி அவளை நெருங்கி வந்து அவள் நெற்றியில் முத்தமிட்டாள். "விசயமெல்லாம் அப்புறம் பேசலாம். மொதல்ல உன் தோழியைச் சாப்பிடச் சொல்லு. நீயும் அப்படியே சாப்பிடு. படப்பிடிப்புக்கு நேரம் ஆயிடிச்சி. நீ மட்டும் வராமல் இருந்திருந்தா இவள் இந்நேரம் கார்லதான் இருந்திருப்பா. வயித்துக்குப் போடாமல் இவள் வெய்யில்லயும் மழையிலயும் கஷ்டப் படறதைப் பார்த்தா எனக்கு நெஞ்செல்லாம் பதறுது" என்று சாப்பாட்டு மேசை நோக்கி ஓடினாள்.

திம்மி ஓடிவந்து?கதம்பாவின் மடியில் அமர்ந்தது.

"திம்மிக்கு கூட உன்னை நல்லாத் தெரிஞ்சிருக்கு பாருடி" என்றாள் இனியா. 'ஏய்...கதம்பா உங்கூட நிறையப் பேசணும். வா, படப்பிடிப்பு தளத்துக்குப் போகலாம்..."

படப்பிடிப்பு நடந்த இடத்தில், இயக்குநர் உதவை வைத்து ஏதோ ஒரு காட்சியைப் படம் பிடித்துக் கொண்டிருக்க, இனியா கதம்பாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"கதம்பா, என் வாழ்க்கையில் நிறைய கருமேகம் வந்து சேர்ந்திருக்குடி. உங்கிட்ட நிறைய சொல்லணும். உன்னோட ஆலோசனையைக் கேக்கணும். உன்னை கார்ல தூக்கிப் போட்டாவது கூட்டிக்கிட்டு வரச் சொல்லலாம்னு இருந்தேன். நீயே வந்துட்டே. எனக்கு நாளைக்கு படப்பிடிப்பு கிடையாது. நாம வீட்ல எல்லாம் பேச வேணாம். கேளம்பாக்கத்தில் எனக்கு ஒரு பங்களா இருக்கு தெரியும் இல்ல? நாளைக்கு நீயும் நாலும் அங்க போயிடலாம். நான் முழுக்கப் பேசலாம். என் வாழ்க்கைல நான் சில முக்கியமான முடிவுகளை எடுக்கணும். நாளைக்கு இருப்பே இல்ல? உன்னை என்ன

MITHRAVINTHA

கேக்கறது. நாளைக்கு நீ இருக்கே..." என்று அவசரம் அவசரமாகச் சொன்ன இனியா, இயக்குநர் அழைப்புக்கு இணங்கி, காட்சியில் பங்கு பெற ஓடினாள்.

"என்னம்மா விசயம்? இனியா ஏன் இவ்வளவு சோர்ந்து போய் இருக்கா?" என்று கதம்பா, மாதவியை விசாரித்தாள்.

"என்னன்னு சொல்றது கதம்பா. என் கண்ணுக்கு என்னென்னவோ பிரச்சினை. எவனோ ஒருத்தன் போன்ல கூப்பிட்டுக் கொன்னுடுவேன்னு நேத்து மிரட்டினானாம். இந்த பி.ஏ. இருக்கானே...மோகன் அவன் வேற மோசடி பண்ணிக்கிட்டுத் திரியறான். அம்மாக்காரி கிட்டே எல்லாத்தையும் சொல்ல முடியுமோ என்னவோ. உங்கிட்ட சொல்ல ஆசைப்படறா குழந்தை. போயிட்டு வா. அவளுக்கு நீ கூட இருந்தா யானை பலம் வந்த மாதிரி" என்று சொல்லிவிட்டு மாதவி ஒரு தம்ளரில் பிளாஸ்கில் இருந்த மோரை எடுத்து ஊற்றினாள்.

அவர்களுக்குச் சற்றுத் தொலைவில் நின்று அவர்களுடைய உரையாடலை காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த திலக்கின் முகத்தில் ஒரு மர்மப் புன்னகை படர்ந்தது.

"கேளம்பாக்கத்தில் இருக்கும் பங்களாவிற்கு தனியாகப் போகப் போகிறாயா இனியா. போ. உன் சாவை நோக்கி நீயே போவதை யாரால் தடுக்க முடியும்?" என்று நினைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு மெல்ல நழுவினான்.

அருகில் இருந்த போனை நெருங்கி, ஒற்றை விரலால் எண்களைச் சுற்றினான்.



"அலோ இளங்கோ. உனக்கு ஒரு அருமையான வாய்ப்பு கிடைச்சிருக்கு" என்று தன் உரையாடலைத் தொடங்கினான்.

# 6

தொலை பேசியில் 'உம்' கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்த இளங்கோவின் முகம் வினாடிக்கு வினாடி மாறியது.

நெற்றி சுருங்கியது. புருவங்கள் உயர்ந்தன. உதடுகள் குவிந்தன. கைவிரல்களில் ஒன்று காதில் மாட்டியிருந்த வளையம் ஒன்றைச் சுண்டிச் சுண்டிவிட்டது. நகம் ஒன்று பின் மண்டையை மெல்லக் கீறியது. அவனது சுருள் முடிகளில் ஒன்றே ஒன்று நீட்டி இழுக்கப் பட்டது. எதிர்முனையில் திலக் பேசி முடித்தான். இளங்கோ தொலைபேசி வழியாக திலக்கிற்கு ஒரு முத்தத்தை அனுப்பினான். தொலைபேசி இணைப்பைத் துண்டித்தான்.

யோசித்தான். அவனது மூளையின் சில பகுதிகள் தீவிரமாக வேலை செய்தன. அவனுக்கு திட்டத்தைத் தீட்டித் தந்தன.

எழுந்தான். இனியா நாளைக் காலைதான் கேளம்பாக்கம் வீட்டிற்குச் செல்லப் போகிறாள். ஆனால், அதற்கு முன்பே இன்று முன்னிரவிலேயே அந்த வீட்டிற்குப் போய் ஆராய்ந்துவிடுவது என்று தீர்மானித்தான்.

MITHRAVINTHA

இரவு அங்கே போவதற்குள் இங்கே சென்னையில் ஏதாவது ஒரு குட்டியை புகைப்படம் எடுத்தால் நாளைக்கு நாலு காசு பார்க்க முடியும் என்று எண்ணி, தன்னுடைய தொலைபேசி எண்கள் எழுதப்பட்டிருந்த சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்து ஆராய்ந்தான். எண்களை சுற்றினான்.

''அலோ வானதி?''

''ஆமாம் நீங்கள் யார்?''

''இளங்கோ.''

''வணக்கம் சார்.''

''சார் வேண்டாம். இளங்கோ என்று சொல் போதும், இப்போது சும்மாத்தானே இருக்கிறாய்?''

''ஆமாம் இளங்கோ.''

''வரட்டுமா? உன்னை ஒரு ரோல் முழுக்கப் படம் பிடிக்கலாம்னு இருக்கேன்.''

''உடனே வாங்க சார். என்ன உடை சார்?''

''இளங்கோ படம் எடுத்தா உடைக்கு என்ன அவசியம் வானதி?''

''போங்க சார். ஆனாலும் நீங்கள் ரொம்பக் குறும்பு.''

''உன் அழகைப் பார்த்துட்டு நாளைக்கு உன்னை எவனாவது கொத்திக்கிட்டுப் போய் சினிமாவில கதாநாயகியாக்கிடுவான். அப்ப நீ என்னை ஞாபகம் வைச்சிக்கப் போறே?''

''ச்சே...நான் நன்றி இல்லாதவளா இருக்க மாட்டேன் இளங்கோ.''



''சரி. நான் வரேன் வழக்கம் போலக் கவனிச்சிக்கோ.''

''எல்லாம் தயாரா இருக்கு. நானும் தயாரா இருக்கேன். வாங்க.''

இளங்கோ சிரித்துக்கொண்டே போனில் அவளுக்கும் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு இணைப்பைத் துண்டித்தான்.

இனியாவின் படுக்கை அறை, இரவு நேரம். இரட்டைக் கட்டில் இனியாவை மட்டும் தாங்கி இருந்தது. இனியா இரவு ஆடையில் இருந்தாள். களைத்துப் போய் இருந்தாள்.

வளர்மதி வெந்நீர் பையால் இனியாவின் உடலில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஒத்தடம் உடம்பின் வலியை இன்பமாகத் தாண்டிவிட்ட நேரங்களில் இனியா, 'அம்மா...அம்மா...' என்று முனங்கினாள்.

கட்டிலுக்குச் சற்றுத் தள்ளி ஒரு பிரம்புக்கூடை விளக்கு வெளிச்ச வெள்ளத்தில் தொங்கியது. ஊசலாடியது. கதம்பா அதில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய கையில் ஒரு பத்திரிகை விரிக்கப்பட்டிருக்க, அந்தப் பக்கத்தில் ஒரு இளம் பெண்ணின் படம் பெரிதாக அச்சாகி இருந்தது.

கதம்பா கையில் ஒரு பேனா வைத்திருந்தாள். அதை உதட்டில் வைத்து அழுத்திச் சற்று யோசித்தாள். ஒரு புன்னகையைச் சிந்தினாள். பேனாவின் முனையை பத்திரிகைப் பெண்ணின் உதட்டுக்கு மேல் வைத்து கொஞ்ச நேரம் நாட்டியமாட வைத்தாள். பத்திரிகை பெண்ணின் முகத்தில் கருகருவென ஒரு மீசையுடன் கூடிய பெண்ணின் முகத்தைப் பார்த்துக் கதம்பா வாய்விட்டுச் சிரித்தாள்.

MITHRAVINTHA

இனியா திரும்பிப் பார்த்தாள்.

"என்னடி சிரிப்பு?" என்று கேட்டாள்.

"பாரேன்" என்று பத்திரிகையை நீட்டினாள் கதம்பா.

இனியா பார்த்துவிட்டுச் சிரித்தாள். "பள்ளிக் கூடத்துப் பழக்கம். இன்னும் போகலையாடி உனக்கு." என்று கேட்டாள்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்னு சொல்லு வாங்க இல்ல. எப்படிப் போகும்?" என்று பதிலுக்குக் கதம்பா கேட்டாள்.

"பொம்பளைக்கு மீசை சரி, ஆம்பளைக்கு?"

"மூக்குத்தி, பொட்டு செயின், தோடு...என்றாள் கதம்பா.

இந்த முறை இருவருமே சேர்ந்து சிரித்தார்கள்.

இனியா சட்டென்று சிரிப்பை நிறுத்தினாள்.

"ஏய் கதம்பா. விளையாட்டெல்லாம் இருக்கட்டும். நீ எப்ப வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கப்போறே?"

"அப்படின்னா?"

"கல்யாணம்தான்?"

"அப்புறம் குழந்தை குட்டி மூக்குச்சளி, கணவனுக் காக இராத்திரி கண்விழிச்சிக் காத்திருக்கிறது அவன் சாப்பிட்டப்புறம் சாப்பிடறதுன்னு என் சுதந்திரமே போயிடுமே இனியா. நான் உன்னை மாதிரி சுதந்திரமா இருக்க ஆசைப்படறேன்.

பள்ளி நாட்களில் நாம எப்படி சிரிப்பும் கிண்டலுமா இருந்தோம்? உனக்கு நினைவிருக்கா? அந்த அரிசி மண்டிக்காரர் பையன் ஒருத்தன் நம்பளைச் சுத்திச் சுத்தி



வருவானே! நானும் நீயும் சேர்ந்து அவனை என்னென்ன வேலை வாங்கியிருக்கோம்? கல்யாணமாயிடுச்சின்னா அந்த சுதந்திரமெல்லாம் போயிடுமே.

எனக்கு அந்த பள்ளிக்கூட நாள் திரும்பி வராதான்னு ஏக்கமா இருக்குடி. அதுக்கப்புறம் உன் பாதை வேற... என் பாதை வேறன்னு ஆயிடிச்சி...ஆமா இனியா...நீ ஒரு தடவை எனக்கு எழுதின கடிதத்துலே யாரோ ஒரு காமிராக்காரனைக் காதலிக்கறதா எழுதியிருந்தியே... அவன் பேரு என்ன? இப்ப அவன் எங்க இருக்கான்?"

இனியாவின் முகம் சட்டென்று தாமரை இதழ்கள் மூடிக்கொண்டது போல கூம்பிப்போனது.

"நான் ஏதாவது தப்பாகக் கேட்டேனா இனியா?" என்று கதம்பா சட்டென்று இனியாவின் அருகில் சென்று அவள் கன்னம் இரண்டையும் தாங்கிக் கேட்டாள்.

"இல்லடி அவன் ஒரு பொறுக்கிடி கதம்பா. ஆம்ப ளைங்களை எடை போடற அளவுக்கு நான் அப்ப வளரலை. பதினாறு வயசு. என்னை அவன் நேசிக் கறான்னு நினைச்சேன். எம்மேல பரிவு காட்றான்னு நினைச்சி ஏமாந்தேன். அவனைக் காதலிக்கறதா சொன் னேன்."

என்னை முத்தமிட்ட முதல் ஆம்பளை அவன்தான்டி. முதல்தடவை அது நடந்தன்னிக்கு இராத்திரி முழுக்க நான் தூங்கவேயில்லை.

என் உதட்டை தொட்டுத் தொட்டுப் பாத்துக்கிட் டேன். உதடு நெருப்பா எரிஞ்ச மாதிரி ஒரு உணர்வு கூட இருந்திச்சு. மனசு அப்படியே பனிக்கட்டி மாதிரி சில்லுன்னு போயிட்டதுபோல உணர்ந்தேன்.



MITHRAVINTHA

நான் சத்தியமா அவனைக் காதலிச்சேண்டி கதம்பா. ஆனால், அந்த அயோக்கியன் என்ன பண்ணினான் தெரியுமா? என்னை அரைகுறை ஆடையில் படம் புடிச்சான். நான் திரைப்படத்தில் பெரிய நடிகையா அறிமுகமான உடனே புத்திலைக் காமிச்சிட்டான்.

நிர்வாணமா இருக்கற ஒரு பெண்ணோட படத்துல, அந்தப் பெண்ணோட முகத்தை எடுத்துட்டு என் முகத்தைப் பொருத்தி எனக்கே அனுப்பிக் காசு கேட்டான். காசு கொடுக்கலேன்னா அந்தப் படத்தைப் பத்திரிகைகளுக்கு அனுப்புவேன்னு என்னை மிரட்டினான்.

அந்தப் படம் வெளியில வந்தா என் மரியாதையெல்லாம் போயிடும்னு காசு கொடுத்தேன். அப்புறம் அதையே பழக்கமாக்கிட்டான். எந்நேரமும் காசு காசுன்னு மிரட்டினான். காதலாவது இன்னொண்ணாவது எல்லாம் காசுடி. வெறுத்து போயிட்டேன்.

பார்வேன்கிட்டே சொன்னேன். 'என்னைக் கவலைப்படாதே'ன்னு சொன்னார். இனிமேல் அவன் வந்தா கூர்க்காவை விட்டு துரத்தியடி. நான் பாத்துக்கறேன' னாரு. அதே மாதிரி செஞ்சேன். அப்புறம்தான் எனக்கு செய்தி வந்தது. அவனுடைய ஸ்டூடியோவே நெருப்புல சாம்பலாயிடிச்சாம்.

எந்த போட்டோவை வைச்சி என்னை மிரட்டினானோ அதெல்லாம் இருக்கற இடமே தெரியலையாம். போதும்மா. ஒரு காதல் அனுபவம் போதும் எனக்கு. ஏய்... உனக்கு எதுவும் காதல் அனுபவம் இல்லையா?''

''ச்சீ...'' என்றாள் கதம்பா முகம் சிவக்க.

''அ... வெட்கத்தப்பாரு. இப்ப இப்படித்தான் சொல்லத் தோணும். குழந்தை, குட்டி மூக்குச்சளின்னு எல்லாம் பேசத் தோணும். நாளைக்கு உனக்குன்னு



ஒருத்தன் வந்தான்னு வச்சிக்க. அப்புறம் உனக்கு உலகமே மறந்து போயிடும் பாரேன்.''

''பார்க்கலாம்'' என்றாள் கதம்பா சவால் போல.

இளங்கோ தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். இரவு மணி ஏழு முப்பத்தைந்து. இதுதான் சரியான நேரம் என்று தீர்மானித்தான். தன் புறாக்கூண்டு அறையை விட்டுப் புறப்பட்டான்.

அவனது மனம் அன்றைய பகல் நேர அனுபவத்தில் திளைத்திருந்தது. வானதி அவனுக்கு அட்டகாசமாக விருந்து அளித்திருந்தாள். குடிக்க அயல்நாட்டுச் சாராயம். கடிக்க கோழிக் கால். ரசிக்க வானதி அவன் மனமும் உடலும் லேசாகி மிதக்கிற மாதிரி இருந்தது. அப்படியே படுக்கையில் மல்லாந்து அனுபவங்களை அசைபோட விரும்பினான். இருந்தும் இனியா அவனைக் குடைந்தெடுத்தாள். அவளுடைய துரோகத்தை அவனால் மறக்க முடியவில்லை

ஸ்டூடியோ எரிந்துபோனதால் அவன் வாழ்க்கையே கலகலத்துவிட்டது. ஸ்டூடியோவில் இனியாவின் படம் மட்டுமா இருந்தது எத்தனையோ பெண்களின் படங்கள் இருந்தன. எல்லாமே தங்க முட்டை வாத்துகள். எல்லாவற்றையும் இழந்து இன்றைக்கு ஒரு பிச்சைக்காரனை விடவும் கேவலமாக நிற்பது யாரால்? இந்த இனியாவால் அவளை அழி. ஒழி அப்புறம்தான் உனக்கு நிம்மதி!

வாசலுக்கு வந்தான். அவனிடம் ஒரு பழைய மோட்டார் பைக் இருந்தது. அதன் எண் பலகை முன்கூட்டியே திட்டமிட்டு மாற்றப்பட்டிருந்தது. மோட்டார்பைக்கை அதன் தூக்கத்திலிருந்து எழுப்பினான். டட், டட், டட், டட், தட தட என்று மோட்டார் பைக் எழுந்தது ஓடத் தொடங்கியது.

MITHRAVINTHA

சாலையில் சற்று தூரம் சென்றதும், 'கேளம்பாக்கம் இருபத்தைந்து கிலோ மீட்டர்' என்ற கல்லை மோட்டார் பைக்கின் விளக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இளங்கோ அதை 'டர்ர்ர்' என்று கடந்தான்.

''இன்னுமா நீங்கள் இரண்டு பேரும் தூங்கலை? ஏய் வளர்மதி, ஒத்தடம் கொடுத்தவரைக்கும் போதும். எங்கிட்ட கொடு. என் கையால அவனுக்கு ஒத்தடம் கொடுத்தாத்தான் அவனுக்குச் சரிபட்டு வரும்'' என்று சொல்லிக் கொண்டே மாதவி இனியாவின் படுக்கை அறைக்குள் நுழைந்தாள்.

வளர்மதி ஒத்தடப் பையை மாதவியிடம் கொடுத்து விட்டு வெளியேறினாள்.

''என்ன கதம்பா. ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா இல்லியா?''

''ஆச்சி'' என்றாள் கதம்பா. ''நீங்கள்தான் சமையக் காரங்கள்லேர்ந்து வேலைக்காரங்க வரைக்கும் எல்லார் கிட்டயும் சொல்லிட்டுத்தானே போயிருக்கீங்க. நானும் இனியாவும் வீட்டுக்கு வந்து சேர்ந்ததிலேர்ந்து நிமிடத் துக்கு ஒரு தடவை எங்களை விசாரிச்சி கவனிச்சாலது முதல்ல ஜூஸ். அப்புறம் சிக்கன் சூப். பத்தாதுன்னு சப் பாத்தி. இப்படில்லாம் என்னைக் கவனிச்சீங்க, நான் இந்த இடத்தைவிட்டு அசையவே மாட்டேன்'' என்றாள் கதம்பா சிரித்துக்கொண்டே.

''இரும்மா. இருன்னுதான் சொல்றேன். எனக்கு இனியாவையும் உன்னையும் விட்டால் வேற யார் இருக் காங்க? எனக்கு இனியா மட்டும் பொண்ணில்ல. நீயும் ஒரு பொண்ணுதான். தங்கத் தேரு மாதிரி இருக்கே. என் கண்ணே பட்டுடும் போல இருக்கு. உன்னை எங்கூடயே வைச்சிக்க எனக்குக் கசக்குமா கதம்பா...அதுசரி, ஞூட்டிங்



லேர்ந்து வந்த உடனே உங்க ரெண்டு பேருக்கும் தேங் காய் சுத்திப் போட்டு சூறைவிடச் சொல்லியிருந்தேனே. செஞ்சாங்களா இல்லியா?''

''ஒண்ணில்ல, ரெண்டில்ல. மூணு தேங்காய் சூறை விட்டாங்க.''

''அதான பார்த்தேன். கண்ணுங்களா, படுக்கறது தானே...எவ்வளவு நேரந்தான் பேசுவீங்க? நாளைக்குத் தான் நாள் முழுக்கப் பேசிக்கிட்டு இருக்கப் போறீங் களே...அப்பப் பேசிக்கலாமே.''

''அம்மா! நீ போ. நாங்க இன்னும் கொஞ்ச நேரத் துல தூங்கிடறோம்.''

''சரி, போறேன். விளக்கை அணைச்சிடவா?''

''வேணாம்.''

''சரிடி. கொஞ்ச நேரம் ஒத்தடமாவது கொடுக்க றேன் வெயில்ல உடம்பு எப்படி கீரைத்தண்டு மாதிரி வாடிப் போய்டிச்சி பாரு, கதம்பா, நான் உன்னை நம் பித்தான் இனியாவை உன்கூட நாளைக்கு அனுப்பறேன். என்ன பேச்சோ? நான் வந்து ஒரு ஓரத்துல உருண்டுக்க றேன்னு சொன்னாக்கூடக் கேக்காம. அம்மாடி, அவ நீச்சல் குளத்துல நேரம் போறது தெரியாம கூத்தடிப்பா தலை முடிக்கு பிளாஸ்டிக் தொப்பி எடுத்து வைச்சிருக் கேன். போட்டு விடு. இல்லாட்டா கண்ணெல்லாம் சிவந் துடும்.''

''சரிம்மா'' என்றாள் கதம்பா.

''ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை சூப்புக் கொடுத் துடு நீயும் குடி. அப்பத்தான் உடம்புல வலு இருக்கும்' நான் இங்கேர்ந்து கார்ல அப்பப்ப அனுப்பி வைக்கறேன்.

''சரிம்மா.''

''ஐஸ்கிரீம்னா இனியாவுக்கு உயிரு. நாளைக்கு மத் தியான சாப்பாட்டோட கசட்டா அனுப்பறேன். சாப் பிடுங்க.''

MITHRAVINTHA

''சரிம்மா.''

''வஞ்சிரமீனு வாங்கிட்டு வரச்சொல்லியிருக்கேன். கொழம்பு வைச்சு அனுப்பட்டா? வறுத்து அனுப்பட்டா? வேணாம். ரெண்டுமே அனுப்பிடறேன். மிச்சம் வைக்காம சாப்புடணும். வளர்ற குழந்தைங்க. தண்ணில எறங்கி ஏறுனா பசி தாங்கமாட்டீங்க. என்னா நான் சொல்றது?''

''ஐயோ, அம்மா'' என்று இனியா படுக்கையைவிட்டு எழுந்தாள். ''நான் என்ன சின்னக் குழந்தையா? எங்களைப் பார்த்துக்க எங்களுக்குத் தெரியும். நீ போய் நிம்மதியாகத் தூங்கு'' என்று சொல்லிக்கொண்டே, மாதவியின் தோளில் கை வைத்து அவளை அறை வாசல் வரை தள்ளிச் சென்று அனுப்பிவிட்டுக் கதவைச் சாத்தினாள் இனியா.

''ஏய் கதம்பா, மன்னிச்சிடுடி. அம்மா இப்படித்தான் தோண தோணன்னு ஒரு அஞ்சி நிமிடம் காத்திரு. நான் போய் குளிச்சிட்டு வந்துடறேன். குளிச்சிட்டுத் தூங்குனா தூக்கம் அட்டகாசமா வரும்'' என்று இனியா குளியல் அறைக்குள் நுழைந்தாள்.

கதம்பாவிற்குக் கண்ணில் நீர் படர்ந்தது. அவளும் அவளுடைய பெற்றோருக்கு ஒரே பெண்தான். இனியாவின் அம்மா மாதவி காட்டும் அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட அவளது பெற்றோர்கள் அவளிடம் காட்டியதில்லை.

இருவருமே அலுவலகம் செல்பவர்கள். இயந்திர வாழ்க்கை வாழ்பவர்கள். வீட்டில் பேச்சு என்பதே இருக்காது. என்றைக்காவது பேசுவதற்கு நேரம் கிடைத்தால் அன்றைக்கு அம்மாவிற்கும் அப்பாவிற்கும் சண்டை போடவே நேரம் சரியாகிவிடும்.



பெங்களூரில் இருப்பது கூட ஒரு சிறைத் தண்டனை போல உணர்ந்துதானே இன்றைக்கு தாத்தா-பாட்டி இருக்கும் கிராமத்திற்கு மாரியம்மன் திருவிழாவைப் பார்க்கப் போகும் சாக்கில் வெளியே வந்திருக்கிறாள்! ஒரு வகையில் பார்த்தால் இனியா அவளைவிட எவ்வளவோ கொடுத்து வைத்தவள் என்று தோன்றியது.

கதம்பா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். குளியல் அறையில் இருந்து வெளிப்பட்ட இனியாவைக் கட்டிப்பிடிப்பதென்பது புசு புசு திம்மியைக் கட்டிப்பிடிப்பது போல்தான் இருந்தது.

' நீ கொடுத்து வைச்சவடி இனியா'' என்றால் மனம் நெகிழ.

அதே நேரத்தில் இளங்கோ கேளம்பாக்கத்தில் இருந்த இனியாவின் மாளிகைக் காம்பவுண்ட்சுவரில் ஏறி உள்ளே இறங்கினான்.

# 7

இனியா அயல்நாட்டில் இருந்து தருவித்த காரை எடுத்துக் கொண்டிருந்தாள். ஓட்டுநரை வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். காரின் ஊதுகுழல் துந்துபி போல் முழங்கியது. இனியா அந்தத் துந்துபியை முழக்க விடுகிறாளோ இல்லையோ, கதம்பா அவ்வப்போது அதை அழுத்துவாள்.

'பப்பர பப்பர பம்ம்' என்று ஒரு ராணியின் வருகையை அறிவிக்க அது முழங்குவது போல கதம்பாவிற்குப் பட்டது.

MITHRAVINTHA

காரில் இனியாவும் கதம்பாவும் மட்டுமே. விடிகாலை நேரம். இன்னும் சூரியன் தனது தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கவில்லை. அதனால் போன பாதையை இருள் போர்வை போட்டு மூடியிருந்தது. இனியாவின் கார் வெளிச்சம் இருளைப் போக்க முயன்று அதன் முயற்சியில் வென்று கொண்டிருந்தது.

கதம்பா பேசவில்லை. கண்கள் வழியே வெளியே பார்ப்பதே அவளுக்கு சுகமான அனுபவமாக இருந்தது. காற்று அவள் முகத்தில் விடிகாலை நேரத்துக் குளிர்மையுடன் மோதியது. அதைத்தது அவள் தலைமுடியைக் கலைத்துக் கொண்டு விளையாடியது.

வழியெங்கும் மரங்கள் அடர்ந்திருந்தன. புதர்கள் சாமியார்களின் தலைமுடி போல அங்கங்கே படர்ந்திருந்தன.

இரவு அவர்கள் நெடுநேரம் கண்விழித்துப் பேசிக் கொண்டிருந்தாலும் அவர்களுக்குள் இன்னும் பேசி முடிக்காத குறை இருந்தது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பார்கள். அது ஆண்—பெண் உறவுக்குத் தான் சரிப்பட்டு வருமோ என்னவோ?

இரண்டு பெண்கள் நீண்டநாள் பிரிந்திருந்து விட்டுப் பேசினால் எவ்வளவு பேசினாலும் பேச்சு முடியாதது போலத்தான் தோன்றும். பள்ளிக்கூடத்தில் இருந்து பிரிந்ததில் இருந்து நேற்று சந்தித்தது வரை நடுவில் எத்தனை நாள் உருண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு பொழுதையும் கழித்தவிதத்தைப் பேச வேண்டாமா?

காரில் உட்கார்ந்திருந்த கதம்பாவிற்கு இப்போதைக்குப் பேச்சு வேண்டாம் என்று தோன்றியது. இயற்கை அதன் இயல்பிலேயே அழகாய் இருந்தது. அதற்குச் சீவிச் சிங்காரிக்க வேண்டாம் ஆடை அணிவிக்க வேண்டாம்,



பொட்டு இட வேண்டாம். வாசனைப் பவுடரைப் பூச வேண்டாம். இதொன்றும் இல்லாமலேயே இயற்கை அழகு. தலைவிரி கோலமாய் இருட்டில் அரக்கத்தனமாய் நிற்கும் இந்தப் புளியமரம் அழகு இல்லையா? நெடுநெடுவென்று வளர்ந்து உச்சியில் கப்பா பெருக்கு முடி வைத்திருக்கிற மாதிரி காட்சிதரும் தென்னைகள் அழகில்லையா? மயிர் மண்டித் தெரியும் ஆண் பிள்ளை மார்பாய்க் காட்சி தரும் புதர்கள் அழகு இல்லையா? தூரத்தில் வெட்ட வெளியாய்க் காட்சி தரும் கப்பாளங்கள், தொடுவானுக்கு அருகில் மெல்ல மெல்ல ஆரஞ்சுப் பந்தாய் எழுந்து கொண்டிருக்கும் சூரியன்தான் அழகில்லையா? காலை நேரப் பறவைகளின் சிணுங்கல்கள், அவற்றின் இறக்கைப் படபடப்புகள்—எல்லாமே அழகுதான்.

வாழ்க்கையில் நம்மைச் சுற்றி நிறைந்திருக்கும் எல்லாமே அழகுதான் என்று தோன்றியது கதம்பாவிற்கு. அப்படி அவள் நினைத்துக்கொண்ட நேரத்தில் கார், தார் சாலையில் இருந்து ஒரு கிளைச்சாலையில் நுழைந்தது.

கிளைச்சாலை குறுகலாய் இருந்தது. சாலையின் இருபுறங்களிலும் சவுக்குக் கட்டைகள் நெடுநெடுவென வளர்ந்திருந்தன. மண்பாதை சற்று மேடும் பள்ளமுமாக இருந்தது.

இனியா அந்தச் சாலையிலும் காரை வேகமாகவே செலுத்தினாள். மேட்டில் இருந்து பள்ளத்தை நோக்கிப் பாயும் தண்ணீரின் வேகம் இருந்தது. அவளுடைய காரின் வேகத்தில் ஒருவேளை மரணத்தை நோக்கிப் போகிறவர்கள் எல்லாரும் இப்படித்தான் போவார்களோ என்னவோ?

இனியா மண்சாலையில் வளைந்து வளைந்து சென்று கடைசியில் அந்த உயரமான காம்பவுண்டு சுவரை ஒட்டிக் காரைச் செலுத்தினாள்.

ஓரிடத்தில் காம்பவுண்ட் சுவரோரம் சில பாறைகள் கிடந்தன. அந்தப் பாறைகளை ஒன்றன் மீது ஒன்றாகத்

MITHRAVINTHA

தூக்கிவைத்தால்ஒருவர்வெகுஎளிதாக அந்த காம்பவுண்ட் சுவரைத் தாண்டிவிடலாம் போலத்தான் இருந்தது. இனியா அந்தப் பாறைகளைக் கவனிக்கவில்லை. கேட் அருகே சென்று காரை நிறுத்தினாள். தேனிரும்பு வார்ப்பில் கதவு. கதவின் உச்சியில் ஈட்டி முனைகளாய் இரும்பு வேல்கள். கதவில் ஏற முயற்சிப்பவர்கள் நிச்சயம் மனதில்லை தவறியவர்களாகத்தான் இருப்பார்கள்.

கதம்பா ஹார்னின் தொடர்பு வைத்திருந்த பிளாஸ்டிக் வட்டத்தை அழுத்தினாள் 'பப்பர... பப்பர' என்று பிரதேசத்தையே நந்தபி நாதம் நிரப்பியது. கதவு உடனே 'வீய்ங்க்க்' என்று திறந்தது.

''வாங்கம்மா... வாங்க வாங்க'' என்று காவல்காரன் வரவேற்றான். தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்து உதறி கக்கத்தில் வைத்துக் கொண்டுபணிவோடு சிரித்தான். அவனது பற்கள் வெற்றிலைக்காவி படர்ந்து காணப்பட்டன.

''என்ன வேலு சவுக்கியமா இருக்கியா?'' என்று இனியா அன்போடு விசாரித்தாள்.

''கிழவனுக்கு என்னம்மா? ரொம்ப சவுக்கியமாத் தான் இருக்கேன். நீங்கள் நல்லா இருக்கீங்களாம்மா?''

''இருக்கோம் வேலு. இது யார் தெரியுமா? என்தோழி கதம்பான்னு பேரு தானும் இவளும் இன்னிக்கு நாள் முழுக்கத் தனிமையில இருக்கணுங்கறதுக்காக வந்திருக் கோம். இன்னிக்கு படப்பிடிப்பு இல்லை. அதனால் இங்கதான் இருப்போம்.''

''இருங்கம்மா, இன்னிக்கும் இருங்க. நாளைக்கும் இருங்க. இது உங்க இடம். இங்க நீங்கள் வந்து இருக்காம வேற யாரு வந்து இருக்கப் போறாங்க?''



''அதுக்கில்ல வேலு. நாங்கள் ரெண்டு பேரும் உள்ளே இருக்கறப்ப வேற யாராவது வந்து எங்களைப் பார்க்கணும்னு சொன்னா உள்ளே விடாதே. பத்திரிகைக்காரங்க சினிமாக்காரங்கன்னு யாரு வந்தாலும் நாங்கள் இங்க இருக்கறதாவே காட்டிக்காதே. நம்ப வீட்டிலேர்ந்து கார் வந்தா மட்டும் உள்ளே விடு.''

''சரிம்மா, அம்மா நேத்து போன் போட்டு நீங்கள் இங்க வரப்போறதைச் சொன்னாங்க, என்னைக் கொஞ்சம் இளநீர் வெட்டி வைக்கச் சொன்னாங்க. இளநீர்வெட்டி,சீவி, தண்ணியெல்லாம் எடுத்துபாட்டில்ல ஊத்தி குளிர்சாதனப் பெட்டியில் வைச்சிருக்கேன். நல்லா சில்லுன்னு இருக்கும், எடுத்துக் குடிங்க.''

கதம்பாவும், இனியாவும் சாப்பாட்டு மேசைக்கருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். பொழுது அப்போதுதான் புலர்ந்திருந்தது. விடிகாலை நேரத்தில், நல்ல குளிர்ச்சியான இளநீர் என்பது மிகவும் இனிமை யானதொரு அனுபவமாக இருந்தது. ஒரு தம்ளர் குடித்தும் அதன் சுவையை மேலும் அனுபவிக்க வேண்டும் என்ற உணர்வு மாறாததால் இனியா இளநீரை இன்னொரு தம்ளரில் நிரப்பினாள் அருந்தினார்கள்.

''என்ன செய்யலாம் கதம்பா?''

குளிக்ககலாம் மொதல்ல ஒரே கசகசன்னு இருக்கு.

''நல்ல யோசனை.''

''எது?''

''குளிக்கலாம்னு சொன்னது. இங்க நீச்சல்குளம் இருக்கு. அதில் குளிக்கலாம்.''

''உடைகள்.''

MITHRAVINTHA

"கவலைப்படாதே. இந்த வீட்ல இல்லாத உடையா? அம்மா தேத்தே என்ன சொன்னாங்க? தலையில பிளாஸ்டிக் தொப்பி போட்டுக்கச் சொல்லலை. எல்லாம் இருக்கு வா!"

இனியா நீச்சல் உடையில் இளமைப்புயலாகக் காட்சி அளித்தாள். கதம்பாவும்தான். இளமையில் இருவரும் ஒருவரை ஒருவர் போட்டியிட்டார்கள். இருவர் உடல்களிலும் இளமை ததும்பியது. பொங்கியது, பூரித்தது.

அப்படி ஒரு ஆடை அணிய கதம்பாவிற்குக் கூச்சமாகத்தான் இருந்தது. இருந்தாலும் சுற்றி எழுந்திருந்த சுவரும், அந்த சுவர் வேலிக்குள் அவளும் இனியாவும் மட்டுமே என்ற நினைப்பும் அவளை அந்த ஆடை அணிய செய்தன.

அவளது இடுப்பு தந்தக் கடைசல் போல் இருந்தது என்றால், இனியாவின் இடுப்பு சந்தனக் கடைசல் போல் இருந்தது.

இனியா திரைப்படத்துறையில் இருக்கிறவள் என்பதால் உடற்பயிற்சிகள் எல்லாம் செய்து உடலை சிக்கென்று வைத்திருந்தாள். கதம்பாவிற்கு இயற்கையே அப்படி ஒரு உடல்வாகை அமைத்துக் கொடுத்திருந்தது.

இனியாவிற்கு கால்கள் வழுவழுப்பாக இருந்தன. கால்களில் வளரும் முடிகளை அவளது மேக்கப்மேன் மெழுகு தடவி அகற்றியிருந்தார். கதம்பாவின் கால்களில் மிகமிக மெலிதான செம்பட்டையான உற்றுப் பார்த்தால் மட்டுமே தெரிகிற சிறுமுடிகள் இருந்தன. வயிற்று மடிப்பிலும் கதம்பாவிற்கு அப்படிப்பட்ட சிறு முடிகள் அமைந்திருந்தது அவளுக்கு மேலும் கவர்ச்சியைக் கொடுத்தது.



இரு பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு, நீச்சல் குளத்தை நோக்கி ஓடினார்கள்.

இருவரும் ஒரே சமயத்தில் நீரில் குதித்தார்கள். நீர் அவர்களது உடலை சில்லென்று தழுவியது. நீச்சல் குளத்தின் தரையிலும் பக்கவாட்டுச் சுவர்களிலும் கறுப்பு கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அதனால் தண்ணீரின் நிறமே கருப்பாகத் தெரிந்தது. நீச்சல் குளம் இருட்டில் மூழ்கிப் போயிருந்த மாதிரி இருந்தது.

"ஏன்டி இனியா இப்படி கருப்புக் கல்லைப் பதிச்சிருக்காங்க?" என்று கேட்டாள் கதம்பா.

"நீச்சல் குளத்தில் சுத்திவர விளக்குகளைப் பொருத்தியிருக்காங்க. அந்த விளக்குகள் வெளிச்சம் கொடுக்கறப்ப பின்னணியில் கருப்பு நிறம் இருந்தால் எடுப்பாத் தெரியும்னுதான் இந்த மாதிரி கருப்பு கிரானைட் கல்லைப் பதிச்சிருக்காங்க. ஏய்...கதம்பா அந்தப் பக்கம் போகாதே ஆழம் அதிகம்."

"இனியா! நான் ஒண்ணு கேட்டாத் தப்பா எடுத்துக்க மாட்டியே?" என்று கதம்பா ஒரு பீடிகையுடன் கேட்டாள்.

"என்ன கதம்பா? என்கிட்ட கேக்கறதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம்?"

"உன் அந்தரங்க வாழ்க்கையில தலையிடற மாதிரித் தோணுது."

"சீ, என்னைப் புரிஞ்சிக்கிட்டது இவ்வளவுதான். உன்கிட்ட எனக்கென்னடி தனியா அந்தரங்கம்? எதுன்னாலும் கேளு" என்று இரு உள்ளங்கைகளிலும் நீரை வாரியெடுத்து கதம்பாவின் மேல் தெளித்தாள் இனியா.

"நான் சமீபத்தில் ஒரு செய்தி படிச்சேன்."

"பாரிவேலையும் என்னையும் இணைச்சித் தானே?"

MITHRAVINTHA

''ஆமா. நீ அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு கிசுகிசு வந்திருந்தது.''

''இன்னும் இல்லடி. ஆனால், அப்படி ஒரு அபிப்ராயம் இருக்கு.''

''ஏன் இனியா?''

''ஏன்னு கேட்டா?''

''பாரிவேனுக்கு ஏற்கனவே கல்யாணமாய்டிச்சில்ல?''

''ஆய்டிச்சி. அவர் மனைவி இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கப் போறதில்ல. ஒத்துக்க மாட்டாங்க. ஆனால், பாரிவேனுக்கு நான் தாலி கட்டாத மனைவியா இருக்கப் போறேன். முழுக்க முழுக்க அவர் ஆதரவுல இருக்கறதன்னு தீர்மானம் பண்ணிட்டேன்.''

''அப்படின்னா, கீப்பாவா?''

''ஆமா.''

''ஏம்மா இந்த முடிவு? பாரிவேனுக்கு ஐம்பது வயசாவது இருக்கும் இல்ல?''

'அவர் இன்னும் இளமையாத்தான் படத்துல எல்லாம் தெரியறாரு?''

நிழல் வேற நிஜம் வேற இனியா. நீ நினைச்சா எல்லனவோ இளமையானவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்க்கையை அனுபவிக்கலாம்.''

''அங்கதான் கதம்பா நீ தப்பு பண்றே. நான் நடிகைங்கறதால, எனக்கு இருக்கற புகழ், இளமையா இருக்கிறவங்க எல்லாம் என்னை அடையணும்னு ஏங்கற ஏக்க வெறி இதெல்லாம் பார்த்துட்டு இளமையான கதாநாயகர்கள் எல்லாம் என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு எங்கிட்ட கேட்டிருக்காங்க. தவம் கூடப் பண்ணியிருக்காங்க. ஆனால் அவங்களை எனக்குத் தெரியும். என்னோட கொஞ்ச நாள் வாழ்க்கை நடத்துவாங்க. அந்த கொஞ்ச நாளிலேயே அவங்களுக்கு நான் அலுத்துப் போயிடுவேன். என்னை விட இளமையா, கவர்ச்சி காட்றவ எவளாவது வந்தால் என்னை விட்டுட்டு அவள் பின்னாடி சுத்தப் போய்டுவாங்க. ஆனால் பாரிவேன் அப்படி இல்ல? நான் இந்த நிலைமையில இருக்கறதுக்குக் காரணமே அவர்தான். அவருக்கு என்கிட்ட வெறும் உடல் சுகம் மட்டும் தேவைப்படல. அதை மீறின ஒரு மனஆறுதலும் தேவைப்படுது அதை என்னால அவருக்குத் தர முடியுது. அதனாலத்தான் நான் அவர்கிட்ட ஒரேயடியா தஞ்சம் புகுந்துடலாம்னு பார்க்கறேன்.''

''அம்மா என்ன சொன்னாங்க?''

''எனக்கு எது நல்லது எது கெட்டதுன்னு எனக்கே தெரியும்ங்கறதால என்னையே முடிவெடுக்கச் சொல்லிட்டாங்க.''

''அதனால அவர் கூட சேர்ந்து வாழலாம்னு தீர்மானமா?''

''ஆமா. இரகசியமா கல்யாணம் பண்ணிக்கொள்வேன். சினிமாவுக்கு ஒரேயடியா முழுக்குப் போட்டுடுவேன்.''

''இதைத்தான் நீ எங்கிட்ட சொல்லணும்னு நினைச்சியா?''

''இல்ல கதம்பா. இன்னும் கொஞ்சம் முக்கியமான விசயம் சொல்லணும்னு நினைச்சேன். என்னைக் கொல்றதுக்கு மிரட்டல் போன் வருதுன்னு சொன்னேனே. உண்மையா நான் செத்துடணும்னு யாரு விரும்புறாங்கன்னு என்னால யூகிக்க முடியுது.''

''யாருடி அவன்?''



MITHRAVINTHA

"சொல்றேன். மனசுல இருக்கற பாரத்தைக் குறைச்சித்தானே ஆகணும். நீ இன்னும் எத்தனை நாள் எங்கூட இருப்பே?"

"நாளைக்கு ஊர்ல திருவிழா ஆரம்பிக்குது இனியா. போயிட்டு இரண்டு நாள்ல திரும்பிவந்துடுவேன். எனக்கு பெங்களூர் போகப் பிடிக்கல. அது ஒரு தங்கச் சிறை மாதிரிதான். எங்க அம்மாவுக்கு எம்மேல உங்கம்மாவுக்கு இருக்கிற அளவு அன்பு இல்லை. அவங்களுக்கு அப்பாகூட சண்டை போடவே நேரம் சரியா இருக்கு. அதனால ஊர்சேர்ந்து திரும்பி வந்து கொஞ்ச நாள் உங்கூடத்தான் இருக்கப் போறேன். நான் மேல ஏறிப் போய் உடை மாத்திக்கறேன் இனியா. பசிக்குது."

"போ. நான் ஒரு ரவுண்ட் நீச்சல் அடிச்சிட்டு வந்துடறேன்" என்ற இனியா வானை மீனாக அப்படியே நீரில் பாய்ந்தாள்.

கதம்பா உடம்பிலிருந்து நீர் வழிய வழிய, பின்னமுரு அசைய அசைய உடை மாத்திக் கொள்ளச் சென்றான்.

இனியா நீச்சல்குளத்தின் ஆழமான பகுதியை நோக்கி உள்நீச்சல் அடித்துச் சென்றாள்.

"இனியா! போகாதே...போகாதே...அங்கே உனக்கு ஆபத்து காத்திருக்கிறது."

இனியா கடலலைபோல் நீரைக் கிழித்து மேலும் முன்னேற, அவளது கால்களை இரண்டு வலுவான இரும்புக் கரங்கள் பற்றின.

நீச்சல் குளத்தின் கருந்தரையை நோக்கி அந்தக் கைகள் இனியாவை இழுத்தன.



# 8

கதம்பா நீச்சல் குளத்தில் இருந்து சற்றுத் தள்ளியிருந்த ஒற்றை ஆள்மட்டும் வசதியாக நின்று உட்கார்ந்து குளிக்கும்வகையில் கட்டப்பட்டிருந்த குளியல் அறைக்குள் நுழைந்தான்.

எதிரில் இருந்த ஆள் உயரக் கண்ணாடி அவனை, வரவேற்றது. திடுக்கிட்டுப் போனான். தன் முழு உருவத்தையும் இவ்வளவு குறைவான ஆடைகளுடன் அவன் பார்ப்பது இதுதான் முதல்முறை. இருபக்கத் தோள்களிலும் தோள்பட்டைகளிலும் தண்ணீர் துளிகள் முத்துக்களை இறைத்தமாதிரி பதிந்து தெரிந்தன. இடுப்பிலும் தொடையிலும் தண்ணீர் முத்துக்கள்.

உடல் தண்ணீரின் குளிர்ச்சியால் புல்லரித்திருந்தது. அவனது செம்பட்டையான பூனை மயிர்க்கால்கள் விரைத்துக்கொண்டிருந்தன. தன்னைச் சுற்றிலும் பார்த்தான். தங்க நிறத்தில் இருந்த கம்பி ஒன்றில் நல்ல நீளமான, அகலமான டேர்க்காய்ப்பு துவாலை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. கதம்பா கையை நீட்டி அதை எடுத்தான்.

இனியாவிற்குத் தான் நீரில் இழுக்கப்படுவது தெரிந்தது. அவளது உடல் எங்கும் மரணபயம் பரவியது. விரல் நுனியில் பாயும் மின்சாரம் உடலெங்கும் பரவுவதைப் போல இருந்தது. எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்ற துடிப்பு, வாழ்க்கையின் மீது அவளுக்கிருந்த பிடிப்பு இனியாவைப் போராடச் செய்தது.



MITHRAVINTHA

இனியா போராடினாள். கால்களை உதைத்தாள். இருகால்களையும் வலுவாகப் பற்றியிருந்த கரங்களில் ஒன்று அவளுடைய உதையால் கொஞ்சம் தளர்ந்தது. இனியா பலம்கொண்ட மட்டும் உதைத்தாள், ஒரு கை விடுபட்டது. அவ்வளவுதான். இனியாவிற்கு அசுரசக்தி வந்துவிட்டது. மற்றொரு காலையும் உதைத்தாள். விடுதலையாகி இருந்த கால் உதைத்த உதை அவளுடைய மறுகாலைப்பற்றியிருந்தவனின் மூக்கில்போய் மோதியது. அடிப்பட்ட மூக்கை அவன் பொத்திக் கொண்டான். அந்த வாய்ப்பை இனியா பயன்படுத்திக்கொண்டு இன்னொரு காலையும் உதைத்தாள்.

பார்ப்பதற்கு சிறுபூனையாக இருக்கலாம். ஆனால், அதை ஓர் அறையில் அடைத்து, தப்பிக்க எங்குமே வழியில்லாதபடி அடைத்து வைத்தால், உயிர் போய்விடும் என்று தெரியும் நிலையில் பூனைக்கு சிறுத்தையின் பலம் வந்துவிடும். அடைத்து வைத்தவன் மேல் பாய்ந்து அவனைக் கடித்துக் குதறிவிடும். உண்மை. உயிராசை ஒரு சிறு பூனையையே அப்படி செயல்பட வைக்கும்.

பூனை அப்படி என்றால் இனியாவிற்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். அவள் சக்தி முழுவதும் திரட்டி உதைத்த உதையில் அவளுடைய இன்னொரு காலும் விடுதலை பெற்றது. இனியா தண்ணீருக்குள் முகம் திருப்பித் தன்னைக் கொல்ல வந்தது யார் என்று அடையாளம் காணப் பார்த்தாள். முடியவில்லை. தரையிலும், பக்கச் சுவர்களிலும் பதிக்கப்பட்டிருந்த கருப்புக் கற்கள் நீருக்கடியில் ஒளிந்து இருந்தவனை இருட்டுக்குள்ளேயே பொத்தி வைத்திருந்தன.

இனியா தண்ணீரின் மேல்மட்டத்தில் தலையை நீட்டிக் கணப்பொழுது சுவாசம் பெற்றாள். ''கதம்பா'' என்று உரக்கக் கத்தினாள். அவளுடைய குரல் முழுமை



யாக வெளிப்படுவதற்குமுன், அவள் மறுபடி தண்ணீருக்குள் இழுக்கப்பட்டாள்

இனியாவின் குரல் 'கதம்' என்று உரத்துக்கேட்டது.

மறுபடி தண்ணீருக்குள் போராட்டம். இந்த முறை அவள் இன்னும் வலிமையாகக் கீழே அழுத்தப்பட்டாள். இனியாவிற்கு மூச்சுத் திணறியது. சுவாசப் பைகள் உயிர்க்காற்றுக்காக ஏங்கின. காற்று இல்லாத இடத்தை தண்ணீர் நிரப்பத் தொடங்கியது. இனியா கைகளை வீசினாள். ''ம்க்ம்'' 'பெக்ம்' என்ற வினோதமான ஓசையில் திணறினாள்.

டவலைத் தன் உடல்மேல் போர்த்திக் கொண்டு ஒரு சுற்று சுற்றி மார்பின்மேல் நெஞ்சுக் குழிக்குச் சற்றுக் கீழ் இறுக்கிக் கட்டின கதம்பாவை, இனியாவின் 'கதம்' என்ற கூக்குரல் தாக்கியது. இனியாவின் குரல்போல் இல்லை என்று நினைத்தான். அறைக்கு வெளியே 'தொபீர்' என்ற சத்தம் கேட்டது.

கதம்பா உடனே குளியல் அறையைவிட்டு வெளியே வந்தான். தன்னைச்சுற்றிலும் பார்த்தான். நீச்சல்குளம் நோக்கிப் பார்வையை வீசினான். நீச்சல்குளத்தைச் சுற்றி சீரான இடைவெளி விட்டு வரிசையாகத் தென்னைகள் நடப் பட்டிருந்தன. காற்றில் தென்னைகளின் கிளைகள் ஆடின. ஒரு தென்னை மரத்திற்குக் கீழே தேங்காய் ஒன்று விழுந்து கிடந்தது. தேங்காய் விழுந்த சத்தம்தான் 'தொபீர்' என்று கேட்டிருக்கிறது என்று நினைத்தான். இனியாவின் கூக்குரல் 'கதம்' என்று கேட்ட மாதிரி இல்லை? என்று தனக்குத்தானே ஒருமுறை கேட்டுக் கொண்டான்.

இனியா எங்கே?

நீச்சல் குளத்தின் மேற்பரப்பில் எங்கேயும் இனியாவின் தலையோ, உடம்போ தெரியவில்லை. அவள் பார்த்

MITHRAVINTHA

நீச்சல்குளத்தில் தண்ணீர்த் தூக்கொண்டிருந்தபோதே, மேலிருந்து தேங்காய் இலைகள் மேலெழுந்து விழுந்தன. தண்ணீர் உடைந்து ஏதாவது நீரில் விழுந்து விட்டதால் சிதறுகிறதா? இல்லை ஒருவ்வளை இனியாவிற்கு...

"இனியா?"

கதம்பா நீச்சல்குளம் நோக்கி ஓடினான்.

"இனியா...என்ன ஆச்சி இனியா...எங்கே இருக்கே இனியா?"

அவன் நீச்சல்குளத்தை நெருங்கிய நேரம், திடீரென தண்ணீர் பிளந்து தண்ணீரிலிருந்து அவன் எதிர்ப்புறத்தில் கரையேறினான்.

"ஏய்...யாரு...யாரது" என்று கதம்பா கத்தினான். "வாட்ச்மேன்...வேலு...வேலு... இங்க வாயேன்...ஓடி வாயேன்..." என்று கதம்பா கிரீச்சிட்ட குரலில் கத்தினான்.

நீச்சல்குளத்தில் இருந்து வெளியேறியவன், ஒரு வினாடி தாமதித்தான். கழுத்தை மிக லேசாகத் திருப்பிக் கதம்பாவைப் பார்த்தான்.

அவனது ஒற்றைக்கண் கதம்பாவிற்கு மின்னல் போல் தெரிந்தது. முகத்தை முழுவதும் திருப்பியிருந்தால், அவனது இன்னொரு கண்ணும் தெரிந்திருக்கும். முகமும் முழுதாய்க் காட்சி அளித்திருக்கும். அவன் திரும்பவில்லை. ஒரு கண்ணிலேயே கோபத்தைக் காட்டினான். அந்த விழிகள் அவனை எரித்துவிடுவது போல் நெருப்புத் துண்டாய்த் தெரிந்தது. நீளமான மூக்கு நேர்மூக்குதான் எனினும் நடுவில் ஒரேயொரு சின்னமேடு. உதடுகீழ்நோக்கி வளைந்திருந்தது. காதில் வளையம் மாட்டியிருந்தது. கன்னத்தில் லேசான தாடி. பிடரியில் வழிந்த தலைமுடி.



அத்தனையும் வினாடியின் நூற்றில் ஒரு பங்கு நேரத்திற்குள் கதம்பாவின் மனதில் பதிந்தன.

யாரோ தபதபவென ஓடிவரும் சத்தம் கேட்டது.

அவன் ஓடினான். வினாடிக்குள் தென்னைமரத்தைப் பற்றி ஏறி, காம்பவுண்ட்சுவர் மேல் ஏறி, அவனுடைய கண் முன்னாலேயே சுவரின் மறுபக்கம் மறைந்தான்.

"என்னம்மா, என்ன ஆச்சி?" என்று கேட்டுக்கொண்டே வேலு ஓடிவர, கதம்பா நீச்சல்குளம் நோக்கி திகிலுடன் கைகாட்டினான். "இனியா...இனியா..."

வாட்ச்மேன் மறுபடி ஓடி வீட்டுக்குள் நுழைந்து ஒரு சுவிட்சைப் போட, நீச்சல் குளத்தில் ஒரே நேரத்தில் வண்ண வண்ணங்களாய் விளக்குகள் எரிந்தன.

கதம்பா பார்த்தான் 'ஆழமான'பகுதிஎன்று இனியா எச்சரித்திருந்த பகுதியில் இனியா கீழே தரை தட்டி இருந்தாள். வேலு நீரில் குதித்தான். குதித்த வேகத்தில் இனியாவை அடைந்தான் அவள் தலைமயிரைப் பற்றி இழுத்து வந்தான். கதம்பா குளத்தில் இறங்கி, இனியாவின் கால்களைப் பற்றினான்.

இனியாவைக் கரையில் படுக்க வைத்தார்கள்.

"வேலு...இனியாவின் கையை நேராக வை" என்றான் வேலு கதம்பா இட்ட ஆணையை உடனே நிறைவேற்றினான்.

கதம்பா இனியாவின் விலாப்பக்கங்களில் கால் வைத்து குழிருந்து மேற்புறமாக மார்பை அழுத்தினான். இனியாவின் வாய் வழியாக தண்ணீர் வெளியேறியது.

கதம்பா அந்த முதலுதவிப் பயிற்சியை மறுபடி மறுபடி மனதிலேயே ஒத்திகை செய்து கொண்டு, திரும்பத் திரும்ப அழுத்த, ஒவ்வொரு அழுத்தலுக்கும் இனியாவின் வாயிலிருந்தும், மூக்கில் இருந்தும்

MITHRAVINTHA

தொடங்கியது.

இனியாவின் மூச்சு சீர்ப்படத் தொடங்கியது.

வேலு கதம்பாவின் முகத்தையும் இனியாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் முகத்தில் கவலை கூடாரம் அமைத்திருந்தது

''கவலைப்படாதே வேலு. அம்மாவுக்கு ஆபத்தில்ல...பிழைச்சிக்கிட்டாங்க...போய் சூடா ஒரு காபி போட்டுக் கொண்டு வா...'!

''இதோம்மா'' என்று எழுந்தான் வேலு ''இனியாம்மாக்கு நல்ல நீச்சல் தெரியுமே என்ன ஆச்சி. எப்படி இந்த மாதிரி தண்ணில விழுந்தாங்க ஏதாவது மயக்கம், இயக்கம் வந்துடிச்சா?''

''இனியாவை எவனோ ஒருத்தன் கொல்லப் பார்த்தான். அதோ அந்த தென்னைமரத்தில் ஏறி சுவரேறிக் குதிச்சி ஓடிட்டான். இனியா அவனைக் கொல்ல முயற்சி பண்றப்ப எப்படியோ தப்பிச்சி 'கதம்பா'ன்னு என்னைக் கூப்பிட்டா. நான் ஓடி வந்தநிலதான், அவனைக் கொலை பண்ண வந்தவன், 'மாட்டிக்குவோம்'னு நினைச்சி ஓடிப் போயிட்டான்.''

''ஐயோ...அம்மாடீ...இது என்ன அநியாயமா இருக்குது அம்மாடீ...செநெதப் பொண்ணே இதுல நான் ஒரு பாவமும் அறியாதவம்மா. சும்மா ஆந்தை மாதிரி கண்ணை உருட்டி உருட்டிப் பாத்துக்கிட்டு இராத்திரி முழுக்க நான் இங்க காவலுக்கு இருந்தேம்மா. எனக்கு ஒண்ணுமே தெரியாதும்மா. என்னை வம்புல மாட்டி விட்டுடாதே தாயே.''

''வேலு...'' என்று அதட்டினான் கதம்பா. ''அதெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம். மொதல்ல இனியா எழுந்துக்கணும். காப்பிக் கொண்டுவா சூடா.''

வேலு எழுந்து ஓடினான்.



கதம்பா எழுந்து நின்றான். இனியா கண்விழிக்காதது அவனுக்கு கவலையை அளித்தது. அவனுடைய முகத்தில் ஒருபிடி தண்ணீரை அள்ளித் தெளிக்கலாம் என்று நீச்சல்குளம் நோக்கிச் சென்றான். குளத்தில் ஒரு விளக்கினருகே பளபளவென ஏதோ ஒன்று மின்னியது.

கதம்பா குளத்தில் இறங்கினான் விளக்கருகே சென்று மின்னிய பொருளைக் கையில் எடுத்தான் அது ஒரு மோதிரம் மிகப்புதிதாய் இருந்தது. புது டிசைனாய் இருந்தது.

கதம்பாவின் அடிமனதில் நீண்ட நாட்களாக ஒரு ஆசை புதைந்திருந்தது ஏதாவது ஒரு குற்றம நடந்த இடத்திற்குப் போய் அந்த இடத்தைப் பார்வையிட்டு, தடயம் ஏதாவது சிக்கினால் அதை வைத்துக் கொண்டு, மூளையை உபயோகித்துக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்பதே அந்த ஆசை.

இப்போது அந்த ஆசை புதைந்திருந்த இடத்தில் இருந்து விடுபட்டு மனதின் மேற்பரப்பிற்கு வந்தது. இந்த மோதிரம் ஒருதடயம். கொலை செய்ய வந்தவனுடன் இனியா போராடியிருப்பாள் அந்தப் போராட்டத்தில் இந்த மோதிரம் கழன்று விழுந்திருக்கும். இதையே தடயமாக வைத்துக் கொண்டுக் குற்றவாளியைக் கண்டு பிடித்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தான்.

மறுபடி கரையேறினான் உள்ளங்கை தண்ணீரை இனியாவின் முகத்தில் தெளித்தான். இனியா அப்போது, அசைந்து கொடுக்கவில்லை. கதம்பாவின் மனதை திகில் பற்றிக் கொண்டது.

முன்பே டாக்டரை அழைத்திருக்க வேண்டும். கொலை முயற்சி என்பதால் காவல்துறையினரையும் அழைத்திருக்க வேண்டும்.

அவன் வீட்டை நோக்கி ஓடினான்.

MITHRAVINTHA

தொலைபேசி இருக்கும் இடத்தை அவன் அடைவதற்குள் தொலைபேசி கிணுகிணுவென மெல்லிசையாக அழைத்தது.

எடுத்து காதில் வைத்தான். ஒன்றுமே பேசவில்லை. ஒருவேளை கொலைகாரன், அல்லது கொலைகாரனைச் சார்ந்தவர்கள் என்று யாராவது அழைத்திருந்தால்? அவர்கள் குரலை வைத்துக் கொண்டு ஒருவேளை ஏதாவது தேவையான தகவலைச் சேகரிக்கலாமே.

"அலோ... அங்கே யாரு? வேலுவா?" என்று இனியாவின் அம்மா மாதவியின் குரல் கேட்டது. மாதவியின் குரல் என்றவுடன் கதம்பா, "அலோ... நான்தாம்மா கதம்பா பேசறேன்" என்றான்.

"கதம்பாவா? கதம்பா கண்ணு உதவி பண்ணும்மா. நேத்து நீங்கள் ரெண்டு பேரும் அங்க வரப்போறீங்கன்னு சொன்னவுடனே, நான் அங்க வந்திருந்தேம்மா. வீடு முழுக்க நானே சுத்தம் பண்ணேன். எங்க விழுந்ததுன்னு தெரியல. என் மோதிரம் ஒண்ணு தவறி விழுந்துடிச்சி. இங்க வந்துதான் கவனிச்சேன். புதுமோஸ்தர் மோதிரம்மா அது. இனியாவுக்கு பிறந்த நாள் வருதுன்னு ஆர்டர் பண்ணி செய்து வைச்சிருந்தேன். அங்க எங்கயாவது இருக்கான்னு பாரும்மா."

"அம்மா... மோதிரம் கிடைச்சிடுச்சி... அது என்கிட்டத்தான் இருக்கு. நீங்கள் நேத்து நீச்சல் குளத்துல இறங்குனீங்களா?"

"ஆமாம்மா... புதுத் தண்ணி விடறதுக்கு முன்னால குளத்தை நான் சுத்தமாக் கழுவச் சொன்னேன். நான் இறங்கி டெட்டாலைக் கரைச்சி ஊத்தினேன்."

"மோதிரம் நீச்சல் குளத்துலதான் இருந்திச்சிம்மா. அதைவிட முக்கியமான விசயம் ஒண்ணு இங்கநடந்திருச்சி



இனியாளை யாரோ நீச்சல் குளத்துல அமுக்கிக் கொன்னுடப் பாத்தாங்க."

"ஐயையோ, ஐயையோ, என் ராஜாத்திக்கு என்ன ஆச்சி. ஐயோ... மார் வலிக்குதே."

"பயப்படாதீங்கம்மா இனியா பிழைச்சிட்டா. டாக்டருக்குப் போன் போட்டுப் பேச வந்தேன். அதுக்குள்ள உங்க போன் வந்திடிச்சி."

"நான் இதோ வர்றேம்மா. குழந்தை நல்லாயிருக்காளா? பிழைச்சிருக்காளா?"

"நீங்கள் பயப்படாம வாங்கம்மா..." என்று தொடர்பை வெட்டி மருத்துவருக்கு போன் போட்டான்.

இனியாவின் குடும்ப மருத்துவர் ஆரோக்கியசாமி உடனே புறப்படுவதாகச் சொன்னார்.

கதம்பா காவல் நிலையத்தை அழைத்தான்.

காவல் நிலையம் தொலைபேசி கிணுகிணுத்தது.

தொலைபேசிக்கு முதுகு காட்டி ஏதோ ஒரு கோப்பைப் புரட்டிக் கொண்டிருந்த காவல் அதிகாரி பார்த்திபன், நாற்காலியை அப்படியே ஒரு சுழற்று சுழற்றி, தொலைபேசியை எடுத்தான்.

"அலோ இன்ஸ்பெக்டர் பார்த்திபன்" என்றான்.

அவன் இடதுகாதில் ஒரு வளையம் மெல்ல ஊசலாடியது.

MITHRAVINTHA

# 9

பார்த்திபன் காது வளையத்தை இருவிரல்களால் சுண்டி விட்டுக் கொண்டே பேசினான்.

"இன்ஸ்பெக்டர் பார்த்திபன். உங்களுக்கு என்ன வேணும்?" என்று கொஞ்சம் கடுமையான குரலில் கேட்டான் பார்த்திபன்.

"நான் கதம்பா பேசறேன். நடிகை இனியாவோட தோழி. இங்கே கேளம்பாக்கம் வீட்ல, நீச்சல் குளத்துல வைச்சி இனியாவை யாரோ கொலை செய்ய முயற்சி பண்ணாங்க. இனியா நல்லவேளையா பிழைச்சிக்கிட்டா நீங்கள் உடனே இங்க வர்றீங்களா சார்?"

"இதோ வர்றேன்" என்று பார்த்திபன் தொலைபேசியை அதனிடத்தில் பொருத்திவிட்டு எழுந்தான்.

காதில் மாட்டியிருந்த வளையத்தைக் கழற்றி மேசை மீது எறிந்தான்.

"இருதயசாமி நமக்கும் இந்த பொம்பளை வேடத்துக்கும் சரிப்பட்டு வராதுண்ணே. வேற ஆளைப் பாருங்க. டிபார்ட்மென்ட்ல கல்ச்சரல் புரோகிராம்னா கலந்துக்கறதுக்கு எல்வளவு பேர் ஆர்வமா நீ, நான்னு போட்டி போட்டுக்கிட்டிருக்காங்க. என்னைப் போய் கதாநாயகியா நடிக்கச் சொல்றீங்களேய்யா நியாயமா இது? இந்த மீசையை வழிச்சி எடுத்துட்டு புடவை ஒண்ணு சுத்திக்கிட்டு, காதுல வளையம் மாட்டிக்கிட்டு மேடையில் போய் நின்னா, இப்ப ரசிச்சிடுவாங்க. நாளைக்குப் போறப்ப வரப்பல்லாம் கான்ஸ்டபிள்கள் எல்லாரும் நம்பளை சதாய்ச்சிடுவாங்க... அதனால..."



இருதயசாமி ஏதோ பேச வாய் திறந்தார்.

"இப்ப எதுவும் பேச்சு வேணாம். கொலை முயற்சியாம். நடிகை இனியாவோட கேளம்பாக்கம் வீட்ல... போகலாம்."

"நடிகை இனியா வீட்லயா தம்பி. யாரைக் கொலை பண்ண முயற்சியாம்?"

"நடிகை இனியாவையேதான். இனியான்னா உடனே வாய் பொளந்துகிட்டு நின்னா, எப்படிண்ணே? வாங்க. அதான் நேர்லயே போய்ப் பார்க்கப் போறோம்ல?"

இருதயசாமி தமது தொப்பையையும், தொப்பியையும் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ஜீப்பை நோக்கி ஓடினார். பார்த்திபன் குகையிலிருந்து வெளிப்படும் ஆண் சிங்கம் போல் வெளிப்பட்டு, கம்பீரமான நடையில் 'டாக்' 'டாக்' என்று ஜீப்பை நோக்கி நடந்தான்.

பார்த்திபனைப் பற்றி இங்கே அவசியம் சொல்லியே ஆகவேண்டும். இருபத்து நான்கு வயது இளைஞன். நல்லதொரு சிற்பக் கலைஞன் முனைந்து செதுக்கி அமைத்த மாதிரியான முகம் சீரான நேரான மூக்குரோஸ் நிறம் என்றும் சொல்லமுடியாமல், நாகப்பழ நிறம் என்றும் சொல்ல முடியாமல் இடைப்பட்ட நிறத்தில் அமைந்திருந்த அளவான உதடுகள். அரும்பு மீசை. அவனுடைய முகத்திலேயே அவனுடைய கண்கள்தான் மிகக் கவர்ச்சிகரமாக அமைந்திருந்தன.

அந்தக் கண்களில் எப்போதும் ஒரு மினுமினுப்பு ஒரு கூர்மை பார்வையாலேயே எதிரில் இருப்பவர்களை எடைபோடும் திறன் அந்தக் கண்களுக்கு இருந்தது. பார்த்திபன் பொதுவாக அந்தக் கண்களைக் குளிர் கண்ணாடியால் மறைத்துக் கொள்வது வழக்கம். செவ்வரியோடிய அவன் கண்களைப் பார்த்து, குற்றம் செய்த

MITHRAVINTHA

வர்களும், குடிகாரர்களும், கொலைகாரர்களும் தான் பயப்பட வேண்டுமே தவிர மற்றவர்கள் பயப்படக் கூடாது என்ற எண்ணம் பார்த்திபனுக்கு.

உடற்பயிற்சிகளால் முறுக்கேறிய தசைகளும், ஒட்டிய வயிறும், வலுவான கால்களும் அவனை ஓர் ஆண்மகனாக வெளிச்சம் போட்டுக் காட்டும்.

பார்த்திபனுக்குப் பாசம் அதிகம். தான் ஒரு உயர் அதிகாரி என்றோ, அவனுக்குக் கீழ் பணிபுரிகிறவர்கள் எல்லாம் அவனை விடத் தாழ்ந்தவர்கள் என்றோ என்றுமே அவன் எண்ணிக் கொண்டதில்லை. வயதுக்கேற்ற மரியாதை தருவான். அதே சமயம் வயதுக்கேற்ற விதத்தில் யார் நடந்து கொள்ளாவிட்டாலும் கண்டிப்புடன் சுட்டிக் காட்டுவான்.

இருதயசாமி வயதான கான்ஸ்டபிள். அவருடைய தொப்பைக்காகவும், அவருடைய குழந்தைத்தனமான நடவடிக்கைகளுக்காகவும், பார்த்திபன் அவரைக் கண்டிப்பானே தவிர, மற்றபடி அவரை 'அண்ணே' என்று தான் மரியாதையுடன் அழைப்பான்.

கிராமத்தில் அம்மா, அப்பாவைப் பார்த்துக்கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் அண்ணனுக்கும், இருதயசாமியின் வயதுதான் இருக்கும் என்பதால் இருதயசாமி மேல் அவனுக்கு ஒரு கூடுதல் மரியாதை கூட உண்டு.

பார்த்திபன் ஒருமுறை கள்ளச்சாராய வேட்டைக்குப் போனபோது அவனுடைய உதவி ஆட்கள் எல்லாம் எங்கோ பிரிந்துவிட, இவன் மட்டும் கள்ளச்சாராயம் காய்ச்சும் குழுவினரிடம் அகப்பட்டு கொண்டான். அவர்கள் ஒவ்வொருத்தரும் மாமிச மலைகளாக இருந்தார்கள். கையில் உருட்டைக்கட்டை, கத்தி போன்ற ஆயுதங்கள் வைத்திருந்தார்கள்.



அவர்கள் தொழிலுக்கு இடையூறு செய்யும் பார்த்திபனை அவர்கள் தங்களின் பரம்பரை விரோதியாக நினைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று தனியாக மாட்டிய பார்த்திபனை ஒரேயடியாகத் தீர்த்துக் கட்டும் நோக்கத்தில் அவர்கள் முன்னேறி வந்து அவனைத் தாக்கியபோது பார்த்திபனின் கையில் துப்பாக்கி இல்லை. கத்தி இல்லை. இரண்டு கைகள் இருந்தன. நம்பிக்கை இருந்தது.

அவர்களின் தாக்குதலை சமாளிப்பது எப்படி என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த வேளையில் பார்த்திபனுக்கு அவனுடைய இடுப்புப்பட்டியின் நினைவு வந்தது. சட்டென்று அதைக் கழற்றிச் சுழற்றினான். பெல்ட்டின் வேகம் தாங்காமல் அவனைத் தாக்க வந்தவர்கள் எல்லோரும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுச் சுருண்டார்கள். அதற்குள் பார்த்திபனின் உதவியாட்கள் அங்கு வந்து சேர்ந்து கீழேசுருண்டுவிழுந்தவர்களைவளைத்துப்பிடித்து விட்டார்கள்.

அவனது பெல்ட் சுற்றிய வேகம் கண்டு, அவனுடைய உதவியாட்கள் அவனுக்கு 'பெல்ட் பார்த்திபன்' என்ற பட்டத்தையே அளித்துவிட்டார்கள். அன்றிலிருந்து காவல்துறை வட்டாரத்தில் 'பெல்ட் பார்த்திபன்' என்றால் அது அவன் ஒருவனைத்தான் குறிக்கும்.

ஜீப் 'க்ரீய்ச்ச்' என்று மண்சாலையைத் தேய்த்துக் கொண்டு புழுதி பறக்க நின்றது. காவல்துறை ஜீப்பைக் கண்டதும் வாட்ச்மேன் வேலு ஒரு எதிர்க்கேள்வியும் கேட்காமல், கேட்டைத் திறந்தான்.

ஜீப் உள்ளே நுழைந்து, பசுமையான தோட்டச் செடிகளுக்கு இடையே ஓடி, வீட்டின் முகப்பில் இருந்த கான்கிரீட் நீட்டலுக்கு அடியில் போய் நின்றது.

பார்த்திபன் ஜீப்பில் இருந்து குதித்து இறங்கினான்.

MITHRAVINTHA

வீட்டு வாசலிலேயே நின்றிருந்த வளர்மதி, இன்ஸ்பெக்டர் உடுப்பைப் பார்த்ததும் உண்டாகும் பொதுவான நடுக்கத்தை முகத்தில் காண்பித்து, "வாங்க இன்ஸ்பெக்டர்" என்றாள்.

"நீ?" என்றான் பார்த்திபன், குளிர்கண்ணாடியைக் கழற்றிவிட்டு—கண்களில் கேள்விக்குறியுடன்.

"டச்சப்,பண்ணுங்க. பெரிய அம்மாகூட வந்தேன்."

"இனியா எப்படி இருக்காங்க?"

"டாக்டர் வந்திருக்காரு. ஊசி போட்டிருக்காங்க. இனியாக்காவுக்கு இப்ப மயக்கம் தெளிஞ்சிடும்னு டாக்டர் சொல்லியிருக்காங்க. கொஞ்சம் இருங்க. நான் கதம்பாக்காவைக் கூப்பிடறேன். அவங்கதான் இனியா கூடவே இருந்தவங்க. என்ன விசயமாக இருந்தாலும் கதம்பாக்காவுக்குத்தான் என்னைவிட நல்லாத் தெரியும்."

"கூப்பிடு" என்றான்.

பார்த்திபன் வீட்டிற்குள் நுழைவதா, வேண்டாமா என்று தயங்கிய வினாடியில், வீட்டுக்குள் இருந்து கதம்பா வெளிப்பட்டாள்.

"வணக்கம் இன்ஸ்பெக்டர்" என்ற அவளது குரல் கேட்டுத் திரும்பிய பார்த்திபன் அசந்து போனான். காரணம், கதம்பா இன்னும் ஆடை மாற்றிக் கொள்ளாமல், ஏதோ துவாலை விளம்பரத்திற்கு மாடலாக வந்து நின்ற மாதிரி காட்சி தந்தாள்.

"நடிகை வீடில்லையா தம்பி. இப்படித்தான் கவர்ச்சியா இருக்கும்"என்று இருதயசாமி, பார்த்திபனின் காதோரம் கிசுகிசுத்தார்.

"ம்"என்று மிரட்டும் தொனியில் இருதயசாமிக்கு மட்டும் கேட்கிற மாதிரி உறுமினான் பார்த்திபன்.



"இல்ல தம்பி நடிகை இனியாவைவிட இந்தப் பெண்ணே ரொம்ப அழகாயிருக்குது. இது ஒருவேளை நடிக்க வந்திருந்தா..."

"நீங்க சும்மா இருக்க மாட்டீங்க?" என்று பார்த்திபன் பல்லைக் கடித்துக் கொண்டு ஓர் உறுமல் போட்ட பின்தான் இருதயசாமி அடங்கினார்.

"நீங்கதான் மிஸ் கதம்பாவா?" என்று கேட்டான் பார்த்திபன்.

"ஆமா. நான்தான் போன் பண்ணினேன். என்ன ஆச்சின்னா..."என்று தொடங்கி, இனியாவும் கதம்பாவும் நீச்சல் குளத்தில் இறங்கியதில் தொடங்கி, அவள் ஆடை மாற்றிக்கொள்ள மேலே வந்ததைக் குறிப்பிட்டு, ஆடை மாற்றும் சமயத்தில் அவளுக்குக் கேட்ட வினோதமான சத்தத்தைச்சொல்லி, அவள் வந்து பார்த்தபோது தண்ணீரில் இருந்து வெளிப்பட்டு ஓடியவனைப் பற்றி சொன்னாள் கதம்பா. "வாங்க இன்ஸ்பெக்டர் நீச்சல்குளம் போய், நான் நடந்ததை நடந்தபடி காட்றேன். எங்கேர்ந்து நான் பார்த்த ஆள் தண்ணிலேர்ந்து வெளியே வந்தான், எப்படி ஓடி, எதில ஏறி குதிச்சிப் போனான் கறதையெல்லாம் விவரமா சொல்றேன்.

கதம்பா இமைகளைக் கொட்டிப் படபடவென்று பொரிந்து தள்ளியதை ரசித்தான் பார்த்திபன்.

"மேடம். நான் ஒண்ணு சொன்னாக் கோவிச்சிக்க மாட்டீங்களே?"

"என்ன இன்ஸ்பெக்டர்?"

"பொதுவா விதி என்னன்னா, குற்றமோ, சம்பவமோ நடந்த இடத்தைக் கூடியவரைக்கும் கலையாமப் பார்த்துக்கணும்ங்கறதுதான். அதுக்காக நீங்க சம்பவம் நடந்

MITHRAVINTHA

தப்ப எப்படி இருந்தீங்களோ, அப்படியே இருக்கணும்னு அவசியமில்லை?"

"என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?" என்று புரியாமல் கேட்டாள் கதம்பா.

"உங்கள் உடை?"

கதம்பா தன்னை ஒருமுறை பார்த்துக்கொண்டு, உடனே ஒரு வெட்க அலறலை வெளிப்படுத்திவிட்டு, உள்ளே ஓடினாள்.

பார்த்திபனுக்கு படபடப்பாய் இருந்தது. காவல் துறையில் இருப்பவன் அவன். பொதுமக்களிடம் வெகு கண்ணியமாய் நடந்து கொள்ளவேண்டிய கடமை அவனுக்கு உண்டு. அவன் சுட்டிக்காட்டியதை எங்கே அந்தப் பெண் தப்பாகப் புரிந்துகொண்டு வந்து தன்னை திட்டப் போகிறாளோ என்றுகூட நினைத்தான் அவன்.

பார்த்திபன் வளர்ந்த சூழ்நிலை அந்த விதம். சின்ன வயதில் இருந்தே அவன் அவ்வளவாகப் பெண்களிடம் பழகாதவன். அதனால் பெண்களிடம் எப்படிப் பேசினால் தப்பில்லாது போய்ச் சேரும் என்பதும் புரியாதவன்.

கதம்பா திரும்பிவந்தாள். சேலை கட்டியிருந்தாள், சேலையின் வெளிர் ஊதா நிறத்திற்குத் தகுந்த மாதிரி ரவிக்கை அணிந்து வந்திருந்தாள். பின்னலைத் தளரத் தளரப் பின்னியிருந்தாள்.

"உள்ளே வாங்க இன்ஸ்பெக்டர்" என்று சொல்லி அவனுக்கு முதுகு காட்டி நடந்தாள்.

அவளுடைய முதுகில் அவளுடைய மார்புக் கச்சையின் பின்பட்டி, வெகு இறுக்கமாகப் பிடித்திருந்ததை ரவிக்கைத் துணியின் மெலிதான தன்மை பளிச் என எடுத்துக் காட்டியது.



அவளது முதுகுப் பகுதியில் சில தசைகள் மட்டும் கொஞ்சம் மேடிட்டு காட்சியளித்தது கவர்ச்சியாகவும் இருந்தது, கவலையாகவும் இருந்தது.

ஆண்களைத் தாண்டிவிடுகிற மாதிரி இப்படி உடையணிந்தால், ஓரளவு சபல புத்தியுள்ள ஆண், அவளுடைய உடலமைப்பில் தூண்டிவிடப்பட்டு அவளைக் கிண்டல் செய்யமாட்டான் என்று என்ன நிச்சயம்? இல்லை அவள் முதுகில் கைவைக்க மாட்டான் என்று எப்படி சொல்ல முடியும்?

இயற்கையாக உடலமைப்பே அவளுக்கு அப்படி இருக்கிறதா இல்லை இறுக்கமான உள்ளாடைதான் அவளுடைய முதுகிற்கு அப்படி ஒரு தோற்றத்தைத் தந்திருக்கிறதா என்று அறிந்து கொள்ளும் ஆவல் பார்த்திபனுக்குள் கிளர்ந்தது.

"மேடம்" என்றான் தயங்கியபடி.

"என்ன?" என்று சொல்லி நின்று திரும்பி முறைத்தாள் கதம்பா.

காவல்துறை அதிகாரியாக இருந்தும் அவளிடம் கேட்க நினைத்ததை கேட்க முடியாமல் தவித்தான். ஒரு சமூகப் பொறுப்புள்ள கேள்வியை, மிக அந்தரங்கமான கேள்வி என்று அவள் தப்பாக எடுத்துக்கொண்டு விட்டால்?

கேட்க நினைத்ததை தொண்டையிலேயே வைத்து விழுங்கினான்.

"என்ன?" என்றாள் கதம்பா மறுபடி.

"இல்லை. நான் இனியாவிடம் நேரடியாகப் பேசினால் நல்லது என்று நினைக்கிறேன். அவர்கள் விழித்து விட்டார்களா?"



MITHRAVINTHA

"இன்னும் இல்லை இன்ஸ்பெக்டர். நீங்கள் உள்ளே வாங்க" என்று கதம்பா நுழைந்த அறையில் கட்டிலில் இனியா படுத்திருந்தாள். அருகில் இனியாவின் அம்மா மாதவி அமர்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

"அவன் உங்க உயரம் இருந்தான் இன்ஸ்பெக்டர். நீளமா மூக்கு. அதில் ஒரு சின்ன மேடு இருந்தது. முகம் முழுக்க பிளேசான தாடி. பின்னால பிடரி மயிர். ஒருபக்க முகம்தான் தெரிஞ்சது. அதில் அவனோட ஒரு கண்ணை மட்டும்தான் என்னால பார்க்க முடிஞ்சது. அந்தக் கண்ணுக்கு மட்டும் சக்தி இருந்திருந்தா அது என்னையே எரிச்சிட்டிருக்கும். சிவப்பா இருந்தது. என்னை முறைச்சது" என்று கதம்பா தான் பார்த்த கொலைகாரனின் முகத்தை வர்ணித்தான்.

ஏறக்குறைய அதே நேரம். அவனது புறாக்கூண்டு மாதிரியான அமைப்புடன் இருந்த அறையில் இளங்கோ அடைப்பட்ட புலி போல் எதிரெதிர் சுவர்களுக்கு நடுவே நடந்தான். உள்ளங்கைகளை குத்திக் கொண்டான்.

'சே, எவ்வளவு அட்டகாசமான வாய்ப்பு. அந்த பொன்னான வாய்ப்பைப் போய் இவ்வளவு எளிதாக கோட்டை விட்டோமே' என்று நினைத்துக்கொண்டு சுவரில் ஒருமுறை தன் தலையை மோதினான்.

வலித்தது. நெற்றி புடைத்தது. அவன் காதில் மாட்டியிருந்த வளையம் அவன் கன்னத்தில் உராய்ந்தது.

இளங்கோ, தன் காது வளையத்தைப் பிய்த்தான். சன்னல் வழியே வெளியே பார்த்தான். கீழே ஒரு சிறு சாக்கடை ஓடிக்கொண்டிருந்தது. வளையத்தைக் குறி பார்த்துச் சாக்கடையில் எறிந்தான். அது சாக்கடை நீரில் விழுந்து, மிதந்துமிதந்து சென்று இன்னொரு பெரிய சாக்கடையில் கலக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்



அங்கிருந்து அகன்று அறையில் இருந்த ஒரு அலமாரியைத் திறந்தான். இரு புத்தகங்களுக்கு நடுவில் ஓர் ஊசி அதனுடைய மருந்துக் குமிழுடன் வைக்கப் பட்டிருக்க, இளங்கோ அதை எடுத்து, ஊசியை தன் தொடையில் செருகிக் கொண்டு, மருந்தை உடலில் பீச்சிக் கொண்டான்.

அவன் முகம் உயர்ந்து ஏற்பட்ட வேதனைக் கோடுகளை வெளிப்படுத்தியது.

# 10

இனியா மெல்லக் கண்களைக் திறந்தாள்.

அவளுடைய முகத்தையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த மாதவியின் முகம்தான் கண்களில் முதலில் பட்டது. சற்றுத் தள்ளி நாற்காலியில் ஒரு காவல்துறை அதிகாரி. தலைமாட்டில் டாக்டர். இடது பக்கம் காப்பியை ஆற்றிக் கொண்டிருந்த கதம்பா. கதம்பாவின் கண்களில் கண்ணீர்.

இவ்வளவு பேர் தன்னைச் சூழ்ந்து கொண்டிருப்பதை பார்த்தவுடன் இனியாவிற்கு வெட்கமாகப் போய் விட்டது. நீச்சல் குளத்தில் குதித்ததும், அங்கே யாரோ ஒருவன் அவளைத் தண்ணீரில் அழுத்திக் கொல்ல முயன்றதும், அவள் போராடி தண்ணீருக்கு மேல் எழும்பிக் கதம்பாவை அழைப்பதற்குள் மறுபடி தண்ணீருக்குள் இழுக்கப்பட்டதும் சட்சட்டென்று ஒன்றன் மேல்ஒன்றாய் வந்து விழும் அலைகள் போல நினைவுகள் வந்தன.

இன்னும் இறந்துவிடவில்லை என்ற உண்மையை உள்ளம் உணர்ந்தது. அந்த உண்மை அவளுக்கு மகிழ்ச்சி

MITHRAVINTHA

லைத் தந்ததா, இல்லை வருத்தத்தை அளித்தா என்று அவ ளுடைய முகக் குறிப்பில் இருந்து உணர முடியவில்லை. எழுந்து கொள்ளப் பார்த்தான். அப்புறம்தான் இன் னொன்றும் நினைவுக்கு வந்தது. உடலைப் போர்த்தி யிருந்த போர்வைக்குக் கீழே உடம்பில் வெறும் நீச்சலுடை தான் என்பது.

"இனியா...கண்ணு...எப்படிம்மா இருக்கே? ராஜாத்தி என் வயித்துல பாலை வாத்தேடி செல்லம்" என்று சொல்லிக் கொண்டே மாதவி இனியாவின் கன்னம் தொட்டுக் கைகளால் வழித்து எடுத்து ஒருமுறை கண்ணேறு கழித்தாள்.

இனியாவின் வெண்டை விரல்களில் மோதிர விரலைப் பற்றி, மோதிரத்தை மாட்டினாள்.

"உன் பிறந்தநாளுக்குன்னு நேர்ல போய் ஆர்டர் கொடுத்துச் செஞ்சதும்மா. எங்கே, என் கண்ணுக்கு இதை போட்டுக்கற பாக்கியம் இல்லாமபோயிடுமோன்னு துடிச்சிப் போயிட்டேன். பிறந்த நாள் அதுபாட்டுக்கு வரட்டும். நான் இதை இப்பவே போட்டு அழகு பார்த் துக்கறேன். பிறந்தநாள் அன்னிக்கு வேற ஒண்ணை செய்ஞ்சி போட்டா உடம்பு என்னா, வேணாம்னா சொல்லிடப் போவது?"

பார்த்திபனுக்கு மாதவி மகள் மேல் காட்டிய பரிவை யும் அன்பையும் பார்த்து நெஞ்சு நெகிழ்ந்தது. இருந்தா லும் கடமை ஒன்று இருக்கிறதே.

"மேடம்... நான் இன்ஸ்பெக்டர் பார்த்திபன்" என்று இனியாவைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்.

"வெறும் இன்ஸ்பெக்டர் பார்த்திபன் இல்லேம்மா. பெல்ட் பார்த்திபன்னு பேரு. அந்தப் பட்டப் பெயரைச் சேர்த்துச் சொன்னா, ஊர்ல இருக்கிற ரவுடிங்க எல்லா



ரும் மறுபடி அலங்கலங்க அம்மாவோட கர்ப்பத்துக் குள்ள போய்ப் புகுந்துப்பாங்க. ஏன் தம்பி அதையெல் லாம் சொல்றதில்லையா?" என்று கான்ஸ்டபிள் இருதய சாமி பின்பாட்டுப் பாடினார்.

பார்த்திபன் பின்னால் திரும்பி, அவரை முறைத்தான்.

"என்ன தம்பி? நான் ஏதாவது தப்பாச் சொல்லிட் டேனா?" என்று தயங்கித் தயங்கி இழுத்தார் இருதய சாமி.

"நான் விசாரிக்கறப்ப உங்களை நான் எங்க நிக்கச் சொல்லியிருக்கேன்?"

"வெளியில..."

"தயவு செய்ஞ்சி அதைச் செய்யுங்க."

"அதாவது தம்பி..."

"போங்கண்ணே..."

கான்ஸ்டபிள் இருதயசாமி பரிதாப நடை நடந்து அறைவாசலுக்குச் சென்றார். பார்த்திபன் இனியாவின் பக்கம் திரும்பி ஒரு முறை புன்னகைத்தான்.

"மன்னிக்கணும் மேடம். அவருக்கு என்மேல கொஞ் சம் அபிமானம் அதிகம். அதான் இப்படி. நீங்கள் சொல் லுங்க. என்ன நடந்தது?"

இனியா வாய் திறந்து பேசும் முயற்சியாக உதடு களை மாதுளை பிளப்பதைப் போல பிளந்து வட்டமாக குவித்துப் பேசத் தொடங்கினாள்.

அதற்குள் மாதவி இடைமறித்தாள்.

"அவன் என்ன சொல்றது இன்ஸ்பெக்டர்? நானே சொல்றேன். என் செல்லத்தை எவனோ ஒருத்தன்

MITHRAVINTHA

போன்ல கூப்பிட்டுக் கொன்னுடுவேன்னு மிரட்டினான். அந்த விசயத்தைக் கேள்விப்பட்ட உடனேயே நான் இனியா மேல எப்பவும் ஒரு கண்ணு வைச்சிக்கச் சொல்லி வீட்ல எல்லார்கிட்டேயும் சொல்லி வைச்சேன். அப்படியும் இந்த நிலக்கு இருக்கானே, நிலக்கு அதான் இன்ஸ்பெக்டர் வில்லனா அறிமுகம் ஆகியிருக்கானே, அந்தப் பையன் வீட்டுக்குள்ள நுழைஞ்சி இவள் கழுத்தை அமுக்கப் பார்த்தான். நாங்க பார்க்கலேன்னா கொன்னிருப்பான். நல்ல வேளை வளர்மதி பாத்துடிச்சி. கத்திக் கூப்பாடு போட்டவுடனே அந்த நிலக்கு ஜிமே விழுந்து காக்கா வலிப்புன்னு சொல்லிட்டுப் போயிட்டான்.

''பாப்பாவுக்கு மனசே சரியில்ல கதம்பா பெங்களூர்லேர்ந்து வந்திருக்கு. அதுகூட மனசு விட்டுப் பேசி சந்தோசமா இருக்கணும்னு இங்க வந்தது. வந்த இடத்துல இப்படி ஆயிடிச்சி' ஏம்மா, கதம்பா நான் உன்கிட்ட எவ்வளவு தூரம் சொன்னேன். எச்சரிக்கையா இரும்மா எச்சரிக்கையா இரும்மான்னு நீ இருக்கறப்பயே எவனோ ஒருத்தன் நீச்சல் குளத்துல பாப்பாவை இழுத்துக் கொல்லப் பாக்கறதுன்னா எப்படிம்மா? அது என்ன அவ்வளவு சுலபமான வேலையா? இன்ஸ்பெக்டர் நீங்கள் அந்த நிலக்கைக் கூப்பிட்டு நாலு தட்டுதட்டி விசாரிச்சீங்கன்னா...'

''அம்மா...'' என்று இனிரா அதட்டினாள்.

மாவு இயந்திரத்தில் இருந்து மாவு கொட்டுவது போல பேசிக்கொண்டிருந்த மாதவி சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு, மகளை விநோதமாகப் பார்த்தாள்.

''என்ன கண்ணு?''

''நீ பாட்டுக்குப் பேசிட்டேயிருந்தா என்ன அர்த்தம்? உன்னை யாரு போலீசைக் கூப்பிடச் சொன்னது? போலீசல சொன்னா, செய்தி பத்திரிகைகளுக்கெல்லாம் போவும். அனாவசியமா நம்ப பேரு அடிபடும். இப்ப



இந்தக் கெட்டபேரு நமக்குத் தேவையா? இன்ஸ்பெக்டர் ...நாங்க கேசை பதிவு பண்ணலை. எங்க புகாரை நான் வாபஸ் வாங்கிக்கறேன். என்னை யாரும் கொலை பண்ண முயற்சிக்கல. தயவு செய்து இதை விட்டுடுங்க.''

''மேடம்... நீங்கள் புரியாமப் பேசறீங்க. இன்னிக்கு நாங்க இதை ஆராயலேன்னா, உங்களைக் கொலை செய்ய முயற்சிபண்ணவனுக்குத் தைரியம் அதிகமாயிடும். பதுங்கி இருந்து பாய்வான். அவனுக்கு அப்படி ஒரு வாய்ப்பு கொடுக்கணுமா?''

''பரவாயில்லை இன்ஸ்பெக்டர். நான் எச்சரிக்கையா இருந்துக்கறேன். என் உயிர் மேல எனக்கு அக்கறை இருக்காதா? தயவு செய்து நீங்கள் எங்கள் புகாரை பதிவு பண்ணாதீங்க.''

அவன் கோபம் இப்போது கதம்பாவின் மேல் உருவானது.

கதம்பாவின் கண்கள் கெஞ்சின. அந்தக் கண்களின் கெஞ்சல் பார்த்திபனின் கோபத்தைப் பறக்கச் செய்தது.

''ஓ.கே. மேடம்! நீங்கள் அப்படி நினைச்சீங்கன்னா நான் ஒண்ணும் பண்றதுக்கில்ல. சரி, நான் புறப்படறேன்.''

''ரொம்ப நன்றி இன்ஸ்பெக்டர்'' என்றாள் இனியா காப்பிக் கோப்பையில் உதட்டைப் பதித்துக்கொண்டே.

பார்த்திபன் வெளிநடப்பு செய்தான். வாசலில் இறங்கி, ஜீப்பை நோக்கி அவன் நடக்கும்போது பின்னால் மென்மையான காலடிச் சத்தம் கேட்டது. அந்தக் காலடிச் சத்தத்திற்கு உரியவர் யார் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. இருந்தும் அவன் திரும்ப விரும்பவில்லை.

MITHRAVINTHA

"இன்ஸ்பெக்டர்! தயவு செய்து ஒரு நிமிடம்...' என்ற கதம்பாவின் குரல் அவன் பாதையின் குறுக்கே வந்து விழுந்ததில் அவனால் நிற்காது இருக்க முடியவில்லை.

"என்னம்மா...உங்களுக்கெல்லாம் போலீஸ்னா அவ்வளவு விளையாட்டாய் போயிடுச்சி இல்ல?"

"ஐயோ! இன்ஸ்பெக்டர் இனியாவுக்கு நான் போன் பண்ணினதே தெரியாது. ஒரு கொலை முயற்சின்னா அதை போலீசுக்குச் சொல்றதுதான் முறைன்னு நான் உங்களைக் கூப்பிட்டேன். இனியா இப்படிப் பேசு வான்னு தெரிஞ்சிருந்தா நான் உங்களைக் கூப்பிட்டிருக் கவே மாட்டேன். தயவுசெய்து மன்னிச்சிடுங்க இன்ஸ் பெக்டர்..."

பார்த்திபன் அவள் முகம் பார்த்தான். அந்தக் கண் களில் உண்மையான வருத்தம் இருந்தது. உண்மையான கண்ணீர் படர்ந்திருந்தது. ஏன் அவளைப் போய்க் கோபித்துக் கொண்டோம் என்று அவனுக்குத் தோன்றி விட்டது.

"பரவாயில்லை மிஸ் கதம்பா. அவங்க கோவிச்சிக் கிட்டதுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க. வாய்ப்பு கிடைச்சா நாம சந்திப்போம். நான் வரேன்."

"தம்பி...இந்தப் பெண்ணோட முகவரி கேளு... முகவரி...முகவரி..."

"எதுக்குண்ணே?" என்றான் பார்த்திபன் இரகசிய மாக.

"வாய்ப்பு கிடைச்சா சந்திப்போம்னு சொல்றே. முகவரி வாங்காமல் வாய்ப்பு எப்படி கிடைக்கும்?"

"என்ன சொல்றார் கான்ஸ்டபிள்?" என்றான் கதம்பா.



"ஒண்ணும் இல்ல. அவர் ஏதாவது உளறுவாரு. வண்டியில ஏறுங்கண்ணே. வழியில நான் பேசிக்கறேன் உங்களை" என்றான்.

ஜீப் கதம்பாவின் முகத்தில் புகைக்கவி, நிலவை மேகம் மறைக்கிற மாதிரி மறைத்துவிட்டுப் புறப்பட்டது.

கதம்பாவின் மனம் வேதனைப்பட்டுக் கொண்டி ருந்தது. ஒரு காவல் அதிகாரியை வீடு வரைக்கும் அழைத்துவிட்டு, அவரை அவமானப்படுத்தி அனுப்பிய தில் கொஞ்சம்கூட சம்மதமேயில்லை.

இந்த இனியா ஏன் திடீரென்று கத்தரிக்கோலால் கத்தரிக்கிற மாதிரி இன்ஸ்பெக்டரை வெட்டி அனுப்பி னாள்? அவள் உயிரின் மேல் இருக்கும் அக்கறை காரண மாகத்தானே கதம்பா காவல்துறைக்கு போன் செய்தாள்? பணம் சேர்ந்துவிட்டால் அடுத்தவரை இவ்வளவு தூரம் அவமதிக்கத் தோன்றுமா?

அவளுடைய இனியாவைப் பற்றி தப்பாக நினைக்க அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. இனியா ஏதோ ஒரு காரணத்தினால்தான் இன்ஸ்பெக்டர் பார்த்திபனிடம் அப்படிப் பேசினாளா? செய்திப் பத்திரிகைகளுக்குப் போனால், விபரீதமாக அது மாறிவிடுமா என்ன? இந்த விவகாரத்தில் ஏதோ ஒரு மூலையில் பாரிவேள் சம்பந்தப் பட்டிருப்பாரோ?

யோசிக்க, யோசிக்கக் கதம்பாவிற்குக் குழப்பமாக இருந்தது. இனியாவைத் தனியாகச் சந்தித்து 'எதற்காக அப்படிச் செய்தாய்?' என்ற விளக்கம் கேட்கலாம் என்று நினைத்துக்கொண்ட போது, வீட்டுக் காம்பவுண்ட் கேட் மறுபடி அகலமாகத் திறக்கப்படும் சத்தம் கேட்டது.

ஒரு கார் உள்ளே நுழைந்து அவள் காலருகே வந்து சக்கரத்தைத் தேய்த்து, 'கிரீச்' என்ற ஒலியை உண்டாக்கிக் கொண்டு நின்றது.

MITHRAVINTHA

கதம்பாவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. காரில் இருந்து இறங்குவது யாராக இருந்தாலும் சரி, அவர்களைக் கண்டபடி திட்டுவது என்ற தீர்மானத்துடன் குளிர்கண்ணாடியுடன் கூடிய அந்தக் காரைக் கோபத்துடன் பார்த்தாள்.

கதவு திறந்தது. காரில் இருந்து இறங்கியவர் பாரிவேன்.

கதம்பா திகைத்துப் போனாள்.

தமிழகம் முழுக்க ரசிகர் கூட்டம் ஒன்றை வெறி கொண்டு அலையச் செய்யும் பாரிவேன், ஐம்பது வயதைத் தொட்ட பின்னும் தனக்கென ஒரு தனி பாணியை அமைத்துக் கொண்டு மக்கள் அத்தனை பேர் மனங்களையும் கொள்ளை கொண்ட பாரிவேன்.

இன்றும் இளமை தன்னைவிட்டு அகன்று விடவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் காதல் காட்சிகளிலும், சண்டைக் காட்சிகளிலும் தென்றலாகவும், புயலாகவும் மாறி மாறி செயல்படும் பாரிவேன். எத்தனையோ படங்களில் இரண்டு கைகளையும் பாக்கெட்டுகளில் விட்டுக் கொண்டு, தோள் இரண்டையும் அசைத்து, அசைத்து ஸ்டைலாக நடைபோட்டு அவளை ரசிக்க வைத்த பாரிவேன் காரிலிருந்து இறங்கியதைப் பார்த்ததும் கதம்பாவிற்குப் பேச்சே வரவில்லை.

பாரிவேன் ஒல்லியாக இருந்தார் வண்ணங்கள் தெறிக்கப்பட்ட அரைக்கை சட்டையும், வெள்ளை பான்ட்டும், வெள்ளை பூட்சும் அணிந்திருந்தார் குளிர் கண்ணாடி அணிந்திருந்தார். தலைமுடிக்கு வாசனை திரவியம் தடவப்பட்டிருந்தது போலும். அலை அலையாக கிராப்பு முகத்தில் ரோஸ் நிறத்தில் பவுடர். பாரிவேன் படப்பிடிப்பில்இருந்து அப்படியே வந்திருந்தார் போலும். அவளை அவர் கடந்தபோது ஏதோ ஒரு சென்ட் வாசனை



வந்தது. அவள் நிற்பதையே பார்க்காதது போல், புயலாக உள்ளே நுழைந்தார்.

கதம்பா, பாரிவேன் பின்னால் உள்ளே சென்றாள். கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை என்று சொல்வார்கள். அதுபோல் பாரிவேன் வந்த பின்பு கதம்பா அந்த வீட்டில் தன்னை மிக அந்நியமாக உணர்ந்தாள்.

"இனியா...என்ன ஆச்சி?உன்னை எவனோ தண்ணில அமுக்கிச் சாகடிக்கப் பாத்தான்னு சொன்னாங்களே. என்னம்மா இது?" என்று பாரிவேன் பதறினார்.

"உங்களுக்கு யார் சொன்னது?" என்று எழுந்து உட்கார்ந்திருந்த இனியா கேட்டாள்.

"உங்கள் வீட்டுக்கு செய்தி வந்தது. மோகன் கேட்டான் போலிருக்கு. அவன்தான் எனக்கு போன் பண்ணான். இங்க வரேன்னு சொன்னானே. இன்னும் வரலை? அவன் இடக்கிறான். என்ன ஆச்சி சொல்லேன்? என்று பாரிவேன், இனியாவின் படுக்கையில் அமர்ந்து அவளை உரிமையோடு அணைத்துக் கொண்டார்.

அவரைப் பின்தொடர்ந்து அறைக்குள் நுழைந்த கதம்பாவிற்கு ஒருமாதிரி ஆகிவிட்டது. அந்த அறையில் வளர்மதியும் இல்லை. மாதவியும் இல்லை. டாக்டரும் வேலையை முடித்துக் கொண்டு வெளியேறியிருந்தார்.

கதம்பா அப்படியே பின்வாங்கப் போன சமயத்தில் இனியாவின் குரல் அவளை நிறுத்தியது.

"என்ன கதம்பா?"

"ஒன்னும் இல்ல. நான் ஊருக்குப் போய் திருவிழாவைப் பார்த்துட்டு ரெண்டு நாள்ல திரும்பி வரேன் இனியா, சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்."

MITHRAVINTHA

''சரி'' என்றாள் இனியா. ''போயிட்டு வா. நான் உன்கூட நிறையப் பேசணும்னு நினைச்சேன். முடியல. பாரிவேற வந்துட்டாரு. நீ ஊருக்கு வந்தப்பறம் உன் கூட பேசறேன். டிரைவர் கிட்டச் சொல்லியிருக்கேன். உன்னை எங்க விடச்சொல்றியோ அங்க விட்டுடுவாரு'' என்றாள்.

கதம்பா தப்பித்தால் போதும் என்ற மனநிலையில் இருந்தான். உடனே அறையைவிட்டு வெளியே சென்றான்.

பாரிவேலின் அணைப்பில் இனியா இருந்தாள். பாரிவேல் இனியாவை உச்சி முதல் பாதம் வரை வருடினார்.

''என்னங்க?''

''என்ன?''

''எப்ப என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?'' என்று இனியா கொஞ்சலாகக் கேட்ட போது, அறையில் இருந்த போன் 'குக்' 'குக்' என்று ஒலித்தது.

பாரிவேல் போனை எடுத்தார்.

அதே நேரத்தில் அடுத்த அறையில் வளர்மதியும் போனை எடுத்திருந்தாள். போனில் வந்த செய்தி கேட்டு பாரிவேலின் முகம் மாறியது.

வளர்மதியின் முகத்தில் சொல்ல முடியாத அளவிற்குத் திகில் பரவியது.



# 11

வளர்மதி தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள். பயம். அவள் ஒட்டுக் கேட்பதை யாராவள் பார்த்துவிடுவார்களோ என்ற கவலை. இருந்தாலும், போனில் கேட்ட குரல் ஏறக்குறைய குரைத்துக் கொண்டிருந்தது அவளால் கேட்காமலும் இருக்க முடியவில்லை.

போனில் பாரிவேலின் மனைவி பாரிவேலைப் பிடித்து கன்னாபின்னா என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தாள்.

''இல்லை... என்ன நினைச்சிட்டிருக்கா அந்தச் சிறுக்கின்னு கேக்கறேன்? படப்பிடிப்பில் இருப்பீங்கன்னு நினைச்சேன். போன் பண்ணினா அங்க இல்லன்னு சொல்றாங்க. நீங்கள் வேற எங்க போய்டப் போறீங்கன்னு எனக்குத் தெரியாதா? அவள் வீட்டுக்குப் போன் போட்டா, அவள் இங்க இருக்கறதா அந்த மோகன் சொன்னான். சரிதான் நீங்களும் இங்கதான்னு தெரிஞ்சிபோச்சி.

அந்தப் பொட்டநாயை எவனோ தண்ணில வைச்சி அமுக்கிச் சாவடிக்கப் பார்த்தானாமே, சாவலியா அவள்? செத்திருந்தான்னா, அவனைத் தண்ணில வைச்சி அமுக்குனவனுக்கு நான் கோயிலே கட்டியிருப்பேன். கொஞ்சம் சிவப்புத் தோலை வைச்சிக்கிட்டு, இழுத்துக் கட்டின மாரை வைச்சிகிட்டு உங்களை அவள் இந்த ஆட்டம் ஆடவைக்கிறாளே. எல்லாம் இன்னும் எவ்வளவு நாளைக்குன்னு தான் பார்க்கறேன். அவள் இருந்தாத் தானே நீங்க அங்க போய் உங்க ஸ்டைலைக் காட்டுவீங்க?

MITHRAVINTHA

தண்ணிலதான் சாவு வரணும்னு இல்ல. அவனுக்கு எங்க, எப்படி சாவு வரணுங்கறதை நான் பார்த்துக்கறேன்.''

''ஏய் பானு... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்'' என்று பாரிவேலின் குரல் கெஞ்சியது.

எதிர்முனையில் போன் வைக்கப்பட்டுவிட்டது.

வளர்மதி மெல்ல போனை வைத்தாள். அவள் வைத்த விதத்தைப் பார்த்தால் போனுக்கு வலித்துவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறை கொண்டவள் போல் தெரிந்தாள்.

பாரிவேல் போனை வைத்தபோது அவரது கரங்கள் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தன.

''யாரு போன்ல, உங்கள் பொண்டாட்டிதானே?'' என்று இனியா சற்றே கடுமையான குரலில் கேட்டாள்.

''இல்ல இனி'' என்று பாரிவேல் பலவீனமாக மறுத்தார்.

''பொய் சொல்லாதீங்க எனக்குத் தெரியும்'' என்று சீறிச்சிட்டாள் இனியா. ''நீங்க போன்ல உங்க பொண்டாட்டி பேரைச் சொன்னதை நான் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். நீங்கள் இங்க இருக்கறதைத் தெரிஞ்சுக்கிட்டு அவங்க கத்தறாங்கன்னா, எவ்வளவு பேர் சொல்லிக் கொடுக்கறாங்கன்னு பார்த்துக்குங்க. உங்களுக்கு நான் உயிரோட வேணும்னா, உடனே எனக்குத் தாலி கட்டி தனிக்குடித்தனம் வைச்சிடுங்க. அதுக்கு முன்னால என்னைத் தொடாதீங்க.

என்னோட மனசு என்ன பாடுபடுதுன்னு தெரியுமா உங்களுக்கு? என்னை மாதிரி பொம்பளைங்களுக்கெல்லாம் ஒரு நல்ல வாழ்க்கையே கிடையாது. எப்பாவது நினைச்சி கிட்டா வருவீங்க. அப்ப நீங்க என்ன சொல்றீங்களோ



அதை நான் செய்யணும். உங்கள் இஷ்டப்படி நான் ஆடணும். அப்படித்தானே?''

''இனியா'' என்று ஓங்கிய குரலில் கத்தினார் பாரிவேல். ''என்ன நினைச்சிட்டிருக்கே நீ? என் தயவுல நீ இருக்கியா? இல்ல உன் தயவுல நான் இருக்கேனா? உடம்பு சரியில்லன்னு பார்த்துட்டுப் போக வந்தேன். வந்த இடத்துல என்னை இப்படி அவமானப்படுத்தறியே. சிறுத்தைக் குட்டி சின்னதா இருக்கறப்ப பூனை மாதிரி அழகா இருக்கும். யாரும் எடுத்து வளர்க்க ஆசைப்படு வாங்க. நானும் அப்படித்தான் ஆசைப்பட்டேன். அதே சிறுத்தை வளர்ந்து, வளர்த்தவனையே பயமுறுத்துனா என்ன ஆகும்னு யோசிச்சிப் பார்த்தியா? வளர்த்தவன் சுட்டுத் தள்ளிடுவான். வளர்த்தவனுக்கு தன்னுயிர் முக்கியமா? சிறுத்தையோட உயிர் முக்கியமா? அதை ஞாபகத்துல வைச்சிக்க.

எனக்கு அரசியல் வட்டாரத்துல செல்வாக்கு இருக்குன்னு தெரியும் இல்ல உனக்கு? ஊர்ல இருக்கிற கட்சிக்காரன் எல்லாம் என் கட்சியில சேர்ந்துடு, என் கட்சியில சேர்ந்துடுன்னு என் வீட்டு வாசல்ல வந்து வாட்ச்மேன் வேலை பண்ணிட்டிருக்கான். நானே உன்னைக் கொன்னாகூட ரொம்ப எளிதா தப்பிச்சி வெளியே வந்துடுவேன். என்ன நினைச்சிட்டிருக்கே? உம்...? என்னையே மிரட்டிப் பார்க்கிறியா?''

பாரிவேல் மிஞ்சிக் கொண்டிருக்கிறார் என்று இனியாவிற்குப் புரிந்தது. பாரிவேல் கெஞ்சினால் மிஞ்சுவார். மிஞ்சினால் கெஞ்சுவார்.

இனியா கண்களில் நீர் பெருக்கத் தொடங்கினாள்.

''நான் உங்களைத்தான் ஒரே ஆதரவா நம்பி இருந்தேன். நீங்களே என்னை உதறிட்டா அப்புறம் நான் எங்கே போவேன் கொன்னுடுங்க. நான் நிம்மதியாப் போய்டறேன்.''

MITHRAVINTHA

எழுந்து சென்று அலமாரியைத் திறந்து கோப்பையையும் மதுபாட்டிலையும் கொண்டு வந்து டீப்பாய் மீது வைத்தான்.

பாரிவேள் பாட்டில் மூடியைத் திறக்கப் பார்த்தார். அவரால் முடியவில்லை. அவர் கைகள் அநியாயத்திற்கு நடுங்கிக் கொண்டிருந்தன. எப்படியோ சிரமப்பட்டுத் திறந்துவிட்டார். கோப்பையில் மதுவை ஊற்றப் பார்த்தார். கோப்பையைத் தவிர டீப்பாயின் மற்ற இடங்களில் எல்லாம் மது சிதறியது. தெறித்தது. குமிழ் குமிழாகக் கொப்பளித்தது. இனியா அவர் கையிலிருந்து பாட்டிலைப் பெற்று எடுத்து ஊற்றினான்.

பாரிவேள் நடுங்கும் விரல்களாலேயே கோப்பையைப் பற்றி ஒரேடியாகச் சரித்துக்கொண்டார்.

''இனியா! நான் என் பக்கம் கொஞ்சம் சரிபண்ண வேண்டி இருக்குது. பானுவைச் சரிகட்டணும். அவன் கோர்ட்டு, கேர்ட்டுனு போகாம இருக்கணும். சர்க்கஸ்ல ரிங்மாஸ்டர் தன்னைச் சுற்றி மிருகங்களை வைச்சிக்கிட்டு அதுங்களை ஆட்டிப்படைப்பானே பார்த்திருக்கியா அந்த மாதிரி நான் ஒவ்வொருத்தனையும் சமாளிச்சிக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா இந்த சமயத்துல போய் இப்படி அவசரப்படறியே? உம்... மோதிரம் போட்டு விட்டா அதைப் போய்க் கல்யாணமே ஆய்டிச்சின்னு செய்தி கொடுக்கறதா? என் வார்த்தையில உனக்கு நம்பிக்கை இல்லையா?' பாரிவேள் மது உள்ளே போனதும், அது அளித்த இதத்தில் படபடப்பைக் குறைத்துக் கொண்டு தன்மையாகப் பேசினார்.

''செய்தியை நான் கொடுக்கல.''

''பின்ன வேற யாரு கொடுத்தது?''

'மோகன்தான்! மோகனுடைய போக்கே சரியில்ல.''



''மோகன்தானே? இங்கதான் வரேன்னான். இப்பவே கூப்பிட்டு அவனை உண்டு இல்லைன்னு ஆக்கிடறேன். அவன் வந்திருக்கானா பாரு.''

இனியா இண்டர்காம் தொலைபேசியில் வளர்மதியை அழைத்து மோகன் வந்துவிட்டானா என்று விசாரித்தான். வந்து விட்டதை அறிந்து, அறைக்குள் அனுப்பச் சொன்னான்.

முப்பதாவது வினாடி அறைக் கதவு தட்டப்பட்டுத் திறக்கப்பட்டு, மோகன் உள்ளே நுழைந்தான்.

அவனைப் பார்த்ததும் பாரிவேள் கத்தத் தொடங்கினார்.

''பத்திரிகைகளுக்கு எல்லாம் நீதான் செய்தி கொடுத்தியாமே?''

மோகன் தலைகுனிந்து நின்றான்.

''உண்டா, இல்லியா?''

''நான்தான் கொடுத்தேன். இனியாதான் கொடுக்கச் சொல்லிச்சி. உங்களுக்கு இனியா கூட இருக்கிற தொடர்பு உறுதிப்படணும் என்று இனியா விரும்பினதால்.''

இனியா குறுக்கிட்டாள்.

''மோகன்! என் கண்ணைப் பார்த்துச் சொல்லு. நானா செய்தி கொடுக்கச் சொன்னேன்?''

''அன்னிக்கு ஆத்மா புரொடக்ஷன்ஸ்காரங்க வந்து தண்ணி பார்ட்டி கொடுத்தாங்களே. நீகூட ஒயின் சாப்பிட்டு எங்கூடப் பேசினியே...''

''மோகன்...வார்த்தையை அளந்து பேசு. நீ நிதானத்துலதான் இருக்கியா? இல்ல இப்ப ஏதாவது போட்டுட்டு வந்திருக்கியா? என்ன பேச்சு பேசறே நீ?''



MITHRAVINTHA

"நீ நிதானத்துல இல்லாதப்போ பேசின பேச்சைச் சொன்னேன். உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருது?"

"பாரி...நம்பாதீங்க இவன் நடிக்கிறான். நான் உங்களோட வாழ வந்துட்டா நடிக்கறத நிறுத்திடு வேன்னு சொன்னேன் இல்ல? நான் நடிக்கறதை நிறுத் தனா இவனுக்கு வருமானம் போயிடுமேன்னு உங்களுக் கும் எனக்கும் தகராறு மூட்டி விடப் பார்க்கறான். நீங்கள் என்னை விட்டுட்டுப் போயிடணும்னுதான் இந்த சகுனி இப்படியெல்லாம் பேசறான். மோகன்...வெளியே போ...இனிமே உனக்கு என் வீட்ல வேலை இல்ல. என் கூட இருந்துக்கிட்டு எனக்கே துரோகம் பண்ற பணப் பேய் நீ. ஒழிஞ்சி போயிடு. என் கண்ணு முன்னால நிக்காதே...போ..."

மோகன் அறையை விட்டு வெளியே வந்தான்.

அவன்முகம் அவமானத்திலும் ஆத்திரத்திலும் சிவந்து இருந்தது.

அடியேய்...இதற்கு நான்பழிவாங்கியே ஆகவேண்டும். நான் ரோசக்காரன் என்பதை உனக்கு நான் நிரூபித்தே ஆகவேண்டும்.

மோகன் வெகு இறுக்கமான முகத்துடன் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

இரண்டு நாள் எந்தவித அசாதாரண சம்பவங்களும் இன்றிக் கழிந்தன.

இனியா, கேளம்பாக்கம் வீட்டில் இருந்து சென்னை வீட்டிற்கு வந்துவிட்டாள். மறுநாளே படப்பிடிப்பில் கலந்துகொள்ளப் போனாள் முதல்நாள் அவள் நீச்சல் குளத்தில் கொல்லப்பட முயன்றது யாருக்கும் தெரியாத தால் படப்பிடிப்பு இயல்பாக நடந்தது.



இரண்டாவது நாள் மாலையில் ஒரு சின்ன விபரீதம் நடந்தது. சவுண்ட் இன்ஜினீயர் கண்ணன் உட்கார்ந் திருந்த இடத்திற்கு நேர் மேல் ஸ்டாண்டில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த விளக்கொன்று, ஸ்டாண்டில் இருந்து நழுவி கண்ணனின் தலையில் விழுந்து வெடித்துச் சிதறி யது.

இரத்த அலங்கோலமாய் கண்ணன், மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார். உடனே படப்பிடிப்பு ரத்தானது. இனியா உட்பட அனைவரும் பொது மருத்துவமனைக்கு விரைந்தார்கள். கண்ணனின் தலை யில் கண்ணாடித் துகள்கள் கிழித்த இடங்களில் எல்லாம் தையல் போடப்பட்டன.

இருந்தாலும் கண்ணனுக்கு நினைவு திரும்பவில்லை. அவருக்கு எப்போது நினைவு திரும்பும் என்பதைக் கூட உறுதியாகச் சொல்ல முடியாது என மருத்துவர் சொல்லி விட்டார்.

இனியாவிற்குப் பாவமாக இருந்தது. கண்ணன் நல்ல மனிதர். வயதானவர். இனியாவை தனது பெண் ணாக நினைத்துப் பழகுபவர். அவள் அவருக்குச் செய் யும் பண உதவிகளை மிக சங்கோஜத்துடன் பெற்றுக் கொள்பவர். ஒரு நாள் கிழமை என்றால் இனியா அவ ருடைய வாழ்த்துக்களைப் பெற்றுக்கொள்வது வழக்கம். அப்படி ஒரு நல்ல மனிதருக்கு நினைவு திரும்பாதபடி ஒரு விபத்து. அவளுடைய மனம் இரக்கத்தில் தத்தளித்தது.

வீட்டுக்கு வந்தவளுக்கு எதிலும் மனம் ஒட்டவில்லை. படுக்கையறை சென்று ஆடை மாற்றி, சன்னமான நைட்டி அணிந்து படுக்கையில் சாய்ந்தாள்.

தொலைபேசி அவளை அழைத்தது.

எடுத்தாள். பாரிவேள்.

MITHRAVINTHA

"இனி...நான் இங்க ரொம்பக் குழம்பிப் போயிருக்கேன். பாலு கன்னா பின்னான்னு கத்துது. என்னால வீட்ல இருக்க முடியல. இராத்திரிவீட்டுக்கு வரேன். உன் கையாலே சாப்பிடணும் போல ஆசையா இருக்கு. வரட்டுமா?" என்று கேட்டார்.

"இது உங்க வீடுங்க. நீங்க எப்ப வேணும்னாலும் வரலாம்" என்றாள் இனியா.

"ஓ.கே. அப்ப இராத்திரி...எனக்கு விருந்து வேணும்" என்று சொல்லி விட்டுப் பாரிவேலின் குரல் ஓய்ந்தது.

அதே நேரம் இனியாவின் வீட்டு வேலைக்காரர்கள் தங்கும் விடுதியில் இருந்துகொண்டு, பாரிவேலுக்கும் இனியாவிற்கும் இடையே நடந்த பேச்சை ஒட்டுக் கேட்ட மோகன் யோசனையுடன் தொலைபேசியை வைத்தான்.

இன்றிரவு வருகிறாயா பாரி? இன்றிரவு பாரியோடு உல்லாசமாக இருக்கப் போகிறாயா இனியா? பார்க்கிறேன். இந்த மோகனை இரண்டு பேருமாய்ச் சேர்ந்து பந்தாடியதற்கு நாளைமுதல் அனுபவிப்பீர்கள் இனியா... உன் வாழ்க்கைக்கு ஒரு முடிவுரை எழுதுகிறேன். பாரிவேல்...உன்னையும் சிக்கலில் சிக்க வைக்கிறேன். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

மோகன் அசைக்க முடியாத ஒரு தீர்மானத்துடன் அங்கிருந்து புறப்பட்டான்.

இளங்கோ, பிளாட்பாரத்தில் விரிக்கப்பட்டிருந்த கடைகளைப் பார்த்துக் கொண்டே மெதுவாக நடந்து சென்றான். ஒரு கடையில் பளபளவென்று விளக்கு வெளிச்சத்தில் இருந்த பொருள் அவனைக் கவர்ந்தது.

"இந்தக்கத்தி என்னப்பா விலை?" என்று கேட்டான். சொன்ன விலை தந்தான். வாங்கிக் கொண்டான்.



அறைக்கு வந்தான். கத்தியை அதன் அட்டை உறையில் இருந்து எடுத்துக் கூர்மையைப் பரிசீலித்தான். விரல் நுனியில் இருந்து ஒருஇரத்த முத்து புறப்பட்டது. திருப்தியடைந்தான்...மணி பார்த்தான். இரவு ஒன்பது. இப்போது புறப்பட்டு, சாப்பிட்டு விட்டுப் போனால் சரியாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

இனியா அவளுடைய படுக்கை அறையில தனியாக இருக்கிறாள். திலக் இனியாவிடமிருந்தே பெற்றுத் தந்த செய்தி அது. அதில் எதுவும் தப்பிருக்காது. இனியாவின் படுக்கையறையை அடைவது எப்படி என்று அவனுக்குத் தெரியும்.

இனியா...எனக்காகக் காத்திரு. வருகிறேன்.

இளங்கோ புறப்பட்டான்.

இரவு—நட்சத்திரங்கள் சோகமாக மின்னிக் கொண்டிருந்தன. நிலா சோகையாய் மேகங்களுக்கிடையில் மறைந்து மறைந்து எங்கோ சென்று ஒளியப் பார்த்தது.

இனியாவின் வீடு அமைதியாய் இருந்தது. இருட்டாய் இருந்தது. நிழலாய் இருந்தது. போர்ட்டிகோவில் பாரிவேலின் கார் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க, அதன் டிரைவர் பின்சீட்டில் படுத்துப் பாதி உறக்கத்தில் இருந்தபோது, அவன் காதில் கொஞ்சம் கூட சந்தேகத்திற்கு இடமின்றி, மாதவியின் அலறல் நுழைந்தது.

"கொலை...அய்யய்யோ கொலை. இனியா...யம்மாடீ இனியா...போயிட்டியே...சொன்னபடி கொன்னுட்டாங்களேடி ராஜாத்தீஈஈஈஈஈ..."

மாதவியின் அலறல் அபாயச்சங்கு போல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

MITHRAVINTHA

# 12

பாரிவேலின் கார் டிரைவர் மாணிக்கம் அதிர்ந்து போனான்.

ஏற்கனவே பாரிவேல் வீட்டில் இருக்கும் பூசல் அவனுக்குத் தெரியும். இப்போது இனியாவின் அம்மாவின் அலறல் அந்தப் பிரதேசத்தையே எழுப்பிவிடும் அளவிற்கு உச்சமாக இருந்தது. எதிர்பார்த்த ஒன்று நிகழ்ந்து விட்டது.

பாரிவேல் உள்ளேதானே போனார். அவர் இருக்கிறாரா இல்லையா? என்ன இது? திடீரென்று எப்படி தன்னை தூக்கம் ஆட்கொண்டது? பாரிவேலை முதல்ல அந்த இடத்தில் இருந்து அகற்றியாக வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

இனியாவின் வீட்டில் அங்கங்கே விளக்குகள் ஒளிரத் தொடங்கின. வேலைக்காரர்களுக்கான விடுதி, வீட்டில் இருந்து சற்றுத் தள்ளி இருந்தது. அந்த வரிசையான விடுதிகளில் இருந்து ஒருவன் இறங்கி ஓடிவந்தான்.

மாணிக்கம் அவனை வழிமறித்து, "மேலே பாரி இருக்காரான்னு பார்த்துச் சொல்லேன்" என்றான்.

மாணிக்கத்திற்கு வீட்டினுள் நுழையக்கூட அச்சமாக இருந்தது. இனியாவின் முகத்தை அவன் எவ்வளவோ படங்களில் சிரித்துப் பார்த்திருக்கிறான். அழுது பார்த்திருக்கிறான். கோபித்துப் பார்த்திருக்கிறான். ஆனால், ஒருபோதும் செத்துப் பார்த்ததில்லை.

இனியாவை அந்தக் கோலத்தில் பார்க்க விருப்பவில்லை. மேலும் அவள் கொலை செய்யப்பட்டிருப்ப



தாக வேறு அவள் அம்மா அலறுகிறாள். இந்த நேரத்தில் சம்பந்தமே இல்லாமல் உள்ளேபோய் அனாவசியமாய் சந்தேகத்திற்கு இடமாவதில் அவனுக்கு விருப்பமில்லை.

"மாணிக்கம்" என்று மேலே இருந்து குரல் வந்தது. மாணிக்கம் நிமிர்ந்து பார்த்தான். மாடிப்படிகள் முடிந்து வராந்தாவின் தொடக்கத்தில் மாணிக்கம் கேட்டு அனுப்பிய வேலைக்காரன் நின்றிருந்தான்.

"என்ன" என்றான் மாணிக்கம் அடக்கி வாசித்த குரலில்.

"உன் முதலாளி இங்கே இல்லியேப்பா."

"இல்லையா? என்னப்பா இது? என்னை விட்டுட்டு அவர் மட்டும் எங்கே போய் விட முடியும்? கொஞ்சம் சரியாப் பாத்துச் சொல்லேன்" என்று மாணிக்கம் அந்த வேலைக்காரனைக் கேட்டுக் கொண்டான்.

அந்த வேலைக்காரன் துக்கமும் சோகமும் நடனமாடும் முகத்துடன் மறுபடி உள்ளே போன அந்த நேரத்தில், போலீஸ் ஜீப்பின் சங்கொலி 'வீய்ங்' வீய்ங் என்று கேட்டது. கூடவே இன்னொரு சங்கொலியும். அது ஆம்புலன்ஸ் வண்டியின் சங்கொலியாக இருக்கலாம்.

மாணிக்கத்தைப் பயம் ஆக்டோபசின் கால்களாய் எல்லா இடங்களிலும் பற்றிக்கொண்டது. வேலைக்காரன் மேலே பாரிவேல் இல்லை என்கிறான். இந்த நேரத்தில் அவன் மட்டும் காரை வைத்துக்கொண்டு அங்கே நின்றால் காவல்துறையினர் தங்களுடைய கத்தியைக் காட்டிலும் கூர்மையான கேள்விகளாலேயே அவனைத் துளைத்து எடுத்து விடுவார்கள்.

மாணிக்கம் சட்டென்று காரைக் கிளப்பினான். கிளப்பிய வேகத்தில் இனியா வீட்டுக் காம்பவுண்டை விட்டு வெளியே வந்தான். கார்ச் சக்கரங்கள் கதறிக்

MITHRAVINTHA

கொண்டே திரும்பின. கார் 'ஷூம்' என்ற உறுமலோடு வேகம் பிடித்தது.

அந்த கார் வெளியேறவும், காவல்துறையின் ஜீப் இனியா வீட்டுக் காம்பவுண்டில் நுழையவும் சரியாக இருந்தது.

ஜீப்பின் முன் இருக்கையில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெல்ட் பார்த்திபன் இனியா வீட்டுக் காம்பவுண்டில் இருந்து வெளியேறிய காரைப் பார்த்தான். அது அதிவேகமாக, டயர்கள் கதறக் கதறத் திரும்பிப் போவதைப் பார்த்தான். வீட்டில் இனியா கொலையாகி இருக்கிறாள். வீட்டுக்கு வெளியே ஒரு கார் தப்பித்துச் செல்கிறது.

பார்த்திபன் வீட்டுக்குள் நுழையலாமா அல்லது காரைப் பின்தொடரலாமா என்று ஒருகணம் யோசித்தான். காரின் ஓட்டுநர் இருக்கையில் மட்டும்தான் ஆள் தெரிந்தான் அதவும் சீருடை அணிந்தவன், பார்த்திபன் காரின் எண்ணைத் தன் பாக்கெட்டில் இருந்த குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டான். ஜீப்பில் இருந்து இறங்கினான்.

வீட்டினுள் இருந்து வந்த அவலக்குரல் அவனை உள்ளே விரையச் செய்தது. நுழைந்தான் வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் பேயறைந்த மாதிரி முக பாவங்களுடன் அங்கங்கே நின்றிருந்தார்கள்.

அவர்களுடைய பார்வை மேலே செல்லும் வழியைக் காட்டியது. பார்த்திபன் படிகளில் ஏறினான். மேலே செல்லச் செல்ல இனியாவின் அம்மா, மாதவியின் கதறல் அவன் நெஞ்சைத் துளைத்தது.

அவனுடைய அலுவலக வாழ்க்கையில் அவன் சந்திக்கப் போகும் இன்னொரு உடல். வருத்தமாக இருந்தது.



சாவு என்பது மனித குலத்திற்கு வருத்தம் தரும் ஒரு தவிர்க்க முடியாத செய்திதானே. நேற்றுவரை சிரித்துப் பேசியவரை, சற்றுமுன்வரை கொஞ்சிவிளையாடியவரை, கோபப்பட்டுச் சீறியவரை, கல்யாண சுகமோ, அன்னையின் அரவணைப்பையோ தந்தவரை இனி என்றென்றும் பார்க்கவே முடியாது என்ற மாறா உண்மை எந்த மனதையும் கலங்கச் செய்யும். பார்த்திபன்கூட அப்படி ஒரு கலங்கிய மனநிலையில்தான் இருந்தான்.

இனியாவின் படுக்கை அறை வாசலில் நின்று ஓலமிட்டுக்கொண்டிருந்த வளர்மதியின் தோளைப் பார்த்திபன் கையில் இருந்த கம்பால் தொட்டான். வளர்மதி திரும்பிப் பார்த்து முகத்தை மூடிக்கொண்டே ஒதுங்கினாள்,

அவன் அறைக்குள் நுழைந்தான்.

இனியா தரையில் கிடந்தாள். அவள் உடலில் ஒரே ஒரு நைட்டி மட்டும் இருந்தது. மார்புப் பகுதியில் அது கிழிந்திருந்தது. நைட்டி தொடைவரை மேலேறி இருந்தது. உடலில் வேறு உள்ளாடைகளே இல்லை. மார்பில் கத்தி குத்தியிருந்தது. அவள் முகத்தில் வேதனையின் சாயலே இல்லை. கத்திக்குத்துக் காயங்களில் இருந்து இரத்தம் குபுகுபுவெனப் பொங்கிக் கீழிறங்கியிருந்தது. பார்த்திபன் பார்த்தபோதுகூட ஒரு இரத்தக்குமிழ் மேல் எழுந்து சின்ன 'படக்' சத்தத்துடன் வெடித்தது.

இனியா கத்தியால் குத்தப்பட்டுத்தான் செத்திருக்கிறாள் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. அவளுக்குப் பக்கத்தில்]அவளைக் குத்துவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட கத்தி இருக்க, அதில் இரத்தம் தோய்ந்து இருந்தது. ஏறக்குறைய முழுக்கத்தியிலும் இரத்தம்.

பார்த்திபன் குனிந்து பார்த்தான். கத்தியில் மிக லேசாகப் பதிந்திருந்த ரேகை ஒன்று தெரிந்தது. பார்த்திபன் திரும்பிப் பார்த்தான். அவன் பின்னால் அறைக்

MITHRAVINTHA

...ல் நுழைந்த அவனுடைய உதவியாளர்களில் ஒருவர் பார்த்திபன் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு, கத்தியின் மேல் ஒரு வெள்ளைத் துணியைப் போட்டுக் கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

இனியாவிற்கு மன்னிக்கவும்—இனியாவின் உடலுக்குச் சற்றுத் தள்ளி பாரிவேள் கிடந்தார். அறை வாசலில் இருந்து பார்த்தால் புலப்படாத அளவு சுவர் ஓரத்தில் அவர் உருண்டு கிடந்தார்.

பாரிவேளைப் பார்த்ததும் பார்த்திபனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. திரை உலகையும் அரசியல் உலகையும் ஒரு கலக்கு கலக்கி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் பாரிவேள் இப்படி ஒரு நடிகையின் வீட்டில் அனாதையாய் உருண்டு கிடந்தது அவனுக்கு ஆச்சரியமாயும் இருந்தது.

பாரிவேள் முகத்தினருகே குனிந்தான். நல்லவேளை சுவாசம் இருந்தது. பாரிவேல் சாகவில்லை அல்லது சாகடிக்கப்படவில்லை. அவர் சுவாசத்தில் தாங்க முடியாத அளவிற்கு மதுவின் நெடி இருந்தது. பார்த்திபன் முகத்தைச் சுளித்தான்.

''பாரிவேள்...பாரிவேள்'' என்று அழைத்தான்.

''வேசம் தம்பி. அத்தனையும் வேசம். கிளி மாதிரி இருந்த எம்பொண்ணை இந்தப் பூனை கொன்னு போட்டுட்டு இப்ப என்னவோ மயங்கி கிடக்கிற மாதிரி வேசம் போட்டிருக்கான் தம்பீ ஈஈஈ...அடி இராஜாத்தி...போய்ட்டியேம்மா''என்ற மாதவியின் அலறல் பார்த்திபனை பரிதாபப்பட வைத்தது.

மாதவி மார்பிலும், தலையிலும் அடித்துக்கொண்டு கதறினாள்.



''அண்ணே...அந்த அம்மாவை முதல்ல வெளியே அனுப்புங்க. அவங்களை வேற அறைக்கு கொண்டுபோய் உக்கார வையுங்க. டாக்டருக்குச் சொல்லியனுப்பி அவங்களுக்கு சிகிச்சை அளிக்கச் சொல்லுங்க. அவங்க கொஞ்ச நேரம் ஓய்வு எடுக்கணும். அவங்களோட படபடப்பு கொஞ்சம் குறையணும். இந்த அறையில் யாரையும் சேர்க்காதீங்க, எல்லாரையும் வெளியில அனுப்புங்க. விசாரிக்கும் போது ஒவ்வொருத்தரா வந்தால் போதும். போட்டோ எடுக்கறவரையும், ரேகை அடையாளம் எடுக்கறவரையும் வரச் சொல்லுங்க' என்று பார்த்திபன் மளமளவென ஆணைகளைப் பிறப்பித்தான்.

''ப்ளாஷ்...ப்ளாஷ்...' என்று காமிரா மின்னியது. போட்டோ எடுப்பவர் இனியாவின் உடலையும் அந்த அறையையும் எல்லாக் கோணங்களிலும் போட்டோ எடுத்தார். விரல் ரேகை அடையாளம் எடுப்பவர் அவர் கடமையைச் செய்தார். பார்த்திபன் அவர்களுடைய வேலைக்கு இடையூறாக இருக்கக் கூடாதென்று அறையில் ஒரு பக்கமாக ஒதுங்கினான்.

அவன் ஒதுங்கின பக்கம் சுவர் முழுக்கப் படர்ந்திருந்த மர அலமாரி ஒன்று இருந்தது. அதன் ஒரு கதவு திறந்திருக்க பார்த்திபன் அதை மூடி அதன்மேல் சாய்ந்து நிற்க முயற்சித்தான். அலமாரிக் கதவு முனகி அவனை எதிர்த்தது. கதவைத் திறந்து பார்த்தான். அலமாரியின் கீழே கதவு பொருந்தும் இடத்தில் ஒரு சாவிக்கொத்து இருந்தது.

சாவிக்கொத்து என்றால் சாதாரணமானது இல்லை. அசாதாரணமானது. சின்ன அளவிலான கத்தி, ஸ்க்ரு டிரைவர், அரம், முள்வாங்கி, நகவெட்டி, சோடா திறப்பான் என்று எல்லாமே பொருத்திய சாவிக்கொத்து. அயல்நாட்டுச் சரக்கு. அதில் ஒரே ஒரு சாவி இருந்தது. அலமாரி மேல் தட்டில் சில்லறைக் காசுகள், வளையல்கள்

MITHRAVINTHA

ஸ்டிக்கர்கள், ஸ்டிக்கர் பொட்டுகள் என்று இறைந்து கிடந்தன. இந்த சாவிக்கொத்து கூட அங்கிருந்துதான் கீழே விழுந்திருக்க வேண்டும் என்று தோன்றியது பார்த்திபனுக்கு. அதை எடுத்து மேல் தட்டில் வைத்தான்.

இனியா நடிகை. வெளிச்சத்தில் இருந்தவள். அவளுக்கு எத்தனையோ பேர் எத்தனையோ விதவான பரிசுப் பொருட்களை அளித்திருப்பார்கள். அவற்றில் இதும் ஒன்றாக இருக்கக் கூடும் என்று நினைத்தான். இப்போது சாவிக்கொத்தா முக்கியம்?

பாரிவேலை இருவர் தூக்கி அந்த அறையில் இருந்த படுக்கையில் கிடத்தியிருந்தார்கள். ஒரு உதவியாளர் அவர் முகத்தில் தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்தார். பாரிவேலின் முகம் கலைந்தது. நேராக இருந்த உதடுகள் வளைந்தன. புருவங்கள் உயர்ந்தன. கண்களின் இமைகள் விரிந்தன. நெற்றியில் வரிகள் விழுந்தன.

பாரிவேல் விழித்துக் கொண்டார். அறையில் இருந்த பார்த்திபனையும் அவன் அணிந்திருந்த காவல்துறை சீருடையையும் பார்த்துவிட்டு பாரிவேல் கண்களைப் பெரிதாக விழித்தார். சடக்கென்று எழுந்து அமர்ந்தார். கீழே கிடந்த இனியாவின் உடலையும், இனியாவின் உடலுக்கு அருகில் இருந்த இரத்தக் குட்டையையும் பார்த்தார்.

‘ஐயையோ... ஐயையோ... இன்ஸ்பெக்டர் என்ன ஆச்சு?'' என்று அலறினார்.

‘கொலை'' என்றான் பார்த்திபன் சுருக்கமாக.

''என் உயிரைக் கொலை பண்ணிட்டாங்களா... ஐயோ இனியா இனிமே இல்லையா? இன்ஸ்பெக்டர் எந்த...இந்த வேலையைச் செய்தது?'' என்று பிரசுரிக்க முடியாத வார்த்தையால் கொலையாளியைத் திட்டிக் கொண்டே ஓலமிட்டார் பாரிவேல்.



பார்த்திபனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. உண்மையிலேயே பாரிவேலுக்கு ஒன்றும் தெரியாதா? இல்லை எல்லாம் தெரிந்தும் தெரியாததுபோல் நடிக்கிறாரா? அவருடையது நடிப்பு என்றால் அந்த நடிப்புக்கு 'பாரத்' பட்டமே கொடுக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

''உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?'' என்று வினவினான் பார்த்திபன்.

''ஐயோ...எனக்குத் தெரிஞ்சிருந்தா இந்தக் கொலையை நடக்க விட்டிருப்பேனா? பாவி எனக்கு ஊத்தி ஊத்திக் குடிக்க வைச்சானே' இப்படி ஒரேயடியா என்னை விட்டுட்டுப் போய்டுவான்னு தெரிஞ்சிருந்தா நான் குடிச்சிருக்கவே மாட்டேனே'' என்று தலையில் அடித்துக்கொண்டார் பாரிவேல்.

கடகடவென்று கட்டிலில் இருந்து இறங்கி, இனியாவின் அருகில் சென்று, அவள் முகத்தை ஏந்தினார். அவளுடைய உதடுகளில் பச் பச் பச் என்று முத்தமிட்டார்.

''என் செல்லமே. போய்ட்டியாம்மா? உண்மையாவே நீ போய்ட்டியாம்மா? என் கோவம், என் முட்டாள் தனம் எதையுமே சமாளிக்க முடியாதுன்னு நினைச்சிப் போய்ட்டியாடா? இனியா...ஐயோ...இனியா...எழுந்துக்கம்மா. உடனே உனக்கு ஒரு தாலியைக் கட்டறேன் இனியா. உலகமே எதுத்தாலும் நீதான் எம் பொண்டாட்டின்னு சொல்றேன் இனியா. எழுந்துடும்மா. தயவு செய்ஞ்சி எழுந்துடும்மா.''

இனியாவின் உடலில் எந்தவித அசைவும் இல்லை.

பாரிவேல் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவருடைய கதறல், அவருடைய செய்கைகள் எந்தக் கல் நெஞ்சக்காரனாய் இருந்தாலும் கரைத்துவிடும் போல் இருந்தது. அறையில் இருந்த போலீஸ்காரர்கள் கூட

MITHRAVINTHA

நேரத்தில் பாரிவேள் அவனுடைய படுக்கை அறையில் அவனுக்கு அருகிலேயே இருந்திருக்கிறார்.

பாரிவேளும், இனியாவும் படுக்கை அறையில் தனித்திருக்கும்போது வேறு யார் அங்கே போக முடியும்?

பாரிவேளின் அழுகையைப் பற்றி நினைத்தான். அவருடைய கதறல்களை நினைத்துப் பார்த்தான். பாரிவேள் இனியாலைக் கொன்றிருக்க முடியாது என்பது போலத்தானே அவருடைய அழுகையும், கதறல்களும் அவனுக்கு செய்தி தந்தன? இப்போது இந்த ரேகை எங்கிருந்து வந்தது?

'கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்' என்று பெரியவர்கள் சொல்லிவிட்டுப் போயிருப்பது நினைவிற்கு வந்தது.

தீர விசாரித்துவிடுவது என்று முடிவு செய்து கொண்டான்.

அப்படி அவன் தீர்மானித்த நேரத்தில் அவன் அலுவலக மேசையில் இருந்த தொலைபேசி ஒலித்தது.

எடுத்துக் கேட்டான்.

''பார்த்திபன். கொஞ்சம் கமிசனர் ஆபீஸ் வரைக்கும் வந்துட்டுப் போங்க. கமிசனர் உங்கிட்ட ஏதோ தனியாப் பேசணுமாம்'' என்று போனில் ஒரு உயர் போலீஸ் அதிகாரி பேசினார்.

''இதோ சார். புறப்பட்டுக் கிட்டேயிருக்கேன்'' என்று பார்த்திபன் தொப்பியை அணிந்து கையில் கழியை எடுத்துக்கொண்டு வெளியே வந்து ஜீப்பில் ஏறினான்.

போகும் வழியில் கமிசனர் எதற்காகத் தன்னை அழைத்திருக்கக்கூடும் என்று யோசித்தான். அவனுக்கு எதுவும் தோன்றவில்லை. அவனுடைய மூளையில் பாரிவேள் ரீங்காரம் செய்து கொண்டிருந்தார். பாரிவேள்



உண்மையிலேயே இனியாலைக் கொலை செய்து விட்டாரா? இல்லை அவரை அறியாமலேயே அவரைச் சுற்றி ஒரு சதி வலை பின்னப்பட்டிருக்கிறதா?

பாரிவேள் இருபது வருடங்களுக்கு முன் திரைப்பட உலகில் கால் வைக்க முயன்றவர். ஒன்றிரண்டு படங்களில் சும்மா தலை காட்ட முடிந்ததோடு சரி. அவரால் திரை உலகில் முன்னேறவே முடியவில்லை. அப்போது பார்த்திபன் சிறுவன். ஆனாலும் ரசனை மிக்கவன்.

ஒன்றிரண்டு படங்களில் தலைகாட்டிய பாரிவேளைப் பார்த்தபோது அவரை அவனால் ரசிக்க முடிந்தது. வாய்ப்புக் கொடுத்தால் பல நடிகர்களின் பெயர்களில் ஒன்றாக சின்ன எழுத்துக்களில் தெரியும் பாரிவேள் என்ற பெயர் திரை முழுவதையும் அடைத்துக்கொள்ளும் அளவுக்கு அவர் வளருவார் என்று அவனுக்கு அப்போது தோன்றியது. அவன் யூகம் பொய்க்கவில்லை.

ஒரு தெலுங்குபட இயக்குநர், பாரிவேளை வைத்து ஒரு தமிழ்படத்தை இயக்கினார். பாரிவேளுக்குப் அந்தப் படத்தில் ஒரு வித்தியாசமான பாத்திரம். அந்தப் பாத்திரத்தில் பாரிவேள் தன் திறமை முழுவதையும் காட்டியிருந்தார். படம் நூறு நாளை வெகு எளிதில் தாண்டியது. வெள்ளி விழா கொண்டாடியது. பொன் விழா கொண்டாடியது.

அவ்வளவுதான். ஒரே இரவில் பாரிவேள் தமிழ் நாட்டின் தலை சிறந்த நடிகர்களில் ஒருவராகிவிட்டார். அவருக்கென்று ரசிகர் மன்றங்கள் ஒவ்வொரு பட்டி தொட்டியிலும் திறக்கப்பட்டன. வேறு வேறு நடிகர்களின் ரசிகர் மன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள்



MITHRAVINTHA

எல்லாம் பாரிவேலின் ரசிகர் மன்ற உறுப்பினர்களாக மாறிவிட்டனர்.

தமிழ்நாட்டில் எந்தக் குழந்தைக்கும் பாரிவேலைத் தெரிந்திருந்தது. பாரிவேலின் புகழ்பெற்ற ஸ்டைல் இரண்டு கைகளையும் இரண்டு பாண்ட் பாக்கெட்டுகளில் வைத்துக்கொண்டு நடப்பது, நடிப்பது, பாடுவது, ஆடுவது எல்லாமே.

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் கல்லூரி படிக்கும் இளைஞர்கள் எல்லாமே தத்தம் கைகளை அப்படித் தான் பாண்ட் பாக்கெட்டுகளில் விட்டுக்கொண்டு அலைகிறார்கள். படங்களில் பாரிவேன் எப்படி வசனம் பேசுவாரோ அப்படிப் பேசிப் பழகுகிறார்கள். பாரிவேலின் பின்னால் தமிழ்நாட்டின் இளைஞர் படை மொத்தமும் திரண்டுபோய் நிற்கிறது. எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பாரிவேலின் ரசிகர்கள்.

தமிழ்நாட்டின் மக்களுக்கு எப்போதும் திரைப்பட நடிகர்களிடம் ஒரு மரியாதை உண்டு. தாங்கள் விரும்பும் நடிகர்கள் விளம்பரங்களில் தோன்றி பீடி புகைக்கச் சொன்னால் புகைப்பார்கள். இந்த சோப் உபயோகியுங்கள் என்று சொன்னால் உபயோகிப்பார்கள்.

அரசியல் கட்சிகள்கூட தங்கள் கட்சிகளில் சினிமா நடிகர்களைச் சேர்த்துக் கொண்டுதான் மக்களிடம் செல்வாக்கு பெற முடிந்தது. அதனாலேயே எதிர்க்கட்சிகள் எல்லாம் பாரிவேலை தங்கள் கட்சியில் இழுத்துக் கொள்ளப் படாதபாடு பட்டன.

ஒரு தடவை பாரிவேன் ஆளுங்கட்சியை ஒரு பொது மேடையில் தாறுமாறாக விமர்சித்துவிட எதிர்க்கட்சிகள் அத்தனையும் சேர்ந்து பாரிவேன் தங்களுடைய கட்சியில் சேர்ந்துவிட்டதாக அறிக்கைகள் வெளியிட்டன.



பாரிவேன் அந்தக் கூற்றை மறுத்துவிட்டார். தான் எந்த அரசியல் கட்சியிலும் சேரவில்லை என்று கூறிவிட்டார். ஆனாலும் ஆளுங்கட்சியை அவ்வப்போது விமர்சித்துத்தான் வந்தார் ஆளுங்கட்சியில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கு பாரிவேன் என்றால் வயிற்றில் லேசாகப் புளியைக் கரைத்து விட்டமாதிரி இருக்கிறது.

''சார்...''

பார்த்திபன் பாரிவேலைப் பற்றிய நினைவுகளில் இருந்ததால் ஓட்டுநர் அழைத்தது அவன் காதில் விழவே இல்லை. ஓட்டுநர் இரண்டாவது முறையாக ''சார்'' என்று உரத்த குரலில் அழைத்தபோதுதான் பார்த்திபனுக்கு தான் அமர்ந்திருப்பது ஜீப் என்பதும் தான் புறப்பட்டு வந்தது கமிசனர் அலுவலகத்தை நோக்கி என்பதும் நினைவுக்கு வந்தது.

''என்ன?'' என்றான் சுதாரித்துக்கொண்டு.

''கமிசனர் ஆபீஸ் சார்'' என்றார் ஓட்டுநர்.

பார்த்திபன் ஜீப்பிலிருந்து குதித்தான். கமிசனர் ஆபீஸ் படிகளில் ஏறியபோது, அவனுக்கு பழக்கப்பட்ட அதிகாரிகள் வணக்கம் தெரிவித்தார்கள். அவன் வயதை ஒத்த அதிகாரிகள் பாரிவேன் கேஸ் உன் எல்லையிலாமே, சிக்கல்தான், என்று அனுதாபம் தெரிவித்தார்கள்.

கமிசனர் அவனுக்காகக் காத்திருந்தார். உள்ளே சென்று அவன் எதிரில் இருந்த நாற்காலியில் அவர் அமரச் சொல்லி அமர்ந்ததும், கமிசனர் நேரடியாக அவர் கூப்பிட்டு அனுப்பியதற்கான காரணத்திற்கு வந்துவிட்டார்.

''இனியா கொலை கேஸை நீங்கள்தானே பார்த்துக்கிறீங்க பார்த்திபன்?''

''ஆமா சார்.''

MITHRAVINTHA

"சொல்லுங்க, எதுவரைக்கும் வந்திருக்கீங்க?"

பார்த்திபன் கத்தியில் இருந்தது பாரிவேலின் கைரேகை என்று கண்டறிந்ததுவரை சொன்னான்.

"அப்படின்னா, இது ஒரு சிக்கல் இல்லாத கேஸ்."

"சார்?"

"கொலையாளி யாருனு தெளிவாத் தெரியுதே பார்த்திபன். இனியாவோட பாடிக்குப் பக்கத்திலே அந்த ஆள் பாரிவேல் இருந்திருக்காரு. குடிச்சிருக்காரு. கத்தியில் கைரேகை இருக்கு. அவரோட கைரேகை பதிஞ்சிருக்கிற கத்திதான் இனியாவை கொல்ல உபயோகப்படுத்தப்பட்ட கத்தின்னும் தெளிவாத் தெரிஞ்சிடுச்சி. இன்னும் என்ன வேணும் நமக்கு? அந்தாளைப் புடிச்சி உள்ள போட்டு கேசை பைல் பண்ணுங்க. இந்த கேசுல கொஞ்சம் சுறுசுறுப்பா நடந்துக்கிட்டா நல்லதுன்னு தோணுது. அந்த பாரிவேல் குடிவெறியில அவளைக் கொன்னிப்பாரு. பாருங்க முன்ஜாமீன் வாங்கி வைச்சிருந்தாலும் வைச்சிருப்பாரு."

"அவர் அழுத அழுகைல பொய் இல்ல சார். இனியாவோட உடலைப் போய் முத்தமிட்டாரு."

"நடிப்பு தரமான நடிப்பு. நீங்கள் என்ன அவரோட ரசிகரா? எந்தக் கொலைகாரன்தான் நான்தான் கொன்னேன்னு ஒத்துக்குவான்? ஒரு நடிகையோட படுக்கை அறைக்கு அவ்வளவு சுலபமா வேற யாராவது போயிட முடியுமா? அதுவும் பாரிவேல் உள்ள இருக்கறப்ப? இனியாவோட உடலுக்குப் பக்கத்தில் அவர்தான் இருந்திருக்காரு. குடிச்சிருந்திருக்காரு. கத்தில வேற ரேகை. விசாரிச்சிப் பாத்தீங்கன்னா கண்ணால பாத்த சாட்சிகூட ஏதாவது கிடைக்கும்.

ஏற்கனவே எல்லா சாட்சியங்களும் பாரிவேல்தான் கொலைகாரன்னு அலறது. கூடவே சாட்சிகளும் கிடைப்பாங்கன்னு நான் சொல்றேன். இன்னும் என்ன தயக்கம்? நடவடிக்கை எடுங்க. அவனை கைது செய்யுங்க. அரசாங்கத்துலேர்ந்து நெரிக்கிறாங்க. அவர் ஆளுங்கட்சியை அப்பப்ப குறை சொல்லிக்கிட்டிருந்தாரா? மக்கள் மத்தியில இருக்கிற அவரோட செல்வாக்கை கொறைக்கறதுக்கு இதான் ஒரே வாய்ப்புன்னு அரசாங்கம் நினைக்குது. அரசாங்கம் என்னவோ நினைக்குது. நினைக்காம இருக்குது. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையான்னு சொல்லுவாங்க. அது மாதிரித்தானே இந்தக் கேசும்? போங்க. தைரியமா செயல்ல இறங்குங்க. நாங்க உங்கள் பின்னால இருக்கோம்."

பார்த்திபன் குழம்பிப் போன மனநிலையோடு கமிஷனர் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான்.

"தம்பி...தம்பி" என்று இருதயசாமி மூச்சிரைக்க ஓடி வந்தார். பார்த்திபன் ஜீப்பில் இருந்து இறங்குவதற்கு முன், இருதயசாமி அவனை இவ்வளவு தூரம் வந்து எதிர்கொண்டு அழைக்க வேண்டும் என்று என்ன இருக்கிறது?

கமிஷனர் அலுவலகத்திற்குப் போய் வருவதற்குள் இங்கே காவல் நிலையத்தில் இடக்கு மடக்காக ஏதாவது நடந்து விட்டதா? யாராவது கைதி தப்பித்துப் போய் விட்டானா? அடித்துக் கொண்டார்களா?

"என்ன அண்ணே?" என்றான் லேசான பதற்றத்துடன்

"தம்பி...வாய்ப்பு கிடைச்சா சந்திப்போம்னு சொன்னேன் இல்ல. அந்த வாய்ப்பு கிடைச்சிருக்கு."

"என்னண்ணே சொல்றீங்க."

"நான்கூட முகவரி வாங்கி வைச்சிக்க சொன்னேனே தம்பி. அட்ரஸ் வாங்கினாத்தானே வாய்ப்பு கிடைக்



MITHRAVINTHA

கும்னு சொன்னேனே. ஜீப்ல திரும்பி வர்றப்ப என்னை திட்டினியே கேளம்பாக்கத்துல. ஞாபகம் இல்ல? அந்த வாய்ப்புதான் வந்து உன் மேசைக்கு எதிர்ல உக்காந்து உனக்காக காத்துக்கிட்டிருக்குது. கொஞ்சம் பத்தா வாலே வா. அதைச் சொல்லத்தான் நான் ஓடிவந்தேன்.''

கதம்பா!

பார்த்திபனின் உடலில் அவனையறியாமலேயே ஒரு ஜிலுஜிலுப்பு மின்சாரம் பரவியது. அவனைத் தேடிக் கொண்டு கதம்பா வந்திருக்கிறாளா? எதற்காக?

பார்த்திபன் உள்ளே நுழைந்தான்.

கதம்பா ஒரு சோக ஓவியமாக அவன் மேசைக்கெதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

''வாங்க மிஸ் கதம்பா'' என்று அவளை வரவேற்றுக் கொண்டே அவள் எதிரில் போய் உட்கார்ந்தான் பார்த்திபன்.

பார்த்திபனின் முகம் பார்த்ததும் கதம்பா 'ஓ'வென்று கதறி அழத் தொடங்கினாள்.

''கடைசியில் இப்படி ஆய்டிச்சே இன்ஸ்பெக்டர். உங்களை அந்த இனியா துரத்தி அடிச்சிட்டு, சாவை தானே வலியகூப்பிட்டு அணைச்சிக்கிட்டாளே பாத்தீங்களா. நீங்க அப்பவே ஆராய்ஞ்சிருந்தா ஒருவேளை இந்த சாவை தவிர்த்திருக்கலாம் இன்ஸ்பெக்டர். எனக்கு ஒரு நெருங்கின தோழியை இழந்து தவிக்கிற வாய்ப்பே இல்லாமே போயிருக்கும் இன்ஸ்பெக்டர்.''

''மிஸ் கதம்பா. ப்ளீஸ்...தயவு செய்து அழுகையை நிறுத்துங்க. எதுவுமே நம்ம கையில இல்ல. இனி நடக்கறதப் பார்ப்போம். நீங்கதான் இனியாவிற்கு ரொம்ப நெருங்கின தோழி ஆச்சே? நீச்சல்குளத்துல கூட ஒண்ணா



சேர்ந்து குளிப்பீங்களே. நீங்க கூடவே இருந்தும் எப்படி இனியாவுக்கு இந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டது.''

''நான் கூடவே எங்க இருந்தேன்? எங்க கிராமத்துல திருவிழான்னு பார்க்கப் போயிருந்தேன். ரேடியோவில செய்தி கேட்டுட்டு ஓடிவந்தேன். அவளுக்கு எப்படியோ சாவு வரணும்னு இருந்திருக்கு. அதனாலதான் அவளுக்கு வேண்டப்பட்டவங்கள எல்லாம் பக்கத்தில இருக்க விடாம அந்த சாவு துரத்தியடிச்சிருக்கு.''

''அப்படியா நீங்க ஊர்லயே இல்லியா? இனியா பாரிவேளைப் பத்தி உங்ககிட்ட ஏதாவது சொன்னாங்களா?''

''இன்ஸ்பெக்டர் உங்ககேள்விக்குப்பதில் சொல்ற மனநிலையில நான் இப்பஇல்லை. நான் ரொம்ப வருத்தத்தில இருக்கேன். தயவு செஞ்சி என்னைப் புரிஞ்சிக்குங்க. நான் கொஞ்சம் தெளிவானவுடனே நானே உங்களைத் தேடி வந்து நீங்க கேக்கற அத்தனை கேள்விகளுக்கும் பதில் சொல்றேன்.''

''ஓ.கே. ஓ.கே தப்பு என் பேர்லதான். தோழியை இழந்து அந்த துக்கத்தில் இருக்கறவங்க கிட்டப் போய் தான் என் கடமை உணர்வைக் காட்டியிருக்கக் கூடாது! என்ன சாப்பிடறீங்க? கூடாவா இல்ல ஏதாவது குளிர்ச்சியாவா?''

''எனக்கு இப்ப எதுவும் வேண்டாம். இனியாவோட இறுதி ஊர்வலம் புறப்படப் போகுது. நீங்க கொஞ்சம் உங்கள் ஆட்களோட வந்து பாதுகாப்பு கொடுத்தீங்கன்னா எனக்கு எனக்கு திருப்தியா இருக்கும்.''

பார்த்திபன் ஒரு பெருமூச்சுவிட்டான். ''வரேன். இந்தத் தடவை இனியா 'என்னை வராதே போ'ன்னு சொல்ல முடியாது இல்லையா?''

MITHRAVINTHA

கதம்பா தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் மேலும் கதறிக் கதறி அழத்தொடங்கினான்.

இனியாவின் இறுதி ஊர்வலம் தொடங்கியது.

பார்த்திபன் ஊர்வலத்தின் தொடக்கத்திலிருந்து கடைசிவரை போயப் போய் வந்துகொண்டிருந்தான். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். இளைஞர்களைத் தவிர இளம் பெண்களும் ஊர்வலத்தில் இருந்தார்கள். ஊர்வலம் மிக அமைதியாகச் சென்றது. இளைஞர்களில் பெரும் பாலானவர்கள் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தும் பொருட்டு கருப்புச்சட்டை அணிந்திருந்தார்கள். கருப்புச்சட்டை அற்றவர்கள் சட்டையில் கருப்பு பாட்ஜ் அணிந்திருந்தார்கள்.

கதம்பாவும் மாதவியும் மற்றும் இனியாவிற்கு வேண்டியவர்களும், இனியாவின் உடலைத் தாங்கி சென்ற வண்டிக்குப் பின்னால், இன்னொரு திறந்த வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். அந்த வண்டியில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியில் இருந்து இனியா பங்கேற்று நடித்த சோகமான பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஊர்வலம் ஒரு திருப்பத்தில் திரும்பி பிரதான சாலையில் கலந்தது தூரத்தில் இருந்து ஒரு கார் அவசரமாக வந்து ஊர்வலத்திற்குச் சற்றுத் தள்ளி நிற்க, பாரிவேள் அதிலிருந்து இறங்கி வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டு நடக்கத் தொடங்கினார்.

பாரிவேளைப் பார்த்தவுடன் கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. கசகசவென்று பேச்சுக் குரல்கள். திடீரென்று ஒலிபெருக்கியில் இருந்து அந்தக் குரல் ஆவேசமாக எழுந்தது.



"இனியாவைக் கொலை செய்த பாரிவேளைக் கைது செய்..."

"கைது செய்... கைது செய்... பாரிவேளைக் கைது செய்..."

கூட்டம் மொத்தமும் ஆவேசப்பட, எங்கிருந்தோ சரமாரியாகக் கற்கள் வந்து கூட்டத்தின் நடுவில் வந்து விழுந்தன.

## 14

ஒரு நிமிட நேரத்திற்குள் அமைதியாகச் சென்று கொண்டிருந்த அந்த ஊர்வலம் அமளியாக மாறிப் போனது.

பார்த்திபன் திகைத்தான். இறுதி ஊர்வலத்தில் இப்படித் திடீரென பாரிவேள் வந்து கலந்து கொள்வார் என்றோ, மக்கள் உணர்ச்சிவசப்பட்டுக் கல் எறிவார்கள் என்றோ அவன் சற்றுங்கூட எதிர்பார்க்கவில்லை.

கற்கள் நிச்சயம் எறும்புப் புற்றின் மேல் விழுந்த தீப்பந்தமாக அமைதியாகச் சென்று கொண்டிருக்கும் மக்களைக் கலைந்து ஓடச் செய்யும். குழப்பம் அதிகரிக்கும். வன்முறை நோக்கத்தோடு கூட்டத்தில் சில பேர் கலந்திருப்பது அவனுக்குத் தெரிந்தது. கூட்டத்தில் குழப்பத்தை விளைவித்துவிட்டு, அவர்கள் அருகருகே இருக்கும் கடைகளுக்குள் நுழைந்து கையில் அகப்பட்டதையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு ஓடுவார்கள்.

அவன் சட்டென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

MITHRAVINTHA

பக்கத்தில் இருந்த சப்-இன்ஸ்பெக்டரிடம் திரும்பினான்.

"முத்துவேல் நீங்க போலீஸ்காரங்க எல்லாரையும் அப்படியே மனித சங்கிலி மாதிரி கைகோர்த்து நெருக்கமா நிக்கச் சொல்லுங்க. கூட்டத்திலேர்ந்து யாரையும் வெளியேவிட வேணாம்னு சொல்லுங்க. சீக்கிரம்" என்று ஆணையிட்டுவிட்டு, ஒலிபெருக்கி இருந்த திறந்தவெளி ஜீப்பில் தாவி ஏறினான்.

ஜீப்பில் மைக்கைக் கையில் பிடித்துக்கொண்டு, "கையாலாகாத காவல் துறையே, பாரிவேலைக் கைது செய்" என்று கத்திய ஒருவனின் கால்களில் தனது கைக்கழியால் சுளீர் என்று போடுபோட்டான், அவனிடமிருந்து மைக்கைப் பிடுங்கினான்.

காலில் அடிப்பட்டவன் 'அய்யோ' என்று கத்திக்கீழே சாய்ந்தான். பார்த்திபன் மைக்கின் வாயை மூடிக்கொண்டதால், அந்த 'அய்யோ' ஒலிபரப்பப்படவில்லை.

அடிப்பட்டவன் நிமிர்ந்து பார்த்திபனைப் பார்த்தான். அவன் பார்வையில் நெருப்பு இருந்தது. அது பார்த்திபனை சுடமுயன்றது.

"இன்ஸ்பெக்டர். என்னை யாருன்னு தெரியாமலே என்மேல கையை வைச்சிட்டீங்க. இதுக்கான பின்விளைவுகளை நீங்கள் சந்திக்கத்தான் போறீங்க."

"வாயைமூடு. இல்லன்னா அப்படியே கழுத்தைப் பிடிச்சி அமுக்கிக் குரல்வளையை நெறிச்சிடுவேன். கூட்டத்துக்கு நடுவுல வன்முறையைத் தூண்டி விடற உன்னை என்ன செய்தாலும் தகும். அண்ணே...முதல்ல இவன் கையில் விலங்கு மாட்டுங்க. கொண்டுபோய் நம்ம ஜீப்புல ஏத்துங்க" என்று இருதயசாமியிடம் திரும்பி உத்தரவிட்டான்.



இருதயசாமி மற்றொரு கான்ஸ்டபிளுடன் ஜீப்பில் ஏறி, அவனைப் பிடித்து விலங்கு மாட்டினார். மெல்ல ஓடிக்கொண்டிருந்த ஜீப்பிலிருந்து அவர்கள் மூவரும் குதித்து இறங்கினார்கள். காவல்துறை ஜீப் நோக்கி அவன் இழுத்துச் செல்லப்பட்டான்.

"பொதுமக்களே...கையால் ஆகாத 'காவல்துறையின் ஒரு பொறுப்புள்ள அதிகாரி நான். உங்கள் நடுவில் குழப்பத்தை ஏற்படுத்த சில விஷமிகள் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள்தான் கல்லை எறிந்தவர்கள் ஒன்றும் அறியாத அப்பாவி மக்களான உங்களை அவர்கள் காயப்படுத்தி விடுவார்கள்.

உங்கள் அபிமான நடிகைக்கு அஞ்சலி செலுத்த வந்த உங்களை அல்லாட விட்டுவிடுவார்கள். உங்களில் யாரும் இரத்தம் சிந்தக்கூடாது. கலவரம் தூண்டிவிடப் பார்க்கும் கயவர்களுக்கு நீங்கள் துணை போய்விடக்கூடாது. உங்களுடைய எண்ணிக்கை அதிகம். கலவரம் தூண்டிவிட உங்களுக்குள் கறுப்பு ஆடுகளாக நுழைந்திருப்பவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது உங்களுடைய கைகள் தான் மிக அதிகம். அமைதியை விரும்பும் உங்கள் கைகளுக்கு வலுவும் மிக அதிகம்.

உங்களைச் சுற்றிப் பாருங்கள். கைகளில் யார் கற்களையும், கத்திகளையும் வைத்திருக்கிறார்களோ, அவர்களைச் சூழ்ந்து விடுங்கள். அவர்கள் கைகளில் இருக்கும் ஆயுதங்களைப் பறித்து வீசி எறிந்துவிட்டு அவர்களை மனிதச் சங்கிலிகளாக உங்களுக்கு பாதுகாப்பு அளித்துக்கொண்டிருக்கும் காவலர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அவர்களை நான் விசாரிக்க வேண்டிய முறையில் விசாரிக்கிறேன். நீங்கள் பயப்படாதீர்கள். வன்முறையை ஏவிவிடுபவர்களிடம் பயந்துவிடாதீர்கள். பாரிவேல் குற்றவாளி என்று முடிவானால் நாங்கள் நிச்சயம் பாரிவேலைக் கைது செய்வோம். நீதியை நிலை

MITHRAVINTHA

திருத்துவோம். உங்கள் மனவலிமையை உடனே செயலில் காட்டுங்கள்'' என்று முழங்கினான்.

பார்த்திபன் இப்படி ஒரு முடிவை எடுப்பான் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

அவன் உரையைக் கேட்ட மக்கள் உற்சாகமடைந்தார்கள் சட்டென்று தங்களைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டார்கள். கூட்டத்தில் அங்கங்கே கற்களை வைத்திருந்தவர்கள் எல்லாம் கோழிக்குஞ்சுகள் அமுக்கப் படுவதுபோல் அமுக்கப்பட்டார்கள். கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டு சாலையின் ஓரக் குப்பை தொட்டிகளில் வீசி எறியப்பட்டன.மக்களால் சுற்றி வளைக்கப்பட்டவர்கள் எல்லாம் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அத்தனை பேரும் காவல் துறை வேனில் ஏற்றப்பட்டார்கள்.

கூட்டம் இழந்த அமைதியை சில நிமிடங்களுக்குள் மீண்டும் பெற்றது. ஊர்வலம் மறுபடி மவுனமாகத் தொடர ஆரம்பித்தது.

கதம்பா, பார்த்திபன் செயலாற்றிய விதத்தையும், வேகத்தையும் கண்டு பிரமித்தான்.. சர்க்கசில் இருக்கும் ரிங்மாஸ்டர் ஆயுதம் எதுமின்றி சிங்கம், புலி, போன்ற கொடிய மிருகங்களை அடக்குவது போல், கலவரக்காரர்களை ஒருதுளி இரத்தம்கூட சிந்தாமல் ஒடுக்கிய பார்த்திபன், கதம்பாவைப் பொறுத்தவரை ஒரு மாபெரும் மனிதனாகத் தெரிந்தான்.

உலகின் மாபெரும் தலைவர்கள் எல்லாம் மனிதர்களை எப்படித் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை அவளால் அந்த நேரத்தில் அறிந்து கொள்ள முடிந்தது.

இனியாவின் இறுதிக் காரியங்கள் முடிந்தன. பார்த்திபனின் வேலை தொடங்கியது.



பாரிவேலின் கார் டிரைவரைச் சந்தித்தான் அவன்.

''உன் பெயரென்ன?''

''மாணிக்கம்ங்க...''

''எத்தனை வருசமா நீ பாரிவேல்கிட்ட டிரைவரா வேலை செய்றே?''

''அஞ்சி வருசமாங்க.''

''பாரிவேல் எப்படி?''

''ரொம்ப நல்லவருங்க.''

''உன் முதலாளி உனக்கு நல்லவராப் படலைன்னா, நீ எப்படி அவர்கிட்ட வேலை செய்ய முடியும்? உனக்கு அவர் சம்பளம் நிறைய தருகிறாரா, தீபாவளி, பொங்கல போனஸ் தருகிறாரான்னுல்லாம் நான் கேக்கல. அவருக்கும் இனியாவுக்கும் தொடர்பு இருந்ததா?''

''இருந்ததுங்க. இனியாம்மாவும், எங்க பாரிவேலும் அடிக்கடி கேளம்பாக்கத்துல இருக்கற இனியம்மாவோட பங்களாவுல சந்திச்சிப்பாங்க. நான்தான் கார் ஓட்டிப் போய் பாரிவேல் சார் திரும்பி வர வரைக்கும் காத்திருப்பேங்க.''

''பாரிவேலுக்கு மத்த நடிகைகளோட, இல்லேன்னா மத்த பெண்களோட தொடர்பு இருந்ததா?''

''என் நாக்கு அழுகிப் போய்டுங்க.''

''உன் நாக்கு நல்லவே இருக்கட்டும். நான் கேக்கற கேள்விக்கெல்லாம் அது பதில் சொல்லணுமில்ல. சொல்லு பாரிவேலுக்கு மத்த பொண்ணுங்களோட தொடர்பு இருந்ததா?''

''இல்லைங்க. அவருக்கு இனியாம்மான்னா ரொம்பப் பிடிக்கும். இனியாம்மா சினிமாத்துறையில இவ்வளவு

MITHRAVINTHA

தாரம் சூன்னேறியிருக்கறதுக்குக் காரணமே பாரிவேள் சார்தான்.''

''இனியாவுக்கும் அவருக்கும் ஏதாவது தகராறு வருமா?''

''இனியாமேல பாரிவேள் கோபமா இருந்தாருங்க.''

''எதனால?''

மாணிக்கம் தயங்கினான்.

''மாணிக்கம்! எதுவா இருந்தாலும் எங்கிட்ட உண்மையைச் சொல்லணும். எதையாவது மறைச்சா, அப்புறம் நாளைக்கு நீ வம்புல மாட்டிப்பே ஜாக்கிரதை.''

'இனியாம்மாவோட வீட்டுக்குப் போனா, பாரிவேள் குடிச்சிட்டுத்தாங்க திரும்பி வருவாரு. ஒரேயடியா தள்ளாடுவாருங்க. 'எதுக்குங்க இவ்வளவு குடிச்சி உடம்பைக் கெடுத்துக்கிறீங்க'ன்னு நான் கேட்பேன். 'எனக்கு வேற என்னடா, வழி இருக்குன்னு அவர் கேட்பாருங்க. இனியாம்மா அவரைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக்கிட்டிருந்தாங்க. பாரிவேள் சார் வீட்ல எஜமானியம்மாவுக்கும் இந்த விசயம் பிடிக்கல. எஜமானியம்மாவுக்கும் எங்க ஐயாவுக்கும் தகராறு வரும். அந்த சண்டைலேர்ந்து தப்பிச்சிக்கிட்டு இங்க நிம்மதியா இருக்கலாம்னு வந்தா, இங்க இனியாம்மாவோட தொந்தரவு. முதல் பொண்டாட்டி இருக்கறப்பவே இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறதுங்கிறது எப்படிங்க?''

''அதனால கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தற இனியா மேலக்கூட பாரிவேளுக்குக் கோவமா இருந்திருக்குமே.''

''ஆமாங்க.''

''இனியாவைக் கழட்டி விட்டுடணும்னு அவர் உன்கிட்ட எப்பவாவது சொல்லியிருக்காரா?''



''இல்லைங்க. அவருக்கு இனியாம்மான்னா ரொம்பப் பிடிக்கும்.''

''அது சரி மாணிக்கம். அன்னிக்கும் நீங்கதானே கார் ஓட்டினீங்க?''

''என்னிக்கு சார்?''

''இனியா கொலையான அன்னிக்கு?''

''மாணிக்கம் தயங்கி ஆமாங்க'' என்றான்.

வழக்கம் போல பாரிவேள் திரும்பி வர்றவரைக்கும் காத்திட்டிருக்கிறதுதான் உங்க பழக்கம?'' என்று ஒன்றுமறியாதவனைப் போல பார்த்திபன் கேட்டான்.

''ஆமாங்க.''

''பின்ன ஏன் அன்னிக்கு மட்டும் அவ்வளவு அவசரமாகக் காரை எடுத்துக்கிட்டு ஓடிப்போனீங்க?''

மாணிக்கம் நெற்றியில் பெரிதாகக் குங்குமப் பொட்டு வைத்திருந்தார். அந்த குங்குமப் பொட்டுகூட வியர்த்து போய் ஈரமானது.

''சொல்லுங்க மாணிக்கம். நான் கார் நம்பரைப் பார்த்தேன். அது அவசரமாப் போறதைப் பார்த்தேன். பாரிவேளுக்கு வேற டிரைவர் கிடையாது ஏன் அவ்வளவு அவசரமா ஓடினீங்க?''

''இனியா கொலை, இனியா கொலை'ன்னு இனியாம்மாவோட அம்மா சத்தம் போடறது கேட்டது. நான் அவங்க வீட்டு வேலைக்காரன்கிட்ட, 'மேல பாரிவேள் இருக்காரா பாரு'ன்னு சொன்னேன். அவன் போய்ப் பார்த்துட்டு. 'பாரிவேள்சார் அங்க இல்லன்னு சொன்னான், அதனால எனக்கு பயம் வந்திடிச்சி. பாரிவேள் சாரே அங்க இல்லேன்னும்போது எனக்கு மட்டும்

MITHRAVINTHA

அங்க என்ன வேலைன்னு கேள்வி வரும். நாளைக்கு எங்க ஐயாவே என்னைக் கூப்பிட்டு 'நான் அங்க இல்லாதப்ப நீ மட்டும் ஏன் அங்க இருந்தே?'ன்னு கேட்டா என்ன பதில் சொல்றதுன்னு பயந்துபோய்தான் நான் காரை எடுத்துக்கிட்டுப் போனேன்."

"இது உண்மைதானே?"

"சத்தியம் சார்."

"வேற எதையும் நீ மறைக்கலியே?"

"இல்ல சார், நான் புள்ளக்குட்டிக்காரன் சார். நான் வேற எதையும் மறைக்கலை சார்" என்று நடுங்கும் குரலில் சொன்னான் மாணிக்கம். அவன் கைகள் எல்லாம் நடுங்கின.

"சரி, நான் உன்னை அப்புறம் விசாரிக்கிறேன்."

"அம்மா...நடந்தது நடந்து போச்சு. உங்கள் பொண்ணோட இழப்பை உங்களால தாங்கிக்க முடியாதுன்னு எங்களுக்குத் தெரியுது. ஆனால் எங்களுக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுத்தாத்தான், எங்களால கொலையாளியைக் கண்டு பிடிச்சி தண்டனை வாங்கித் தரமுடியும்.

இனிமேல் கொலையாளியைப் பிடிச்சி என்ன, பிடிக்கலைன்னா என்னன்னு உங்களுக்கு விரக்தியா ஒரு எண்ணம் தோணலாம். ஆனால் கொலை செய்ஞ்சவங்களைக் கண்டுபிடிச்சி அவங்களுக்குத் தண்டனை வாங்கித் தர்றது எங்க கடமைம்மா. அப்படிக் கண்டுபிடிக்காம விட்டுட்டோம்னா, நாளைக்கு எத்தனை கொலைகள் நடக்க வாய்ப்பிருக்கு? எப்படியும் கொலை செய்ஞ்சவங்களை கண்டுபிடிக்கப் போறதில்லன்னு, அவனவன் கையில கத்தியைத் தூக்கிட்டா, அப்புறம் யாரால நிம்மதியா வாழ்க்கையை நடத்த முடியும்?"



"நீங்கள் கேளுங்க இன்ஸ்பெக்டர். எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் பதில சொல்றேன்" என்று மாதவி அழுகையினூடே சொன்னாள்.

"இனியாவுக்கும் பாரிவேலுக்கும் நடுவுல உறவு எப்படி?"

"நல்லாத்தான் இருந்தது. இனியா அந்தாளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி தொந்தரவு பண்ண ஆரம்பிச்சா. ஊர்ல இனியாவைக் கண்டபடி பேச ஆரம்பிச்சிட்டாங்க. கல்யாணம் பண்ணிக்காம ஒரு ஆணோட வாழ்க்கை நடத்தற பொண்ணை இந்த சமூகம் எவ்வளவு கேவலமாப் பேசும்னு உங்களுக்கே தெரியும். அந்தப் பேச்சையெல்லாம் தாங்க முடியாமத்தான் 'ஒரு தாலியைக் கட்டுங்க'ன்னு என் தங்கம் அந்தாளு காலைப் புடிச்சிக்கிட்டு கெஞ்சினா.

அவளைச் சமாதானப்படுத்தறதுக்கோ என்னவோ அந்தாளு அவள் விரல்ல ஒரு மோதிரம் போட்டாரு. அந்த விசயம் எப்படியோ பேப்பர்ல வந்திடிச்சி. 'இனியாவை பாரிவேல் இரகசியக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு'ன்னு பத்திரிகைல செய்தி வந்ததைப் பார்த்துட்டு பாரிவேலுக்கு அவள் பேர்ல கோவம் வந்துடிச்சி. அவளை நேரில் பார்த்த அன்னைக்கு 'உன்னைக் கொன்னுடுவேன்'னு கத்துனாரு."

"நீச்சல் குளத்துல இனியாவை யார் கொலை பண்ணப் பார்த்தாங்கன்னு நினைக்கறீங்க?"

"என்ன சொல்றதுன்னே தெரியல இன்ஸ்பெக்டர். பாரிவேலுக்கு இனியா அலுத்துப் போயிருப்பா. இப்பக் கல்யாணம் வேற பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தறா. அவளைத் தீர்த்துக்கட்டிட்டா எந்தத் தொந்தரவும் இல்



MITHRAVINTHA

லேன்னு அவரே ஆளை அனுப்பி ஏற்பாடு பண்ணியிருக்கலாம்.

அன்னிக்கு இனியா உங்களை 'போ' 'போ'ன்னு விரட்டியடிச்சாளே அப்பவே அவளை விசாரிச்சிருந்தா உண்மை தெரிஞ்சிருக்கும். தன்னைக் கொல்ல வந்தவங்களை அவள் பார்த்திருப்பா. அனாவசியமா தனக்கு ரொம்ப நெருக்கமான பாரிவேலைக் காட்டிக் கொடுக்க மனசில்லாம உங்களை அவள் அனுப்பிட்டா. எம் பொண்ணுக்கு அவ்வளவு இளகினமனசு இன்ஸ்பெக்டர்."

"பாரிவேலும், இனியாவும் இருந்த அறைக்கு வேற யாராவது போக வாய்ப்பு இருக்கா?"

"அந்த அறைக்கு வேற யாராலயும் அவ்வளவு சுலபமா போக முடியாது இன்ஸ்பெக்டர். இனியாவுக்கு மறுநாள் காலையில் அஞ்சி மணிக்கு படப்பிடிப்பு. அதனால் நான் அவளை எழுப்பிவிடணும்னு மூணு மணிக்கு அலாரம் வைச்சி எழுந்து போனேன். அறைக் கதவைத் தட்டினேன். அது திறந்து இருந்தது. அந்த அறைக்கு யாருமே போக மாட்டாங்க. இனியா கூப்பிட்டால் ஒழிய. அதனால் கதவுக்கு தாழ்ப்பாள் போடாமக்கூட இருக்கிறது உண்டு. உள்ளே நுழைஞ்சி பார்த்தா..." மாதவி துக்கம் தாளாமல் அழுகையுடன் வெடித்தாள்.

இனியாவைக் கொலை செய்த குற்றத்திற்காக, பாரிவேலை, அன்றைய தினம் பிற்பகல் அவர் ஒரு படப்பில் கலந்து நடித்துக்கொண்டிருந்த போது கைது, செய்தான் பார்த்திபன



# 15

பத்திரிகைகள் எல்லாம் 'பாரிவேல் கைது', 'பாரிவேல் கைது' என்று அலறின. அவருடைய புகைப்படங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் கூட பாரிவேலின் கைது தலைப்புச் செய்திக்கு உண்டான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

தமிழ்நாட்டில் அங்கங்கே கலவரங்கள் எழுந்தன. பாரிவேலின் ரசிகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இளமையானவர்கள். பதினைந்து வயது முதல் முப்பது வயது வரை இருந்த ஆண், பெண் என்ற இருபாலருமே பாரிவேலின் ரசிகர்களாக இருந்தார்கள். அத்தனை பேரும் துடிப்பானவர்களாக இருந்தார்கள். பாரிவேலின் கைது அவர்களின் இரத்தத்தைச் சூடாக்கிவிட—

கலவரம்.

கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் பாரிவேலைக் கைது செய்ததற்காக தமிழ்நாடு ஆட்சியை விமரிசித்தார்கள் ஆட்சி செய்த முதல்வரை திட்டினார்கள். பாரிவேலை உடனே விடுதலை செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்தார்கள், கூச்சல் போட்டார்கள். கோட்டை நோக்கி ஊர்வலம் வந்தார்கள். அவர்கள் ஊர்வலங்கள் எல்லாம் கோட்டைக்கு சற்று தூரத்திலேயே தடுக்கப்பட, ஆவேசப்பட்ட இளைஞர்கள் கல்லெறிந்தார்கள்.

காவல்துறைக்கு வேறு வழியில்லாமல் போனது. கண்ணீர்ப்புகையினைக் கிளப்பித்தான் கூட்டத்தைக் கலைக்க வேண்டிய கட்டாயம். புகைந்து கொண்டே

MITHRAVINTHA

மேலேறிய கண்ணீர்ப் புகைகள் கூட்டத்தின் நடுவே விழுந்து புகையை எழுப்பி, அப்படியும் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் நடியடியைச் சந்தித்தார்கள்.

அரசாங்கம் இப்படிப் பட்டதொரு எதிர்ப்பை நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.

மதுரையில் எதிர்க்கட்சிக்காரர்கள் அணி திரண்டார்கள் சுற்றுக் கிராமத்து இளைஞர்களை எல்லாம் திரட்டி, அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கடையடைப்பு நடத்தினார்கள். வியாபாரிகள் கடைகளை அடைக்க மறுத்தார்கள் கல்லெறிகள் தொடங்கின. காவல் துறையினரின் கண்ணீர்ப்புகைக்குண்டு அவர்களை அசைக்கவில்லை.

கடைகளில் கலவரக்காரர்கள் நுழைந்து பொருட்களைச் சூறையாடத் தொடங்கினார்கள். காவல்துறையினர் வேறு வழியின்றி துப்பாக்கியால் வான்நோக்கி சுட்டார்கள். பின் கலவரக்கூட்டம் நோக்கிச் சுட்டார்கள். இருவருக்கு துப்பாக்கிக்குண்டு காயம். ஒருவருக்கு முழங்காலில். இன்னொருவருக்கு மேல்தொடையில்.

திருச்சியில், சேலத்தில் நடந்த தீக்குளிப்பு முயற்சிகள் கடைசி வினாடியில் தடுக்கப்பட்டன.

அரசாங்கம் கையை பிசைந்து கொண்டு நின்றது.

கதம்பா தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். கடந்த ஒரு வாரத்தில் அவளுக்கு, அவளை அறியாமலேயே பார்த்திபனிடம் ஓர் ஈடுபாடு வந்து விட்டிருந்தது. பார்த்திபனின் குணம் அவளை மிகக் கவர்ந்திருந்தது. பொதுவாக அவள் கேள்விப்பட்டிருந்த காவல்துறையைச் சார்ந்தவர்கள் எல்லாம் முரட்டுத்தனமானவர்கள். முரடர்களோடும், கள்ளக்கடத்தல்காரர்களோடும், கொலைகாரர்களிடமும் பழகிப் பழகி அவர்களின்



நடத்தையையே, தங்களுடைய நடத்தையாக மாற்றிக் கொண்டவர்கள் என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது

காவல்துறையினர் நாகரீகமற்றவர்கள். பேச்சில் கூட மென்மையைத் தொலைத்தவர்கள் என்றெல்லாம் அவள் எண்ணியதுண்டு. பார்த்திபன் அப்படி இல்லை. முரடர்களிடம் மட்டும்தான் அவன் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறான். கடத்தல்காரர்களிடம்தான் கண்ணியத்தைத் தொலைத்தவனாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறான். அவளிடம் பேசும் போதும் பழகும்போதும் மென்மையை விட்டுக் கொடுப்பதே இல்லை.

இனியா கொலை வழக்கு முடியும்வரை அவளைச் சென்னையிலேயே இருக்குமாறு கேட்டுக்கொண்டான் பார்த்திபன். வேலைக்குப் போகும் பெண்கள் விடுதி ஒன்றில் அவளுக்கு அறை பெற்றுத் தந்திருக்கிறான். இனியா வழக்குத் தொடர்பாக யாரையாவது பார்க்கப் போகவேண்டுமென்றால் பார்த்திபன் வந்து அவளைக் கூட்டிக் கொண்டுபோய் கூட்டிவந்து விட்டுவிடுகிறான்.

காவல்துறையின் ஜீப்பிலும், காவல்துறைக்குரிய சீருடையிலும் வந்தால் விடுதியில் இருக்கும் மற்ற பெண்களுக்கு மனவலியைக் கொடுக்கும் என்று அவனே யூகித்து கதம்பாவைப் பார்க்க வரும்போது மோட்டார்பைகில் வருகிறான். அவன் பின்னால் மோட்டார் பைக்கில் போவதுகூட தனி சுகமாகத்தான் இருக்கிறது.

கதம்பா கருநீலத்தில் இருந்த புடவை ஒன்றைத் தேர்ந்தெடுத்து உடுத்திக் கொண்டாள். அதற்கு ஏற்ற மாதிரி ரவிக்கை. கண்களில் மைதீட்டிக் கொண்டாள். நெற்றியில் வேல் போல் திலகம் இட்டுக்கொண்டாள். நேரம் பார்த்தாள். 'கடவுளே' என்று கத்தினாள் எதற்கு இந்த கடிகாரமுள் இவ்வளவு வேகமாக ஓடுகிறது?

பார்த்திபன் இதோ வந்துவிடுவான் பாரிவேனைப் பார்க்கப் போக வேண்டும் என்று சொல்லியிருந்தான்,

MITHRAVINTHA

பார்த்திபனுக்கு நேரம் தவறாமை ஒரு கொள்கை. எங்கே எந்த நேரத்திற்கு வருவதாக ஒப்புக்கொண்டாலும் அங்கே அந்த நேரத்தில் இருப்பான். அவன் வர சொல்லும் இடத்திற்கு, வரச்சொல்லும் நேரத்திற்கு. 'வருகிறேன்' என ஒப்புக்கொண்டு தாமதமாகப் போனால் அவன் முகம் கடுமை கொண்டுவிடும். கோபத்தில் சிவந்துவிடும்.

அதனாலேயே கதம்பா கடிகாரத்தைத் திட்டிக் கொண்டு தன்னை சீக்கிரமாகத் தயார்படுத்திக்கொண்டு, தன் அறையில் இருந்து வெளிப்பட்டாள். வராந்தாவில் நடந்தபோது பின்னழகு அசைந்ததை மற்ற அறைப் பெண்கள் பொறாமையுடன் பார்த்தார்கள்.

வரவேற்பு அறைக்கு வந்தபோது, தபால்காரர் விடுதிக்குள் நுழைவது தெரிந்தது. கதம்பாவை பார்த்த வுடன் அகலமாகப் புன்னகைத்தார். அவள் கையில் ஒரு கொத்துக் கடிதங்களைக் கொடுத்துவிட்டு சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போனார்.

பெங்களூரில் இருக்கும் அவள் வீட்டு முகவரிக்கு வரும் எல்லாக் கடிதங்களையும் அவள் சென்னையில் இருக்கும் விடுதி முகவரிக்குத் திருப்பி அனுப்பும்படி அப்பாவிடம் தொலைபேசியில் சொல்லியிருந்தாள்.

மொத்தம் நான்கு கடிதங்கள். முதல் கடித உறை அப்பாவிடமிருந்து நலம் விசாரிப்பு. இரண்டாவது மூன்றாவது கடிதம் அவள் மேற்படிப்பிற்காக விண்ணப் பித்திருந்த அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இருந்து படிப்பு நாட்கள் படிப்புக்குத் தேவையான பணம் என்று குறிப்பிட்டு அந்தக் கடிதங்கள் அந்த ஊர் சட்டதிட்டங் களைத் தெரிவித்தன. நான்காவது கடிதத்தில் முகவரி இல்லை. பிரிக்கலாம் என்று நினைத்தபோது வாசலில் மோட்டார்பைக்கின் தடதடப்பு கேட்டது. நிமிர்ந்தாள்.



பார்த்திபன் கேட் அருகில் பைக்கை நிறுத்தி, இன்ஜினை அணைக்காமல், மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தான். குளிர்கண்ணாடியுடன் அவளைப் பார்த்தான்.

'வா' என்று தலையசைத்தான். அந்த அன்பு ஆணை யில் அவசரம் இருந்தது.

கதம்பா படிக்காத கடிதத்தை அப்படியே கைப் பையில் திணித்தாள். மற்ற மூன்று கடிதங்களையும் அவள் அறைக்கு உரிய தபால்பெட்டியில் வைத்தாள். மாலை வந்து எடுத்துக் கொள்ளலாம். பார்த்திபனை நோக்கி ஓடினாள்.

பார்த்திபன் சீருடையில் இல்லை. கரும்பச்சையில் பாண்ட்டும், வெளிர் மஞ்சளில் சட்டையும் அணிந்திருந் தான்.

''வா...கதம்பா''என்றான்.

''அவசரமா?'' என்று கேட்டுக்கொண்டே, கதம்பா பைக்கில் அவன் பின்னால் ஏறித் தொற்றிக் கொண்டாள். பைக் நகர்ந்தது.

''ஆமா. பாரிவேலைக் கைது பண்ணது பெரிய தலைவலியாப் போச்சி. நாட்ல அங்கங்க கலவரம் நடக் குது. தீக்குளிப்பு முயற்சி நடக்குது. மதுரையில் துப் பாக்கி சூடு நடந்திரிச்சி ''

''நாம என்ன பண்ணப் போறோம்?''

''பாரிவேல் ஜாமீன்லகூட வெளியே வரமாட்டேன்னு சொல்றாரு. அவர்கிட்ட நானும், நீயும் போய்ப் பேசிப் பார்க்கப் போறோம்.''

''மன்னிச்சிடுங்க. நான் இனியாவைக் கொலை பண்ணலை. அதுஎனக்கு நல்லாத் தெரியும். நான் சொல்

MITHRAVINTHA

றதை நீங்கள் நம்பாம என்னைக் கைது பண்ணியிருக்கீங்க. ஓ.கே. நான் ஜெயிலுக்கு வந்துட்டேன். கோர்ட்ல விசாரிங்க. நான் கொலைகாரன்தான்னு தீர்மானம் ஆச்சின்னா, எனக்கு என்ன தண்டனையோ அதைக் கொடுங்க. நான் ஜாமீன்ல எல்லாம் வெளியில போக மாட்டேன்'' என்றார் பாரிவேள் தீர்மானமாக.

''உங்களை நம்பி எவ்வளவு பேர் தங்களுடைய பணத்தை முதலீடு செஞ்சிருக்காங்கன்னு யோசிச்சுப் பாத்தீங்களா பாரிவேள்?'' என்று கதம்பா மிக மெல்லிய குரலில் கேட்டான்.

பாரிவேள் ஒரு நிமிடம் அவனை வெறித்துப் பார்த்தார்.

''என்னைக் கைது செய்யறதுக்கு முன்னால், போலீசு யோசிச்சிருக்கணும். இந்த அரசாங்கம் யோசிச்சிருக்கணும். என்னை நம்பி நிறைய பேர் பணம் போட்டிருக்கிறது உங்களுக்கெல்லாம் முன்னாலேயே தெரியாதா? என்னுடைய ரசிகர்கள் எல்லாம் கலாட்டா பண்றாங்க. தீக்குளிக்க முயற்சி பண்றாங்க. சுட்டாக் கூட மார்பில குண்டைத் தாங்கிக்கிட்டு என் விடுதலைக்காகப் போராடறாங்கன்னு என்கிட்ட வந்து ஜாமீன்ல வெளியே போகச் சொல்றீங்க. என் வார்த்தையை நம்பி, நான் கொலை செய்யலேன்னு தீர்மானிச்சி என்னை வெளியே அனுப்புங்க. நான் போறேன்.''

''அதெப்படி பாரிவேள் கோர்ட்டுல விசாரிக்காம, உங்கள்மேல் எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லேன்னு நான் சொல்லமுடியும். என் கடமை உங்களைக் கைது பண்றது. பண்ணிட்டேன். இனிமே நீங்கள் நிரபராதின்னு தீர்மானிச்சி உங்களை விடுதலை பண்றதோ, குற்றவாளின்னு முடிவுபண்ணி, தண்டனை அளிக்கறதோ அரசாங்கத்துக்கிட்டத்தானே இருக்கு'' என்றான் பார்த்திபன் தன்னிலை விளக்கமாக.



''அப்ப, என்னை ஜாமீன்ல போகச் சொல்ல மட்டும் நீங்கள் வந்தா என்ன அர்த்தம்? இன்ஸ்பெக்டர், எனக்கு உங்கள்மேல் எந்த வருத்தமும் இல்ல. தயவு செய்து நீங்கள் போகலாம். உங்களுக்கு எவ்வளவோ வேலைங்க இருக்கும். உங்கள் நேரத்தை இங்க வீணாக்காதீங்க.''

பார்த்திபனும், கதம்பாவும் பாரிவேளுக்கு எந்த மறுமொழியும் சொல்லத் தோன்றாமல் வெளியே வந்தார்கள்.

அன்றைக்குப் பிற்பகல், வேலாண்டித்துரை பாரிவேளை சிறையில் சந்தித்தார். வேலாண்டித்துரை நகரில் மிகப்பெரிய வழக்கறிஞர். பாரிவேளின் தீவிர ரசிகர். பாரிவேள் தம் சம்பந்தப்பட்ட நீதிமன்ற விவகாரங்களையெல்லாம் வேலாண்டித்துரையிடம் தான் கவனித்துக் கொள்ள விடுவது வழக்கம்.

இனியா கொலை வழக்கில், பாரிவேள் கைதான பின்பும், தன்னை அழைத்து வர ஆள் அனுப்பவில்லையே என்ற ஆதங்கம் வேலாண்டித்துரைக்கு அதிகமாகவே இருந்தது. பாரிவேள் ஆள் அனுப்பித் தன்னை அழைக்கும் வரை காத்திராமல் அவரே நேரில் வந்து பாரிவேளை சந்தித்தார்.

''என்னங்க, நீங்க எனக்கு ஒரு வார்த்தை சொல்லியனுப்பாம?'' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டார் வேலாண்டித்துரை.

''வாங்க வக்கில் சார்'' என்று தனது திரைப்படங்களில் ஸ்டைலாக வசனத்தை உச்சரிப்பது போலவே பாரிவேள் அழைத்துச் சிரிப்பைச் சிந்தினாலும், அவருடைய முகத்தில் இருந்த கவலை மேகங்களை வேலாண்டித்துரை கவனிக்கத் தவறவில்லை.

''என்ன ஆச்சி?'' என்று கேட்டார் வேலாண்டித்துரை.

MITHRAVINTHA

"நான் அந்தப் பெண்ணைக் கொலை பண்ணலை! நான் இனியாவை ரொம்ப நேசிச்சேன். எனக்கும் இனியாவுக்கும் நடுவுல ஒரு சின்ன வாய்த்தகராறு இருந்தது. 'கல்யாணம் பண்ணிக்கோ'ன்னு வற்புறுத்தினா. நான் என் மனைவியை சமாதானப்படுத்திட்டு அதுக்கப்புறம் அவளைக் கல்யாணம் பண்ணிக்கறதாக இருந்தேன்.

ஒரே ஒரு மோதிரம் மட்டும் போட்டு விட்டேன். பத்திரிகைக்காரங்க பத்தவைச்சிட்டாங்க. எப்படி செய்தி போச்சின்னு தெரியல. நான் இனியாதான் செய்தியைக் கொடுத்துட்டான்னு சத்தம் போட்டேன். அவ்வளவுதான் அதுக்கப்புறம் அவளைப் போய்க் கோவிச்சிக்கிட்டோமேன்னு தோணிப் போச்சி.

அப்புறம் நானே போன்ல கூப்பிட்டு வீட்டுக்கு வரேம்மான்னு சொல்லிட்டுப் போனேன். நிறைய நேரம் பேசிக்கிட்டிருந்தா. தண்ணி ஊத்திக் கொடுத்தா. எல்லையை தாண்டிரிச்சி. பினாட் ஆயிட்டேன். அப்புறம் எழுந்து பார்த்தா இனியா செத்துக் கிடந்தா. அறையெல்லாம் இரத்தம். அவள் உடம்பை எவனோ கத்தியால கூறு போட்டிருக்கான்."

"கத்திதான் அவளை சாகடிச்சிருக்குன்னு பிரேத பரிசோதனை சொல்லியிருக்கா?"

"ஆமா. அந்தக் கத்தியில் என் கைரேகை மட்டுந்தான் இருக்காம். அதனால் நான் சாகடிச்சிட்டேன்னு சொல்றாங்க."

"ம்ம்" என்று சற்று நேரம் யோசித்தார் வேலாண்டித்துரை. "நீங்கள் கொல்லலை இல்லையா?"

"சத்தியமா இல்லை."

"அப்ப அந்த சத்தியம்தான் உங்களைக் காப்பாத்தப் போகுது" என்றார் வேலாண்டித்துரை. எழுந்தார்.



பாரிவேலிடம் விடை பெற்றுக்கொண்டு வேலாண்டித்துரை நேராக இன்ஸ்பெக்டர் பார்த்திபனின் அலுவலகத்திற்கு வந்தார்.

"பார்த்திபன், நான்தான் பாரிவேலுக்காக வழக்காடப் போறேன். இனியாவோட பிரேத பரிசோதனை அறிக்கையைக் கொஞ்சம் தரமுடியுமா?" என்று கேட்டார்.

பிரேத பரிசோதனை அறிக்கையைப் பார்த்தார். படித்தார். உன்னிப்பாகப் படித்தார்

அப்புறம், தடயவியல் அதிகாரிகளின் அறிக்கையையும் பார்த்தார்.

கைரேகை பற்றி தடயவியல் அதிகாரிகள் கொடுத்திருந்த அறிக்கையைப் படித்தார்.

அவர் புருவங்கள் உயர்ந்தன.

மனம் சின்னதாக ஒரு முறை மகிழ்ச்சியில் துள்ளியது.

மறுபடி வேலாண்டித்துரை பாரிவேலனைச் சந்தித்தார்

"சொல்லுங்க பாரிவேல், இனியாவை நீங்கள் கொன்னிருக்க முடியாது என்று பிரேத பரிசோதனை அறிக்கையும், கைரேகை ரிப்போர்ட்டையும் படிச்ச உடனே தெரிஞ்சிபோச்சி. உங்களை வெளியே கொண்டுவரதுதான் இனிமே என் வேலை. எனக்கு உங்களைப் பற்றித் தெரியணும். நிறைய தெரியணும். இனியாவை நீங்கள் கொல்லலைங்கறது சரிதான். சூழ்நிலையை வைச்சித்தான் உங்களைக் கைது பண்ணியிருக்காங்க, நீங்கள் கொன்னதா யாரும் கண்ணால பார்க்கல. சாட்சிகள் இருந்தாலே கேசை உடைக்கிற திறமை எங்கிட்ட இருக்கு. உங்களைப் பற்றிய ஏதோ ஒரு உண்மையை

MITHRAVINTHA

மறைக்கறீங்க. டாக்டர் கிட்டயும் வக்கீல் கிட்டயும் எதையும் மறைக்கக்கூடாதுன்னு சொல்லுவாங்க. பிளீஸ், எனக்கு உங்களைப் பற்றின எல்லா விவரத்தையும் சொல்லுங்களேன்.''

பாரிவேள் பெருமூச்சு விட்டார். அவரைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

அவர் சொன்னதைக் கேட்கக் கேட்க வேலாண்டித் துரையின் விழிகள் வெகு அகலமாக விரிந்தன.

''சார்...இந்த ஒரு உண்மை போதுமே சார். நீங்கள் போலீஸ்காரங்களுக்கு, அரசாங்கத்துக்குன்னு அத்தனை பேருக்கும் டாட்டா காமிச்சிட்டு வெளியே வரலாமே. இந்த உண்மையை சொல்றதுக்கு என்ன?''

பாரிவேள் பதறினார்.

''வேண்டாம் வேலாண்டித்துரை. இந்த உண்மையைச் சொல்லிட்டு நான் வெளியில விடுதலையாகிவர்றதைவிட கொலைக் குற்றத்தை ஒத்துக்கிட்டு தூக்குல தொங்கறதே மேல் நான் சொல்லமாட்டேன். இதை நான் வெளியே சொல்லவே மாட்டேன்'' என்று பதட்டத்துடன் பாரிவேள் கூறினார்.

# 16

பாரிவேள் உண்மையைச் சொல்லமாட்டேன் என்று அடம்பிடிப்பதற்காக வேலாண்டித்துரை அவரை விட்டு விடவில்லை.

''ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள் பாரிவேள்?''



''என் ரசிகர்களிடம் எனக்கு இருக்கும் மரியாதை, மதிப்பு எல்லாமே போய்விடும்.''

''அப்படி ஒன்றும் நடக்காது ''

''அது எப்படி? நான் நீதிமன்றத்தில் சொல்றதெல்லாம் வெளியில் தெரியாமப் போய்விடுமா? பத்திரிகைக்காரங்களுக்குத் தெரியாமப் போய்விடுமா? என் ரசிகர்கள் அத்தனை பேரும் 'தான் இந்த மாதிரியான்'னு கேவலமா நினைப்பாங்களே.''

''பாரிவேள். சின்னக்குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்காதீங்க. உங்க உயிர் முக்கியமா? உங்கள் இமேஜ் முக்கியமான்னு யோசிச்சுப் பாருங்க. மேலும் உங்களை நான் இரகசியமா விசாரிக்கணும்னு விண்ணப்பிக்கப் போறேன்,

இராணுவ நீதிமன்ற விசாரணை இரகசியமாத்தான் நடக்கும். அதுபோல, உங்கள் வழக்கையும் இரகசியமா விசாரிக்கச் சொல்லி வற்புறுத்தப் போறேன். சமுதாயத்தில் உங்களுக்கு இருக்கற தகுதி, மரியாதை எல்லாம் பார்த்து உங்களை இரகசியமா விசாரிக்க ஒத்துப்பாங்க. அந்த விசாரணை நடக்கறப்ப பார்வையாளர்களுக்கும், பத்திரிகைக்காரங்களுக்கும் அனுமதி கிடையாது.''

''என்னவோ செய்யுங்கள் ''

அந்தமட்டில் ஒத்துக்கொண்டாரே என்று வேலாண்டித்துரை மகிழ்ச்சியாகச் சென்றார். பாரிவேளின் வழக்கு விசாரணையை இரகசியமாக நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை எடுத்தார். நாட்டில் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் கலவரங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் மனதில் கொண்டு இரகசிய விசாரணைக்கு ஒத்துக் கொள்ளப்பட்டது.

இரகசிய விசாரணை என்று தேர்ந்தெடுக்கப்பட்டக் கட்டிடம் அருங்காட்சியகம் போல் வெகு பழமையாக

MITHRAVINTHA

இருந்தது. கருங்கல்லும், சிமெண்ட்பூச்சும், சுண்ணாம்புப் பூச்சும் சுட்ட செங்கல்லும் வைத்துக் கட்டப்பட்ட கட்டிடம். அதன் ஓர் அறை. கூரை வெகு உயரத்தில் இருந்தது. மேலே அறையில் ஒளி புகுவதற்காக விடப்பட்ட வட்டச் சாளரங்கள் சுவர்களின் நெடுக குடும்பப் பெண்கள் வைத்துக்கொள்ளும் வட்டவட்டப் பொட்டுகளாகத் தெரிந்தன

அந்த வட்டங்களின் [illegible] குருவிகள் கூடுகட்டி [illegible]

[illegible]

[illegible] வைக்கப்பட்ட [illegible] தெரிந்தது.

தமிழ்நாடு அரசிற்கும், பிரபல திரைப்பட நடிகர், திரு. லோகநாதன் என்பவரின் மகனான பாரிவேலுக்கும் இடையில் வழக்கின் ஆரம்ப விசாரணை நடந்து கொண்டிருந்தது.

அரசு தரப்பு வக்கீல் சுந்தரசன் இன்ஸ்பெக்டர் பார்த்திபனை அழைத்தார்.



பார்த்திபன் கூண்டில் நின்றான். மிடுக்காக இருந்தான். பார்வையாளர்கள் வரிசையில் கதம்பா அமர்ந்திருந்தாள். பார்த்திபனையும் அவன் கம்பீரத்தையும் பார்த்து அவள் மனம் ஒருமுறை துள்ளியது. 'லாலல்லா' பாடியது.

பார்த்திபன் அவளைக் கவனிக்காது. கடமையில் கருத்தாக இருந்தது [illegible]

[illegible]

அறையில் இனியா கிடந்த நிலை, [illegible]

அரசு தரப்பு வக்கீல் சுந்தரசன் கேட்டார்:

"இன்ஸ்பெக்டர் பார்த்திபன், நீங்கள் ஏன் பாரிவேலைக் கைது செய்தீர்கள்?"

பார்த்திபன் சொன்னான்:

"நான் இனியா கொலையான அறைக்குச் சென்று பார்த்தேன். இனியாவின் படுக்கை அறையில் அந்த சம்பவம் நிகழ்ந்திருந்தது. அந்த அறை இனியா, பாரிவேல், இனியாவின் அம்மா போன்ற மிக முக்கியமானவர்

MITHRAVINTHA

களுக்கே அனுமதிக்கப்படும் அறை. வேறு யாரும் செல்ல அனுமதி கிடையாது. ஏனென்றால் அந்த அறை நோக்கிச் செல்லும் பாதையில் இருக்கும் இன்னொரு கதவு எப்போதும் பூட்டியே கிடக்கும். அதன் சாவி இனியாவின் அம்மாவிடம் இருக்கும். இனியாவிடம் இருக்கும் கதவிலேயே பொருந்தும் பூட்டு. உட்புறம் இருந்து திறப்பவர்களுக்கு சாவி தேவையில்லை. அப்படிப்பட்ட பாதுகாப்பான சூழலில் இருந்த அறையில் இனியாவும், பாரிவேலும் இருந்திருக்கிறார்கள்.

பாரிவேலுக்கும் இனியாவிற்கும் இடையில் தகராறு இருந்திருக்கிறது. பாரிவேல் இனியாவை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியிருக்கிறார். அந்த மிரட்டலை இனியாவின் ஒப்பனைப் பெண் வளர்மதியும், இனியாவின் அம்மா மாதவியும் கேட்டிருக்கிறார்கள். இனியாவைக் கொல்ல உபயோகப்படுத்தப்பட்ட கத்தி அதே அறையில் இருந்தது. அதில் பதிந்திருக்கும் ஒரே கைரேகை பாரிவேல் உடையது.

மேலும் நான் சென்று பார்த்தபோது பாரிவேல் மிக அதிகமாகக்குடித்து மயங்கிப் போயிருந்தார். அதிகமாகக் குடித்ததால் ஏற்பட்ட வெறியில் அல்லது 'இனியா சும்மாச் சும்மா கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்கிறானே' என்ற ஆத்திரத்தில் பாரிவேல் இனியாவைக் குத்திக் கொன்றிருக்கலாம் என்பதை சூழ்நிலையும், மற்றவர்களின் சாட்சியங்களும் சுட்டிக்காட்டியதால் நான் பாரிவேலைக் கைது செய்தேன்.''

நீதிபதி பாரிவேலின் சார்பாக வாதாட வந்திருக்கும் வேலாண்டித்துரையைப் பார்த்தார்.

''நீங்கள் இன்ஸ்பெக்டர் பார்த்திபனைக் கேள்விகள் கேட்கலாம் வேலாண்டித்துரை'' என்றார்.

வேலாண்டித்துரை எழுந்தார்.



பார்த்திபன் வேலாண்டித்துரையைப் பார்த்த பார்வையில் எந்தச் செய்தியும் இல்லை.

''இன்ஸ்பெக்டர் நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள்.''

''இல்லை'' என்றான் பார்த்திபன் மெதுவாக.

''நான் ஒரு சின்னக் கதை சொல்கிறேன். தமிழ் நாட்டுப் பழங்கதை. குழந்தையில்லாத ஒரு பெண் கீரி ஒன்றை பிரியமாக வளர்த்து வந்தாள். கீரி அவளிடம் வெகு நன்றி உணர்வோடு நடந்து கொண்டது. அப்படி இருக்கும்போது அந்தப் பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்தது. குழந்தையைக் கீரி கண்ணுங் கருத்துமாகக் கவனித்துக் கொள்ளும். அப்படிப் பார்த்துக் கொள்ளும் கீரியின் காவலில் விட்டுவிட்டு, அந்தப் பெண் ஒருமுறை பக்கத்தில் இருக்கும் குளத்திற்கு தண்ணீர் எடுத்து வரப் போனாள்.

அந்தச் சமயம் பார்த்துக் குழந்தையைத் தீண்ட ஒரு பாம்பு வந்தது. அதைக் கவனித்த கீரி, பாம்புடன் சண்டையிட்டு அதைக் கொன்றது. கீரியின் வாயெல்லாம் பாம்பு இரத்தம். குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மகிழ்ச்சியில் கீரி, தன் எஜமானியைக் கண்டு செய்தி சொல்லும் அவசரத்தில் போக, கீரியின் வாய் இரத்தம் குழந்தையின் இரத்தம்தான் என்று முடிவு செய்த பெண், தன் இடுப்பில் இருக்கும் தண்ணீர்க் குடத்தைக் கீரியின் தலையில் போட்டு அதை நசுக்கிக் கொன்றாள்.

ஏனென்றால் சூழ்நிலை கீரியைக் குற்றவாளியாகக் காட்டியது. உண்மை அந்த நேரத்தில் மறைந்துவிட்டது. வீட்டுக்குள் வந்தபின்புதான் அப்பெண்ணுக்கு உண்மை தெரிந்தது. தன் செயலுக்கு வருந்தினாள். நீங்கள் கூட குழந்தை பெற்ற பெண் போல ஓர் அவசர முடிவை எடுத்துவிட்டீர்கள் என்கிறேன்.''



MITHRAVINTHA

''நீங்கள் கதை சொல்லும்முறை அழகாக இருக்கிறது. பத்திரிகைகளுக்கு எழுதிப் பெரிய எழுத்தாளர் என்ற பெயர் பெறலாம். இனியாவைக் கொன்ற பெண் வீட்டுக்குள் நுழைந்தவுடன் உயிரோடு இருக்கும் குழந்தையையும், செத்துபோன பாம்பையும் பார்த்தாள். உண்மை தெளிவாகத் தெரிந்தது. அதனால் தன் குற்றத்திற்காக அவள் வருந்தினாள். ஆனால், நடைமுறையில் உண்மை வேறுவிதமாக அல்லவா இருக்கிறது?''

''இல்லை. உண்மை உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை. இனியா ஒரு நடிகை. பொது வாழ்க்கை நடத்தியவர். அதனால் அவருக்கு நிறைய விரோதிகள் இருக்கலாம். அவரால் ஏமாற்றமடைந்த ஒரு தயாரிப்பாளரோ, ரசிகரோ, 'அல்லது வேறு யாரோ கூட இனியாவைக் கொன்றிருக்கலாம். நீங்கள் இனியாவின் மற்ற தொடர்புகளை எல்லாம் விசாரிக்காமல் பாரிவேனை மட்டும் அவசரப்பட்டுக் கைதுசெய்துவிட்டீர்கள்.

''நான் அவசரப்படவில்லை. இனியாவைக் கொல்ல மற்றவர்களுக்கும் வலுவான அல்லது வலுவற்ற காரணங்கள் இருக்கலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த மற்றவர் அனைவருக்கும் இனியாவின் படுக்கை அறை வரை வரமுடியாது. பாரிவேனால் முடியும். அவர் ஒருவர்தான் வந்திருக்கிறார்.

''பாரிவேன் திட்டமிட்டு இந்தக் கொலையைச் செய்யவில்லை. ஒரு வெறியால், ஆத்திரத்தால சட்டென்று கத்தியால் குத்தி சாகடித்தார் என்று சொல்லுங்கள். அதை வேண்டுமென்றால் ஒத்துக் கொள்ள முடியுமே தவிர, நீங்கள் சொல்லுகிற ஒரு பழங்கதையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, பாரிவேன் கொலையே செய்யவில்லை என்று ஒப்புக்கொள்ள முடியாது.''

கூத்தரசன் எழுந்தார். ''இன்ஸ்பெக்டரிடம் கேள்விகள் முடிந்துவிட்டதா?'' என்று கேட்டார்.



''இப்போது இவ்வளவுதான். அவசியப்பட்டால் நான் மறுபடி அழைத்து விசாரிக்க எனக்கு அனுமதி வழங்க வேண்டும்.''

''அனுமதி வழங்கப்பட்டது'' என்றார் நீதிபதி.

''அடுத்தபடியாக இனியாவின் அம்மா மாதவியை நான் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.''

மாதவி கூண்டில் ஏறினாள். இனியாவைவிட்டுப் பிரிந்த சோகம் இன்னும் அவள் முகத்தில் ஆலைக்கரிப் புகை போல் படிந்திருந்தது.

''மாதவி... நீங்கள் உண்மையைச் சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்'' என்று முன்னுரையோடு தொடங்கினார் வேலாண்டித்துரை.

''நான் உண்மையைத்தான் சொல்வேன்.''

''சரி. பாரிவேன் இனியாவைக் கொன்றுவிடுவேன் என்று சொன்னாரா?''

ஆம், சொன்னார்.''

''ஏன் அப்படிச் சொன்னார்?''

''இனியா பாரிவேலிடம் நெருக்கமாக இருந்தாள். மூச்சுக்கு முந்நூறு முறை 'பாரிவேன்' 'பாரிவேன்' என்று புலம்புவாள். பாரிவேன் இல்லாமல் தன்னால் உயிர் வாழமுடியாது என்று கூறுவாள். அவ்வளவு தூரம் அவள் நேசித்த பாரிவேள், அவளை உதாசீனபடுத்திவிட்டுப் போகப்போவதாக இனியாவிடம் மற்றவர்கள் சொன்னார்கள்.''

''மற்றவர்கள் என்றால்?''

''சினிமாத் துறையில் இருப்பவர்கள்தான். சக நடிகைகள். தயாரிப்பாளர்கள். பாரிவேனிடம் தொடர்பு வைத்திருந்தவர்கள்.''

MITHRAVINTHA

''என்னவென்று சொன்னார்கள்?''

''பாரிவேள், காரியம் ஆகவேண்டுமென்றால் காலைக் கூடப் பிடிப்பார். காரியம் நடந்துவிட்டால் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார் என்றார்கள். எங்கே பாரிவேள் தன்னைவிட்டு விலகிவிடப் போகிறாரோ என்று பயந்து இனியா அவரைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொன்னாள்.

பாரிவேள் அவள் விரலில் மோதிரம் போட்டுக் கல்யாணம் செய்து கொள்வதாக உறுதி கூறினார். அவர் போட்ட செய்தி பத்திரிகையில் வந்தவுடன் இனியாவைத் திட்டினார். ஒழித்துவிடுவேன் என்று மிரட்டினார். கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தினார்.

கல்யாணத்திற்குச் சம்மதித்து மோதிரம் போட்ட அவர், அதே செய்தியாக வந்தவுடன் ஏன் கோபப்பட வேண்டும்? இனியாவை உதறிவிடுவது தானே அவர் நோக்கமாக இருந்திருக்கிறது?''

''நீங்கள் உங்கள் வேலைக்காரர்களைக் கோபித்துக் கொள்வீர்களா?''

''சொன்ன வேலையை ஒழுங்காகச் செய்யாவிட்டால் யாருக்குத்தான் கோபம் வராது?''

''கோபிக்கும்போது எப்படித் திட்டுவீர்கள்?''

'எல்லோரும் திட்டுகிற மாதிரிதான்.''

''கையை உடைப்பேன். காலை உடைப்பேன். கொன்றுவிடுவேன் என்றெல்லாம்?''

''ஆமாம்.''

''அப்படியானால் எத்தனை பேரைக் கொன்று இருக்கிறீர்கள்?''



''என்ன வக்கீல் சார் நீங்கள். நீங்கள் கூடத்தான் உங்கள் வீட்டுக் குழந்தை பிடிவாதம் பிடித்தால், 'பேசக் கூடாது. அழக்கூடாது. அழுதால் கொன்று போடுவேன்' என்று மிரட்டி இருப்பீர்கள். அப்படி என்றால் உங்கள் குழந்தையை கொன்றுவிடுவீகள் என்று அர்த்தமா?'' என்று மாதவி எதிர்க் கேள்வி கேட்டாள்.

''அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். மாதவி பாரிவேள்தான் இனியாவிற்கு வாய்ப்புகள் பெற்றுத் தந்தவர். வாழ்க்கையில் முன்னேற வழிவகுத்தவர். இனியாமேல் பிரியமாக இருந்தவர். அவ்வளவு தூரம் பிரியமாக இருந்தவர் ஒரு பேச்சுக்கு 'ஒழித்துக்கட்டி விடுவேன், கொன்றுவிடுவேன்' என்று சொன்னால் அதை அப்படியே உண்மையாக எடுத்துக்கொள்ள முடியுமா?''

மாதவிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிய வில்லை.

''போகட்டும். பாரிவேள் இந்த மாதிரி கொனறு விடுவேன் என்று எங்கே சொன்னார்?,.

''கேளம்பாக்கம் வீட்டில்.''

''அங்கே அவர் எதற்கு வந்தார்?''

மாதவி முன் அந்தக் கேள்வி திடீரென்று வந்து விழுந் தது. என்ன பதில் சொல்வதென்று மாதவி ஒரு கணம் தடுமாறினாள்.

''இனியா மயங்கி இருக்கிறாள் என்று கேள்விப்பட்டு அவளைப் பார்க்க வந்தார்.''

''படப்பிடிப்பை பாதியிலேயே விட்டுவிட்டா?''

''ஆமாம்.''

''இனியா ஏன் மயங்கி இருந்தார்?''

MITHRAVINTHA

"இனியாவை யாரோ நீச்சல் குளத்தில் தண்ணீருக்கு அடியில் அழுத்திக் கொல்லப் பார்த்தார்கள். அதனால் இனியா மயங்கி இருந்தாள். அந்த செய்தி கேட்டுத்தான் பாரிவேள் வந்தார்."

"இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்" என்றார் வேலாண்டித்துரை. "இனியாவை ஏற்கனவே யாரோ நீச்சல் குளத்தில் அழுத்திச் சாகடிக்க முயன்றிருக்கிறார்கள். அந்த கொலை முயற்சி பாரிவேளால் செய்யப்படவில்லை. வேறு யாரோ! அப்படி வேறு யாரோ இனியாவைக் கொல்ல முயற்சி செய்ததை எல்லாம் மறந்துவிட்டு, 'பாரிவேள்தான் இனியாவைக் கொன்றார்' என்று நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று புன்னகையுடன் கேட்டார் வேலாண்டித்துரை,

மாதவி திகைத்துப்போய் நின்றாள்.

## 17

திகைத்துப் போய் நின்றிருந்த மாதவி தன்னை சமாளித்துக்கொண்டாள்.

"பாரிவேள்தான் இனியாவைக் கொன்றுவிட்டதாக நான் சொல்லவில்லையே. பாரிவேள 'இனியாவைக் கொன்றுவிடுவேன்?' என்று சொன்னாரா என்று கேட்டீர்கள். நான் அதை ஆமோதித்தேன்" என்றாள்.

வேலாண்டித்துரை மாதவியின் பதிலால் ஒரு கணம் அயர்ந்து போனார். பின் மாதவியைப் பார்த்து "நீங்கள் போகலாம்' என்றார். பின் நீதிபதியின் பக்கம் திரும்பி, "நீதிபதி அவர்களே, நான் இனியாவின் ஒப்பனைப் பெண் வளர்மதியிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்" என்றார்.



அரசு தரப்பு வக்கீல் சுந்தரசன் எழுந்தார்.

'பாரிவேளை மையமாக வைத்து இந்த வழக்கு நடைபெறுகிறது. அவர் குற்றவாளியா, இல்லையா என்பதை சூழ்நிலையை வைத்துப் பார்த்தாலே தெளிவாகத் தெரிகிறது." மேலும் இனியாவின தாய், பாரிவேள் இனியாவை மிரட்டியதைக் கேட்டதாக சாட்சி கூறி இருக்கிறார்.

அந்த சாட்சியை மதிப்பிற்குரிய எதிர்தரப்பு வக்கீல் நண்பர் வேலாண்டித்துரை அவர்களால் சாய்க்க முடியவில்லை. வேலைக்காரர்களிடம் பேசுவதையும் வைத்துக் கொண்டு பாரிவேள் மிரட்டியது சும்மா ஒரு பேச்சுக்குத்தான் என நிரூபிக்கப் பார்க்கிறார். அது வீண் வேலை. ஆட்டைப் பார்த்து ஒநாய் 'கொன்று விடுவேன்' என்று சொன்னால் அது சும்மா பேச்சுக்காகவா? இப்போது இனியாவின் ஒப்பனைப் பெண்ணான வளர்மதியிடம் கேள்விகள் கேட்டு எதை நிரூபிக்கப் பார்கிறாரோ தெரியவில்லை, ஒப்பனைப் பெண்ணான வளர்மதிக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?" என்று ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்

"சம்பந்தம் இருக்கிறது" என்றார் வேலாண்டித்துரை.

"விசாரியுங்கள் என்றார் நீதிபதி.

வளர்மதி கூண்டில் ஏறினாள். வளர்மதி சின்னப் பெண். ஏற்கனவே அவள் பயந்துபோயிருந்தாள் வாழ்க்கையில் இதுவரை காவல்துறையினரையும், நீதிமன்றத்தினரையும் இவ்வளவு நெருக்கமாகச் சந்தித்திராத காரணத்தால் அவளது முகம் வெளுத்திருந்தது. கை. கால்கள் தன்னிச்சையாக நடுங்கிக் கொண்டிருந்தன.

MITHRAVINTHA

கண்களில் இருந்து எந்த நேரத்திலும் கண்ணீர் இரண்டு கன்னத்தில் இறங்கும் போல் இருந்தது.

''வளர்மதி பயப்பட வேண்டாம். நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதிலை மட்டும் சொல்.''

''சரிங்க'' என்றாள் வளர்மதி குரல் நடுக்கத்துடன்

''இனியா வீட்டுக்குப் பாரிவேள் வருவார் இல்லையா?''

''ஆமாங்க.''

''வீட்டுக்கு மட்டும்தான் வருவாரா? இல்லை வேறு எங்காவது கூட அழைத்துப் போவாரா?''

''இனியாக்கா எங்கயும் அவர் கூடப் போனதில்லீங்க. பாரிவேளய்யா இனியாக்கா வீட்டுக்கு வருவாரு, இங்க இல்லன்னா கேளம்பாக்கம் பங்களாவுக்கு வருவாங்க.''

''அவர் வரும்போது நீ இருப்பதுண்டா?''

''ஆமாங்க ''

''எதற்கு?''

''இனியாக்காவும் பாரிவேளய்யாவும் பேசிக்கிட்டிருக்கும்போது அவங்களுக்கு குடிக்கக் கொடுக்கணும்னாலும், சாப்பிடக் கொடுக்கணும்னாலும் நான் தாங்க கொண்டுபோவேன். பெரிய அம்மா கூட அவங்க ரெண்டு பேர் ஒண்ணாப் பேசிக்கிட்டிருக்கும்போது அறைக்குள்ள வரமாட்டாங்க.''

''சரி. குடிக்கக் கொடுப்பது என்றால் என்ன கொடுப்பாய்?''

''விஸ்கி பிராந்தின்னு பாரிவேளய்யா எது கேட்கிறாரோ அது.''



''தம்ளரில் விஸ்கி பிராந்தியை பாரிவேள்தான் ஊற்றுவாரா?''

''பாரிவேளய்யா என்னைத்தாங்க கலந்து கொடுக்கச் சொல்லுவாரு. அவர் ஊத்திக்கமாட்டாரு.''

''ஏம்மா?''

''என்னை வேலை வாங்கறதுக்காகப் பாரிவேளய்யா அப்படிச் செய்யறாருன்னு மொதல்ல நினைச்சேன். ஆனால் அப்படி இல்லன்னு அப்புறந்தான் தெரிஞ்சதுங்க. பாரிவேளய்யாவால தம்ளர்ல பாட்டில்லேர்ந்து விஸ்கியை சிந்தாமல் ஊத்த முடியாதுங்க. அவர் கை நடுங்கும். அதனால விஸ்கி கீழ எல்லாம் சிந்தும். இதை நான் என் கண்ணால பார்த்திருக்கேன்.

''நன்றிம்மா. வளர்மதி. நீ போகலாம். கனம் நீதிபதி அவர்களே, வளர்மதி கூறிய - இந்த வாக்கியத்தைத் தாங்கள் குறித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். என்று ஆரம்பித்த வேலாண்டித்துரை தனது அடுத்த சாட்சியாக டாக்டர் சின்னத்தம்பியை அழைத்தார்.

டாக்டர் சின்னத்தம்பி பாரிவேளின் குடும்ப மருத்துவர். பாரிவேளுக்கு ஒரு தும்மல், ஒரு இருமல் என்றால் சின்னத்தம்பியின் தலைமையில் ஒரு குழுவே இயங்கும். அவர் கூண்டில் ஏறினார். நடுத்தர வயதுக்காரராகத் தெரிந்தார். முழுக்கை வெள்ளைச் சட்டையும், பான்ட்டும் அணிந்திருந்தார்.

''உங்கள் பெயர்?''

''சின்னத்தம்பி.''

''தொழில்?''

''மருத்துவம்.''

''நீங்கள் பாரிவேளின் தனிப்பட்ட மருத்துவரா?''

MITHRAVINTHA

"ஆம்."

"சின்னத்தம்பி அவர்களே. மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள நீங்கள் ஒருவரது உடல்நிலை பற்றிய தவறான கருத்தை வேண்டுமென்றே வெளியிட்டால் அது உங்கள் தொழிலுக்கு நீங்கள் செய்யும் துரோகம் என்று தெரியுமில்லையா?"

"மிக நன்றாக. இதை எளிதாக இப்படி விளக்கலாம். அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் எல்லாம் விடுமுறை வேண்டுமென்றால், ஏதாவது ஒரு மருத்துவரை அணுகி தங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்று சான்றிதழ் தரச் சொல்லுவார்கள். பொதுவாக மருத்துவர்களும் ஐந்தோ, பத்தோ வாங்கிக் கொண்டு அந்த மாதிரி சான்றிதழ்கள் தருவார்கள். அதுகூடத் தவறுதான். கண்டு பிடிக்கப்பட்டால் நிரூபிக்கப்பட்டால் அந்த மருத்துவர்கள் கூட அதன்பின் மருத்துவம் பார்க்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். நான் அந்த மாதிரி சான்றிதழ்கள் எதையுமே இதுவரை தந்தது இல்லை."

"நல்லது. பாரிவேலுக்கு நீங்கள் என்ன நோய்க்காக மருத்துவம் பார்க்கிறீர்கள்?"

எதிர்க் கூண்டில் நின்றிருந்த பாரிவேல் தவித்தார்.

"சொல்லாதே சின்னத்தம்பி" என்று உணர்ச்சி வசப்பட்டு கத்தினார்.

"சொல்லுங்கள் சின்னத்தம்பி. இந்த நீதிமன்றத்தில் உண்மை வெளிப்பட வேண்டும்."

சின்னத்தம்பி பாரிவேலை ஒருமுறை பார்த்துவிட்டு, வேலாண்டித்துரை பக்கம் திரும்பினார்.

"பாரிவேலுக்கு ஒரு விதமான நரம்புத்தளர்ச்சி நோய்" என்றார்



மிக நெருக்கமானவர்கள்தான் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். என்றாலும் கூட அந்தக் கூட்டத்தினரிடையே கூட 'ஆ' என்ற அதிர்ச்சி சொல் வெளிப்பட்டது.

"நீங்கள் சொல்லும் நரம்புத் தளர்ச்சி நோய் பாரிவேலை எப்படித் தாக்கியது? எதனால் தாக்கியது?"

"பாரிவேல் ஓய்வு இல்லாமல் இரவு, பகல் என்று எந்நேரமும் படப்பிடிப்பில் கலந்துகொண்டு உழைத்தார். இரவு நேரங்களில் தூக்கத்தை விரட்டுவதற்காக அவர் ஒரு மாத்திரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்திருக்கிறார். கூடவே நிறைய மது அருந்தியிருக்கிறார். இதன் காரணமாக அவரை அந்த நோய் தாக்கிவிட்டது."

"உடம்பில் மற்ற நோய்கள் எது வந்தாலும் சீக்கிரம் குணம் பெற வாய்ப்பு உண்டு இந்த நரம்பு தளர்ச்சி நோய் அல்லது நரம்பு சம்பந்தமான எந்த நோய் மனிதனைத் தாக்கினாலும் அது மிக மிக மெதுவாகத்தான் குணமாகும். ஆண்டுக் கணக்கில், சில நேரங்களில் சாகும்வரை அந்த நோய் இருந்து கொண்டே இருக்கும்."

"பாரிவேலைத் தாக்கி இருக்கும் நோயால் அவருக்கு என்ன பாதிப்பு என்று சொல்கிறேன். அவருடைய கைகள் இரண்டும் அவர் மூளையின் ஆணைகளுக்குக் கட்டுப்படாது. ஏதாவது ஒரு செயலைச் செய்ய ஆரம்பித்தால் நடுங்கத் தொடங்கும். உதாரணமாக அவர் எழுத ஆரம்பித்தால் அவர் கைகள் நடுங்கத் தொடங்கும். அவர் எழுதுவதை நிறுத்தாமல் மேலே மேலே எழுதிக்கொண்டே போனால், அவரது கை நடுக்கமும் அதிகரித்து கொண்டே போகும்"."

"நன்றி சின்னத்தம்பி, கனம் நீதிபதி அவர்களே, பாரிவேலை ஒரு அரசாங்க நரம்பியல் மருத்துவ நிபுணர் பரிசோதித்து வழங்கிய சான்றிதழ் இதோ இருக்கிறது. இதைப்பாருங்கள்" என்று வேலாண்டித்துரை நீதிமன்றத்தில் ஒரு சான்றிதழை சமர்ப்பித்தார்.

MITHRAVINTHA

நீதிபதி அந்தச் சான்றிதழை வாங்கிப் பார்த்துவிட்டு புருவங்களை உயர்த்தினார். 'அப்புறம்?' என்று கேள்வி கேட்கும் பாணியில் புருவங்களை உயர்த்தினார்.

"அன்புள்ள நீதிபதி அவர்களே பாரிவேள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் மிகப் பிரபலமான நடிகர். நீங்கள் அவரது நடிப்பைத் திரைப்படங்களில் பார்த்திருப்பீர்கள். அவருடையது தனிப் பாணி என்பதால்தான் அவருக்கு எக்கச்சக்கமான ரசிகர்கள்.

அவரது தனிப் பாணி என்ன என்று கொஞ்சம் கவனியுங்கள். தனது பாண்ட் பாக்கெட்டுகள் இரண்டிலும் கைகளை நுழைத்துக் கொண்டு நடனமாடுவார். பாட்டுப் பாடுவார். காதலிப்பார். பேசுவார். அவரது திரைப்படங்களில் எல்லாம் அவர் சாப்பிடுவதாக எந்தக் காட்சியையும் பார்க்க முடியாது. அன்புமிகுதியால் இன்னொரு கதாபாத்திரம் அவருக்கு உணவு ஊட்டுவதாக அமைக்கப்படும் காட்சிகளைத்தான் அவர் அனுமதிப்பார்.

விளம்பர பலகைகளில், கடைகளில் அவர் படம் வரையப்பட்டுள்ள போர்டுகளில், ஆட்டோக்களில் ஒட்டப்பட்டிருக்கும் அவரது படங்களில் எல்லாம் அவருடைய இரு கைகளும் பான்ட பாக்கெட்டிற்குள் நுழைக்கப்பட்ட நிலையில்தான் இருக்கும். அந்த மாதிரிப் படங்கள் சிலவற்றை நான் உங்கள் பார்வைக்காக வைத்துள்ளேன்.

அவரால் கையெழுத்துக் கூடப் போடமுடியாது என்பதால்தான் திரைப்படத் தொழில் சம்பந்தப்பட்ட, அல்லது வேறு எந்தவித தொழில் சம்பந்தப்பட்ட முக்கியமான பத்திரங்களில் எல்லாம் அவருடைய கையெழுத்திற்குப் பதிலாக அவருடைய பெருவிரல் கைரேகை அடையாளம்தான் ஒப்புதலாகக் காணப்படும். சில பத்திரங்களின் நகல்களையும் நான் தங்கள் பார்வைக்கு வைத்துள்ளேன்.



'கையெழுத்தை விடவும், பெருவிரல் கைரேகைதான் மனப்பூர்வமான ஒப்புதலுக்கு ஒரு சான்று' என்று பாரிவேள் மற்றவர்களிடம் கூறியதால் அவருடைய இந்தச் செயலை யாரும் சந்தேகிக்கவில்லை. மாறாக அவரைப் பாராட்டுகிறார்கள். பாரிவேள் தன்னுடைய பலவீனத்தையே பலமாக மாற்றிக் காட்டியவர்..." என்று சொல்லி வேலாண்டித்துரை தனது பேச்சை நிறுத்தினார்.

நீதிமன்றத்தில் அமைதி என்றால் அப்படி ஒரு அமைதி.

பாரிவேள் கூண்டுக்கட்டையின் மேல் கைகளை வைத்துக்கொண்டு, அந்த கைகளுக்கு இடையில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கி குலுங்கி அழுதார்.

நீதிமன்றத்தில் மவுனம் மிகக்கனமாகத் தொங்கியது.

வேலாண்டித்துரைதான் அந்த மவுனத்தை உடைத்தார்.

"கனம் நீதிபதி அவர்களே. இனியாவின் பிரேத பரிசோதனை அறிக்கையில் இனியாவின் உடலை குத்திய கத்தி நான்கு அங்குலம். நாலரை அங்குலம் என்று காயமேற்படுத்தியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கத்தியில் படிந்திருக்கும் பாரிவேளின் கைரேகையை ஆராய்ந்த தடயவியல் நிபுணர்கள் பாரிவேளின் கைரேகை கத்தியில் மிக லேசாகப் படர்ந்திருப்பதாக முடிவு தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு உடலில் நாலு அல்லது நாலரை அங்குலத்திற்கு கத்தி செருகப்பட வேண்டுமென்றால், அந்தக் கத்தி எவ்வளவு இறுக்கமாகப் பற்றப்படவேண்டும்? எவ்வளவு வெறுப்பு அந்தக் கத்தியில் ஏற்றப்பட்டிருக்க வேண்டும்? எவ்வளவு பலம் அந்தக் கத்தியில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்?"

MITHRAVINTHA

வேலாண்டித்துரை தன் வாதத்தை சட்டென்று முடித்துக்கொண்டார்

கூத்தரசன், டாக்டர் சின்னத்தம்பியிடம் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை.

நீதிமன்றம் இடைவேளைக்காகக் கலைந்தது.

இடைவேளைக்குப்பின் வேலாண்டித்துரை உற்சாகமாக இருந்தார்...கொஞ்சமாகப் பேசினார். தெளிவாகப் பேசினார். இன்ஸ்பெக்டர் பார்த்திபனின் சாட்சியையும், மாதவியின் சாட்சியையும் அலசினார்.

"இந்த வழக்கு காவல்துறையினரால் போடப்பட்ட ஒரு அவசரக் கோலம். பாரிவேலைப் பழிவாங்கவே இந்த வழக்கு அவசரம் அவசரமாக நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறது. இனியாவை ஏற்கனவே அவரது கேளம்பாக்கம் வீட்டு நீச்சல்குளத்தில் கொல்ல ஒரு முயற்சி நடந்தது. காவல்துறை அதைப்பற்றி விசாரிக்கவே இல்லை.

இனியாவைக் கொல்லுவதற்கு பாரிவேலைத் தவிர வேறு யாரோ முயன்று இருக்கிறார்கள். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு இந்த அச்சுறுத்தல்கள் எல்லாம் எப்போதும் இருக்கும். இனியாவை வேறு யார் கொன்றிருக்க முடியும் என்று கொஞ்சம் கூட ஆர்வம் காட்டாமல் பாரிவேலை காவல்துறையினர் சுட்டிக்காட்டிவிட்டார்கள். அது ஏன்?

"இன்ஸ்பெக்டர் பார்த்திபன் இனியா கொலையான நேரத்தில் பாரிவேல் அவள் பக்கத்தில் இருந்ததாகச் சொல்கிறார். அதை நாங்கள் மறுக்கவில்லை. மாதவி, பாரிவேல் இனியாவைக் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகச் சொல்கிறார். அதையும் நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், இவை இரண்டுமே பாரிவேலைக்



கொலைகாரர் ஆக்கிவிட முடியுமா என்பதுதான் என் கேள்வி?

"பாரிவேலுக்கு இனியாவைக் கொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சரியான காரணம் இல்லை. மேலும் நரம்புத்தளர்ச்சி நோயால் அவதிப்படும் பாரிவேல், தன் கையெழுத்தைக்கூட தன் கையால் போடமுடியாத பாரிவேல், தனக்குக் குடிப்பதற்கு ஒரு தம்ளரில் நீரோ, மதுவோ எது நிரப்ப வேண்டுமென்றாலும் அடுத்தவர் உதவியை நாடும் பாரிவேல், தன் கைரேகையை லேசாகப் பதியவைத்த கத்தியில் இனியாவின் உடலில் நாலு அங்குல ஆழத்திற்குக் குத்திக் கொலை செய்தார் என்பது இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அபத்தம்.

என் வாதம் என்னவென்றால் இந்த வழக்கில் பாரிவேலைச் சிக்க வைக்க மிக அழகானதொரு சதி பின்னப்பட்டியிருக்கிறது என்பதே. அவர் இனியாவுடன் இருக்கும் நேரமாகப் பார்த்து, மது அருந்தி வீழ்ந்த நேரமாகப் பாபத்து இனியாவை வேறு யாரோ குத்திக் கொன்று விட்டு, கத்தியில் பாரிவேலின் கைரேகையைப் படியச் செய்திருக்கிறார்கள். நண்பர் பார்த்திபன் ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று எளிதான ஒரு பள்ளிக் கணக்கைப் போட்டுப் பாரிவேலைக் கைது செய்துவிட்டார்.

உட்கார்ந்தார் வேலாண்டித்துரை

கூத்தரசன் எழுந்தார் மாதவியின சாட்சியத்தைச் சொன்னார். குடிவெறியில் இருசகும்போது ஒருவரால் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும் என்று சொன்னார் பாரிவேல்தான் குற்றவாளி என்பதை சூழ்நிலை எவ்வளவு அழகாக, தெளிவாகச் சொல்கிறது என்றார். இன்ஸ்பெக்டர் பார்த்திபன் தன் கடமையை வெகு உன்னதமாக நிறைவேற்றியிருப்பதைச் சொன்னார். அமர்ந்தார்.

MITHRAVINTHA

நீதிபதி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தனது தீர்ப்பைப் படிக்கத் தொடங்கினார்.

# 18.

''ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்துவிடலாம். ஆனால், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது தான் நீதிமன்றத்தின் கொள்கை. பாரிவேன் வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞர் கூத்தரசன் பாரிவேன் மிரட்டியதையே மறுபடி மறுபடி நிரூபிக்கப் பார்க்கிறார்.

எதிர் தரப்பு வக்கீல் அதை மறுக்கவில்லை. ஆமோதிக்கிறார். மேலும் பாரிவேனுக்கு இருக்கும் நரம்புத் தளர்ச்சி நோயை அவருடைய வழக்கறிஞர் ஆதாரப் பூர்வமாக நிரூபித்திருக்கிறார்.

பாரிவேனும் இனியாவும் தனிமையில் இருந்தபோது பாரிவேன் அளவுக்கு மீறி குடித்திருந்தார் என்பதை இரு தரப்பினரில் யாருமே மறுக்கவில்லை. அந்த ஒரு தருணத்தில் அந்த அறைக்குள் போக வாய்ப்புப் பெற்ற யாரும் இனியாவைக் கொன்றிருக்க முடியும். மேலும் கேளம்பாக்கம் நீச்சல் குளத்தில் இனியாவைக் கொல்ல முயற்சி செய்தது யார் என்று காவல்துறையினர் விசாரிக்கவே இல்லை.

பாரிவேன் இனியாவைக் கொன்றார் என்பதற்கு நேரில் பார்த்த சாட்சி எதுவுமே இல்லை. இந்நிலையில் பாரிவேன்தான் குற்றவாளி என்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படாததால் இந்த நீதிமன்றம் பாரிவேனைக் குற்றமற்றவர் என்று கூறி விடுதலை செய்கிறது.



பாரிவேன் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்து சட்டதிட்டங்களை மீறி 'ஓ'வென்று கூச்சல் எழுப்பினார்கள். வேலாண்டித்துரை அவர்களை ஒருமுறை தீவிரமாக முறைத்தார். நீதிபதியும் அவர்களை ஒருமுறை முறைத்துவிட்டுத் தனது தீர்ப்பைத் தொடர்ந்தார்.

''காவல் துறையினரின் போக்கு இந்த வழக்கைப் பொறுத்தவரையில் ஆச்சரியத்தை அளிக்கிறது. ஒரு பண்பட்ட காவல் அதிகாரி, ஒருவரைக் குற்றவாளி என்று கைது செய்யுமுன்பே, எல்லாத்தரப்பு விசாரணைகளும முடிந்துவிட்டனவா என்று சரிபார்த்துக் கொண்டிருக்க வேண்டும். காவல்துறையினர் இந்த வழக்கைப் பொறுத்தவரை மிகவும் அவசரப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

கொலையான இனியாவை வேறு யாரோ ஏற்கனவே கொல்ல முயற்சி செய்திருக்கிறார்கள் என்று அறிந்தும் பாரிவேனைச் சுட்டிக்காட்டி, குற்றம் சுமத்தி, கைது செய்வதில் ஏன் அவ்வளவு அவசரப்பட வேண்டும்? காவல்துறையினர் தங்கள் கடமையை இந்த வழக்கைப் பொறுத்தவரை இனிமேலாவது சரிவர நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.''

நீதிபதி தீர்ப்பை வாசித்து விட்டு எழுந்து சென்றார்.

பார்த்திபன் மாமல்லபுரத்தின் கடற்கரைக் கோயிலில் இருந்த ஒரு கற்சுவர் மீது அமர்ந்திருந்தான். உள்ளங்கை நிறைய பொடிக்கற்களை எடுத்து வைத்துக் கொண்டு, அவற்றை ஒவ்வொன்றாக இலக்கின்றி எறிந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. சீருடையில் இல்லை. அதனால் தொப்பி இல்லை. அதனால் தலைமுடி கலைந்திருந்தது. வெறும் காற்றால் மட்டும் அன்றி, அந்தத் தலைமுடிக்குள் தன் விரல்களைச் செலுத்



MITHRAVINTHA

நிச் செலுத்தி அனைந்ததாலும் அது அப்படிக் கலைந்திருந்தது.

அவனை உரசிக்கொண்டு கதம்பா அமர்ந்திருந்தாள். ஏக்கத்தில் நிறைய பெருமூச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. அவள் கண்கள் திரும்பின திசை எல்லாம் காதலர்கள் தென்பட்டார்கள். ஆணும், பெண்ணும் இணை இணையாய் வந்து இயற்கை அழகைப் பருகிக் கொண்டிருந்தார்கள். பருவச் சீண்டல்களில் தங்களை இழந்திருந்தார்கள். இங்கே என்னடாவென்றால் வந்ததில் இருந்து பார்த்திபன் இப்படியே வெறித்து வெறித்துப் பார்த்து உட்கார்ந்திருந்தான்-கற்பைப் பறி கொடுத்த கன்னிப் பெண்ணைப் போல.

"ஏதாவது கப்பல் கிப்பல் கவுந்து போயிடிச்சா பார்த்திபன்?" என்று உதட்டில்ஒரு குறும்புப் புன்னகை ததும்பக் கேட்டாள் கதம்பா.

பார்த்திபன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவளுடைய உதடுகளில் தவழ்ந்த புன்னகையைக் கண்டே அவளுடைய குறும்புத்தனமான கேள்வியை அறிந்து கொண்டான்.

சட்டென்று தன்னிரு விரல்களால் அந்த உதடுகளைப் பிடித்துக் கசக்கினான்.

"விடுங்க பார்த்திபன். ஐயோ விடுங்க" என்று அவன் மார்பில் குத்தினாள் கதம்பா.

அவளது உதடுகள் இரத்தம் பாய்ந்து சிவப்பாக மாறியது கண்டுவிட்டான்.

"அப்பா...எவ்வளவு முரட்டுத்தனம்?" என்று கூறி உதடுகளை அவன் தோளில் பதித்து அவற்றுக்கு தோள் ஒத்தடம் கொடுத்தாள் பார்த்திபனின் அநத முரட்டுத்தனம் அவளுக்குப் பிடித்துத்தான் இருந்தது



"பின்ன? என்னைப் போய் சீண்டுனா என்ன அர்த்தம்? வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சறதுன்னு சொல்வாங்களே...அந்த மாதிரித்தான் இருக்கு உன் கேள்வி. நானே அவமானப்பட்டுப் போய் வந்து நிக்கிறேன். 'பாரிவேலைக் கைது பண்ணு'ன்னு எங்கிட்ட உத்தரவு போட்டவங்க எல்லாரும் இன்னிக்கு விலகி நின்னு வேடிக்கை பாக்கறாங்க.

எனக்கு ஆரம்பத்தில் இருந்தே பாரிவேள் மேல சந்தேகம் இல்ல. ஆளுங்கட்சிக்காரங்களுக்கு அவர் வேண்டாத வராப் போனதால பாரிவேளுடைய செல்வாக்கை ஒடுக்க இது ஒரு வாய்ப்புன்னு நினைச்சி என்னை விட்டு அவரைக் கைது பண்ணச்சொன்னாங்க. இன்னிக்கு என்ன ஆச்சி? நீதிமன்றம் 'நான் கடமையை ஒழுங்காச் செய்யலை'ன்னு என்னைக் கண்டிக்குது. நான் யார்கிட்டப் போய் சொல்ல முடியும்? ஊமை கண்ட கனவாப் போச்சி. திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி ஆயிடுச்சி."

கதம்பா அவனுடைய மோவாயைப் பற்றித் தன் பக்கமாகத் திருப்பினாள். தன் கண்களால் அவன் கண்களை ஊடுருவினாள்.

"என்ன கதம்பா?" என்று கேட்டான் பார்த்திபன்.

"இனியா என்னுடைய உயிருக்குயிரான தோழி பார்த்திபன். அவளை பாரிவேள் கொல்லலைன்னு நீதிமன்றத்துல தீர்ப்பாயிடிச்சி. உங்களுக்கும் பாரிவேள் மேல சந்தேகம் இல்லை. உங்களை ஒரு கருவியா உபயோகப்படுத்தினாங்க. உங்கள் மனசாட்சிப்படி நீங்கள் எந்தத் தப்பும் பண்ணாதபோது, இந்த அவமானம் மட்டும் உங்களைச் சேரும்னு ஏன் நினைச்சி உருகுறீங்க?

இனியாவைக் கொன்னது யாருன்னு நீங்கள் கண்டு பிடிக்கணும். அந்த உண்மைக் குற்றவாளியைக் கொண்டு போய் நீதிமன்றக் கூண்டுல ஏத்தணும். பாருங்கடா.

MITHRAVINTHA

நான் ஒண்ணும் கடமை தவறினவன் இல்லேன்னு நீங்க அவங்களுக்குச் சொல்லாம சொல்லணும். அதை விட்டுட்டு நாம வாழ்க்கையில நியாயமா அனுபவிக்க வேண்டிய சந்தோஷத்தை எல்லாம் ஒதுக்கி வைச்சிட்டு ஏன் இப்படி தொந்து போகணும்? நம்பளை நாமளே இப்படி ஏன் தண்டிச்சிக்கணும்?''

''நான் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்கத்தான் போறேன் கதம்பா.''

''இதுதான் சரியான பாதை. நானும் உங்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்றேன்.''

''அப்படின்னா இப்ப நாம சந்தோசமாக இருக்கணும் இல்லியா?''

''ஆமா.''

'அப்படின்னா...'' என்று சொன்னவன், கதம்பா எதிர்பாராத ஒரு தருணத்தில் அவளை இறுகப் பற்றி, அவள் இதழ்களில் முத்தமிட்டான்.

''ஐயோ...ஐயோ...யாராவது பார்த்துடப் போறாங்க'' என்று முனகிக் கொண்டே கதம்பா அவன் நெஞ்சில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். பார்த்திபனிடம் இருந்து பெற்ற அந்த முதல் முத்தம் அவள் உடலின் எல்லா நரம்புகளையும் துள்ளி எழுப்பி நடனமாட வைத்தது. உடலின் எல்லா பாகங்களிலும் கிளுகிளுப் பாய் இருந்தது.

''ஏய் கதம்பா...''

''ம்...'' என்றாள் கதம்பா முகத்தை எடுக்காம லேயே.

''உன்னை அப்படியே தலைக்கு மேல தூக்கி ஒரு சுத்து சுத்தட்டுமா?''



''ஐயோ வேணாங்க...''

''ஏங்க? • நம்பதான் இப்பத்தைய மகிழ்ச்சியைக் கெடுத்துக்கக் கூடாதுன்னு சொன்னீங்களே?''

''வைச்சா குடுமி. எடுத்தா மொட்டையா?''

''ஏய்... என்னது? என்னது?''

''ஒண்ணும் இல்ல... இனியாவைக் கொன்னது யாருன்னு கண்டுபிடிச்சே ஆகணும். வாங்க போகலாம்.''

கீதம்பாவைக் மாதவி வரவேற்றாள். வரவேற்கும் போதே அழுகையும் கூடவே சேர்ந்து வரவேற்றது.

''எனக்கு உன்னோட சேத்து ரெண்டு பொண்ணுங் கன்னு நினைச்சிகிட்டிருந்தேனே. ஒருத்தி என்னை இப்படி ஏமாத்திட்டுப் போயிடுவான்னு கனவுல கூட நினைச்சிப் பாக்கலியேடி கதம்பா'' என்று அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

இனியாவின் போட்டோக்கள் அந்த வீட்டில் அங்கங்கே மாட்டப்பட்டிருந்தன. எல்லாவற்றிலும் விதவிதமான கோணங்களில் இனியா சிரித்துக் கொண் டிருந்தாள் இனியாவின் முகத்தைப் பார்க்கப் • பார்க்க அவளுக்கு,அழுகைதான் வந்தது.

'உன்னைக் கொன்றது யாராக இருந்தாலும் சரி இனியா. அவர்களைக் கண்டுபிடிக்காமல் நான் விடப் போவதில்லை' என்று கதம்பா தன் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

''இனியாவைக் கொன்றது யாருன்னு கண்டுபிடிக்கப் போறேம்மா. அப்பத்தான் என் மனசுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கும்.''

MITHRAVINTHA

"அந்தப் பாவி பாரிவேன் தானே என் கண்ணுகூட இராத்திரியெல்லாம் இருந்தான்?" என்று மாதவி பெருங் குரலில் அழுகையோடு கலந்து சொன்னாள்.

"அதான் பாரிவேன் இல்லைன்னு நீதிமன்றமே சொல்லிடிச்சேம்மா. அந்த ஆளுக்கு கைநடுக்கம் இருக்கிறது உண்மைன்னு நம்ப வளர்மூலமாவே தெரியுதே. அதனால் நாம் சும்மாச் சும்மா பாரிவேனைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கிறதில் அர்த்தம் இல்லை. எனக்குத் தெரிஞ்சி அவர் யாரையும் பணத்தால விலைக்கு வாங்கி வெளிய்ய வரலை

நானே அவரைப் பார்க்க சிறைக்குப் போயிருந்தேன், ஜாமீன்லகூட வெளியே வரமாட்டேன்னு சொல்லிட்டாரு அவரு. அவரோட வக்கீல் அவருக்காக வாதாடறேன்னு சொன்னப்பக்கூட, அவருக்கு இந்த வியாதி இருக்கறதை வெளிப்படையாச் சொல்ல விருப்பம் இல்லை. அதனாலேயே அவர் கொலைப்பழியைத் தானே ஏத்துக்கறேன்னு தான் சொன்னாரு. அவர் இல்லம்மா. அது முடிவாகிப் போன செய்தி. உண்மை வேற எங்கேயோ ஒளிஞ்சிக்கிட்டிருக்குது. அதை வெளியில கொண்டுவர முயற்சியில் இறங்கப் போறேன். நீங்கள்தான் எனக்கு ஒத்துழைப்பு தரணும்."

"இனிமேல் அவளைக் கொன்னவனைக்கண்டுபிடிச்சா என்ன? கண்டுபிடிக்கலன்னா என்ன. எனக்கு எல்லாம் ஒண்ணுதான்" என்று விரக்தியின் எல்லையில் நின்று பேசினாள் மாதவி.

"அப்படிச் சொல்லாதீங்கம்மா கொலைகாரனைக் கண்டுபிடிச்சிட்டா, இனியா என்ன எழுந்தா வரப் போறாங்கற விரக்தியில் நீங்கள் பேசாதீங்க. ஆனால், இன்னிக்கு நாம ஒரு கொலைகாரனைத் தப்பிச்சிப் போக விட்டா, நாளைக்கு நாலு கொலைகாரங்களை நாம்பளே உருவாக்கறதுக்கு உதவறது மாதிரி ஆயிடும். அவனவன் கொன்னுட்டு தப்பிச்சிப் போயிடலாம்னு நினைக்க



ஆரம்பிப்பான். அதனால் அப்பாவிங்க நிறையப் பேர் சாவுக்கு நாமும் ஒரு காரணமா ஆயிடுவோம்."

"சரி கதம்பா. நான் உனக்கு எப்படியெல்லாம் உதவ முடியுமோ அப்படி எல்லாம் உதவறேன்."

"ரொம்ப நன்றிம்மா. இனியாவைப் பாரிவேன் கொல்லலைன்னா, வேற யார் கொன்னிருக்க முடியும்ங்கறதுதான் இப்பக் கேள்வி. இந்தக் கேள்விக்குப் பதிலை இனியாதான் சொல்ல முடியும். அவள் இப்ப இல்லை. அதனால் அவள் உடமைகளை, அறையை ஒரு தடவை சோதனை போடணும்னு இன்ஸ்பெக்டர் பார்த்திபன் விரும்பறாரு. உங்களோட அனுமதிக்காக வெளியில காத்துக்கிட்டிருக்காரு."

"வரச்சொல்லும்மா. அவரை ஏன் அனாவசியமா வெளியில் நிக்கவைச்சிருக்கே? அன்னிக்கு மட்டும் இனியா அவரைப் 'போ' 'போ'ன்னு விரட்டியிருக்கலன்னா, இன்னிக்கு இந்த நிலைமையே வந்திருக்காது. வரச் சொல்லு."

பார்த்திபன் உள்ளே வந்தான்.

பார்த்திபனையும், கதம்பாவையும் கேட்காமலேயே ஒரு தட்டில் சூடான காபியும், சுவை பானமும் கொண்டு வந்து நீட்டப்பட்டது.

"எது தேவையோ எடுத்துக்கங்க" என்றாள் வளர்மதி மெல்லிய குரலில்.

"நான் வேலையை முடிச்சிட்டு எது வேணுமோ அதை நானே கேட்டு வாங்கி சாப்பிடறேன்" என்றான் பார்த்திபன்.

இனியாவின் அறைக் கதவு திறந்து விடப்பட்டது.

MITHRAVINTHA

அறையில் லேசாக ஒரு இரத்த வாடை இருந்தது. இனியாவின் படுக்கை அறையும் அதுதான். இனியா ஜலியாக ஒய்வெடுத்துக் கொள்ளும் அறையும் அதுதான். அந்த அறையில்தான் இனியா கொலையாகி இறந்து போனாள். அந்த அறையில்தான் இரத்தம் சிந்தி இருந்தது. என்னதான் துடைத்து, அதன் மேல் பன்னீர், சென்ட், அறை தெளிப்பான் என்று என்னென்னவோ வாசனை திரவியங்களைத் தெளித்த பின்னும் அந்த இரத்த வாடை லேசாக இருக்கத்தான் செய்தது.

கதம்பா அறையை மேலாக ஒருமுறை நோட்டமிட்டாள்.

இனியா அவளுடைய உயிருக்குயிரான தோழி. நெருக்கமானவள். அதனால் அவளுக்கு வரும் ரகசியக் கடிதங்கள் போன்றவற்றையும் அம்மாவுக்குத் தெரியக் கூடாது என்று அவள் நினைப்பவற்றையும் அவள் படுத்திருக்கும் கட்டிலில் அமைந்திருக்கும் ஒரு ரகசிய அறையில் வைத்திருப்பது வழக்கம்.

கதம்பா அந்த ரகசிய அறையைத்தான் அணுகினாள் உள்ளங்கை அகலம்தான் இருக்கும். அது இருப்பதே தெரியாத மாதிரியான ஓர் அமைப்பில் அது அமைந்திருக்கும்.

கதம்பா அந்த அறையைத் திறந்தாள்.

அதனுள் கையை நுழைத்தாள். அவள் கையில் ஏதோ ஒன்று சிக்கியது.'

என்னவென்று வெளியே எடுத்துப் பார்ததாள்.

''என்ன அது?'' என்று கேட்டான் பார்த்திபன்.

அது ஒரு கையேடு.

''டைரியா?'' என்றான் பார்த்திபன் கண்களில் ஆவல் மின்ன.



அந்தக் கையேடு ஒன்றும் விலைமதிப்பற்றது என்று சொல்ல முடியாது. சாதாரண கையேடுதான். கதம்பா அதைத் திறந்தாள்.

முதல் பக்கத்தில்,

'என்னவளே...உனக்குக் காதலுடன், நான் அளிக்கும் காதல் பரிசு' என்று முத்து முத்தான எழுத்துக்களில் எழுதப்பட்டு அதன் கீழ் 'சேர இளவல்' என்று கையெழுத்துப் போடப்பட்டிருந்தது.

அதன் கீழ்,

'அடி இனியா, என்னவளே. தேற்று வரைக்கும் இனிச்சவளே. உன் கடைசி ஆசைன்னு ஏதாவது இருந்தா உடனே நிறைவேத்திக்கம்மா. உடனே நிறைவேத்தலைன்னா எப்பவுமே நிறைவேத்த முடியாது. ஏன்னு கேக்கறியா? ஏன்னா, நான் உன்னைக் கொல்லப் போறேன்' என்று கண் மை தீட்டும் மசிப் பென்சிலால் எழுதப்பட்டிருந்தது.

கதம்பா விக்கித்துப் போனாள்.

## 19

பார்த்திபன் கதம்பாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

''பார்த்தியா, கதம்பா. இனியா வழக்குல நாம இறங்கியவுடனே கேஸ் வேற பாதையில் போகுது. இந்த டைரியை யாரோ ஒரு சேர இளவல் இனியாவுக்குக் கொடுத்திருக்கிறான். அந்த சேர இளவல் இனியாவுக்கு ரொம்ப நெருக்கமானவனா இருந்திருக்கணும். அதனால தான், 'என்னவளே...உனக்குக் காதலுடன் நான் அளிக்

MITHRAVINTHA

தும் பரிசு'ன்னு எழுதிக் கொடுத்திருக்கான். ஆனால், அந்த வாக்கியத்துக்குக் கீழே இருக்கிற வாக்கியம்தான் யார் எழுதினதுன்னு புரியலை.''

''இது இனியாவோட கையெழுத்து பார்த்திபன்.''

''அப்படியா? உனக்கு நல்லாத் தெரியுமா கதம்பா?''

''நான் பார்த்திருக்கேன். இது இனியாவோட கையெழுத்துத்தான் அதில சந்தேகம் இல்ல. இனியா வும், நானும் கேளம்பாக்கம் பங்களாவுல நீச்சல் குளத் துக்குக் குளிக்கப் போனோம் இல்ல பார்த்திபன்? எங் கிட்ட என்னவோ ஒரு முக்கியமான விசயம் சொல்ல ணும்னுதான் இனியா என்னை அங்கே கூட்டிக்கிட்டுப் போனாள்!''

அவளை தொலைபேசியில் கொலை பண்ணிடுவேன்னு யாரோ மிரட்டினதாகச் சொன்னாள். அவளை யாரு கொலை பண்றதுக்குத் துடிக்கிறாங்கன்னுகூடத் தெரி யும்னு சொன்னாள். நான் கூட யாருடி அவன்னு கேட் டேன். சொல்லலை. ஆனால், என்னால இப்ப ஒரு மாதிரி யூகிக்க முடியுது. இனியா ஒரு காமிராக்காரனைக் காதலிச்சா, ஆரம்ப நாட்கள்ல. அவன் பேர் எனக்குத் தெரியாது. ஆனால், அந்தக்காதலனை அவளே நிரா கரிச்சிட்டா. காரணம், அந்த காமிராக்காரன் அவளை கவர்ச்சி காட்டி போட்டோ எடுத்து வைச்சுக்கிட்டு, இனியா பெரிய நடிகையா மாறின உடனே, அந்தப் படங்களை எல்லாம் பத்திரிகைகளுக்கு அனுப்பாம இருக் கணும்னா காசு கொடுன்னு மிரட்டினானாம். அதுவும் எப்படி?

நிர்வாணமா இருக்கற ஒரு பெண்ணோட படத்துல, அவளோட முகத்தை வெட்டி எடுத்துட்டு அந்த இடத்துல இனியாவோட முகத்தைப் பொருத்தி, அந்தப் படத்தை இனியாவுக்கே அனுப்பினானாம். இனியா முதல்ல



கொஞ்சம் பணம் கொடுத்திருக்கா, அப்புறம் அவன் அதையே பழக்கமாக்கிக்கிட்டான். இனியா அவனோட தொல்லை தாங்காம, பாரிவேள்கிட்ட உள்ளதைச் சொல்லிட்டா.

பாரிவேள் 'கவலைப் படாதே'ன்னு இனியாவுக்கு ஆறுதல் சொன்னாரு. கொஞ்ச நாள்ல அந்த காமிராக் காரனோட ஸ்டுடியோ நெருப்புல எரிஞ்சி சாம்பலாய்டிச் சாம் அந்த நெருப்புல இனியாவோட போட்டோ எல்லாம் கூட எரிஞ்சிபோயிரிச்சாம். அந்தக் காமிராக் காரன்தான் இனியாவை போன்ல கூப்பிட்டு மிரட்டி இருப்பான்னு எனக்குத் தோணுது. அவன் மிரட்டினதைத் தான் இனியா, அவன் கொடுத்த டைரியில் எழுதி வச்சி ருக்கா.

ஒருவேளை அவனால வெளியே சொல்லவே முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டா என்ன செய்யறதுன்னு இந்த மாதிரி எழுதி வெச்சிருக்கலாம்.''

''இருக்கலாம்'' என்றான் பார்த்திபன். ''நீ சொல் றது எல்லாம் நடக்கக்கூடியதுதான். இந்த சேர இளவலே கொலைகாரனாக்கூட இருக்கலாம். ஆனால், யாரு இந்த சேர இளவல். அழகா புனைப்பெயர்ல ஒளிஞ்சிக் கிட்டிருக்கானே?''

சேர இளவல் என்றால் யார் என்று மாதவிக்கும் தெரியவில்லை. கதம்பாவும், பார்த்திபனும் இனியாவின் வீட்டைவிட்டு அந்த டைரியுடன் வெளியேறினார்கள். வெளியேறும்முன் இனியா சம்பந்தப்பட்ட எல்லா இடங் களிலும் சேர இளவலுக்கு ஏதாவது விளக்கம் கிடைக் கிறதா என்று தேடிப் பார்த்துவிட்டே வெளியேறி னார்கள்.

இனியா கொலை தொடர்பாக, யார் மீதாவது சந்தே கம் ஏற்பட்டால், தயங்காமல் அவர் பெயரைச் சொல்லு மாறு மாதவியிடம் கேட்டுக்கொண்டு அவர்கள் இருவரும் வெளியேறினார்கள்.

MITHRAVINTHA

ஒரு பழச்சாறு கடையில் போய் உட்கார்ந்துகொண்டார்கள்.

திராட்சைப்பழச் சாறுக்கு சொல்லிவிட்டு, சேர இளவல் யாராக இருக்க முடியும் என்று அலசினார்கள். எழுத்தாளர்கள் யாரும் சேர இளவல் என்ற பெயருடன் இல்லை. நடிகர்கள் யாரும் இல்லை. தயாரிப்பாளர்கள்?

சேரன் பிலிம்ஸ் என்னும் ஒரு திரைப்படத் தயாரிப்புக் கம்பெனி இருப்பது சட்டென்று மூளையில் மின்னல் உதித்தது.

கதம்பாவிற்கும், பார்த்திபனுக்கும் ஒரே நேரத்தில் சேரன் பிலிம்ஸ் என்ற பெயர் மூளையில் உதித்ததால் இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, "சேரன் பிலிம்ஸ்" என்ற உணர்ச்சிவசப்பட்டுக் கத்தினார்கள்.

சிரித்தார்கள்.

"சேர இளவல் என்றால், சேரன் பிலிம்சின் உரிமையாளருடைய மகனாக இருக்கலாம். அல்லது தம்பியாக இருக்கலாம். சினிமாக் கம்பெனி என்பதால் இந்த சேர இளவல் அங்கே ஒரு காமிராக்காரனாகவும் இருக்கலாம். வா. இப்போதே போய்ப் பார்த்துவிடுவோம்."

அவர்கள் திராட்சைச் சாற்றைத் துறந்துவிட்டு வண்டியில் பாய்ந்தார்கள்.

சேரன் பிலிம்சில் அவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. சேரன் பிலிம்சின் அதிபர் குருவாயூரப்பன் மிக வயதானவராக இருந்தார். தலை நரைத்துப் போய் இருந்தது. கண்களில் சதை வளர்ந்து தடிமனான கண்ணாடி அணிந்து. ஒரு கையில் தடியும், மற்றொரு பக்கம் ஒரு வேலையாளுடைய துணையுமாகத்தான் வந்து அவர்களை வரவேற்பு அறையில் சந்தித்தார்

"நான் படம் எடுக்கறதை நிறுத்தி பல காலம் ஆயிட்டதே. நான் சாவித்திரி, பத்மினின்னு கதாநாயகியாக



பார்த்திருக்கேன். நான் தனி ஆளு. கல்யாணம் பண்ணிக்கலை. அதனால இப்ப நான் சினிமா எடுக்கறதில் ஈடுபடறதில்ல. துணைக்கு யார் இருக்காங்க?" என்று கேட்டவுடன் கதம்பாவிற்கு 'சப்'பென்று ஆகிவிட்டது.

சேர இளவல் என்பது நிச்சயம் அந்த வீட்டில் இருந்து இல்லை என்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

அவர்கள் இருவரும் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டார்கள். ஏணி—பாம்பு விளையாட்டில் கடகடவென்று ஏணி ஏணியாக ஏறிக் கடந்து ஒரு பாம்பில் மாட்டி சர்ரென்று கீழே இறங்கி வந்துவிட்டமாதிரி இருந்தது கதம்பாவிற்கு. தன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினான்.

வெளிப்படுத்திய இடம், காதலர்களுக்கென்றே ஏற்பட்ட கடற்கரை.

கண்ணகி சிலைக்கு நேர் பின்னால்.

மாலை வெயில் கதம்பாவின் முகத்தில் பட்டு, அவள் முகம் புடம்போட்டு எடுத்த தங்கமாக மின்னிக்கொண்டிருந்தது. அவள் உதடுகள் ஏமாற்றத்தில் சுழித்துக் கொண்டிருந்தன.

அவள் கைவிரல் எப்போதும் போல் தன்னிச்சையாக மணலில் வளையங்களையும், இதயங்களையும் வரைந்து கொண்டிருந்தது.

"என்ன கதம்பா? பெரிய துப்பறியும் சிங்கமாகப் போறேன்னு சொன்னே. இதுக்கே இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்துட்டா என்ன அர்த்தம்? ஐயோ... மணல்லேர்ந்து விரலை எடு. பென்சில், பேனாவினால் கிடைக்கற பேப்பர்ல எல்லாம் நீ மீசை போடுவே. வட்டம் வரைவே. அதுக்காக விரலால் மணல்ல கோடு போட்டா விரல் எதுக்கு ஆகும் நக இடுக்குல எல்லாம்

MITHRAVINTHA

அழுக்கு சேர்ந்துடும்மா, எனக்குச் சொந்தமான பொருளை, நீ கண்டபடி கையாள்றதில எனக்கு விருப்பமில்ல.''

''எப்படி? எப்படி? இன்னொருதடவை சொல்லுங்க.''

''ஆமா, நீ எனக்குன்னு ஆனபிறகு உன் உடம்பும் என்னைச் சேர்ந்ததுதானே. எனக்கு உரிமையான பொருளை நான் பத்திரமாகப் பாதுகாக்கணும் இல்லையா?''

கதம்பா ஒரு நாணப் புன்முறுவல் பூத்தாள்.

''அப்பாடா. முகத்துல இப்பத்தான் சிரிப்பு.''

''பின்ன என்ன பார்த்திபன்? சேர இளவலைக் கண்டுபிடிக்கப்போறோம்னு எவ்வளவு ஆர்வத்தோட சேரன் பிலிம்சுக்கு வந்தேன் தெரியுமா?''

''துப்பறியற வேலையும் துப்பாக்கி சுடறதும் ஒண்ணு கதம்பா எல்லா முறையும் இலக்கைத் தொட்டுவிடுவோம்னு சொல்லவே முடியாது. போகட்டும். காதலர்கள் எல்லாம் சந்திக்கிறதுக்கு கண்ணகி சிலையைத் தேர்ந்தெடுக்கறாங்களே. அது தப்புன்னு தோணலை?''

''ஏன்?''-என்று அவன் கேட்ட கேள்வியின் பொருள் புரியாமல் புருவங்களை உயர்த்திக் கேட்டாள் கதம்பா.

''கண்ணகி, கணவனைத் தன் கட்டுக்குள்ள வைச்சுக்க முடியாமல் ஏமாந்து போனவள்தானே? கணவன் திரும்பி வந்து சேர்ந்த பின்னாலும் அவன் கூட வாழமுடியாம வாழ்க்கையில் சோகப்பட்டவள்தானே?''

''பார்த்திபன்'' என்றாள் கதம்பா, திடீரென முகம் ஒளிர.

அவள் முகத்தில் விளக்கு வெளிச்சம் போல் திடீரென ஓர் உற்சாக ஒளி தோன்றியது கண்டு பார்த்திபன் திகைத்தான்.



''என்ன?'' என்று திகைப்பு மாறாமல் கேட்டான்.

''கண்ணகியோட காவியத்துக்கு என்ன பேரு?''

''சிலப்பதிகாரம். ம.பொ.சிக்கு ரொம்ப பிடிச்சது.''

''அது இருக்கட்டும் பார்த்திபன். அதை எழுதினது யாரு?''

''இளங்கோ அடிகள்.''

''இளங்கோ யாரு?''

''சேர இளவரச... ஏய் கதம்பா? வெரிகுட். கையை கொடு. கை கொடுன்னா...என்று அவன் கையைப் பற்றி அழுத்தமாக ஒரு குலுக்கு குலுக்கினான். ''சேர இளவல்னா இளங்கோவைக் குறிக்கும்ங்கறது இவ்வளவு நேரம் எனக்குத் தோணாமலேயே போய்டிச்சி பாரு.''

''இளங்கோ யார்? எங்க இருக்கான்? அவன் ஒரு காமிராக்காரனா? அவன் இனியாவைக் காதலிச்சிருக்கிறானா? அவன் போன்ல இனியாவைக் கொன்னுடுவேன்னு மிரட்டியிருக்கானா?''

''நிறுத்து. நிறுத்து. எவ்வளவு கேள்வி! வா ஒவ்வொண்ணா விசாரிக்கலாம். விடை கண்டுபிடிக்கலாம். இந்த துப்பறியற விசடமே இப்படித்தான். நேரடியாப் போய் அது கூட மோதுனா நமக்குத் தண்ணி காட்டிடும். அதுவே அதை விட்டு விலகி வந்து நின்னா, தானா நம்ப மண்டைக்குள்ள வந்து உக்காந்து மணியடிக்கும். இப்ப இளங்கோ யாருன்னு கண்டுபிடிக்கணும் அதானே? புறப்படு. போகலாம். அதுக்கு முன்னால, இளங்கோ என்கிற பேரைக் கண்டுபிடிச்ச உனக்கு ஏதாவது ஒரு சின்ன பரிசு தரணும். என்ன வேணும் சொல்லு.''

''சொன்னா சிரிக்க மாட்டீங்களே ''

''சொல்லு.''

MITHRAVINTHA

"அந்த குடைராட்டினத்துல ஒரு தடவை சுத்தணும்."

"சின்னச் சின்ன ஆசையா? சரி வா.

கல்யாணம் ஆகி, கருத்தரிச்சிருக்கறப்பத்தான் இந்த மாதிரி ஆசையெல்லாம் வரும்னு சொல்லுவாங்க. உனக்கு என்னடான்னா?"

"ச்சீ...போங்க பார்த்திபன்" என்றாள் கதம்பா முகம் சிவக்க.

மாதவி கதம்பாவையும், பார்த்திபனையும் வரவேற்றாள்.

கதம்பா, "இளங்கோ யார்?" என்ற கேள்வியை அவனிடம் கேட்கும் முன், மாதவியே, "கதம்பா. உன்கிட்ட ஒரு முக்கியமான விசயம் சொல்ல மறந்துட்டேம்மா" என்றாள்.

"என்னம்மா?" என்றாள் கதம்பா.

"உனக்கு திலக்கைத் தெரியுமா?"

"புதுசா வில்லனா அறிமுகம் ஆயிருக்காரே..."

"ஆயிருக்காரேன்னு என்ன மரியாதை? அவன்தான் ஒரு தடவை நம்ம இனியாவை மோட்டார் பைக்குல துரத்திக்கிட்டு வந்தான். இனியா படப்பிடிப்பு முடிஞ்ச களைப்புல இருந்தா. அவள் கார்லேர்ந்து இறங்கினவுடனே அவன் பைக்கை விட்டுக் கீழே இறங்கி துப்பாக்கியை நீட்டினான். நாங்க எல்லாம் பயந்துட்டோம். அப்புறம் அவன் முகத்தை மூடியிருந்த கவசத்தை எடுத்துட்டு ஆட்டோகிராப் வாங்கிட்டுப் போக வந்தேன்னு சொன்னான். துப்பாக்கி டம்மின்னு சொன்னான்.'

இனியா அவனை உள்ளே கூட்டிக்கிட்டுப் போய் ஆட்டோகிராப் போட்டுக் கொடுக்கும்போது, அவன்



முகத்தைப் புடிச்சி அமுக்க ஆரம்பிச்சிட்டான். நம்ம வளர்மதி பார்த்துட்டுக் கூச்சல் போட்டாள். நாங்க விலக்கிவிட்டோம். அப்ப என்னன்னா காக்கா வலிப்புன்னு கீழே விழுந்து துடிக்க ஆரம்பிச்சான். உனக்கு ஞாபகம் இருக்கா? நீயும் இனியாவும் கேளம்பாக்கம் பங்களாவுக்குப் போகப் போறீங்கங்கிற செய்தியை இனியா படப்பிடிப்பில்தானே உன்கிட்ட சொன்னா. அப்ப இந்த திலக்கும் அங்கேயே நின்னுகிட்டுத்தானே இருந்தான்? அவனைத் தவிர வேற யாருக்கும் அந்த செய்தி தெரிய வாய்ப்பே இல்லை. மறுநாள் நீச்சல் குளத்துல இனியாவை யாரோ கொல்லப் பார்த்தாங்க இல்லியா? எனக்கென்னவோ அந்த திலக் பையன் மேல சந்தேகமா இருக்கு."

"திலக் இப்ப எங்கே?" என்று கேட்டான் பார்த்திபன்.

"ஏய்... மரியாதையா எனக்கு இணங்கிடு. உன்னைக் கொஞ்சம்கூட சேதப்படுத்தாமே திருப்பி அனுப்பிடறேன். நீ ஏதாவது பிடிவாதம் பிடிச்சேன்னு வைச்சிக்க. எனக்கு அப்புறம் பூவைக்கசக்கி மோந்து பாக்கறதைத்தவிர வேறு வழியே இல்ல" என்று திலக் ஒரு எள்ளல் சிரிப்புடன், கால்கள் இரண்டையும் அகல விரித்து வைத்துக்கொண்டு, வாசல் கதவை அடைத்து நின்று கொண்டு சொன்னான்.

"தயவு செய்து என்னை விட்டுவிடு. என் காதலரை உனக்குத் தெரியாது. அவர் பெரிய இன்ஸ்பெக்டர். அவர்கிட்ட நீ மாட்டினா உன்னை இருக்கற இடம் தெரியாமப் பண்ணிடுவாரு" என்று அவள் மெல்லப் பின்வாங்கினாள்.

"ஏய்... பத்தினித் தெய்வமே. கண்ணகிப் பரம்பரையே. வாடி" என்று திலக் அவளுடைய சேலைத்



MITHRAVINTHA

தலைப்பைக் கொத்தாகப் பற்றி, உருவ, ''கட்'' என்றார் இயக்குநர்.

சேலை உருவப்பட்ட நடிகை சிரித்துக்கொண்டே சேலைத் தலைப்பைப் போட்டுக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தாள்.

திலக் ஒரு சிகரெட்டைப் பற்றவைக்க, பார்த்திபன் அவனை அணுகி ''தொந்தரவுக்கு மன்னிக்கணும்'' என்றான்.

திலக் திரும்பிப் பார்த்தான். சீருடையில் இருந்த பார்த்திபனைப் பார்த்தவுடன் அவன் உதடுகளில் பொருத்தியிருந்த சிகரெட்டு தானாக நழுவியது. விரல் இடுக்கில் இருந்து நீக்குச்சி கீழே விழுந்தது.

''என்ன இன்ஸ்பெக்டர்''

''ஒரு நிமிடம் என் கூட வரீங்களா? ஒரே ஒரு நிமிடம்.''

''எங்கே?''

''மேக்கப் ரூமுக்கு.''

''இதோ வர்றேன்.''

மேக்கப் ரூமில் திலக் நுழைந்தவுடன், பார்த்திபன் உள்ளே நுழைந்து கதவைச் சார்த்திக்கொண்டு, திலக்கின் கன்னத்தில் 'பளீர்' என்று வெடித்தான்.

திலக்கின் உதடு கிழிந்து இரத்த முத்து வெளிப் பட்டது.

''இது படப்பிடிப்பு இல்லை. உண்மையா நடக்கிறது. சொல்லு. ஏன் இனியாவைக் கொன்னே?'' என்றான் சிவந்த விழிகளுடன் இருந்த பார்த்திபன்.



''இன்ஸ்பெக்டர், சத்தியமா நான் இனியாவைக் கொல்லலை இன்ஸ்பெக்டர். இனியாவைக் கொன்னது யாருன்னு எனக்குத் தெரியும். நான் எல்லாம் சொல்லிடறேன்''

''சொல்லு. இனியாவை யார் கொன்னது?''

''அந்த இளங்கோதான்'' என்றான் திலக்.

# 20

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் தன் பாக்கெட்டில் இருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து திலக்கிடம் நீட்டினான். படபடப்பிலும், பரபரப்பிலும் மூச்சிரைத்துக் கொண்டிருந்த திலக் அந்தக் கைக்குட்டையை உடனே வாங்கித் துடைத்துக்கொண்டான்.

''திலக்? இந்த மேக்கப் அறையிலேர்ந்து வெளியே போனா, நான் உன்னை அடிச்சதாவே காட்டிக்க மாட்டேன். உங்கிட்ட ஆட்டோகிராப் வாங்க வந்த ஒரு சாதாரண ரசிகனா என்னைக் காட்டிக்குவேன். அதனால என்ன நடந்தது? நீ எதுக்கு இனியாவை பின்தொடர்ந்து போய் துப்பாக்கி காட்டி மிரட்டினே? அவள் கழுத்தை ஏன் பிடிச்சி அழுத்துனே? இளங்கோ கொன்னான்னு சொல்றியே, அதுக்குக் காரணம்? எல்லாத்தையும் ஒவ்வொண்ணா சொல்லிடு.''

திலக் பெருமூச்சுவிட்டபின் சொல்லத் தொடங்கினான்.

பார்த்திபன் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான், அவன் தோளைப் பற்றிக்கொண்டு கதம்பா

MITHRAVINTHA

உட்கார்ந்திருந்தாள். இளங்கோவின் இருப்பிடத்தை நோக்கி அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். திலக் எல்லாவற்றையும் சொல்லி விட்டான். இனியாவிடம் அவன் பழகியது, அவளைப் புகைப்படம் எடுத்தது, மிரட்டியது, கொன்னுடுவேன் என்றது, அவன் ஸ்டூடியோ எரிந்தது என்று எல்லாவற்றையும் சொல்லி விட்டான்.

திலக்கிற்கு அவன்தான் பட வாய்ப்புகள் பெற்றுத் தந்ததால், இளங்கோ கேட்டுக்கொண்டபடி அவன் இனியாவைப் பின்தொடர்ந்தான் என்றும், அவளை அவளுடைய படுக்கை அறைத் தனிமையில்தான் கொல்ல முடியும் என்ற செய்தியைத் தந்தான் என்றும், கேளம்பாக்கம் நீச்சல் குளத்திற்கு இனியாவும், கதம்பாவும் போக இருக்கும் செய்தியையும் அவன்தான் இளங்கோவிற்குத் தெரிவித்தான் என்றும் திலக் ஒன்று விடாமல் சொல்லிவிட்டான்.

இளங்கோதான் என்பது உறுதியாகிவிட்டது. ஆனால், இளங்கோ கொலை செய்ததை நேரில் பார்த்த சாட்சி எதுவும் இதுவரை இல்லை.

இளங்கோவை 'முறையாக' விசாரித்துவிடுவது என்று தீர்மானித்து, அவன் இருப்பிடம் நோக்கி போய்க்கொண்டிருந்தான் பார்த்திபன். இளங்கோவை அழைத்து ஏதாவது எச்சரிக்கை செய்தால், அப்புறம் திலக்தான் கம்பிகளுக்குப் பின்னால் போக வேண்டியிருக்கும் என்று பார்த்திபன் திலக்கையும் மிரட்டிவிட்டு வந்திருந்ததால் திலக் நிச்சயம் இளங்கோவை அழைத்து எந்தச் செய்தியையும் சொல்ல மாட்டான் என்ற நம்பிக்கை பார்த்திபனுக்கு இருந்தது.

பார்த்திபன் தன்னுடைய பெல்ட்டைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அதற்கு இரை போட்டு ரொம்ப நாட்களாகிவிட்டது.



**மோ**ட்டார்பைக் இளங்கோ இருந்து கொண்டிருந்த பிரதேசத்தில் நுழைந்தது. மிகவும் நெருக்கடியான பிரசமாக இருந்தது. நடைபாதையில் மக்கள் நடக்க இடமின்றி கடைகள். சாலையின் பாதியை அடைத்துக் கொண்டு உள்ளாடைகளும், எவர்சில்வர் பாத்திரங்களும் வளையல், சிப்பன்களும், காதணிகளும், குழந்தை பொம்மைகளும், செருப்புகளும் விற்றுக் கொண்டிருந்தன

அந்தக் கடைகளுக்கு நடுவே இருந்த ஒரு தனிக்கடை பார்த்திபனைக் கவர்ந்தது. அந்தக் கடையில் விதவிதமான கத்திகள் விற்றன. அரிவாள்கள் இருந்தன. பாக்கு வெட்டி, ஸ்க்ரூ, ஸ்பானர் என்று மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் ஆயுதங்கள். கடைக்காரன் இளைஞனாக இருந்தான். பார்த்திபன் மோட்டார் பைக்கை அவன் கடைக்கு எதிரே நிறுத்தினான்.

''இறங்கு கதம்பா'' என்றான்.

கதம்பா புரியாமல் இறங்கினாள்.

கடைக்காரன் சீருடை அணிந்த பார்த்திபன், தன்னை நோக்கி வருவதை லேசான கலவர முகத்துடன் பார்த்தான். எழுந்துகொண்டான். ''சார்?'' என்றான் வெகு பணிவாக.

பார்த்திபன் அங்கு வைக்கப்பட்டிருந்த கத்திகளில் இனியாவைக் குத்த உபயோகப்படுத்தப்பட்ட கத்தி போல் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தான். இருந்தது. ஒரு ஓரத்தில் வட்டமாக ஒரு இருபது கத்திகள் அதன் கூர்முனைகள் ஒன்றையொன்று தொடுகிற மாதிரி அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன.

பார்த்திபன் குனிந்து அவற்றில் ஒன்றை எடுத்தான் விரல்நுனியில் லேசாக அழுத்தினான். கத்தி உள்ளே இறங்கியதே தெரியாமல் இறங்கியது. உடனே விரல்

MITHRAVINTHA

நுனியில் ஒரு இரத்த முத்து வெளிப்பட்டது. பார்த்திபனின் விரலில் தெரிந்த இரத்தத் துளியைப் பார்த்து விட்டு கதம்பா பதறினாள்.

''என்ன பார்த்திபன் இது...சின்னக் குழந்தை மாதிரி?'' என்று கேட்டு விட்டு, பொது இடம் என்று கூடப் பார்க்காமல் அவன் விரலை எடுத்து, கதம்பா வாயில் வைத்துக் கொண்டாள். கதம்பாவின் வாய்க்குள் இருந்த மென்மையான வெப்பம் பார்த்திபனுக்கு இதமாக இருந்தது. ஒரு கண நேரத்திற்கு அவன் தன்னை மறந்தான்.

பார்த்திபன் தன் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த இளங்கோவின் புகைப்படத்தை வெளியில் எடுத்தான். நிலைக் கொடுத்தது. கடைக்காரனிடம் அந்தப் படத்தைக் காண்பித்தான்.

''இந்தப் படத்துல இருக்கிற ஆளை உனக்குத் தெரியுமா?''

கடைக்காரன் படத்தைப் பார்த்தான். அவன் முகம் மலர்ந்தது.

''இந்த ஆளை எனக்கு நல்லாவே தெரியும் சார். இதோ இந்த பக்கத்து சந்துலதான் இருக்காரு. நாலாவது வீடு மெத்தை மேல. சின்ன ஸ்டூடியோ வெச்சிருக்காரு. கொஞ்சம் பைத்தியம் பிடிச்ச மாதிரி நடந்துக்குவாரு. திடீர்னு தொள, தொளன்னு ஒரு பாண்டை மாட்டிட்டு போவாரு. திடீர்னு அதுவே டைட் பான்ட்டா மாறிடும். தாடி வைப்பாரு. எடுப்பாரு. மீசை வைப்பாரு. எடுப்பாரு. ஒருநாள் காதுல வளையம் மாட்டுவாரு. ஒருநாள் கையில காப்போட போவாரு. எங்கிட்ட இவர் நீங்க காட்டின மாதிரி ஒரு கத்தி வாங்கினார் சார். சரி, எப்பவும் போல ஏதோ பைத்தியக்காரத்தனமா கத்தி வாங்கறாருன்னு நினைச்சேன். ஏன் சார்? அவர் ஏதாவது தப்பு பண்ணிட்டாரா?''



''இந்தக் கத்தியை எனக்கு ஒரு பேப்பரில் சுற்றிக் கொடு'' என்றான் பார்த்திபன். கடைக்காரனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல்.

கடைக்காரன் சுற்றிக் கொடுத்தான். பார்த்திபன் அதற்கு உண்டான பணத்தைக் கொடுத்தான்.

''கதம்பா? நீ இங்கேயே வளையல், காதணின்னு ஏதாவது பார்த்துக்கிட்டிரு. நான் போய்ட்டு வந்துடறேன்'' என்றான்.

கதம்பாவின் பதிலுக்குக் காத்திராமல் சட்டென்று பக்கத்து சந்தில் புகுந்து நடந்தான்.

நான்காவது வீடு. வீட்டின் பக்கவாட்டில் மாடிப் படிகள் குறுகலாக மேலேறின. வீட்டைச் சுற்றி சாக்கடை அகழி போல் ஓடிக்கொண்டிருந்தது காற்றில் சாக்கடையின் நாற்றம் சேர்ந்திருந்தது. இருட்டாக, குறுகலாக மேலேறிய படிகளைப்பார்த்தான் பார்த்திபன். பூட்சுகள் சத்தம் எழுப்பாத வண்ணம் மெல்லப் படிகளில் ஏறினான். படிகளின் முடிவில் கதவு. கதவில் பூட்டு தொங்கியது. பார்த்திபனுக்கு ஏமாற்றமாக இல்லை. ஒரு வகையில் அதை அவன் எதிர்பார்த்திருந்தான். இளங்கோவை அவன் எதிர்பாராத நேரத்தில் மடக்க வேண்டும். அப்போதுதான் உண்மைகள் எல்லாம் தண்ணீரில் அழுத்தப்பட்ட பந்துபோல் திமிறிக்கொண்டு மேலே வரும் என்று நினைத்தான்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து மாடிப்படிகளில் செருப்புச் சத்தம் கேட்டது கூடவே விசில் சத்தமும் கேட்டது. பார்த்திபன் எச்சரிக்கை அடைந்தான். விறைப்பானான். இளங்கோவை எதிர்பார்த்து அவனது நரம்புகள் எல்லாம் மெல்ல மெல்ல முறுக்கேறிக் கொண்

MITHRAVINTHA

டிருந்த நேரத்தில், திடீரென்று கீழே அந்த உரையாடல் நிகழ்ந்தது.

"தம்பி இளங்கோ" என்று வயதான ஒரு பெண் குரல் அழைத்தது.

"என்னம்மா?" என்று இளங்கோவின் குரல் கேட்டது.

"நீ ஒழுங்கா வாடகை தந்திடறேங்கறது எல்லாம் சரிப்பா. ஆனா, நாங்க கவுரமானவங்க. கவுரவப்பட்டவங்க வாழுற வீடு இது. இந்த வீட்டுக்கு போலீஸ்காரங்க வர்றதும் போறதும் நல்லாவா இருக்கு? உன் கவுரவத்தைப் பத்தி எங்களுக்கும் சந்தேகமா இருக்கு. இப்பக்கூட கொஞ்ச நேரத்துக்கு முன்னால ஒரு இனிசுபைட்டரு மேல போனாரு, எங்க வீட்டுல பயப்படறாங்க தம்பி, நீ வேற எடத்தைத் தேடிக்கப்பா."

"இன்ஸ்பெக்டர் வந்தாரா?"

"ஆமாப்பா."

"உங்களை எதுவும் கேட்டாரா?"

"இல்லப்பா, அவர் மேல போனதைப் பார்த்தேன்."

"திரும்பிப் போயிட்டாரா."

"அதை நான் பார்க்கலைப்பா."

இளங்கோ நிச்சயம் மேலே வரமாட்டான் என்று பார்த்திபனுக்குத் தோன்றியது. இனிமேலும் அவன் அங்கேயே பதுங்கி இருந்தால் பட்சி பறந்துவிடும் என்று தோன்றியது. பார்த்திபன் மெல்ல பெல்ட்டை உருவினான்.

சட்டென்று மறைவிடத்தில் இருந்து வெளிப்பட்டு படிகளில் இறங்கினான். அவன் இறங்கியதால் ஏற்பட்ட



சின்ன சலனம் இளங்கோவிற்குப் போதுமானதாய் இருந்தது. இளங்கோ தலைநிமிர்ந்து ஓணான் பார்ப்பது போல் பார்த்தான்.

படிகளில் பார்த்திபன் ஒவ்வொரு அடியாக புலிபோல் இறங்குவதைக் கண்டான். அவ்வளவுதான். இளங்கோ சரேல் என்று திரும்பினான். ஓடத்'தொடங்கினான்.

பார்த்திபன் படிகளில் சரிந்தான். இளங்கோவின் பின்னால் ஓடினான். இளங்கோ அந்த சந்தில் இருந்து கடைகள் நிறைந்த சாலையில் திரும்ப பார்த்திபன் பூட்ஸ் கால்கள் தடதடக்க பெல்ட் கைகளில் ஊசலாட அவன் பின்னால் சென்றான்.

இளங்கோ பயத்தில் இருந்தான். பதற்றத்தில் இருந்தான். அதனால் ஓர் இலக்கின்றி ஓடினான். எதிரில் வந்தவர்களை மோதினான் மோதப்பட்டவர்கள் கடைகளின் மேல் விழுந்தார்கள். இளங்கோ ஒரு காய்கறி கடையின் சேனைக்கிழங்கு குவியல் மேல் கால் வைத்துத் தடுமாறி விழுந்து எழுந்தான். பிளாஸ்டிக் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய பிளைவுட் சதுரத்தை மோதிக் கவிழ்த்தான். அவன் தப்பித்து ஓடப் பாதை சீராக இல்லை. மக்கள் அத்தனை பேரும் பய முகங்களுடன் வேடிக்கை பார்த்தார்களேயொழிய யாரும் இளங்கோவைப் பிடிக்க முன்வரவில்லை.

கத்தி விற்ற கடைக்காரன் இளங்கோவையும் துரத்திக் கொண்டு வந்த பார்த்திபனையும் பார்த்துவிட்டான். அவன் சட்டென்று பாய்ந்து வந்து இளங்கோவின் ஓட்டத்தை தடை செய்யப் பார்க்க, இளங்கோ அவனை ஒரு மோது மோதினான். கத்தி கடைக்காரன் அப்படியே அவனுடைய கடைப் பொருட்களின் மேல் விழுந்தான்.

இருந்தும் தன் கால்களில் ஒன்றை இளங்கோவின் கால்களுக்குக் குறுக்கே நுழைத்து எடுத்தான். இளங்கோ கீழே விழுந்து உருண்டான்.

MITHRAVINTHA

எழுந்து கொள்வதற்குள் பார்த்திபனின் பெல்ட் நுனி அவன் இடுப்பைப் பாம்பின் நாக்கு போலத் தீண்டியது.

அடுத்த அடி அவனை இன்னொருமுறை உருளச் செய்தது.

மல்லாந்து விழுந்த இளங்கோவின் மார்பில் பார்த்திபனின் பூட்சு கால் பதிந்தது.

"இல்லை. இல்லை. இல்லை. நான் சத்தியமா இனியாவைக் கொல்லலை" என்று கத்தினான் இளங்கோ.

அவன் பார்த்திபனின் போலீஸ் ஸ்டேசன் லாக்கப்பில் இருந்தான். அவனது உதடு கிழிந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. சுவரில் சாய்ந்து நின்றிருந்தான். அவன் முகத்தின்மேல் ஒரு விளக்கு வெப்பமான வெளிச்சத்தைப் பொழிந்து கொண்டிருந்தது. முகமெங்கும் வியர்வை வெள்ளம்.

பார்த்திபன் அவன் கால்களில் முட்டிக்குப் பின்னால் கழியைக் கொடுத்து அழுத்தி அடிக்கலாமா என்று யோசித்தான். அடிக்க வேண்டாம் என்று தீர்மானித்தான்.

"சரி, இனியாவை நீ கொல்லலை. ஒத்துக்கறேன். நான் கேக்கற கேள்விக்கெல்லாம் உண்மையான பதில் சொல்லணும்."

"எனக்குப் பசிக்குது."

"பசிக்குதா? ரைட். அண்ணே" என்றான்.

"என்ன தம்பி?" என்றார் கான்ஸ்டபிள் இருதயசாமி

"இவனுக்குப் பசிக்குதாம். என்ன வேணும்னு கேளுங்க. வாங்கிக் கொடுங்க."



"என்ன தம்பி நீ. புடிச்சி நாலு இழுப்பு இழுப்பியா. அதை விட்டுட்டு" என்றார் இருதயசாமி, மூண்டெழுந்த கோபத்துடன்.

"பசிங்கறது வேற அண்ணே. அது எல்லாருக்கும் இயல்பா வர்ற உணர்வு.பசிக்குத் தீனி போடாம இருக்கக் கூடாது இளங்கோ! சொல்லு. என்ன சாப்பிடறே?"

"சிக்கன் பிரியாணி, மீன் வறுவல், சோறு, மீன் குழம்பு, பட்டர் சிக்கன்."

"போதுமா? இன்னும் வேணுமா?"

"போதும்."

"சரி" என்று திரும்பிய பார்த்திபன் "இவன் சொன்ன எல்லாத்தையும் நிறையவே கொண்டு வரச் சொல்லுங்கண்ணே" என்று கட்டளையிடும் குரலில் சொன்னான்.

இருதயசாமி முகத்தைச் சுளித்துக் கொண்டு வெளியேறினார்.

பல நாள் பட்டினி கிடந்தவன் போல் இளங்கோ அள்ளி அள்ளி உண்டான். தண்ணீர் குடித்தான். திருப்தியாக ஒரு ஏப்பம் விட்டான். உண்ட மயக்கத்தில் அவன் கண்கள் செருகின. கண்களை மூடிக்கொண்ட நேரத்தில், பார்த்திபன் அந்த லாக்கப்பில் நுழைந்தான்.

இளங்கோவின் முகத்தில் ஒரு குவளை நீரை ஊற்றினான்.

இளங்கோ திடுக்கிட்டுக் கண்விழிக்க, பார்த்திபனின் உத்தரவின் பேரில் இளங்கோவை இரண்டு கான்ஸ்டபிள்கள் எழுப்பி நிறுத்தி, அவன் கைகளை உயரத் தூக்கி சங்கிலியில் பிணைத்தார்கள்.

MITHRAVINTHA

"இளங்கோ! நீ உண்மைகளைச் சொல்ற வரைக்கும் உன்னைத் தூங்க விடமாட்டேன். வயிறாரச் சாப்பிட்ட அப்புறம் தூங்காம முழிச்சிட்டிருக்கிறது எவ்வளவு கொடுமையான விசயம்னு உனக்குத் தெரிஞ்சிருக்காது. இதுநாள் வரைக்கும் தூங்கியிருப்பே. இங்கே உனக்குத் தூக்கம் கிடையாது. உண்மையைச் சொல்ற வரைக்கும் இப்படித்தான் உம்மூஞ்சில தண்ணி ஊத்தி உன்னைத் தூங்கவிடாமப் பண்ணிக்கிட்டேயிருப்பாங்க. என் ஆளுங்க. அடி உதைங்க எல்லாம் கொண்டு வராத உண்மைகளை இந்த சிகிச்சை கொண்டு வந்திடும். சொல் விடுப்பா. நீ கேளம்பாக்கம் நீச்சல் குளத்துக்குப் போனியே அதுக்கு சாட்சி இருக்கு. கத்தி வாங்கினதுக்கு சாட்சி இருக்கு. இனியாவை எப்படிக் கொன்னேன்னு மட்டும் சொல்லிடு" என்றான் பார்த்திபன் குறும்பான சிரிப்புடன்.

இளங்கோ இமைகளை மிகச் சிரமப்பட்டுத் திறந்தான். கல் கட்டித் தொங்க விட்ட மாதிரி அவன் இமைகள் மூடிக்கொள்ள, அவன் முகத்தில் ஒரு குவளை நீர் பாய்ச்சி அடிக்கப்பட்டது. இந்த முறை கடுநீர்.

"ஐயோ" என்று அலறினான் இளங்கோ.

# 21

"ஐயோ..." என்று இளங்கோ இன்னொருமுறை அலறினான். "நிறுத்துங்க என் முகத்தில் தண்ணி ஊத்தாதீங்க. என்ன நடந்ததுன்னு சொல்றேன்" என்று மூச்சிரைக்கக் கத்தினான்.



பார்த்திபன் கண்களாலேயே தண்ணீர் ஊற்றும் செயலைத் தடுத்து நிறுத்தினான்.

"சொல்லு" என்றான்.

இளங்கோ கண்கள் செருகச் செருகப் பரிதாபமாகப் பார்த்திபனைப் பார்த்தான்.

"இனியாவைக் கொல்ல நினைச்சது உண்மைதான் இன்ஸ்பெக்டர். ஆனால் நான் இனியாவைக் கொல்லலை."

"இதை நம்பச் சொல்றியா?"

"சத்தியமா நான் கொல்லலை இன்ஸ்பெக்டர்."

"நீ இனியாவை போன்ல கொன்னுடுவேன்னு சொல்லி மிரட்டலை? எப்படி...எப்படி அது? அடி இனியா. என்னவளே. நேத்து வரைக்கும் இனிச்சவளே. உன் கடைசி ஆசைன்னு ஏதாவது இருந்தா உடனே நிறைவேத்திக்கம்மா. உடனே நிறைவேத்தலேன்னா எப்பவுமே நிறைவேத்த முடியாது.ஏன்னு கேக்கறியா? ஏன்னா, நான் உன்னைக் கொல்லப் போறேன். சரியாச் சொன்னேனா? இப்படிச் சொல்லித்தானே நீ இனியாவை மிரட்டினே?"

"இனியாவை நான் போன்ல கூப்பிட்டு மிரட்டினது உண்மைதான் இன்ஸ்பெக்டர். அவளால்தான் என்னுடைய போட்டோ ஸ்டுடியோ எரிஞ்சிபோச்சி. என் வாழ்க்கையே அழிஞ்சிபோச்சி. அதனாலதான் எனக்கு அவளைக் கொல்லணுங்கற வெறி வந்தது.

திலக் என் நண்பன். அவன் சினிமாவில நடிகனா நுழையறதுக்கு நான் உதவி பண்ணினேன். அவன் எனக்கு எப்படியாவது தன்னோட நன்றிக்கடனைச் செலுத்தணும்னு நினைச்சான். அதனால இனியாவைப் பற்றின செய்தியை எல்லாம் எனக்குத் தெரிவிக்கச் சொன்னேன்.

MITHRAVINTHA

"இனியாவை எந்த நேரத்தில் நான் கொல்ல முடியும் கிறதை உளவு பார்த்துச் சொல்லு'ன்னு சொன்னேன். இனியாவோட ஒவ்வொரு அசைவையும் அவன் பார்த்துப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான்.

கேளம்பாக்கம் நீச்சல்குளத்துக்கு அவன் தன்னோட தோழியோட தனியாப் போகப் போறாங்கிற செய்தியை இவன் எனக்குக் கொடுத்தவுடனே, இனியாவைக் கொல்ல இதைவிட்டா வேற தருணம் கிடைக்காதுன்னு நினைச்சேன். நீச்சல் குளத்தில் வைச்சே இனியாவைக் கொல்லணும்னு நினைச்சேன். முதல்நாள் இரவே நான் கேளம்பாக்கம் பங்களாவுக்குப் போயிட்டேன்

இனியா எப்படியும் நீச்சல்குளத்துக்கு வருவான். குளிப்பான். அவனை அப்படியே தண்ணிக்கு அடியில் இழுத்து, மூச்சுத் திணற வைச்சிக் கொன்னுடம்னு காத்துக்கிட்டிருந்தேன். ஆனால், மறுநாள் விடிய, விடிய என் நரம்பெல்லாம் துடிக்க ஆரம்பிச்சிடிச்சி. எனக்குப் போதை மருந்து பழக்கம் உண்டு இன்ஸ்பெக்டர் என் உடம்பு போதை மருந்துக்கு ஏங்க ஆரம்பிச்சிடுச்சி. அதனால்தான் நான் அந்த இடத்தைவிட்டு விலகி வந்துட்டேன். இனியாவை நான் நீச்சல் குளத்துல அமுத்திக் கொல்லவே இல்லை''.

''பொய்'' என்றான் பார்த்திபன் குரலில் ஆத்திரம் தெறிக்க. ''நீ இனியாவைக் கொல்ற முயற்சியில் தோத்துப்போய் ஓடறப்ப, உன் முகத்தைப் பார்த்ததுக்கு சாட்சி இருக்கு. உன் ஒரு காதுல நீ வளையம் மாட்டிக் கிட்டிருந்தியா இல்லையா?''

''வளையம் மாட்டியிருந்தது உண்மை. ஆனால், இனியாவை நான் நீச்சல் குளத்தில் தொடக்கூட இல்லை இன்ஸ்பெக்டர். அதான் உண்மை.''

''நீ சொல்றது உண்மையா, இல்லை பொய்யான்னு இப்பத் தெரிஞ்சுடும். உன் மேல் எத்தத் தப்பும் இல்லைன்னா என்னைப் பார்த்துட்டு ஏன் அப்படி ஓட ணும்?'' என்ற பார்த்திபன் இருதயசாமியை அழைத்து கதம்பாவைக் கூட்டிவரச் சொன்னான்



கதம்பா அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அங்கே இருந்தான்.

''நீச்சல்குளத்தல இனியாவைக் கொல்ல முயற்சி பண்ணிட்டு தோத்துப்போய் ஓடினது இவன்தானான்னு பார் கதம்பா'' என்று அவனிடம் பார்த்திபன் சொன்னான்.

கதம்பா போட்டோவில இளங்கோவைப் பார்த்திருக்கிறான். நேரில் தூரத்தில் இளங்கோ மார்க்கெட்டில் ஓடியபோது பார்த்தான். ஆனால். நீச்சல்குலத்தில் இருந்து எழுந்து ஓடிய முகம், பக்கவாட்டில் காதில் ஒரு வளையம் ஆட அவனைப் பார்த்து நீ விழி விழித்த முகம் அதுதானா என்று அவனால் சரியாகச் சொல்ல முடியவில்லை.

இப்போது பார்த்திபன் அவனை அழைத்துவரச் சொல்லி, 'நீச்சல்குளத்தில் இருந்து தப்பித்து ஓடியவன் அவன்தானா பார்?' என்று பார்த்திபன் கேட்டபோது இளங்கோவைப் பார்த்தான்.

நேராக அந்த முகத்தைப்பார்த்தான். அந்த முகத்தில் இலேசாக முளைத்த தாடி இருந்தது. அந்தக் கண்களில் ஒருவித குரூரம் இருந்தது. உதடுகள் லேசாகத் துடித்துக் கொண்டிருந்தன. மூச்சு உலைத்துருத்தியில் இருந்து வெளிப் படுவதுபோல் புசு, புசு என்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது பார்த்திபன் இளங்கோவின் காதில் ஒரு வளையத்தை வேறு மாட்டிவிட்டான். அவன் இளங்கோவை எல்லா கோணங்களில் இருந்தும் பார்க்கிற மாதிரி அவனுக்கு வாய்ப்புகள் அமைத்துத் தந்தான். சுற்றிச் சுற்றி

MITHRAVINTHA

வந்து பார்த்தும் கதம்பாவின் உள் மனம் 'அவனில்லை' 'அவனில்லை' என்று ஆர்ப்பரித்தது.

நீச்சல் குளத்தில் நீரில் இருந்து எழுந்து ஓடியவனின் பக்கவாட்டு முகத்திற்கு மூக்கு இன்னும் சற்று நீளம், விழிகளில் சிவப்பும், கொடூரமும் இன்னும் அதிகம். இளங்கோவின் முகத்தில் ஒரு எலியின் கோழைத்தனம் தெரிந்தது. அவன் பார்த்த முகத்தில் இந்த கோழைத் தனம் இல்லை

கதம்பா தலையை வலதும் இடதுமாக அசைத்தாள். ''இவனில்லை'' என்றாள் முகத்தில் ஏமாற்றம் வெளிப் படையாய்த் தெரிய. பார்த்திபனின் முகத்திலும் அந்த ஏமாற்றம் பிரதிபலித்தது.

அந்த இருவர் முகங்களிலும் தெரிந்த ஏமாற்றம் இளங்கோவின் முகத்தில் புன்முறுவலை வரவழைத்தது.

''நான்தான் சொன்னேனே. நான் இனியாவை நீச்சல் குளத்தில் தொடக்கூட இல்லை. அந்த நேரத்துல நான் போதை மருந்து வாங்கப் போயிருந்தேன். ஒரு தொலைக்காட்சியிலேர்ந்து வேறு என்னை அந்தநேரத்தில் வந்து பேட்டி எடுத்தாங்க. என் பேட்டி அந்த தொ.கா. யில் ஒளிப்பரப்பாச்சி.''

பார்த்திபன் மேலும் ஏமாற்றமாக உணர்ந்தான். வலையில் சிக்கிய மீன் துள்ளிக் குதித்து மறுபடியும் நீரில் நழுவிவிட்ட மாதிரி இருந்தது அவனுக்கு.

''இன்பெக்டர்! கேளம்பாக்கத்துல நான் இனியாவை சாகடிக்க முடியலேங்கறது எனக்குப் பெரிய ஏமாற்ற மாவே இருந்தது. அதனால இனியாவை எப்படியும் முடிச்சிடணும்னு நான் ஒரு கத்தியை வாங்கினேன். இனியாவைத் தேடிக்கிட்டுப் புறப்பட்டேன்- நான் கீழே



இறங்கி வந்திருப்பேன். என்னை ஒரு இன்ஸ்பெக்டர் கைது பண்ணிட்டாரு.''

''என்னது?'' என்றான் பார்த்திபன் திடுக்கிட்டுப் போய்.

''ஆமாம் சார் வானதின்னு ஒரு குட்டி நடிகை. சமீபத்தில அவளை போட்டோ எடுத்தேன். வானதி தாராளமா கவர்ச்சி காட்டி போஸ் கொடுத்தாள். அந்தப் படங்களை எல்லாம் நான் ஒரு பத்திரிகைக்கு வித்தேன். அந்தப் படங்கள் எல்லாம் ஆபாசமா இருக்குன்னு போலீஸ்ல பத்திரிகையைத் தடைப்பண்ணிட்டாங்க.

புகைப்படம் எடுத்த என்னையும் கைது பண்ணிட் டாங்க. இனியா கொலையான அன்னிக்கு இராத்திரி தான் போலீஸ் காவலில் இருந்தேன். மறுநாள் கோர்ட்டுல நான் ஜாமீன் வாங்கி வெளியே வந்தேன். எம்மேல இருக்கிற கேஸை வாபஸ் வாங்கணுங்கறதுக்காகத்தான் நான் அரசியல் புள்ளிங்க சில பேரைச் சந்திக்க முயற்சி பண்ணிக்கிட்டிருந்தேன். நான் இந்த ஒரு தடவை ஆபாச புகைப்பட கேஸ்ல மாட்டினேங்கறதுக்காக போலீஸ் காரங்க எங்கே எந்த ஆபாச புகைப்படத்தைப் பார்த்தா லும் சரி, என்னைத் தேடிக்கிட்டு வர்றாங்க நான் அதனால அவங்களுக்குப் பயந்துதான் ஓடிகிட்டிருந் தேன்...''

பார்த்திபன் ஒருமுறை தரையை உதைத்தான்.

இளங்கோ சொல்வது அத்தனையும் உண்மை என்றால், அவன் கொலைகாரன் இல்லை.

பார்த்திபன் கதம்பாவுடன் வெளியேறினான்.

லட்சுமி தொ.கா.வில் இளங்கோவை பேட்டி எடுத் திருந்தார்கள். பேட்டி எடுத்த தேதி, கேளம்பாக்கம்



MITHRAVINTHA

நீச்சல் குளத்தில் இனியாவைக் கொலை செய்ய முயற்சி செய்த அதே தேதி நேரம்கூட ஏறக்குறைய அதே நேரம் தான். அதனால் இனியாவை நீச்சல் குளத்தில் அமுத்திக் கொல்ல முயன்றது இளங்கோ இல்லை.

இரண்டாவதாக, இனியா கொலையான அன்றிரவு, இளங்கோ போலீஸ் காவலில் இருந்த செய்தியும் உண்மை. ஆபாச புகைப்படம் எடுத்ததாக அவன் மீது வழக்குப் பதிவாகியிருந்தது.

இந்த இரண்டு உண்மைகளையும் விசாரித்து அறிந்த பார்த்திபனுக்கு ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

இளங்கோ என்னும் மீன் வலையில் சிக்கிவிட்டதாக அவனும், கதம்பாவும் நினைத்துக் கொண்டிருக்க, அது வலையைக் கிழித்துக் கொண்டே தண்ணீரில் மீண்டும் பாய்ந்துவிட்டது என்று மிகச்சரியாகத் தெரிந்துவிட்டது.

அவனைவிடக் கதம்பாவிற்குத்தான் ஏமாற்றம் அதிகமாக இருந்தது.

''இளங்கோவை விடுதலை பண்ணிடுவீங்களா பார்த்திபன்?''

''கொலை வழக்குலேர்ந்து விடுதலை பண்ணிட வேண்டியதுதான். அவன் பேர்ல இருக்கிற மற்ற வழக்குகளுக்காக அவன் சிறைக்குப் போறதும், வெளியே வர்றதும் நீதிமன்றத்துக்கிட்டத்தான் இருக்கு.''

பார்த்திபன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவன் மேசை மீதிருந்த தொலைபேசி அலறத் தொடங்கியது.

எடுத்து ''அலோ'' என்றான்.

எதிர்முனையில் சற்று நேரம் மவுனம்.



பார்த்திபன் இந்த முறை அதட்டலாக ஒரு ''அலோ'' சொன்னான்.

எதிர்முனையில் இருந்து ஒரு பெண் கேவும் ஒலி கேட்டது. பார்த்திபன் உடனே குரலில் கருணையை வரவழைத்துக் கொண்டான்.

''நான்தான் இன்ஸ்பெக்டர் பார்த்திபன் பேசறேன். நீங்கள் யாராயிருந்தாலும், என்ன சொல்றதாயிருந்தாலும், என்கிட்ட பயப்படாமல் சொல்லலாம்.''

''சார். நான் வளர்மதி பேசறேன் சார்.''

இனியாவின் ஒப்பனைப் பெண்! அந்தச் சின்ன வட்டமான முகமும், மிரட்சி நிறைந்த அந்த முகத்தின் பெரிய கண்களும் பார்த்திபனின் மனதில் நிழலாடின.

''என்னம்மா வளர்மதி?''

''உங்ககிட்ட ஒரு செய்தியைச் சொல்ல விட்டுட்டேன் சார். எனக்குப் பயமா இருந்தது.''

''எது சம்பந்தமா வளர்மதி?''

''இனியாக்கா கொலை தொடர்பா.''

''சொல்லும்மா. பயப்படாமல் சொல்லு எங்க இருந்து பேசறே?''

''இனியாக்கா வீட்டில் இருந்துதான்.''

''யாரும் ஒட்டுக் கேக்கலையேன்னு பார்த்துக்க. அப்படி யாராவது உன்னைக் கண்காணிக்கறாங்கன்னு தோணிச்சின்னா, நீ உடனே வெளியே வந்து ஒருபொதுத் தொலைபேசியில் இருந்து எங்கூடப் பேசு.''

''சரி சார். நான் வெளியே வந்து பேசறேன். நான் இத்தனை நாள் இந்தச் செய்தியைச் சொல்லலையேன்னு என்னைக் கோவிச்சிக்க மாட்டீங்கனே. போலீஸ்னாலே எனக்குப் பயம்.''

MITHRAVINTHA

"சேச்சே. குற்றம் பண்ணாதவங்களுக்கு போலீஸ்காரங்க என்னைக்குமே நண்பர்கள்தாம்மா. நான் உனக்காக இங்கேயே காத்துக்கிட்டிருக்கேன். செய்தியை சீக்கிரம் சொல்லு."

"சரி சார்" என்று தொலைபேசித் தொடர்பு அறுந்தது.

பார்த்திபன் படபடக்கும் நெஞ்சுடன் காத்திருந்தான்.

சிறிது நேரத்தில் தொலைபேசி ஒலித்தது.

"அலோ என்றான் எடுத்து.

"நான்தான் சார்" என்று வளர்மதியின் குரல் கேட்டது.

"சொல்லும்மா."

"பாரிவேலுடைய மனைவி ஒருநாள் பாரிவேலுக்குப் போன் போட்டுப் பேசினாங்க."

"எப்ப?"

"கேளம்பாக்கம் பங்களாவுல இனியாக்காவை நீச்சல் குளத்தில அழுத்திக் கொல்ல முயற்சி பண்ணாங்களே... நீங்க கூட வந்து போனீங்களே. அன்னைக்கு."

"என்னன்னு சொன்னாங்க?"

"இனியாக்காவைத் திட்டினாங்க. சிவப்புத் தோலை வைச்சிக்கிட்டு, இழுத்துக் கட்டின மாரை வைச்சிக்கிட்டு இனியாக்கா, பாரிவேலை மயக்கிட்டதாச் சொன்னாங்க. இனியாக்கா சாகலங்கறதுக்கு ரொம்பத்துக்கப்பட்டாங்க. இனியாக்கா இருந்தாத்தானே பாரிவேல் இனியாக்காக்கிட்ட வந்து அவரோட ஸ்டைலைக் காட்டுவாருன்னு கேட்டாங்க. இனியாக்காவுக்கு தண்ணிலதான் சாவு வரணும்னு இல்ல. அவளுக்கு எங்க, எப்படி சாவுவரணுங்கிறதை நான் பார்த்துக்கிறேன்னு பாரிவேலோட மனைவி ரொம்பக் கோபமாப் பேசினாங்க."



"அப்படியா" என்றான் பார்த்திபன். இனியாவின் கொலைச் செய்தியை அறிந்து அவன் இனியா வீடு நோக்கிச் சென்றபோது, பாரிவேலின் கார் டிரைவர் அந்த இடத்திலிருந்து அவசர அவசரமாகக் காரை எடுத்துக்கொண்டு விலகியது நினைவிற்கு வந்தது.

பாரிவேலின் மனைவியா? பானுவா? அந்த டிரைவரிடம் ஏதோ செய்தி இருக்கிறதா, அதனால்தான் அவன் ஓடினானா? கேட்டதற்கு ஏதோ பதில் சொல்லி மழுப்பினானா?

பார்த்திபன் சட்டென்று ஒரு முடிவிற்கு வந்தான். பாரிவேலின் தொலைபேசி எண்ணைச் சுற்றினான். காத்திருந்தான்.

எதிர்முனையில் போன் எடுக்கப்பட்டு, "அலோ" என்ற பெண் குரல் கேட்டதும், "பானு?" என்று மென்மையாக வினவினான் பார்த்திபன்.

"நான் பானுதான் பேசறேன்" என்றாள் பானு.

"இன்ஸ்பெக்டர் பார்த்திபன் இனியாவைக் கொலை பண்ணிட்டு ஒண்ணுந்தெரியாத பூனை மாதிரி இருந்தா எங்களுக்குத் தெரியாதுன்னு நினைச்சிட்டீங்களா?" என்று அதிரடியாகக் கேள்வி ஒன்றை அணுகுண்டு போல் வீசினான் பார்த்திபன்.

"ஐயோ...இன்ஸ்பெக்டர் நான்தான் கொலைகாரின்னு கண்டு பிடிச்சிட்டீங்களா? ஆமா நான்தான் கொன்னேன். என் கணவர் எங்கிட்டேர்ந்து போயிடக்கூடாதுங்கறதுக்காக நான்தான் அந்த சண்டாளியைக் கொன்னேன்" என்று பானு அழுகையும், விம்மலும் நிறைந்த குரலில் சொன்னாள்.

MITHRAVINTHA

# 22

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், கதம்பா, கான்ஸ்டபிள் இருதயசாமி ஆகியோருடன் பாரிவேலின் வீட்டை நோக்கி ஜீப்பில் சென்றான். போகும் வழியில் எல்லாம் பார்த்திபனின் மனம் பானு சொல்லியதையே மறுபடி மறுபடி அசைபோட்டது.

கடைசியில் பானுவா?

பாரிவேலின் மனைவியா, இனியாவைக் கொன்றவள்,

தன் கணவனைத் தன்னிடமே தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்துவிட்டாளா?

அவளால் எப்படி இனியாவின் படுக்கை அறைக்குள் நுழைய முடிந்தது? எப்படி அவ்வளவு துல்லியமாகத் திட்டம் தீட்ட முடிந்தது? இனியாவின் படுக்கை அறைக்குள் அவளையும் பாரிவேலையும் தவிர யாரும் இருக்கமாட்டார்கள் என்ற செய்தி எல்லாம் எப்படி அவளுக்குத் தெரிந்தது.

பாரிவேலின் வீட்டுக் காம்பவுண்டு கேட் பார்த்திபனின் ஜீப்பைக் கண்டதும் தானாகத் திறந்தது. காவலாளியின் முகத்தில் சவக்களை தெரிந்தது. தண்ணீர் ஊற்றி தோட்டத்துச் செடிகளுக்குப் புத்துயிர் ஊட்டிக் கொண்டிருந்த தோட்டக்காரன் ஜீப்பைக் கண்டதும் தன் செயலை நிறுத்திவிட்டான்.

ஜீப் நின்றது. வேலைக்காரன் ஒருவன் ஓடிவந்தான்.

"அம்மா உங்களுக்காகக் காத்துக்கிட்டிருக்காங்க. பின்னால வரச் சொன்னாங்க" என்றான்.



"பாரிவேள் எங்க?"

"அவர் படப்பிடிப்புக்காக கோவா போயிருக்காருங்க."

பார்த்திபன் தோட்டக்காரன் இட்டுச் சென்ற பாதையில் நடந்தான். வீட்டின் பின்னால் அவுட்-ஹவுஸ் போல ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதன் கதவு மூடப்பட்டிருந்தது.

தோட்டக்காரன் அந்த வீட்டின் கதவைத் தட்டினான். அந்தத் தட்டலுக்காகவே காத்திருந்த மாதிரி கதவு உடனே திறந்து கொண்டது.

கதவைத் திறந்தவள் பானு. பானுமதி.

அவளைப் பார்த்து பார்த்திபன் திடுக்கிட்டான்.

பானுமதி சிகப்பு நிற சேலை அணிந்திருந்தாள். குண்டாக இருந்தாள் முகத்தில் திடீரென முதுமை வந்து குடிகொண்ட மாதிரி தெரிந்தாள். பெரிதான, வட்டமான சிகப்பு குங்குமப்பொட்டு வைத்திருந்தாள் தலைமுடி பின்னால் கண்ணகிக்குப் போல பிரிந்திருந்தது. முகத்தில் சோகம். கன்னங்களில் கண்ணீர்

"வாங்க இன்ஸ்பெக்டர் என்று அழைத்தாள்.

பார்த்திபன் உள்ளே நுழைந்தான். பின்னாலேயே கதம்பாவும், இருதயசாமியும் நுழைந்தார்கள்.

அது அவுட்-ஹவுஸ்தான். அதன் கூடம் பெரிதாய் இருந்தது.

அந்த கூடத்தில் பார்த்திபன் கண்ட காட்சி அவனை மேலும் திடுக்கிட வைத்தது. உடம்பெல்லாம் பட்டை பட்டையாய் திருநீறு பூசிக்கொண்டு, ஒரு பூசாரி கூடத்தில் அமர்ந்திருந்தார். அவர் முன்னால் மந்திரத் தகடுகள் இருந்தன. சின்னதாய் ஒரு யாகச் சதுரம்.

MITHRAVINTHA

அதில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. துணியில் செய்யப்பட்ட பொம்மை ஒன்று இருந்தது. அதன் உடம்பெங்கும் ஊசிகள் குத்தப்பட்டிருந்தன.

பார்த்திபனைப் பார்த்தவுடன், காரை எடுத்துக் கொண்டு ஓடிப்போன பாரிவேலின் கார் டிரைவர் மாணிக்கமும் தலையைக் குனிந்துகொண்டான். அவனும் அங்கு இருந்தான். அவன் நெற்றி முழுக்கத் திருநீறு. அந்தப் பட்டையின் நடுவே ஒரு வட்ட வடிவ குங்குமப் பொட்டு.

பானுமதி, பூசாரி, கார் டிரைவர் மாணிக்கம் மூன்று பேரைத் தவிர அந்த அவுட்-ஹவுசில் வேறு யாரும் இல்லை. ஊதுவத்திப் புகை. சாம்பிராணிப் புகை,

"என்ன இது?" என்று அதிகாரமான தொனியில் கேட்டான் பார்த்திபன்.

மாணிக்கம் கண்களில் நீர் ததும்ப நிமிர்ந்தான். பூசாரி வெலவெலத்துப் போய்ப் பார்த்தார்.

மாணிக்கம் எதையோ சொல்லத் தொடங்க, பானுமதி இடைமறித்தாள்.

"இன்ஸ்பெக்டர் அவனுக்கு ஒன்னும் தெரியாது. அவன் சொல்றதை நம்பாதீங்க."

"என்னப்பா நீ சொல்ல வந்ததை சொல்லு" என்று பார்த்திபன் மாணிக்கத்தைப் பார்த்து அதட்டினான்,

"இனியாவை நான்தாங்க கொன்றேன்" என்றான் மாணிக்கம்.

என்ன இது? கதை திடீர் திடீர் என்று எதிர்பாராத திசைகளில் எல்லாம் திரும்புகிறதே என்று தோன்றியது பார்த்திபனுக்கு.

"என்னய்யா சொல்றே?"



"இன்ஸ்பெக்டர்" என்று வீறிட்டாள் பானுமதி. "நான் சொல்றதைக் கேளுங்க. அவன் சொல்றதைக் கேக்காதீங்க."

"சொல்லுங்க. யாரோ ஒருத்தர் வாய் திறந்து சொல்லுங்க. இது என்ன செட்-அப்? ஏதாவது படம் எடுக்கப் போறாங்களா?"

"இல்ல... இன்ஸ்பெக்டர். இந்தப் பூசாரி எங்க ஊர்க்காரரு. இவர்தான் அந்த குடிகேடி இனியாவைக் கொல்றதுக்கு எங்க ஊர்லேர்ந்து புறப்பட்டு வந்தவரு" என்றாள் பானுமதி.

"ஒரே குழப்பம்" என்றார் கான்ஸ்டபிள் இருதயசாமி. "என்னம்மா, இது நேரத்துக்கு ஒன்னு சொல்றீங்க? முதல்ல நீங்கள்தான் கொன்னதா சொன்னீங்க... அப்புறம் இந்த மாணிக்கம் அவன்தான் கொன்னேன்னுசொல்றான். இப்ப இந்தப் பூசாரிதான் உங்கள் ஊர்லேந்து இனியாவை கொல்றதுக்குப் புறப்பட்டு வந்தாருன்னு சொல்றீங்க. என்ன சொல்றீங்க?"

"இன்ஸ்பெக்டர் அந்த இனியா என் கணவரைப் பங்கு போட்டுக்கறதை என்னால தாங்க முடியலை. என் வாழ்க்கையே அவள் சூன்யமாக்கப் போறான்னு நான் பயந்துட்டேன். நான் எப்ப போன் போட்டாலும் என் கணவர் அந்த சிறுக்கி வீட்ல இருக்கிறதா சேதி வரும். இனியா சாகறதுக்குக் கொஞ்ச நாள் முன்னால இப்படித்தான் ஒரு தடவை, நான் என் கணவருக்குப் போன் போட்டேன். படப்பிடிப்பில் இல்லன்னாங்க. அப்புறம் பார்த்தா கேளம்பாக்கத்துப் பங்களாவுல அவளை யாரோ நீச்சல் குளத்துல வைச்சி சாகடிக்கப் பார்த்தாங்க. பிழைச்சி எழுந்துட்டா... அதான் விசாரிக்கப் போயிருக்காருன்னு சொன்னாங்க. நான் போன்ல அவரைக் கூப்பிட்டுப் பேசினேன். அந்தப் பொம்பளை இருக்கற

MITHRAVINTHA

வரைக்கும்தானே என் கணவர் அவனைத் தேடிகிட்டுப் போக முடியும். அவனே இல்லாமப் பண்ணிட்டா என்னன்னு எனக்கு அப்பத்தான் தோணிச்சி. அதனால தான் எங்க ஊர் பூசாரியைக் கூப்பிட்டனுப்பிச்சேன்.''

''இனியாளவைக் கொல்றதுக்கும் பூசாரியை வரவழைக்கறதுக்கும் என்னம்மா சம்பந்தம்? மறுபடி குழப்பறீங்களே...''

''சம்பந்தம் இருக்கு இன்ஸ்பெக்டர். பூசாரி சாதாரணப்பட்ட ஆளு இல்லை. ஏவல் வைக்கறதில பெரிய ஆளு. இனியாவோட கைக்குட்டை ஒண்ணு எங்கிட்ட இருந்தது. என் கணவர் அவனோட அன்புப் பரிசுன்னு கொண்டுவந்து பீரோவில் பூட்டி வைச்சது. அதை நான் திருடி எடுத்துட்டேன், அதைக் கொடுத்தேன் பூசாரிகிட்டே அதை வைச்சிக்கிட்டே ஏவல்வைச்சி அந்தச் சிறுக்கியைக் கொன்னுடலை?''

''என்னய்யா பூசாரி...''

''ஆமாங்க. அந்தக் கைக்குட்டையை வைச்சி அந்தப் பொண்ணு மாதிரி ஒரு பொம்மை பண்ணி நடுமார்புல ஊசி குத்தி, எங்க ஊரு இரத்தக்காட்டேரியை ஏவி விட்டேங்க. இந்த மாணிக்கம் பயல்தான் அந்த பொம்மையைக் கொண்டு போய் அந்தப் பொண்ணு வீட்டுல வீசினான். அது அந்தப் பொண்ணு இருக்கிற அறைக்குப் பக்கத்துல வளர்ந்து இருக்கிற ஒரு மரத்தில விழுந்து சிக்கிகிச்சாம். இருந்தால் என்னங்க? நம்ம ஏவல் சாதாரணங்களா? அன்னிக்கு இராத்திரியே கத்தியால் குத்துப்பட்டு அந்தப் பொண்ணு செத்துப் போயிடலை?''

''அப்படித்தான் இனியாளவைக் கொன்னதாச் சொல்றீங்களா?''

''ஆமாங்க.''



''அப்படின்னா இனியாளவைக் கத்தி எடுத்துக் குத்தினது யாரு?''

''நம்ப இரத்தக் காட்டேரிதாங்க'' என்றார் பூசாரி. என்னவோ இரத்தக் காட்டேரி அவருக்கு ரொம்பவும் நெருங்கிய சொந்தம் போல-

''முட்டாள்'' என்றான் பார்த்திபன் எரிச்சல் மண்டிய குரலில் அவர்கள் மூன்று பேருடைய அப்பாவித்தனம் அவனை அப்படிச் சொல்ல வைத்தது.

கதம்பாவும், இருதயசாமியும் சிரிப்பை அடைக்கும் வழி தெரியாமல் வாயை மூடிக்கொண்டு சிரித்தார்கள்.

''இப்ப எதுக்காக இந்தப் பொம்மைக்கு இப்படிஊசி குத்தி வைச்சிருக்கீங்க?'' என்று கேட்டான் பார்த்திபன். அவன் பார்வை கீழே கிடந்த பொம்மைமீது படர்ந்திருந்தது.

''இது நம்ப ஐயாவோட பொம்மைங்க. அதுக்குக் கட்டுப் போடறோம்.''

''எதுக்கு?''

''நம்ப அம்மாவைவிட்டு இனிமே வெளியே எங்கேயும் போயிடக்கூடாதுன்னு'' என்றார் பூசாரி பெருமிதம் பொங்க.

பார்த்திபனுக்கு அழுவதா சிரிப்பதா என்றுகூடப் புரியவில்லை.

''நான் கொன்னதை நீங்க எப்படியோ கண்டுபிடிச்சிட்டீங்களேன்னு பயந்துதான் உங்கிட்ட எல்லா உண்மையையும் சொல்லிட்டேன் இன்ஸ்பெக்டர். இனிமே என்னை நீங்க என்ன பண்ணணுமோ பண்ணுங்க. என் கணவருக்கும் கட்டுப் போட்டுட்டதால் அவர் இனிமே என்னை விட்டு எங்கேயும் போகமாட்டாரு.என்னை நீங்க

MITHRAVINTHA

தூக்குல போட்டாலும் சரி. நான் நிம்மதியா செத்துப் போவேன். எப்படி கண்டுபிடிச்சீங்க இன்ஸ்பெக்டர்? மை போட்டுப் பார்த்தா?'

''தூத்தெறி'' என்றார் கான்ஸ்டபிள் இருதயசாமி.

'போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு அது ஒண்ணுதான் குறைச்சல். இனிமேல் இந்த மாதிரி யாரையும் கூப்பிட்டு உளறிக்கிட்டு இருக்காதீங்க. யோவ் பூசாரி, நீ உடனே மூட்டையைக் கட்டிக்கிட்டு ஊருக்குப் போய்ச் சேரு. மாணிக்கம்! நீ எங்க கூட வா. பொம்மையை எங்க வீசினே, அது எந்த மரத்துல சிக்கியிருக்குன்னு காட்டு. என் நேரத்தை நல்லா வீணாடிச்சிட்டீங்க. எல்லாரும் சேர்ந்து கொஞ்ச நேரத்துக்குக் கூத்தடிச்சிட்டீங்களே...'' என்றான் பார்த்திபன்.

மாணிக்கம் ஜீப்பின் பின்னால் அமர்ந்தான். கான்ஸ்டபிள் அவன் அருகில். கதம்பா பார்த்திபனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவனது எரிச்சல் மண்டிய முகத்தை வேடிக்கைப் பார்த்தாள். சிவந்திருந்த முகம் கோபம் கொண்ட குழந்தையுடையதைப் போல இருந்தது. பார்த்திபனின் தொடையில் மெல்லக் கிள்ளினாள்.

அவன் திரும்பினான்.

''பார்த்திபன்! ஒரு கொலை வழக்குன்னா, இப்படித்தான் இருக்கும். தாலு நூல் நுனி தெரியும். ஒவ்வொண்ணாப் பிடிச்சிக்கிட்டுப் போவோம். கடைசியில ஏதாவது ஒரு நூல் நுனியில ஏதாவது மாட்டும். சில சமயம் எந்த நூல் முனையிலயும் எந்த செய்தியும் கிடைக்காது'' என்றாள் குறும்பாக.

''போக்கிரி நான் சொன்னதை எனக்கே திருப்பிச் சொல்றியா?'' என்று அவளை அறைவது போல் அவன் கையை ஓங்க, இனியாவின் வீட்டு வாசலில் ஜீப் நின்றது.



மாணிக்கம் சொன்னபடி ஒரு பொம்மை மரக்கிளை ஒன்றில் மாட்டிக்கொண்டிருந்தது. மரக்கிளையின் மேல் மாணிக்கமே ஏறி அதை எடுத்து வந்து இன்ஸ்பெக்டரிடம் நீட்டினான்.

''சரி நீ போ. இனிமேல் இந்த மாதிரி முட்டாள்தனத்தை இன்னொரு தடவை செய்யாதே.''

மாணிக்கம் விட்டால் போதுமென்று ஓடினான்.

''பார்த்திபன்! இவர்கள் யாரும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கவே மாட்டார்கள் என்கிறீர்களா?'' என்று கதம்பா சந்தேகக் குரலில் கேட்டாள்.

''மூன்று பேரும் அப்பாவிகள் கதம்பா. பானுமதி கிராமத்திலிருந்து வந்தவள். பாரிவேலின் முறைப்பெண். ஆனால், நகரத்துக்கு வந்துகூட அப்பாவித்தனம் போகல. அவள் கத்தியால் குத்திக் கொன்னிருந்தா அவளே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருப்பா. கிராமத்து மக்களுக்கு அந்த தைரியம் எப்பவும் இருக்கும். சூதுவாது எல்லாம் இருக்காது. அதுசரி, இப்ப நம்பளோட அடுத்த நூல் நுனி எது?'' என்று கேட்டான் பார்த்திபன்.

பார்த்திபனும், கதம்பாவும் அங்கே மூளையைப் பிறாண்டிக் கொண்டிருந்த நேரத்தில், இனியாவின் உதவியாளன் மோகன் தன் வீட்டு அறையை தலை கீழாகக் கவிழ்த்துக்கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் திகில், கலவரம் எல்லாம் குடிகொண்டிருந்தது. அறையில் இருக்கும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தேடினான். பீரோ திறந்து பார்த்தான். பீரோவில் இருக்கும் ஒவ்வொரு டிராயரையும் திறந்து பார்த்தான்.

அவன் தேடிய அந்த அயல்நாட்டு சாவிக்கொத்து அவனுக்குக் கிடைக்கவே இல்லை.

MITHRAVINTHA

ஏறக்குறைய இரண்டு மணி நேரம் அவனுடைய வீடு முழுக்க சோதனையிட்ட பின்னர்தான் அவனுக்கு நினைவு வந்தது.

அன்றைக்கு இனியாவின் படுக்கை அறையில் இருக்கும் அலமாரியில் அவன் ஒளிந்திருந்தானே. தக்க தருணத்திற்காகக் காத்திருந்தானே. இனியா தன் படுக்கை அறையில் அவனிடம் தனியாகச் சிக்க வேண்டும் என்பதற்காகத் தவம் இருந்தானே! அலமாரிக் கதவு அடிக்கடி காற்றில் மூடிக் கொண்டது என்பதற்காக அது லேசாகத் திறந்து இருக்க வேண்டும் என்பதற்காக, அவசரத்திற்கு தன் சாவிக் கொத்தை எடுத்துக் கதவு இடுக்கில் வைக்கவில்லை?

ஐயோ ஆமாம். ஆமாம். ஆமாம்.

மோகன்! மோகன் பிசாசே. அந்த சாவிக் கொத்தை அங்கேயே விட்டு வந்துவிட்டாயே. அது உன் உயிர் இல்லையா? உன் உயிரை அதுதானே காக்கும்?

மோகனின் கை கால்கள் எல்லாம் உதறல் எடுத்தன.

சாவிக்கொத்து அவன் உயிரைக் காக்கப் போகிறதா? இல்லை குடிக்கப் போகிறதா?

மோகனுக்கு 'குப்' என்று வியர்த்துவிட்டது.

## 23

உடம்பெங்கும் இருந்த வியர்வைச் சுரப்பிகள் திடீரென்று கபகபவென்று வேலை செய்ததால் மோகனின் உடல் எங்கும் வியர்வை வெள்ளம். பேன்ட் பையில் இருந்து கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டான்.



இப்போது என்ன செய்வது? தன் நினைவு மறதியை நொந்தான்.

அவன் விட்டு வந்த சாவிக் கொத்து இன்னும் அதே இடத்தில் இருக்குமா? அவன் அந்த அறையில் இருந்து வெளியே வந்தபின்புதானே 'கொலை' விவகாரமே உலகிற்குத் தெரியவந்தது அதற்குப் பின் காவல்துறை அந்த அறையை சூழ்ந்து கொண்டது. அவர்கள் போட்டோ எடுப்பதிலும், கைரேகைகளுக்கான பவுடர் போடுவதிலும் மிகவும் மும்முரமாக இருந்தார்கள். நல்லவேளை அவன் கையுறை போட்டுச் சென்றிருந்தான். அதனால் அவன் விரல்ரேகை இனியாவின் படுக்கை அறையில் இருக்க வாய்ப்பே இல்லை.

எப்படியும் அந்த சாவிக் கொத்தை மீட்டு வருவதற்கு இனியா வீட்டிற்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்று தீர்மானித்தான், மோகன். அந்த அறையைச் சோதித்த காவல்துறையினர் யாரும் அந்த சாவிக்கொத்தை ஒரு தடயமாக எண்ணி எடுத்துப் போயிருக்கக் கூடாது. அது அங்கேயே இருக்கவேண்டும். கிடைக்க வேண்டும்.

மோகன் புறப்பட்டான்.

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் அதே நேரத்தில் கதம்பாவுடன் ஜீப்பில் இனியா வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். பாரிவேள் இல்லை என்று நீதிமன்றத்திலேயே தீர்மானமாகிவிட்டது சந்தேக வரிசையில் அடுத்து வந்த இளங்கோ இல்லவே இல்லை என்று வெகு உறுதியாகத் தெரிந்துவிட்டது. வளர்மதி மூலமாக பானுமதியைத் தேடிக் கொண்டு போனால், அவள் என்னவோ ஏவல், சூனியம் என்று சொல்லிவிட்டாள். அவளும் இல்லை பின் யார்?

இனியாவைக் கொன்றது யார்? யாருக்கு இனியாவை கொன்றால் லாபம்? இனியாவைக் கொன்றுவிட வேண்

MITHRAVINTHA

டும் என்ற அளவுக்கு வெறி கொண்டு குத்தியவன் யார்? உண்மையாகவே இனியாவிற்கு நெருங்கியவர்கள் யாரும் இல்லாமல் ஏதோ ஒரு ரசிகன் வந்து அவளைக் குத்தி விட்டுப் போய் விட்டானா? இனியாவின் படுக்கை அறையில் புதிய கைரேகைகள் எதுவும் கிடைக்கவில்லை.

இனியாவுடைய ரேகைகள், பாரிவேலுடைய ரேகைகள், வளர்மதியின கைரேகைகள் ஆகியவைதான் அந்த அறையில் இருநதன. இனியாவைக் குத்திய கத்தியில் கூட பாரிவேலின் கைரேகை பதியவைக்கப்பட்டிருந்ததே தவிர மற்ற கைரேகைகள் எதுவும் இல்லை. கொலைகாரன் அந்த அளவுக்கு புத்திசாலியாய் இருப்பதால்தான் அவனுடைய கைரேகைகள் எதுவும் இல்லாதபடி பார்த்துக் கொண்டிருக்கிறான். யார் அந்த கொலைகாரன்?

திடீர் என்று அவனுக்கு வளர்மதி, மீதே சந்தேகம் வந்தது. பாரிவேலைப் பற்றிய செய்தி கொடுத்ததும் வளர்மதிதான். இப்போது பானுமதி பற்றிய செய்தி கொடுத்ததும் அவள்தான். போலீசிடம் எதையும் மறைக்காமல் சொல்ல வேண்டும் என்பதற்காகச் செய்தி கொடுத்தாளா, இல்லை வழக்கை திசை திருப்பிவிடுவதற்கு அவள இப்படிச் செய்கிறாளா?

வளர்மதியை ஒருமுறை நேரில் பார்த்துப் பேச வேண்டும் என்று தீர்மானித்தான் பார்த்திபன். அதனால் தான் இந்தப் பயணமே.

பார்த்திபன் சிந்தனை வசப்பட்டு ஜீப்பின் முன்னிருக்கையில் உட்கார்ந்திருந்தான். பின்னால் கதம்பாவும் கான்ஸ்டபிள் இருதயசாமியும் ஏதோ விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். விவாதத்தினால் எழுந்த கூச்சலில் சிந்தனை கலைந்து பார்த்திபன் பின்னால் திரும்பிப் பார்த்தான்.



''எனக்கென்னவோ வளர்மதி மேலத்தான் சந்தேகம்'' என்றாள் கதம்பா.

''இல்லம்மா, அந்தப் பொண்ணைப் பார்த்தா அப்படியெல்லாம் தோணலை'' என்றார் இருதயசாமி.

''எனக்குத் தோணுது.''

''எனக்குத் தோணலை.''

''இருதயசாமியண்ணே...நீங்கள் ஆம்பிளை ஆம்பிளைங்க எல்லாம் புத்தியால் செயல்படறவங்க. மூளையை உபயோகிச்சி 'இது இப்படி ஆனா அது அப்படிப் போகும்'னு கணக்குப் போடறவங்க. எங்களுக்கு கணக்கு முக்கியம் இல்லை. என்ன உணர்கிறோமோ அதான் சொல்றோம். என் இதயம் சொல்றதைச் சொல்றேன். இனியாவை ஒரு பொண்ணுதான் கொன்னிருக்கணும்னு என் இதயம் சொல்லுது.

அப்படி இப்படி யோசிச்சா நான் ஒரு பொண்ணு. இனியா கொலையானப்பா நான் ஊர்லயே இல்லை. மேலும் இனியாவைக் கொல்றதுக்குஎங்கிட்ட எந்தக் காரணமும் இல்லை. அடுத்தது வளர்மதி. வளர்மதி இனியாவைக் கொன்னிருப்பாளா? அப்படின்னா அவள் கொல்ல என்ன காரணம்?யோசிச்சிப் பார்த்தால் நிறைய காரணம் இருக்கு. வளர்மதி சின்னப் பொண்ணுன்னாலும் இனியாவைவிட ரொம்ப அழகு. பாரிவேலும் இனியாவும் தனிமையில இருக்கறப்ப எல்லாம் அவளும் கூடவே இருந்திருக்கிறா. பாரிவேன் அவளையும் பாத்திருப்பாரு. அந்த மாதிரி முன் ஒரு தடவை இனியாவைப் பாத்த தாலத்தானே இனியாவை அவள்மேல முன்னேற வழி காமிச்சாரு, அதுக்கு நன்றிக் கடனாத்தானே இனியா தன்னையே அவர்கிட்ட ஒப்படைச்சா.



MITHRAVINTHA

இப்ப வளர்மதியை பாரிவேள் வளைச்சிடலாம்னு பாத்திருப்பாரு. அது இனியாவுக்கும் தெரிஞ்சிபோச்சி. அப்படித்தான் இருக்கணும். ஏன்னா செத்துப் போறதுக்கு முன்னால இனியா எங்கூடத் தனிமையில் பேசிட்டு இருந்தா. அப்ப வளர்மதிகூட இல்லை. நீச்சல்குளத்துல தான் நாங்க ரெண்டு பேரும் இருந்தோம். அப்ப பாரிவேளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னதா எங்கிட்ட சொன்னா. பாரிவேள் அதுக்கு ஒத்துக்கிட்டு முதல்ல ஒரு மோதிரத்தை மாட்டிவிட்டதாகவும் சொன்னா.

இனியாவோட அம்மாவுக்கு இந்தக்கல்யாணத்தில் எந்த மறுப்பும் இல்லை. பொண்ணோட மகிழ்ச்சிதான் தன் மகிழ்ச்சின்னு இனியாவோட அம்மா சொன்னதா இனியாவே எங்கிட்டச் சொல்லியிருக்கா. ஆனால், பாரிவேள் இனியாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா ஒரு கிசுகிசு பத்திரிகையில் வந்தவுடனே பாரிவேள் கொதிச்சிப் போயிருக்காரு. கோவப் பட்டிருக்காரு. பாரிவேள் பானுமதி ஏதாவது சொல்லிடப் போறாளேன்னு கோவப்பட்டிருக்க மாட்டாரு. வளர்மதி தன் வலையில் மாட்டாமப் போயிடப் போறாளேன்னுதான் கோவப்பட்டிருப்பாரு.

நாம்தான் பானுமதியைப் பாத்தோமே கிராமத்துப் பொண்ணு அப்பாவி அவளை யார் வேணும்னாலும் எளிதா ஏமாற்றமுடியும். பாரிவேள் மாதிரி ஆளுங்கள ஏமாத்தறது சிரமம்? வளர்மதியை அவ்வளவு எளிதில ஏமாத்த முடியாது அவள் இந்த சினிமா உலகத்திலேயே பழந்தின்னு கொட்டை போட்டவள் யார், யாரு எப்படில்லாம் நடந்துக்குவாங்கன்னு தெரிஞ்சவள் எங்கே பாரிவேள் தன் கையைவிட்டு நழுவிப் போயிடுவாரோன்னு அவளுக்குத் தோணியிருக்கலாம் பிரச்சினையா இருக்கற இனியாவைக் கொன்னுட்டா என்னன்னு யோசிச்சி இருக்கலாம். அதான் தீர்த்துக்கட்டிட்டா...''



''என்னம்மா இது? நீயே ஒரு தனிக்கதை எழுதிடுவே போல இருக்கே! வளர்மதிக்கு பாரிவேள்கிட்ட ஒரு கவர்ச்சின்னே வைச்சிக்குவோம். பாரிவேள் விசின வலையில் வளர்மதி மாட்டினாளோ, இல்லை வளர்மதி விசின் வலையில் பாரிவேள் மாட்டினாரோ. எப்படியோ இருக்கட்டும். அத்தனை நாரம் தன்னை உயர்த்திவிடத் தயாரா இருக்கிற பாரிவேளை அவள் மாட்டிவிடப்பார்ப்பாளா, அவருடைய கைரேகையைக் கத்தியில் பதிச்சி?''

''அங்கேதான் ரொம்ப நல்லாத் திட்டம் தீட்டியிருக்காங்கன்னு அர்த்தம். பாரிவேள் கொல்லலை. மேலும் அவருக்கு நரம்புத்தளர்ச்சி நோய் இருக்கு. அதை வைச்சி எப்படியும் வெளியே வந்துடலாம். அதனாலத்தான் பாரிவேளைப் பத்தி வளர்மதி அப்படிச் சொல்லியிருக்கா. வளர்மதி சொல்லலேன்னா எப்படியும் இனியாவோட அம்மா சொல்லியிருப்பாங்க. நாமே முந்திக்கிட்டு இதுமாதிரி ஏதாவது சொல்லி, அது இல்லைன்னு ஆயிட்டா, அப்புறம் பாரிவேளையும், பாரிவேளைச் சேர்ந்த வளர்மதியையும் எப்பவுமே சந்தேகப்பட மாட்டாங்கன்னு அவங்க ஒரு நாடகம் ஆடியிருக்கலாம். பானுமதி கொன்னான்னு வளர்மதி சொன்னதுகூட திட்டம் போட்டுத்தான் ஒருவேளை இதில் பானுமதி மாட்டிக்கிட்டா, ரொம்ப நிம்மதி. வளர்மதியும், பாரிவேளும் மகிழ்ச்சியாக இருக்கலாம் இல்லியா?''

பார்த்திபன் அவர்களது பேச்சின் இடையில் நுழையாமல் மவுனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். கதம்பா வழக்கை ஆராய்ந்த விதத்தைப் பார்த்தால், வளர்மதியைத் தவிர வேறு யாரும் இனியாவைக் கொன்றிருக்க முடியாது என்ற முடிவுக்கு அவனைத் தள்ளிவிடும் போலிருந்தது. அவளது அலசும் திறமையை எண்ணி அவன் மனம் வியந்தது. அதேசமயம் வளர்மதிமேல் அவன் கொண்டிருந்த சந்தேகம் வலுத்தது

MITHRAVINTHA

''கதம்பாம்மா. நம்ப ரெண்டு பேரும் இப்படி ஒருத்தருக்கொருத்தர் விட்டுக்கொடுக்காமல் விவாதம் பண்றது சரியில்ல. வளர்மதின்னு நீ சொல்ற இவ்வளவு கொடூரமான கொலையை ஒரு பொண்ணால அதுவும் வளர்மதியால் பண்ணியிருக்க முடியாதுன்னு நான் சொல்றேன். எதுக்கு வீண்சச்சரவு வாயேன் பூவா, தலையா போட்டுப் பார்ப்போம். தலை விழுந்தா வளர்மதி, பூ விழுந்தா வளர்மதி இல்ல. என்ன சரியா?''என்று இருதயசாமி கேட்டது அவன் காதில் விழுந்தது.

பூவா, தலையா போட்டுப் பார்த்து ஒரு குற்றவாளியை முடிவு செய்துவிட முடியாது என்று அவனுக்குத் தெரிந்திருந்தாலும் அந்த விளையாட்டை அவனும் ரசித்தான். பூவா தலையாவின் முடிவு என்னவாய் இருக்கப் போகிறது என்பதை ஆர்வமாய் எதிர்பார்த்தான்.

கான்ஸ்டபிள் இருதயசாமி தன் சட்டைப் பையில் இருந்து ஒரு ஐம்பது காசு நாணயத்தை எடுத்தார். உள்ளங்கையில் வைத்துக் காட்டினார். பின் கையில் எடுத்துச் சுண்டினார். சுண்டிவிடும்போது ஜீப் ஒரு பள்ளத்தில் இறங்கி ஏறியதில் காசு சற்று வேகமாகச் சுண்டிவிடப்பட்டு, அது அப்படியே எகிறி தார்ச்சாலையில் விழுந்து உருண்டோடியது.

கதம்பா சிரித்தாள். இருதயசாமி ஓடிய காசை ஏக்கமாகப் பார்த்தார்.

''என்ன அண்ணே...வளர்மதியா இல்லையா?''என்று கேட்டான் பார்த்திபன் முகத்தில் புன்னகையுடன்.

''தெரியலையே தம்பி'' என்றார் இருதயசாமி ஏமாற்றத்துடன்.

இனியா வீடு. மாதவிதான் அவர்களை வரவேற்றாள்.



''என்னம்மா ஏதாவது செய்தி இருக்கா?'' என்று கேட்டாள் விரக்தியாக. கதம்பாவிற்கு என்ன சொல்லதென்று தெரியவில்லை. தாயுள்ளம் எவ்வளவு தவித்துக் கொண்டிருக்கும் என்று அவளுக்குத் தெரிந்தது. கொலைகாரனைக் கண்டுபிடிக்க அத்தனை முயற்சிகளும் எடுத்து, ஒவ்வொரு முயற்சியிலும் தோற்றுப் போய்க் கொண்டிருப்பதைச் சொன்னால் மாதவி அவர்களைப் பற்றி என்ன நினைப்பாள்? சினிமாவில் எல்லாம் காவல்துறை அதிகாரிகள் இரண்டடி எடுத்து வைப்பார்கள். ஒரு நான்கு தட்டு தட்டுவார்கள். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விடுவார்கள். உண்மையில் அப்படி எல்லாம் எதுவும் நடப்பதில்லையே.

''ரொம்பத் தீவிரமா முயற்சி பண்ணிக்கிட்டிருக்கோம். கூடிய விரைவில் கண்டுபிடிச்சிடுவோம்'' என்றாள் கதம்பா.

''அப்படின்னா ஒண்ணுமே கண்டுபிடிக்க முடியாதுன்'னு அர்த்தம், அதானே?'' என்று கேட்டு விட்டு, உயிரற்ற சிரிப்பு ஒன்றை வெளிப்படுத்தினாள் மாதவி.

கதம்பா பதிலுக்குச் சிரித்தாள்.''வளர்மதி எங்கம்மா?'' என்றாள்.

''தெரியாதா உனக்கு? அவள் இப்ப இங்கே இல்லையே.''

''அப்படியா?'' என்று கேட்டு விட்டு கதம்பா, பார்த்திபனின் முகம் பார்த்தாள். அவன் கண்களில் ஒருகேள்விக் குறி.

''ஆமாம்மா, இனியா இல்லேங்கறதால அவளுக்கும் வேலை இல்லாமப் போச்சி. அதனால் தனியாப் போறேன்னு பேசயிட்டா. யார்கிட்டேயும் வேலைக்கும் சேரலை. சினிமாவில் நடிக்க முயற்சி பண்ணிக்கிட்டு

MITHRAVINTHA

இருக்கான். இன்னிக்குக் காலையில் கூட இங்கே வந்திருந்தான். ஏதாவது சினிமாக் கம்பெனியில் வாய்ப்பு வாங்கித்தரச் சொல்லியிருக்கிறாள். 'சரி'ன்னேன். சின்னப் பொண்ணு. அதுக்கு யாரு வாய்ப்புத் தருவாங்களோ தெரியலை. என்னதான் முகம் லெட்சுமிகரமா இருந்தாலும் சினிமா உலகத்தில் தூக்கி நிறுத்தறதுக்கு பின்னாடி ஒரு ஆள் இல்லேன்னா, யாராலேயும் முன்னுக்கு வரமுடியாது.''

அப்போதுதான் மோகன் அங்கே வந்து சேர்ந்தான். வீட்டின் உள்ளே இன்ஸ்பெக்டரைப் பார்த்தும் அவன் மனம் 'படபட' வென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது கூடவே மாதவியும் கதம்பாவும். இனியா அவர்கள் இருவரிடமும் என்னென்ன சொல்லியிருக்கிறானோ தெரியவில்லை. மாதவிக்கு அவனைப் பற்றித் தெரியும். அவன் முரடன் என்று மாதவி நேருக்கு நேர் சொல்லியிருக்கிறான். இப்போது இன்ஸ்பெக்டரிடம் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லையே.

மோகனுடைய குற்ற நெஞ்சு குறுகுறுத்த நேரத்தில் பார்த்திபன், மாதவி இருவரும் அவனைப் பார்த்து விட்டார்கள். மாதவிதான் மிரட்டும் தொனியில் அவனைக் கேட்டாள்.

''என்ன மோகன்? இன்னும் இங்கேர்ந்து என்ன வாரிக்கிட்டுப் போலாம்னு வந்திருக்கே? எம்பொண்ணு உயிரோட இருந்து அவள் இரத்தத்தையெல்லாம் வேர்வையாச் சிந்தி நடிச்சி சம்பாதித்த பணத்தை பங்கு போட்டுக்கிட்டுப் போனியே, பத்தலையா? இப்ப எதைப் பங்கு கேக்க வந்திருக்கே? போ. வேற எவளாவது ஏமாந்த பொண்ணு இருந்தால் போய் அவளை உன் சதிவலையில் சிக்கவை. வளர்மதி கூட சினிமாவில் நடிக்கணும்னுதான் இங்கேர்ந்து போயிருக்கான். போய் அவளைப் புடி.



அட்டை மாதிரி அவள்மேல் விழுந்து ஒட்டிக்கிட்டு அவள் இரத்தத்தை உறிஞ்சிக் குடி. போ. போய்டு'' என்று மாதவி அழத் தொடங்கினாள்.

''என்னப்பா?'' என்றான் பார்த்திபன் ''அந்தம்மா என்ன சொல்றாங்க?''

மோகனின் நெஞ்சுக்குழியில் இருக்கும் சின்னப் பந்து வேகவேகமாக மேலும் கீழும் ஏறி இறங்கியது.

''ஒண்ணுமில்ல சார், இனியாம்மா சினிமாவில நுழையறதுக்கு முன்னாலேயே அவங்களோட ஒரு ஒப்பந்தம் போட்டேன் அவங்களை ஏதாவது ஒரு படத்துல நடிக்க வைச்சிட்டா, வர்ற சம்பளத்துல ஒரு பகுதி எனக்குக் கொடுக்கணும்னு ஒப்பந்தம். அது சும்மா இருபது சதவீதம்தான். அதைக் கொடுக்கிறதால மாதவியம்மா என்னை நாயைவிடக் கேவலமா நடத்துவாங்க. அவங்க சம்பாதிச்சதையெல்லாம் நானே வாரிக்கிட்டுப் போய்ட்டதா சொல்லுவாங்க. அந்தக் கோபத்துலதான் கத்தறாங்க,''

''இப்ப எதுக்கு வந்தே?''

''இனியாம்மா நடிச்சிக்கிட்டிருந்த படத்தில் இன்னும் நாலஞ்சி சீன் பாக்கி இருக்கு. டூப் போட்டு படத்தை முடிக்கிறாங்க தொடர்ச்சியாவர உடை இங்கேதான் இருக்கு. அதைக் கேட்டு வாங்கிட்டுப் போக வந்தேன்.''

''உடை எங்கே இருக்கு?''

''அவங்க படுக்கை அறையில். போலீஸ்ல அனுமதி கேக்கணும்னு சொல்லிடுவாங்கன்னு நினைச்சேன். நல்ல வேளை நீங்களே இருக்கீங்க. அனுமதி கொடுங்க சார்.''

''சரி வா'' என்று பார்த்திபன் உடன் நடந்தும் அவன் மனம் வளர்மதியையே சுற்றிச் சுற்றிதான் கொண்டிருந்தது.

MITHRAVINTHA

மோகன் இனியாவின் படுக்கை அறையில் நுழைந்து அலமாரியைத் திறந்தான். தான் வைத்த இடத்தில் அந்த சாவிக்கொத்து இருக்கிறதா என்று பார்த்தான். அங்கு இல்லை. மேல் தட்டில் இருந்தது. அவன் இதயம் ஒரு முறை புரண்டு எழுந்தது. பார்த்திபனின் பார்வையில் படாதவண்ணம் அதைக் கிளப்பி தன் பையில் போட்டுக்கொண்டு ஓர் உடையை எடுத்தான். "இதான் சார்" என்றான்.

பார்த்திபன் அந்த உடையை வாங்கிப் பார்த்தான், சந்தேகப்பட ஒன்றுமில்லை என்று தீர்மானித்து உடையை மோகனிடமே கொடுத்தான்.

"இந்தா எடுத்துப் போ,"

மோகன் அவசர அவசரமாகப் புறப்பட்டு வாசல் நோக்கிப் போனான்.

"ஒரு நிமிடம்" என்றான் பார்த்திபன்.

மோகனின் கால்கள் கடிவாளமிழுத்து நிறுத்தப்பட்ட மாடு போல் நின்றன. திரும்பிப் பார்த்தான். "என்ன சார்?"

"எந்த சினிமாக் கம்பெனி என்று சொல்லு. போன் போட்டு அவங்க உடை கேட்டது உண்மைதானா என்று தெரிஞ்சிக்கிட்டு உன்னை அனுமதிக்கிறேன்" என்றான் பார்த்திபன்.

மோகனின் தலையில் இடி இறங்கியது போல் ...ந்தது.
சிக்க...
இங்கே...



# 24

இன்ஸ்பெக்டர் பார்த்திபன் மோகனிடம் அவ்வாறு சொன்னதும் மோகனின் தலையில் இடி இறங்கியதுபோல் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால், அவன் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

இனியாவிற்குப் பதிலாக ஏறக்குறைய அவளை மாதிரியே இருக்கும் ஒரு நடிகையைப் போட்டுப் படத்தை முடிக்க வேண்டும் என்று அவனிடம் மூன்று நான்கு தயாரிப்பாளர்கள் சொல்லியிருந்தார்கள். தொடர்ச்சியாக வரும் ஆடையைக் கொண்டு வந்து கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் 'இன்றைக்கு இப்போதே கொண்டு வா' என்றுதான் அவனிடம் யாரும் சொல்லியிருக்கவில்லை. இருந்தாலும் மோகன் சாமி மீது பாரத்தைப் போட்டு, "நான் பொய் சொல்றேன்னு நினைக்கிறீங்களா இன்ஸ்பெக்டர்?" என்று கேட்டான்.

இன்ஸ்பெக்டர் பார்த்திபனும் விட்டுக் கொடுக்காமல், "நான் உண்மையை சோதிச்சுப் பார்க்க விரும்பறேன்னு எடுத்துக்கங்களேன்" என்றான் சாமர்த்தியமாக.

"என் மேல நம்பிக்கை இல்லையா? சாமி சத்தியமா நான் சொன்னது உண்மை" என்று மழுப்பி விட்டு நகரப் பார்த்தான் மோகன்.

"எனக்கு சாமி மேலேயே நம்பிக்கை கிடையாது. அப்புறம்தானே ஆசாமியை நம்பறதுக்கு. மிஸ்டர் மோகன்! நான் ஒரு காவல்துறை அதிகாரி. எனக்கு யாரையும் சந்தேகப்பட உரிமை இருக்கு. உண்மையை என்னன்னு தேடற வேலையில் இருக்கிறவன் நான்.

MITHRAVINTHA

அதனால உங்களைக் கேக்கறேன். கொலையாளி யாருனு தெரியணும். அதை உலகத்துக்கு தெரிவிக்கணும்னு தானே நான் பகல்ல நாயாவும், இராத்திரியில பேயாவும் சுத்திக்கிட்டிருக்கேன். எந்த சினிமாக் கம்பெனி உங்களை உடை எடுத்துக்கிட்டு வரச்சொல்லியிருக்குன்னு கேட்டேன். சும்மா ஒரு குறுக்கு சோதனைக்காக. அதுதான் உண்மைன்னா, சினிமாக் கம்பெனி பெயரைச் சொல்றதில் உங்களுக்கு என்ன தயக்கம்?''

''நாலைந்து சினிமா கம்பெனிங்க சார். வெற்றிவேல் மூவிஸ், பாலாஜி கிரியேஷன்ஸ், ராகவேந்திரா புரொடக்ஷன்ஸ், வி.கே.எஸ். டாக்கீஸ்னு ஒரு பட்டியலே இருக்கு. நான் எதைன்னு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்?''

''ரைட் ஒரு கம்பெனியை போன்ல பிடிச்சுக் கொடுங்க.''

மோகன் போனை சுழற்றி இன்ஸ்பெக்டர் பார்த்திபனிடம் நீட்டினான்.

''அலோ...வெற்றிவேல், மூவிஸ்'' என்று எதிர்முனையில் குரல் கேட்டது.

''இன்ஸ்பெக்டர் பார்த்திபன். இனியா கொலை வழக்கை விசாரிக்கிறவன்'' என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, மோகனிடம் உடை எடுத்து வரச் சொன்னது உண்மைதானா என்று விசாரித்தான் பார்த்திபன்.

'ஆமாங்க சார். அவர்கிட்ட சொல்லி நாலைந்து நாள் ஆகுதே. படப்பிடிப்பு நடக்காம நாங்க வட்டி மேல வட்டியா கொடுத்துக்கிட்டிருக்கோம் சார்.''

பார்த்திபன் போனை வைத்துவிட்டான். ''நாலைந்து நாள் ஆச்சாமே. நீங்கள் ஏன் மோகன் இன்னைக்குத் தான் வந்தீங்க.''



''தொழில் சார். உடை மட்டும் கேக்கறாங்க இனியாவுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியை இன்னும் தரலை. இந்தமாதிரி நேரத்தில் காசைக், கேட்டு வாங்கினாத்தான் அவங்களுக்கு வேலை நடக்கணுமேன்னு கொடுப்பாங்க.''

''ஓ.கே. நீங்கள் போகலாம்.''

தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினான் மோகன் நல்லவேளை இன்ஸ்பெக்டர் அவன் சட்டை பேண்ட் முதலியவற்றை சோதனை போட்டுப் பார்க்கவில்லை பார்த்திருந்தால் அந்த சாவிக்கொத்து அவர் கைகளில் சிக்கியிருக்கும். சிக்கியிருந்தால் அது என்னனுடைய சாவி என்ற கேள்வியெல்லாம் எழுந்திருக்கும்.

மேலும், அந்த சாவிக்கொத்து முன்பு தான் வைத்த இடத்தில் இல்லையே மேல்தட்டில் அல்லவா இருந்தது. அறையைச் சோதித்த காவல்துறை ஆசாமிகள் யாராவது அந்தச்சாவிக்கொத்தை கீழேயிருந்து மேல்தட்டில் எடுத்து வைத்திருக்கலாம். ஒருவேளை இன்ஸ்பெக்டர் பார்த்திபனே கூட அதை கீழே இருந்து மேலே எடுத்து வைத்திருக்கலாம்.

எதற்கு விவகாரம். மோகன் ஒரு நிம்மதியான பெருமூச்சுடன் அந்த வீட்டைவிட்டு விலகினான்.

பார்த்திபன் களைப்பாக உணர்ந்தான் இனியா கொலை வழக்கில் அவனால் முன்னேற முடியாததே அவனுடைய களைப்பிற்குக் காரணம். மனக்களைப்புதான் உடல் களைப்பை ஏற்படுத்தியிருந்தது. கொலைக்கான காரணம் ஒழுங்காகத் தெரிந்தால்தான் கொலையாளி இவராக இருக்க முடியும் என்று ஓரளவு யூகிக்க முடியும்.

இளங்கோவிற்கு அவளைக் கொல்ல வலுவான காரணம் இருந்தது. ஆனால், அதுவே இல்லையென்று

MITHRAVINTHA

ஆகிவிட்டது. பானுமதிக்கு இனியாவைக் கொல்வதற்கான காரணம் போதாது. இப்போது வளர்மதி என்று ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. வளர்மதி இனியாவைக் கொல்லவேண்டிய அவசியம் என்ன? பாரிவேலுடன் இணைவதற்காக வளர்மதி இனியாவைக் கொன்றுவிட்டாள் என்று கதம்பா ஒரு கருத்தைச் சொன்னாலும் அந்தக் கருத்துக்கு வலு இல்லை. குடும்பத்தைக் கெடுத்துவிட்டதால் கொலை என்றால் ஒத்துக்கொள்ளலாம். வளரவிடாமல் பண்ணிவிடுவாள் என்று யாராவது கொலை பண்ணுவார்களா. அதுவும் வளர்மதி மாதிரி ஒரு சின்னப்பெண்.

எல்லாமே தன் யூகம்தானே என்று ஒரு ஒருபக்கம் பார்த்திபனுக்குத் தோன்றியது. வளர்மதியை நேரில் பார்த்து ஒருமுறை பேசினால்தான் அவளைப்பற்றிய ஒரு முடிவுக்கு வரமுடியும் என்று நினைத்த பார்த்திபன் தன் நாற்காலியை விட்டு எழுந்தார்.

போன்மணி அடிக்கத் தொடங்கியது

சவுண்ட் என்ஜினீயர் கண்ணனை நீங்கள் மறந்திருக்க முடியாது. இனியாவின் படங்கள் பெரும்பாலானவற்றில் அவர் வேலை செய்தவர். ரிகார்டிங், சவுண்ட் என்ஜினீயர் கண்ணன் என்றால் இயக்குநருக்கு செட்டில் பேசபபடும் வசனத்தைப் பற்றிய கவலையை விட்டு விடுவார். இப்போது பேசும் வசனம் ஒழுங்காக ஒலிப்பதிவு ஆனால்தானே நாளைக்கு டப்பிங்கின்போது உதட்டசைவிற்கு ஏற்ப வசனத்தை, டப்பிங் ஆர்ட்டிஸ்டுகள் சொல்ல முடியும் என்ற கவலையை எல்லாம் இயக்குநர்கள்.ஒலிப்பதிவாளர்கள் கண்ணன்மீது போட்டுவிடுவார்கள் கண்ணனின் வேலை மீது அவர்களுக்கு அவ்வளவு



நம்பிக்கை. வேலையில் அப்படி ஒரு ஈடுபாடு. கவனம் சிதறாமை.

கண்ணனைப் பார்த்தாலே யாருக்கும் கடிந்து கொள்ள மனம் வராது. வயதானவர். தலையில் சிக்கனமாக முடி வைத்திருப்பார். அதில் பாதி நரைத்திருக்கும். பாதி கறுத்திருக்கும். நெற்றியில் எப்போதும் சந்தனத்தைக் குழைத்துப் பட்டையாகப் பூசிக்கொண்டு நடுவில் ஒரு சின்னக் குங்குமப் பொட்டு வைத்திருப்பார். வெயிலில் வேலை செய்யநேரும் போதெல்லாம், தலையில் தொப்பியும், கண்ணுக்குக் குளிர்கண்ணாடியும் அணிந்துகொள்வார். தொப்பிக்குமேல் வானவில்போல் வளைந்த கம்பிகளின் இருமுனைகளிலும் பொருத்தப்பட்ட ஒலிவாங்கிகள் அவர் காதுகளில் தஞ்சம் புகுந்திருக்கும். அனாவசியமாகப் பேசமாட்டார். பீடி, சிகரெட்டு, தண்ணி என்று உடலுக்கு தேவையற்ற எந்தவிதமான வேண்டாத பழக்கமும் அற்றவர்.

ஆண்டவர் நல்லவர்களைத்தானே சோதிப்பது வழக்கம்? ஒரு படப்பிடிப்பில் அவர் மும்முரமாகப் பணிபுரிந்துகொண்டிருந்தபோது அவர் உட்கார்ந்திருந்த இடத்திற்கு நேர்மேலே ஸ்டாண்டில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த விளக்கொன்று, கண்ணனின் தலையில் விழுந்து வெடித்துச் சிதறியதும், இரத்த அலங்கோலமாய் கண்ணன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும், அவருடைய தலையில் கண்ணாடித்துகள்கள்கிழித்தஇடங்களில் எல்லாம் தையல் போடப்பட்டதும், அவருக்கு அப்படியும் நினைவு திரும்பாததும், அவருக்கு எப்போது நினைவு திரும்பும் என்பதைக்கூட உறுதியாகச் சொல்ல முடியாது என்று மருத்துவர் சொன்னதும் பழைய கதை.

கண்ணனுக்குத் திடீரென்று மின்பொத்தானை அழுத்திய மாதிரி நினைவு திரும்பிவிட்டது. கண்ணனின் அருகிலேயே காத்திருந்த அவரது மனைவி, கண்ணன்

MITHRAVINTHA

கண்விழித்ததுகண்டு அப்படியே தரையில் விழுந்து, தான் நம்பி வணங்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்திக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. கண்ணனுடைய மகன், கட்டழகு வாலிபன். அப்பா பிழைத்து எழுந்ததைக் கண்டு அவர் கன்னம் தடவித் தடவி மகிழ்ந்தான்.

கண்ணன் சுற்றுமுற்றும் பார்த்தார். மருத்துவமனை கட்டில், மேலே மின்விசிறி. பற்றும் பற்றாததற்கு குளிர் பதன வசதி கொண்ட அறை.

''என்னப்பா ஆச்சி? ஏன் நான் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கேன்?'' என்று வியப்புடன் வினவியவர் தலையைத் தடவி அங்கே கட்டு போடப்பட்டிருந்ததை உணர்ந்து திடுக்கிட்டார்.

''என்னப்பா ஆச்சி?'' என்று கேட்டார் தீவிரமாக.

அவர் தலையில் விளக்கு விழுந்து வெடித்ததையும், மண்டை உடைந்ததையும், கட்டு போடப்பட்டதையும், அவர் நினைவின்றி மருத்துவமனையிலேயே இருப்பதையும் சொன்னார்கள்

'எத்தனை நாளாச்சிப்பா?'' என்று கேட்டார் கண்ணன் திகைத்துப்போன குரலில்.

''எத்தனை நாளா இருந்தா என்னப்பா? நீங்கள் பிழைச்சி எழுந்துட்டீங்க கோமாஸ்டேஜுக்குப் போனவங்க எல்லாம் மாசக்கணக்கானாலும், ஆண்டுக்கணக்கானாலும் எழுந்துக்காம அப்படியே கிடந்து போய்டுவாங்கன்னு எல்லாம் எங்களை எல்லாரும் பயமுறுத்திட்டாங்கப்பா. நீங்கள் எழுந்தது நாங்க பண்ணின புண்ணியந்தாம்பா ''

''ஆமாங்க. தம்பி சொல்றது ரொம்ப சரிங்க'' என்று என்று அவர் மனைவி வேறு பையனுடைய உரையைப் பரித்து பேசினாள்.



''அதெல்லாம் இருக்கட்டும்மா. இது ஏ.சி. அறை, தனியார் ஆஸ்பத்திரி போல இருக்கு. இங்க நான் மாசக் கணக்கில் இல்ல வாரக் கணக்கில் இல்ல நான்கணக்கில படுத்துக்கிடந்தாக்கூட எனக்கு வர்ற வருமானத்துக்கு ஆஸ்பத்திரி பில்லை எப்படிக் கட்டறதுன்னு நினைச் சிருக்கே?''

''அந்தக் கவலையே நீங்க படவேணாங்க. உங்களுக்கு ஆகிற ஆஸ்பத்திரி செலவை அந்த இனியா பொண்ணு ஏத்துக்கறேன்னு சொல்லிடிச்சி.''

''இனியாவா? தங்கமான பொண்ணாச்சே அது. என்னை வந்து பார்த்துதா?''

''உம்.''

''நல்லா இருக்குதா அது? புறப்படு. உடனே புறப்படும்மா. அதுக்கு நான் நன்றி சொல்லலேன்னா நான் நன்றிகெட்டவனாய்டுவேன் ''

மனைவி தயங்கினாள். மகன் வேறு பக்கம் முகம் திருப்பிக்கொண்டான்

''என்னம்மா? என்ன ஆச்சி? இனியா ஊர்ல இல்லியா? படப்பிடிப்புக்கு எங்கயாவது போயிருக்குதா? எங்க இருந்தாத்தான் என்ன, ரெயிலேறினா போயிடப் போகிறோம்.''

''இனியா செத்துப் போய்ட்டாங்கப்பா.''

''என்னது?''

''ஆமாங்க. எவனோ ஒரு வேண்டாத பாவி அவனை கொன்னுட்டான்ங்க அவள் போனதுக்கு அப்புறம் இந்த ஆஸ்பத்திரி செலவை எல்லாம் பாரிவேள்தான் ஒத்துக்கிட்டிருக்காரு.''

MITHRAVINTHA

"என்னம்மா சொல்றே? இனியாவைக் கொன்னுட்டாங்களா? யார் கொன்னது?"

"தெரியலைங்க."

"போலீஸ்?"

"போலீஸ்ல விசாரிச்சிக்கிட்டிருக்காங்க."

"தம்பி என்னை உடனே ஒரு போன் இருக்கிற இடத்துக்குக் கூட்டிட்டுப் போ. நான் போலீசுக்கு ஒரு முக்கியமான விசயத்தைச் சொல்லணும்."

"அப்பா... நீங்க இன்னும் சரியா ஆகலப்பா. ஓய்வெடுங்க, ஓய்வெடுத்ததுக்கப்புறம்..."

"என்னைக் கூட்டிக்கிட்டு போ தம்பி."

"அலோ" என்றான் பார்த்திபன்.

"ஐயா... நான் சவுண்டு இன்ஜினீயர் கண்ணன் பேசறேன். அங்கே இன்ஸ்பெக்டர் பார்த்திபன் இருக்காருங்களா?"

"பார்த்திபன் பேசறேன்."

"அப்படியா இனியா கொலை பற்றி உங்கிட்ட நான் ஒரு முக்கியமான விசயம் சொல்லணுங்க. நீங்கள் அங்கேயே இருக்கீங்களா? நான் உடனே புறப்பட்டு வரேன்."

"வாங்க" என்றான் பார்த்திபன்.

"ரொம்ப ஆடாதே இனியா. ஐம்பது நூறு ரூபாயக்குப் போய் காமிரா முன்னால நின்னு மேலாடையை எடுத்து விட்டவன்தானே நீ? என் கூட உனக்கு இருக்கிற ஒப்பந்தத்தை மறந்திருக்க மாட்டேன்னு நினைக்கிறேன். நீ சம்பாதிக்கிற பணத்துல இருபது சதவீதம் எனக்குத் தான் சேரணும். என்னை ஏமாத்தலாம்னு நினைச்சி



தயாரிப்பாளருங்கிட்ட தனியா பேசி ஒரு தொகையை வாங்கிக்கிறது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா? இந்த மோகன் பார்க்கிறதுக்குத்தான் அப்பாவி ஆனால், பாஞ்சா புலி. உன்னை நார் நாராக் கிழிச்சிடுவேன். சினிமாவுக்கு ஒரு இனியா இல்லேன்னா இன்னொரு இனியா கிடைச்சிடுவா. மத்தவங்க முன்னால் என்னை அவமானப்படுத்தினே இதான் கடைசி எச்சரிக்கை. உன்னைக் கொன்னுடுவேன். ஞாபகத்தில வைச்சிக்க."

பார்த்திபன் ரிகார்டரை 'கக்' என்று நிறுத்தினான்.

எதிரில் இருந்த கண்ணனை நிமிர்ந்து பார்த்தான்.

"ரொம்பப் பெரிய சண்டையா இருக்கே கண்ணன். எப்படி நீங்கள் இவ்வளவு பெரிய வாக்கு வாதத்தையும் ரிகார்ட் பண்ணினீங்க? மோகன் என்னவோ இனியாவோட பணம் ஐம்பதாயிரத்தை ஏமாத்தப் பார்க்கிறான்னு இனியா குற்றம் சாட்டியிருக்கா. மோகனுக்கு சூது. குடிப்பழக்கமெல்லாம் வேற இருந்திருக்கு போல இருக்கு. மோகன் இனியாவை அதிகாரம் பண்ணிக் கூப்பிட்டிருக்கான்?"

"பட்டன் மைக்னு ஒண்ணு இருக்கு வயர் இல்லாத மைக் அது. அதை சட்டைப் பாக்கெட்லேயோ, போட்டுக்கிட்டிருக்கிற உடையிலேயோ பொருத்திக் கிட்டாப் போதும். ரிகார்ட் பண்ணிடலாம். நான் அந்த முறையில்தான் ஒலிப்பதிவு பண்றேன். இந்த சச்சரவையும் இப்படித்தான் பதிவு பண்ணினேன். இதை நான் சொல்லலாமா கூடாதான்னு நினைச்சிட்டிருந்த நேரத்துல அந்த விபத்து நடந்துடிச்சி. இன்னிக்குத்தான் முழிப்பு வந்தது. எழுந்த உடனே இனியா பாப்பா



MITHRAVINTHA

கொலையான செய்தி தெரிஞ்சது. அதான் இதை எடுத்துக்கிட்டு உங்ககிட்ட ஓடிவந்தேன்.

இனியா ரொம்ப நல்ல பொண்ணுங்க. ரொம்ப தாராள மனசு. கஷ்டப்படறவங்களுக்குக் கேக்காமயே உதவி பண்ணும். எனக்கு ஆஸ்பத்திரி செலவுக்குக்கூட ஏற்பாடு பண்ணியிருக்குது. இவ்வளவு நல்ல பொண்ணைப் போய்க் கொன்னுட்டாங்கங்கறதை என்னால தாங்க முடியல இன்ஸ்பெக்டர். அவளைக் கொன்னவன் யாரா இருந்தாலும் அவன் தண்டனை அடைஞ்சே தீரணும்'' கண்ணனின் குரல் தழுதழுத்தது.

பார்த்திபன் அவர் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

''நான் பார்த்துக்கிறேன் போங்க'' என்றான் கனமான குரலில்.

''அப்படின்னா அந்த மோகன் இனியா வீட்டுக்கு வந்தது வெறும் தொடர்ச்சி உடை எடுத்துட்டுப் போறதுக்கு மட்டும் இல்லேன்னு சொல்றீங்களா பார்த்திபன்?'' என்று கேட்டாள் கதம்பா.

''ஆமா. அவன் வேற எதுக்கோதான் வந்திருக்கான். என்னைப் பார்த்து, தடுமாறித் தடுமாறிப் பேசினானே. உள்ளூர சந்தேகமாத்தான் இருந்தது. ஆனா வெளிக்காட்டிக்க முடியலே.''

''என்ன எடுத்துட்டுப் போக வந்திருப்பான்?'' என்று கேட்டாள் கதம்பா, பைல் ஒன்றின்மேல் பேனாவால் வட்டவட்டமாகப் போட்டுக் கொண்டே.

''அம்மா தாயே. அது ஆபீஸ் பைல். உன் கோலம் போடற பழக்கத்தை அதும்மேலயும் காட்டுறியே. மேலதிகாரி வந்து பார்த்தா என்ன பதில் சொல்றது?''

''உங்க காதலி பண்ணினதுன்னு.''



''சொன்னா விட்டுவிடுவாரா?''

''உம்...அவருக்கு மட்டும் வாழ்க்கையில் காதல் இருந்திருக்காதா? இந்த மாதிரி குறும்புக் காதலி இருந்திருக்க மாட்டாளா? நான் கேட்டதுக்குப் பதில் இல்லையே. மோகன் என்ன எடுத்துட்டுப் போக வந்திருப்பான்?''

''இனியா கொலையான அறைதான் அதுக்கான பதிலைச் சொல்லணும்'' என்றான் பார்த்திபன்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் துப்புறவாக இனியாவின் அறையை ஆராய்ந்த பின், பார்த்திபனுக்கு அந்த வெளிநாட்டு சாவிக்கொத்து நினைவிற்கு வந்தது.

இனியாவின் உடல் இந்த அறையில் இருந்தபோது, அலமாரியின் கதவை மூட முடியாமல் இருந்ததே.

'இருந்ததா? வைக்கப்பட்டதா?'

கதவு மூடாதிருக்க ஒருவேளை வைக்கப்பட்டிருக்கலாம். அந்த சாவிக்கொத்து தவறிப்போய் அங்கே இருக்கிறதென்று மேல்தட்டில் எடுத்து வைத்தேனே. எங்கே அது?

எங்கே அது?

பார்த்திபனின் முகம் மிகத் தீவிரமானது.

## 25

அந்த சாவிக்கொத்தை ஒருமுறை நினைவுத் திரையில் கொண்டுவந்து பார்த்தான், பார்த்திபன்.

MITHRAVINTHA

அது ஓர் அசாதாரணமான சாவிக்கொத்து. சின்ன அளவிலான கத்தி, ஸ்க்ரூடிரைவர், அரம், முள்வாங்கி, நகவெட்டி, சோடா திறப்பான் என்று எல்லாம் பொருந்திய சாவிக்கொத்து. அயல்நாட்டுப் பொருள்.

சற்றுநேரம் அதையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. அரம், முள்வாங்கி போன்றவற்றைத்தவிர, இது ஒரு சாவிவளையும் என்பதற்கு ஆதாரமாக அதில் ஒரே ஒரு சாவி இணைக்கப்பட்டிருந்தது நினைவிற்கு வந்தது.

எங்கே அந்த சாவிக்கொத்து?

சற்றுமுன் வந்த சவுண்ட் இன்ஜினியர் கண்ணன், இன்னும் ஓரிரு நாட்கள் முன்னால் வந்திருக்கக்கூடாதா? இனியாவின் வழக்கில் எல்லாம் தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதையாக இருக்கிறதே!

மோகன் இனியாவின் வீட்டிற்கு வந்ததற்குக் காரணம் உண்மையில் 'தொடர்ச்சி—உடை' இல்லையா? அதற்காகத்தான் வந்தான் என்றால் அவன் ஏன் அவ்வளவு தடுமாறினான்?

சினிமாக் கம்பெனியின் பெயரைச் சொல்ல சொல்லிக் கேட்டபோது ஏன் அவ்வளவு யோசித்தான்?

பார்த்திபன் திடீர் என்று தன் சிந்தனையில் இருந்து விடுபட்டான். சிந்தித்துக்கொண்டே இருந்தால்மோகனை ஒருவேளை பார்க்க முடியாமல் போனாலும் போகலாம் என்று தோன்றியது அவனுக்கு

மாதவியை நோக்கிச் சென்றான்.

கதம்பாவும், பார்த்திபனும் இணையாக நடந்து வரும் காட்சியை மாதவியின் கண்கள் கருணையுடன் நோக்கின. மாதவியின் மனம் நிறைந்து இருப்பதையும்



அதனால் அவளுடைய கண்கள் கருணையை வெளிப்படுத்துவதையும் கதம்பாவால் உணரமுடிந்தது. அவளுக்கு நாணமாகவும் இருந்தது. அதே நேரத்தில் பெருமிதமாகவும் இருந்தது.

பார்த்திபனுடன் இணையாக இருப்பதைப் பார்த்து, அவளுடைய உள்ளக் கிடக்கையை மாதவி அறிந்து கொண்டுவிட்டாள் என்று புரிந்ததால் கதம்பாவிற்கு நாணமாக இருந்தது. அதே சமயம் ஒரு தாயால்தான் மகளின் விருப்பு வெறுப்புகளைச் சரியாக உணர முடியும் என்பதால், அந்தத்தாயின் நிலையில் மாதவி இருப்பது கண்டு பெருமிதமாக இருந்தது. இத்தனைதான் சீராட்டி தாலாட்டி பாராட்டி வளர்த்த மகள் இனியாவை ஒரேயடியாக இழந்தபின்பும், கதம்பாவைத் தன் சொந்த மகளைப் பார்ப்பது போல் பார்க்கும் மாதவியை நெருங்கி அன்போடு அவள் கையைப் பற்றினாள் கதம்பா.

''என்னம்மா? என்னவோ தேடணும்னு வந்தீங்களே, கிடைச்சுதா?''

''கிடைக்கலைங்க. அதான் இப்பப் பிரச்சினையே. இந்த மோகன் எப்படிப்பட்டவன்?''

''அதான் சொன்னேனே இன்ஸ்பெக்டர். இனியா இருந்தவரைக்கும் அவளை நிம்மதியா இருக்கவிடலை. எப்பப்பாரு பணம் பணம்னு அரிச்சிக்கிட்டே இருப்பான். இனியா போனது ஒருவகையில் அவனுக்கும் பெரிய நஷ்டந்தான்.''

''இல்லம்மா'' என்று மென்மையாக மறுத்தான் பார்த்திபன். ''அவன்மேல் எனக்குக் கொஞ்சம் சந்தேகம் வந்திருக்கு. அவனை விசாரிக்கணும். அவன் முகவரி இருந்தாக் கொஞ்சம் தரமுடியுமா?''

''ஓ...தரேன்'' என்று மாதவி உள்ளே போனாள்.

MITHRAVINTHA

அடுத்த நான்காவது வினாடியில் மோகனின் முகவரி பார்த்திபனின் கையில்.

"கதம்பா...வா...நாம் இங்க நேரத்தை வீணாக்க வேண்டாம்" என்று கதம்பாவின் கையைப்பற்றி இழுத்துக் கொண்டு வெளியே வந்தான் பார்த்திபன்.

**மோ**கனின் இருப்பிடம் கடற்கரையை ஒட்டியிருந்த ஒரு மணல் பிரதேசத்தில் அமைந்திருந்தது. அரசாங்கமே முன்பு நாடுவிட்டு நாடுவந்து சேர்ந்த பர்மா அகதிகளுக்கென கட்டிக்கொடுத்த வீடுகள் அந்தப்பிரதேசத்தில் வரிசையாக இருந்தன. இராயப்புரத்திற்கும் காசிமேட்டிற்கும் இடைப்பட்ட பகுதி அது. அந்த பர்மா அகதிகளுக்கான வீடுகள் ஒரு மாதிரி வட்ட வடிவத்தில் இருந்தன. மேலே முன்பு தென்னங்கூரைகள். இப்போது வசதிவாய்ந்த பலர் கான்க்ரீட் கூரைகள் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

மோகனின் வீடு அந்த மாதிரி வீடுகளில் ஒன்று. அந்த வீட்டில் மோகன் தனக்கென்று சில பிரத்யேக வசதிகள்பண்ணிக்கொண்டிருந்தான். அந்தவீட்டிற்கு பின்னால் அவனாக ஒரு பெரிய ஆனால் எளிமையான வீடு கட்டியிருந்தான். மேல்கூரை மங்களூர் ஓடு. வட்ட வீட்டிலிருந்து அந்த வீட்டில் நுழைவதற்காக வட்ட வீட்டின் பின்புறம் அமைந்த ஓர் கதவு. இந்த இரு வீடுகளும் ஒன்றையொன்று தொடர்புகொண்டவைகளாக வெளியே இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாது. அந்த இன்னொரு வீட்டில் தொலைபேசி வசதி இருந்தது.

மோகன் தன் வட்ட வீட்டில் நுழைந்தான். உடனே கதவு சார்த்தினான் தன் கையில் கொண்டு வந்திருந்த சாவியைப் பார்த்தான். அவன் கண்களில் பேராசை



பளிச்சிட்டது. அந்த சாவியைக் கையில் வளையத்துடன் மாட்டிச் சுழற்றிக் கொண்டே, வீட்டின் பின்பக்கக் கதவைத் திறந்தான். சட்டென்று மங்களூர் ஓட்டு வீட்டிற்குள் நுழைந்தான். நுழையுமுன் அவன் வட்ட வீட்டின் கதவையும், மங்களூர் ஓட்டு வீட்டின் கதவையும் சார்த்தினான்.

வீட்டிற்குள் நுழைந்தான். கூடத்தை ஒட்டி ஒரு படுக்கையறை இருந்தது. அந்தப் படுக்கை அறையில் நுழைந்து சுவரோடு சுவராகப் பொருத்தப்பட்டிருந்த ஒரு மர அலமாரியைத் திறந்தான். அலமாரிக்குள் தலையை நுழைத்து, உடலை இடது பக்கமாக வளைத்து கையை அலமாரிக்குள் செலுத்தித் தடவி ஒரு சின்ன கண்ணுக்கு வெகுஎளிதில் புலப்படாத ஓர் ஆணியைப்பிடித்து இழுக்க, கையோடு ஒரு சதுரமான மரப்பலகை வந்தது. மரப் பலகையை அலமாரியின் தட்டில் வைத்தான். மரப்பலகை மூடியிருந்த இடத்தில் ஒரு சின்ன சதுரமான இரும்புக் கதவு தெரிந்தது. மோகன் தன் கையோடு எடுத்து வந்திருந்த சாவியை எடுத்து அந்தக் கதவைத் திறந்தான்.

கதவு திறந்து கொண்டது. உள்ளே இரண்டு புறாக்கள் இடித்துக்கொள்ளாமல் குடித்தனம் நடத்தற அளவிற்கு ஓர் ஓட்டை தெரிந்தது.

மோகன் அதனுள் கையை விட்டான். அவன் எதை அங்கே பத்திரப்படுத்தி வைத்திருந்தானோ அது கிடைத்தது. மோகனின் விரல்கள் அதைத் தொட்டுப் பார்த்த உடனேயே மகிழ்ச்சியில் அவன் முகம் மலர்ந்தது. முகத்தில் ஒரு கூடுதல் ஒளியும், கூடுதல் கவர்ச்சியும் தெரிந்தது.

'அப்பாடா' என்று மோகன் ஒரு பெருமூச்சை விடுவித்த போது, அவனுடைய

MITHRAVINTHA

சன்னமான ஓர் ஒலி கேட்டது. மோகன் ஒரு பாம்புபோல் சரேலென்று திருப்பினான்.

இன்ஸ்பெக்டர் பார்த்திபன், கதம்பாவுடன் மோகனின் வட்டவடிவ வீட்டிற்கு முன்பாக வந்து தன் வண்டியை நிறுத்தினான். கதம்பா கீழே இறங்கினாள். அது ஒரு குறுகலான தெரு. தெருவின் நட்ட நடுவில் அங்கங்கே மனித ஒட்டை சிமெண்ட் மூடிகளைத் திறந்து, சாக்கடையின் உள்ளே அடைந்திருந்த கழிவுகளை வெளியே எடுத்துப் போட்டுக் குவித்து வைத்திருந்ததால் அந்தப் பகுதியே ஒருவித விரும்பத்தகாத நாற்றம் நிறைந்த பகுதியாக இருந்தது.

அவர்களுக்குப் பின்னால் ஐம்பதடி தூரத்தில் ஜீப், ஒன்று குதித்துக் குதித்து வந்து கொண்டிருந்தது. ஜீப்பில் கான்ஸ்டபிள் இருதயசாமி மூக்கை மூடிக் கொண்டு கழியை ஒரு கையால் பற்றிக்கொண்டு வந்தார்.

ஜீப் நின்றவுடன் இறங்கினார்.

''என்ன, தம்பி. இந்த நாத்தத்துக்குள்ளே கூட்டிட்டு வந்து நிறுத்திட்டே?'' என்று பார்த்திபனை மூக்கைப் பிடித்தவாறே கேட்டார்.

''வாழ்க்கைப் பாதை எப்பவுமே ரோஜாப்பூ தூவுனதா இருக்காதண்ணே. நம்ப ஆபீஸ் வேலைசெய்றவங்களா, நாற்காலியிலேயே உக்காந்து வேலையைப் பாத்துட்டு வரதுக்கு? நம்ப வேலை மத்த எல்லா வேலைங்களையும்விட சவாலான வேலைண்ணே. மலையிலேயும் ஏறணும். சாக்கடையிலேயும் இறங்கணும். வாங்க'' என்று சன்னமான குரலில் சொன்னான்.

மோகனின் வீட்டு வாசலை நெருங்கினார்கள். கதவில் கை வைத்தவுடன் அது திறந்துகொண்டது.



உள்ளே நுழைந்தார்கள். வீடு வட்டமாக இருந்தது. ஒரே கூடம். அதுவே பகுதி பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டு மோகனின் உடமைகள் அங்கங்கே இருந்தன.

மோகனின் உடைகளில் சில நைலான் கயிற்றில் தொங்கின, வீட்டின் ஒரு பகுதி வரவேற்பறை போல நாற்காலிகள் போடப்பட்டிருந்தது. சுவரில் மோகனும் இன்னொரு பெண்ணும் சேர்ந்து எடுத்த புகைப்படம் தொங்கியது. இரண்டு பேரும் மணக்கோலத்தில் இருக்க, அந்தப் பெண்ணின் நெற்றியில் இடப்பட்டிருந்த குங்குமமும், அவள் படத்திற்கு மட்டும் போடப்பட்டிருந்த பூச்சரமும் அவள் தற்சமயம் இந்த உலகில் இல்லை என்பதைத் தெரிவித்தன.

''தம்பி, இந்த வீட்ல அந்தப் பயல் இல்லே'' என்று கான்ஸ்டபிள் இருதயசாமி வீட்டைச் சுற்றி வந்துவிட்டுச் சொன்னார்.

''ஒரு விசயம் கவனிச்சிங்களா?''

''என்ன?''

''இந்த வீட்ல சமையல் அறையே இல்ல.''

''அதான் பொண்டாட்டியே இல்ல போல இருக்குதே?'' என்று தான் மிக முக்கியமான விசயம் ஒன்றைக் கவனித்துவிட்ட மாதிரி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னார் இருதயசாமி.

''அதற்காக ஒரு காப்பி டீ போட்டுக்கக்கூடவா எதுவும் இருக்காது. பாத்திரம் இல்ல. ஸ்டவ் இல்ல அது இல்லாமல் இதை எப்படி வீடுன்னு எப்படிச் சொல்றது. சமையல் அறையும் கழிவறையும் இல்லாம ஒரு வீடா. நல்லாத் தேடுங்க'' என்று பார்வையை கேள்விக்

MITHRAVINTHA

குதியோடு படரவிட்ட பார்த்திபன், வீட்டுக்குப்பின்னால் இருந்த கதவைப் பார்த்தான்.

"அந்தக் கதவைத் திறங்க."

இருதயசாமி கதவைத் திறக்கப் பார்த்தார். முடியவில்லை. வெளிப்பக்கம் மூடப்பட்டிருந்தது. இருதயசாமி பரிதாபமாகப் பார்த்தார்.

"வீட்டைச் சுத்தி வந்து பாருங்க" என்றான் பார்த்திபன்.

இருதயசாமி தபதபவென்று வெளியே ஓடினார். அடுத்த நிமிடம் கதவு திறந்தது. இருதயசாமி இன்னொரு ஓட்டுவீட்டின் கதவின் முன்னால் நின்று கொண்டிருந்தது புரிந்தது.

பார்த்திபன் ஓட்டுவீட்டுக் கதவைத் தள்ளினான். அது மூடியிருக்கும் என்று நினைத்துக்கொண்டு கதவை மிக அழுத்தம் கொடுத்துத் திறக்க கதவு படீரென்று திறந்து பைத்தியக்காரத்தனமாகப் பின்வாங்கி வந்தது. பார்த்திபன் ஷூக் காலால் அதைத் தடுத்து நிறுத்தினான்.

வீட்டின் உள்ளே நுழைந்தனர், கதம்பாவும் இருதயசாமியும்.

வீட்டுக்குள் நுழைந்தவுடன் அங்கு நிலவிய அசாதாரணமாக மவுனம்தான் பார்த்திபனைத் தாக்கியது. அந்த வீட்டில் என்னவோ தப்பு இருக்கிறதென்று தோன்றியது. ஒரு மாதிரி தோல் பொசுங்கும் நாற்றம்.

"தம்பி, இது வேற யார் வீடாவோ இருக்கப் போவுது" என்று கிசுகிசுத்தார் இருதயசாமி.

பார்த்திபன் கையில் இருந்த கழியை உயர்த்தி அங்கிருந்த ஒரு அலமாரியைக் காட்டினான்.



பல திரைப்பட விழாக்களில் பல பெரிய தலைவர்களிடம் இருந்து மோகன் பரிசுகளை வாங்கும் புகைப்படங்கள் அந்த அலமாரியில் காணப்பட்டன.

"அப்ப இது மோகனோட சின்னவீடா தம்பி?"

"நேரம் காலம் இல்லாமல் எது பேசலாம், எது பேசக்கூடாது என்ற விவேகம் இல்லாமல் இருதயசாமி பேசிய பேச்சு பார்த்திபனுக்கு எரிச்சல் மூட்டியது.

"மோகன்" என்று அழைத்தான்.

பதில் இல்லை.

"மிஸ்டர் மோகன்" என்றான் மறுபடி உரக்க.

அதற்கும் பதில் இல்லை.

அறை மூலையில் இருந்த கதவு ஒன்று திடீரென்று 'டமால்' என சார்த்திக் கொண்டது.

இருதயசாமி ஒருமுறை துள்ளிக் குதித்தார். கதம்பா பார்த்திபனை நெருங்கி அவனை அணைத்த மாதிரி நின்றாள். அவளுடைய நெஞ்சக்கூட்டின் படபடப்பை அவனால் உணர முடிந்தது. பார்த்திபன் தன் துப்பாக்கியைக் கையில் உருவிக்கொண்டான்.

"யாரங்கே?" என்று கேட்டான்.

வெளியில் இருந்து 'விர்ரென்று' காற்று சுழன்று வீட்டுக்குள் நுழைந்த ஒலி கேட்டது. அது கடற்கரைப் பிரதேசம் என்பதால் காற்றுதான் கதவையும் இழுத்து அறைந்திருக்கும் என்று அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

பார்த்திபன் ஏறுபோல் நடந்து சென்று கதவைத் தள்ளித் திறந்து உள்ளே நுழைந்தான்.

MITHRAVINTHA

அது ஒரு படுக்கை அறை. இரட்டைக் கட்டில்கள், கட்டில் துணி கசங்கி இருந்தது. விரிப்பில் மல்லிகைப் பூக்கள் சிதறியிருந்தன.

அந்த அறையில்தான் தோல் பொசுங்கிய நாற்றம் அதிகமாகத் தெரிந்தது.

திடீரென்று கதம்பா 'வீல்' என்று அலறினாள்.

''அங்கே பாருங்க... அங்கே பாருங்க...'' என்று இடைவிடாமல் கத்தினாள்.

கட்டிலைத் தாண்டியிருந்த பரப்பை அவள் கை சுட்டிக் காட்டியது.

அங்கே—

தரையில் மோகன் கிடந்தான்.

அவன் தலைமுடியில் இருந்து உடல் முழுக்க அங்கங்கே தீக்காயங்கள் தெரிய, மோகனின் கண்கள் திறந்து உறைந்திருக்க, அவன் இறந்து போயிருந்தான்.

# 26

**மோ**கன் சந்தேகத்திற்கு இடமின்றி இறந்து கிடந்தான்.

இறந்து கிடந்தான் என்று சொல்வதுகூட சரியில்லை.. கொலை செய்யப்பட்டுக் கிடந்தான்.

பார்த்திபனுக்கு சலிப்பாய் இருந்தது. இந்த; வழக்கைப் பொறுத்தவரையில் அவன் தேடி வருவதெல்லாம் கானல் நீராய் மாறிக்கொண்டிருக்கிறது.



சவுண்ட் இன்ஜினீயர் கண்ணன் ஒலிப்பதிவு செய்து வைத்திருந்த உரையாடல் ஒன்றை மோகன் மேல் சந்தேகம் வலுவாக ஓர் ஆதாரமாக எடுத்துக் காட்டினார்.

இப்போது மோகனும் இல்லை.

அப்படியானால் இனியாவைக் கொன்றது மோகன் இல்லையா?

இனியாவை மோகன் கொன்றானோ இல்லையோ, மோகன் ஏன் கொல்லப்பட வேண்டும்? மோகனைக் கொன்றது யார்? எதற்காக?

மோகன் வேறு ஏதோ காரணத்திற்காகக் கொல்லப் பட்டிருப்பான் என்று தோன்றவில்லை இனியா கொலை சம்பந்தமாகத்தான் அவன் கொல்லப்பட்டிருக்கிறான் எனத் தோன்றியது.

அவன் உடலில் தெரிந்த தீக்காயங்கள் அவன் சித்திரவதை செய்யப்பட்டிருப்பதைத் தெரிவித்தன. மோகன் சித்திரவதை செய்யப்பட வேண்டுமென்றால், சித்திரவதை செய்தது நிச்சயம் வளர்மதியாக இருக்க முடியாது. அவளுக்கு மோகனைத் தனியாக எதிர்க்கும் அளவிற்கு உடலில் வலு இல்லை. உள்ளத்தில் துணிவும் கிடையாது. இது வேறு யாரோ ஓர் ஆண்தான் செய்திருக்கிறான்.

**பா**ர்த்திபன் மோகனின் உடலை நெருங்கினான். அவனது உடல் பல ஈக்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துவிட்டிருந்தது. அவனுடைய இமை, மீசை பொசுங்கி இருந்தது. மோகனுடைய வெறித்த கண்கள் பார்த்திபனிடம் என்னவோ செய்தியைச் சொல்லத் தவித்துக் கொண்டிருந்த மாதிரி இருந்தன.

மோகன்மேல் எதற்குச் சந்தேகம் வந்தது?

MITHRAVINTHA

அவன் 'தொடர்ச்சி— உடை' எடுக்கப் போகிறேன் என்று இனியா வீட்டிற்கு வந்து தடுமாறியதால், அவன் போனபின்பு 'தொடர்ச்சி உடை' எடுக்க மட்டும் மோகன் வரவில்லை, அந்தச் சாவிக்கொத்தையும் எடுத்துப் போக வந்திருக்கிறான் என்று அப்புறம்தான் தெரிந்தது.

அவ்வளவு முக்கியமான சாவிக்கொத்து எங்கே?

''கதம்பா'' என்றான் பார்த்திபன் வறண்ட குரலில்.

''என்ன பார்த்திபன்?''

''மோகன் ஒரு சாவிக்கொத்தை மீட்டுப்போக வந்தான் என்று சொன்னேனே? அந்த சாவிக்கொத்து இந்த வீட்ல எங்கேயாவது இருக்கான்னு பாரு.''

கான்ஸ்டபிள், இருதயசாமி, கதம்பா, பார்த்திபன் மூன்று பேரும் மோகனின் இரண்டு வீடுகளையும் ஓர் இடுக்கு விடாமல் தேடினார்கள்.

அந்த சாவிக்கொத்து எங்கேயும் இல்லை.

பார்த்திபன் தன்னை நொந்து கொண்டான். உள்ளங்கை ஓட்டை வழியாகத் தண்ணீரை வழிய விடுவதுபோல, அவன் அந்தச் சாவிக்கொத்தை நழுவ விட்டுவிட்டதாக அவனுக்குத் தோன்றியது.

பார்த்திபன் போன் செய்து கைரேகை ஆட்களை வரவழைத்தான். மோகனின் பிணத்தை பரிசோதனைக்கு எடுத்துச் செல்ல ஆம்புலன்சை வரவழைத்தான்.

மோகனின் உடலைத் தூக்கியபோது அவன் உடலுக்குக் கீழே ஒரு நசுங்கிய சிகரெட் பாக்கெட்டைப் பார்த்தான் பார்த்திபன்.

அதைக் கையில் எடுத்தான். திறந்து பார்த்தான். உள்ளே நசுங்கிப்போன சிகரெட்டுகள் இருந்தன.



அந்த சிகரெட்டுப் பாக்கெட்டு எப்படி அங்கே வந்தது? மோகன் சிகரெட்டு புகைப்பானா? சிகரெட்டுப் பெட்டியைத் தூக்கி எறியப்போன பார்த்திபன் கடைசி வினாடியில் மனம் மாறிப் பெட்டியைக் கையில் வைத்துக் கொண்டான்.

ஏற்கனவே கண்ணுக்குத் தெரிந்தே ஒரு தடயத்தை நழுவவிட்டுவிட்டதால் பார்த்திபனுக்குப் பார்ப்பவை எல்லாமே தடயங்களாகத் தோன்றின.

ஜீப் விரைந்து கொண்டிருந்தது. ஜீப்பின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தான். அவன் கையில் சிகரெட்டு பாக்கெட்டு.

''தம்பி'' என்று பின்னால் இருந்து இருதயசாமியின் குரல் தயங்கித் தயங்கி வந்தது.

''ம்...?'' என்று எங்கோ சிந்தனையாகக் கேட்டான் பார்த்திபன்.

''அது அயல்நாட்டு சிகரெட்டு தம்பி.''

''அதுக்காக?''

''இல்லை. எனக்குத்தான் பாரின் சபலம் இருக்கறது உனக்குத் தெரியுமே! அந்தப் பெட்டியிலேர்ந்து ஒரு சிகரெட்டை எடுத்துக் கொடேன்.''

பார்த்திபன் திரும்பி முறைத்தான்.

''இதை நான் பரிசோதனைக்கு அனுப்பலாம்னு இருக்கேன். சிகரெட்டுக்குள்ள கஞ்சாவையும் வைக்கலாம். சயனைடும் வைக்கலாம். அப்படி ஏதாவது இருக்கான்னு தெரிஞ்சிக்க வேணாமா? உங்களுக்கு பாரின் சிகரெட்டுத்தான் வேணும்னா, ஒரு பெட்டியே வாங்கித் தரேன். இதைக் கேட்காதீங்க.''

MITHRAVINTHA

''சரி, தம்பி'' என்று சொல்லி விட்டு வாயை ஊசி போட்டுத் தைத்த மாதிரி இறுக மூடிக் கொண்டார் இருதயசாமி.

ஜீப் தடயஇயல் அலுவலகத்து வளாகத்தில் நுழைந்து நின்றது பார்த்திபன் இறங்கினான்.

உள்ளே போனான். அவனுக்கு அறிமுகமானவர்கள் ஒரு சிலர் கையை உயர்த்தி காவல்துறை பாணியில் வணக்கம் செலுத்தினார்கள். ஓரிருவர் நலம் விசாரித்தார்கள். கொஞ்சம் நெருக்கமானவர்கள், ''என்ன கல்யாண சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கே போல இருக்கே?'' என்று கிண்டலும் நகைச்சுவையும் கலந்து அவனை வெட்கப்படச் செய்து விட்டுப் போனார்கள்.

பார்த்திபன் ஒருமுறை ஜீப் பக்கம் திரும்பி கதம்பாவைப் பார்த்தான். கதம்பா முன்னிருக்கையில் உட்கார்ந்து கொண்டு ஜீப்பின் கண்ணாடியில் சுட்டுவிரலால் பெண் படம் போட்டு மீசை வரைவது அவன் நின்ற இடத்திலிருந்தே தெரிந்தது நாக்கை ஒரு மாதிரித் துருத்திக் கொண்டு, கண்ணாடியில் இருந்த தூசியில் அவள் படம் வரைந்ததைப் பார்க்கும்போது ஒரு குழந்தையைப் பார்க்கிற மாதிரி இருந்தது.

''என்ன பார்த்திபன்? இது தடயஇயல் ஆபீசு, என்னவோ சொர்க்கத்தில நடக்கிற மாதிரி நடந்து வர்றீங்களே?'' என்று ஒருகை அவன் தோளைத் தொட்டு நிறுத்தியபின்தான் கதம்பாவின் நினைவில் இருந்து மீண்டான் பார்த்திபன்.

ரெத்தினம்.

''உங்களைத்தான் பார்க்க வந்துக்கிட்டிருக்கேன் ரெத்தினம். இது ஒரு சிகரெட்டுப் பெட்டி. உள்ளே சில



சிகரெட்டுகள். சிகரெட்டுல ஏதாவது செய்தி இருக்கான்னு பாத்து சொல்லணும். கொலை கேஸ்...''

''வாங்க'' என்று ரெத்தினம் அவனைத் தனது அறைக்கு அழைத்துச் சென்று காப்பிக்குச் சொன்னார்.

சிகரெட்டு பெட்டியை வாங்கி உள்ளிருந்த சிகரெட்டுகளை மேசை மீது கவிழ்த்தார்.

அதனுள் இருந்த சரிகைத் தாளை வெளியே எடுத்தார்.

எடுத்தவர் அதிர்ந்துபோய் சரிகைத் தாளையே சற்று நேரம் பார்த்தார்.

''செய்தி இருக்கான்னு கேட்டீங்களே பார்த்திபன், இங்கே பாருங்க. இந்த சரிகைத்தாளில் வெள்ளையா இருக்கற பக்கத்துல செய்தி இருக்கறத...''

பார்த்திபன் அந்த சரிகைத்தாளைப் பரபரப்பாக வாங்கிப் பார்த்தான். அந்தத் தாளில் வெள்ளையாக இருந்த பக்கத்தில் ஒரு செய்தி இருந்தது. பேனாவால் அவசர அவசரமாக எழுதப்பட்ட செய்தி.

''வணக்கம் நண்பரே!''

இதை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் நேரம் நான் இறந்திருப்பேன். என் வாழ்க்கை ஒரு பத்திரிகைகாரனாகத் தொடங்கியது. பேனாதான் என் வயிற்றுப் பசிக்குச் சோறு போட்டது. எனவே, என்னுடைய ராசியான அயல்நாட்டுப் பேனாவை என்னோடு சேர்த்து வைத்துப் புதைத்து விடுங்கள். என் பேனாவை என்னோடு சேர்த்துப் புதைக்காவிட்டால் என் ஆத்மா அமைதியடையாது மறக்காதீர் என் பேனாவை.

நன்றி!

மோகன்.''



MITHRAVINTHA

அவ்வளவுதான் செய்தி. மோகன் மேல் பரிதாபமாக இருந்தது. மரண வாசலில் நின்றுகொண்டுதான் அவன் கடிதத்தை எழுதியிருப்பான் என்று தோன்றியது. ஏனெனில் அந்தக் கையெழுத்து அவ்வளவு நடுக்கத்துடன் இருந்தது. மேலும் சிகரெட்டுப் பெட்டி அவனுடைய உடலுக்குக் கீழே கிடந்ததால் நிச்சயம் அவன் சாகு முன்புதான் அதை எழுதியிருக்கக்கூடும் என்று உறுதியாகத் தோன்றியது. சாகும்போதுகூட தனது ராசியான பேனாவை தன்னோடு சேர்த்துப் புதைக்க வேண்டும் என்ற அவனது வேண்டுகோள் பார்த்திபனை நெகிழச் செய்தது.

மோகன் அனாதை என்றும், அவனது உடலை வாங்கிப் போக உறவினர் யாரும் வரப்போவதில்லை. அதனால் பார்த்திபன், மோகனது அடக்கக் காரியங்களைத் தானே முன்நின்று செய்துவிடுவது என்று தீர்மானித்தான்.

''பார்த்திபன்'' என்றாள் கதம்பா திடீரென்று.

மோகனின் உடல் அடக்கத்திற்குப் பின் அவர்கள் இருவரும் ஒரு உணவு விடுதிக்கு வந்திருந்தார்கள்.

சர்வரிடம் 'என்ன இருக்கிறது?' என்று கேட்டுக் கொண்டிருந்த பார்த்திபன் துள்ளித் திரும்பினான்.

'என்ன கதம்பா?''

''ஒன்றுமில்லை. அங்கேயிருக்கும் நீச்சல்குளத்தைப் பார்த்தவுடன் எனக்கு ஒன்று தோன்றியது'' என்று உணவு விடுதிக் கண்ணாடிச்சுவரின் மறுபக்கம் இருந்த நீச்சல்குளத்தைச் சுட்டிக்காட்டிக்கொண்டே சொன்னாள் கதம்பா.

''என்ன?''



''கேளம்பாக்கம் நீச்சல்குளத்தில் ஒருவன் இளியாவை நீரில் மூழ்கடிக்கப் பார்த்தான் என்றுதானே நீங்கள் இந்த வழக்கில் நுழைந்தீர்கள்?''

''இந்த வழக்கில் இல்லை. உன் வாழ்க்கையில்.''

கதம்பா வெட்கத்தால் முகம் சிவந்தாள்.

''எப்படியோ. அந்த ஆளைப் பார்த்தால் வாட்ட சாட்டமாக இருந்தான். சினிமா உலகில் வாட்ட சாட்டமாக இருப்பவர்கள் பொதுவாக சண்டைப் பயிற்சிக்காரர்கள்தான். அவர்கள்தான் உடம்பை அப்படிக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்கொள்வார்கள். தமிழ் சினிமா உலகில் இருக்கும் சண்டைப் பயிற்சிக்காரர்களின் படங்களை எல்லாம் பார்த்தால் ஒருவேளை அந்த ஆள் அந்தப் படங்களில் உள்ளவர்களில் ஒருவனாகவும் இருக்கலாம் இல்லையா?''

பார்த்திபனுக்கு அவளை அப்படியே உயரத் தூக்கித் தட்டாமாலை சுற்ற வேண்டும் போலிருந்தது. கட்டியணைத்து முத்தமிட வேண்டும் போல இருந்தது.

எவ்வளவு முக்கியமான கருத்து? அப்படி ஒரு வழியில் முன்பே போயிருந்தால் நிச்சயம் இந்நேரம் அந்த நீச்சல்குள ஆள் மாட்டியிருப்பான். அவனைப் பிடித்து காட்ட வேண்டிய மரியாதையைக் காட்டினால் கதறக் கதற உண்மை வெளிவந்திருக்குமே!

''முதல்ல ஒரு ஐஸ்கிரீம் கொண்டுவாப்பா. என் நாளைய பெண்டாட்டிக்கு என்னோட இன்றைய பரிசு'' என்றான் பார்த்திபன் சர்வரிடம் உற்சாகமாக.

''வெறும் ஐஸ்கிரீம் மட்டுமா?''

''வேறென்ன வேணும்?'' என்று கேட்டான் பார்த்திபன்.

''ஒரு முத்தம்.''

MITHRAVINTHA

''என்னது?'' என்று கேட்டுவிட்டு அவனைப் பார்த்தான்

அவள் குறும்பாகச் சிரித்தாள். அவன் மனம் விட்டுச் சிரித்தான்.

''முதல்ல எடுத்துக்கிட்டிருக்கிற வேலை முடியட்டும். அப்புறம் திகட்டத் திகட்டக் கொடுக்கறேன்.''

''அதானே பார்த்தேன். காவல்துறை ஆளு எங்கே கடமையை மறந்து காதலி பக்கம் சாய்ஞ்சிடுவாரோன்னு சோதிச்சிப் பார்த்தேன். நம்ப ஊர்ல கடவுள் சிலை பால் குடிக்கறது உண்மையாவே ஆனாலும் ஆயிடும். உங்களை மட்டும் உங்க கடமை உணர்வுலேர்ந்து காதல் உணர்வுக்கு மாத்த முடியாதுப்பா'' என்றாள் கதம்பா கைகளை மிகையாக அசைத்து அசைத்து, இமைகளை இமைத்து இமைத்து.

அன்று முழுக்க இருவரும் ஒவ்வொரு இடமாக அலைந்து திரைப்படத்துறையில் இருக்கும் சண்டைப் பயிற்சியாளர்களின் புகைப்படங்களை சேகரித்துப் பார்த்தார்கள். சண்டைப் பயிற்சியாளர் சங்கத்தில் இருந்த அங்கத்தினர் படங்களை எல்லாம் பார்த்தார்கள். அந்த நீச்சல் குள முகம் சிக்கவில்லை. கதம்பா தளரவில்லை.

கடைசியாக இளங்கோவின் அறைக்கு வந்து சேர்ந்தார்கள். இளங்கோ இன்னும் சிறையில் இருந்தான். அவன் மீது ஆபாசப் புகைப்பட வழக்கு இருந்தது. இளங்கோவின் அறைச் சாவி பார்த்திபனிடம் இருந்தது. திறந்தான்.

அறையில் வரிசையாக புகைப்பட ஆல்பங்கள் அடுக்கப்பட்டிருக்க, ஒவ்வொரு ஆல்பமாக கதம்பா எடுத்துப் புரட்டினாள்.



ஒரு ஆல்பத்தின் மூன்றாவது பக்கத்தைப் புரட்டியதும் கதம்பாவின் பார்வை நிலைகுத்தியது. அவள் மனதில் இனம் புரியா உணர்வு அலை அலையாய்ப் பரவியது.

''பார்த்திபன்...இங்கே பாருங்க... இங்கே பாருங்க'' என்று அவள் தன்னை மறந்து கிறீச்சிட்டாள்.

## 27

கதம்பா காட்டிய புகைப்படத்தில் மாதவி இருந்தாள். கூடவே இனியா யாரோ ஒருவரிடம் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள். அந்த மூவருக்கும் பின்னால் பாதி முகம், பாதி உடல் தெரிகிற மாதிரி ஒரு வலுவான ஆண் நின்றிருந்தான். அவன் பார்வை இனியாவின் மேல் நிலைகுத்தி இருந்தது.

''பார்த்திபன்! நீச்சல் குளத்திலேர்ந்து தப்பிச்சி ஓடினவன் இவனை மாதிரித்தான் இருந்தான்'' என்றாள் கதம்பா படபடப்புடன்.

''இரு இரு. பதட்டப்படாதே. நல்லா ஞாபகத்துக்குக் கொண்டுவந்து பாரு'' என்ற பார்த்திபன் நினைவில் மின்சாரம் தாக்கியவனைப் போல, ''கதம்பா நீச்சல் குளத்தில் நீ பார்த்தவன் காதுல வளையம் மாட்டியிருந்தான்னு சொன்னே. தாடி வைச்சிருந்தான்னு சொன்னே, ஞாபகமிருக்கா?''

''இவனேதான். இவனேதான்'' என்று பரபரப்பின் உச்சத்தில் கத்தினாள் கதம்பா.

''இவனா? இவனை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேனே. இனியா, மாதவி குடும்பத்துக்கு ரொம்ப

MITHRAVINTHA

வேண்டப்பட்டவன்னு நினைக்கிறேன். ஏன்னா அவங்களோடத்தான் இவன் எப்பவுமே இருப்பான். இவன் பேரு கூட கருப்பையாவோ என்னவோ. இனியா இவனை பிளாக்கீன்னுதான் கூப்புடுவா'' என்றார் அந்த புகைப் படத்தில் இனியாவுடன் பேசிக்கொண்டிருந்த ஆனந்தக் கண்ணனைப் பார்த்து பேசியபோது. அவர் ஒரு திரைப் படத் தயாரிப்பாளர். ஆனந்தக் கண்ணனுக்கு அந்த கருப்பையாவின் முகவரி தெரியவில்லை.

பார்த்திபனுக்கு அது ஒரு பெரிய விசயமாகத் தெரிய வில்லை. திரைப்பட உலகைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர் முகவரிகளையும் அச்சிட்டு வெளியிட்டிருந்த முகவரிப் புத்தகங்களை எடுத்துப் பிரித்துப் பார்த்தான் பார்த்திபன். கருப்பையா என்று நான்கைந்து பெயர்கள் இருந்தாலும் ஒரு புத்தகத்தில் அடைப்புக்குறிக்குள் 'பிளாக்கீ' என்று எழுதப்பட்டு ஒரு முகவரி இருந்தது.

அந்த முகவரி அண்ணாமலைபுரத்தில் பக்கிங்காம் கால்வாய்க்கு நேர் எதிரில் சென்ற ஒரு தெருவில் இருந்த ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டியது. பார்த்திபன் இந்த முறை வெகு எச்சரிக்கையாக செயல்பட விரும்பினான்.

தெருமுனையில் காவல்துறை வண்டியை நிறுத்தச் சொன்னான். தெருவில் அவன் மிக மெதுவாக எச்சரிக்கையாக நடந்தான். பார்த்திபனை ஒட்டி நடந்து வந்த கதம்பாவின் நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. அவளது நெஞ்சின் பட படப்பை பார்த்திபன் தன் தோளில் உணர்ந்தான். 'பயப் படாதே' என்று தைரியம் அளிக்கும் வகையில் அவளது உள்ளங்கையைப் பற்றி ஒருமுறை அழுத்தினான். கான்ஸ்டபிள் இருதயசாமி தெருவின் ஓரத்தில் கருப்பையா பதுங்கியிருப்பது போலவும், எந்நேரமும் தங்கள்மீது அவன் பாய்ந்துவிடக்கூடும் என்பது போலவும் நாடகத்தனமாக தெருவின் இந்தப் பக்கத்தையும், அந்தப் பக்கத்தையும் மாற்றி மாற்றிப்



பார்த்துக் கொண்டே வந்தார். பார்த்திபன் தன் பெல்ட்டையும், பெல்ட்டில் செருகியிருந்த துப்பாக்கியை யும் ஒருமுறை தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

அந்த வீடு நெருங்கியது. பார்த்திபன் அந்த வீட்டை அண்ணாந்து பார்த்தான். தனிவீடு. மாடியில் பின்னால் ஓர் மூலை அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கீழே எல்லாம் இருளின் ஆட்சி.

''நீங்கள் இங்கேயே இருங்க. நான் போய்ப் பார்த்துட்டு வரேன் அண்ணே. ஏதாவது அவசரம்னா விசிலை ஊதுங்க. கண்டதுக்கெல்லாம் விசிலை ஊதி காரியத்தைக் கெடுத்துடாதீங்க'' என்று பார்த்திபன் சொல்லிவிட்டு அந்த வீட்டை நோக்கி நடந்தான்.

அதன் காம்பவுண்டு சுவர் மேல் ஏறி, வெகு லாவக மாக மறுபக்கம் சத்தம் எழாமல் குதித்தான். வீட்டைச் சுற்றி வந்தான். வாசல் கதவு மூடியிருந்தது. உட்பக்கம் தான் போடப்பட்டிருந்தது. மறுபடி வீட்டின் பின்பக்கம் வந்தான். சன்னல்களுக்கு கிரில் இல்லை. வெறும் கண்ணாடிக் கதவுகள். புதுமையைக் கருத்தில் கொண்டு கட்டப்பட்ட வீடு.

பார்த்திபன் பூட்சைக் கழற்றிக் கீழே வைத்தான். மழைநீர்க் குழாயைப் பற்றிக் கொண்டு மேலேறினான். சன்னல் அருகே வந்ததும் அதன் விளிம்பைப் பற்றினான். தாவினான். அவன் தொங்கிய இடத்திற்கு நேர் கீழே இருந்த இன்னொரு சன்னலுக்காகக் கட்டப்பட்டிருந்த மழை சார்பின் மீது காலை வைத்து நின்றான். நிதானப் படுத்திக் கொண்டான். மெல்லத் தலையை உயர்த்தி அறைக்குள் எட்டிப் பார்த்தான். அறையில் ஒரு ஓரத்தில் அவனுக்கு முதுகு காட்டிக்கொண்டு கருப்பையா என் னும் பிளாக்கீ நின்று கொண்டிருந்தான். போனில் பேசிக் கொண்டிருந்தான். கைகளை உயர்த்தி வெகு தீவிரமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

MITHRAVINTHA

"பயப்படாதே. கையில விமான டிக்கெட்டு தயாரா இருக்கு. யாருக்கும் உம்மேல சந்தேகம் வராது. நான் இதோ புறப்பட்டுக்கிட்டே இருக்கேன். நீயும் விமான நிலையத்துக்கு வந்துடு. உன்னைக் காட்டிக் கொடுக்கணும்னா அந்த மோகன் பயல் ஒருத்தனாலத்தான் முடியும். அவனையும் பேசமுடியாதபடி பண்ணியாச்சி. இன்னும் ஏன் பயப்படறே?" என்று கேட்ட கருப்பையா விற்குப் பக்கத்தில் பிரயாணத்திற்கு தயாராக சூட்கேஸ் இருந்தது. தோள்பை ஒன்று இருந்தது.

பார்த்திபன் தன் அதிர்ஷ்டத்தை வியந்து கொண்டான். கடைசி வினாடியின் கடைசிதருணத்தில்தான் வந்து சேர்ந்திருக்கிறேன். ஒரு வினாடி தாமதித்திருந்தாலும் பறவை பறந்திருக்கும். உள்ளே குதித்தான். குதிக்கும் நேரம் பெல்ட்டில் செருகியிருந்த துப்பாக்கி நழுவி, மழை சார்பில் மோதி, எகிறி கீழே விழுந்தது. பார்த்திபன் அந்த நேரம் வருத்தப்பட்டான். அவனுடைய பலத்தில் பாதி கீழே. சத்தம் கேட்டு கருப்பையா திரும்பினான்.

. பினாக்கி! பெயருக்கு ஏற்றமாதிரி கறுப்பாக இருந்தான். நல்ல உயரம். அகலமான மார்பு. பார்த்திபனைப் பார்த்தவுடன் கருப்பையாவின் கண்களில் முதலில் ஒரு பயமின்னல். அடுத்த வினாடியே அது மறைந்து கண்களில் ஒரு கொடூரம் குடிவந்தது. மூலையில் மடக்கப் பட்ட பூனையின் கண்களில் மின்னுமே அந்த மாதிரியான ஒரு கொடூரம்.

"எங்க கிளம்பறதா உத்தேசம்?" என்று ஒவ்வொரு வார்த்தையாக உதிர்த்தான் பார்த்திபன். அவன் கை இடுப்பு பெல்ட்டை உறுவியது.

"இன்ஸ்பெக்டர்! உங்களால் என்னை எதுவும் பண்ண முடியாது" என்று கூறிவிட்டு சரேலென காட்டெருமை போல் பாய்ந்தான் கருப்பையா.



பார்த்திபன் விலகினான். கருப்பையா சன்னல் விளிம்பில் மோதினான். அப்படியே சன்னலில் ஏறி வெளியே குதிக்கப் பார்த்தவனை பார்த்திபனின் பெல்ட் வளைத்துப் பிடித்து இழுத்தது.

கருப்பையா அறைக்குள் விழுந்தான். விழுந்த வேகத்தில் அப்படியே காலை உயர்த்தி, பார்த்திபனை ஒங்கி ஓர் உதை விட்டான். பார்த்திபன் அந்த உதையைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தொடைகளின் நடுவில் பெற்றான். 'ம்க்ம்' என்று முனகினான். கண்கள் இருட்டின. கால்கள் தள்ளாடின. தலைசுற்றியது. விழுந்து மண் கவ்வ இருந்தவனின் நெஞ்சத்தில் கதம்பா எட்டிப்பார்த்து, 'உன் மனவலிவு அவ்வளவுதானா?' என்று கேட்டாள்.

பார்த்திபன் சிலிர்த்து எழுந்தான். ஒரு போலீஸ் காரனை அடித்துவிட்டு ஒருவன் தப்பிப் போய்விடுவதா? பார்த்திபனின் பெல்ட் சுழன்றது. பாம்பின் நாக்கைப் போல அது கருப்பையாவைத் தீண்டியது. அவன் காலைப் பற்றி வாரிவிட்டது. பார்த்திபன் அந்த மகத்தான வாய்ப்பை விடவில்லை. பெல்ட்டால் சுழற்றி சுழற்றி அடித்தான். கருப்பையா இப்படியும், அப்படியுமாகப் புரண்டான். அவன் கால் சதை, இடுப்புச் சதை கழுத்துச் சதை என்று உடம்பில் அங்கங்கே பெயர்ந்தது. உடம்பில் புலிக்கு வரி தீட்டப்பட்ட மாதிரி இரத்தப் பட்டைகள். கருப்பையா இரத்தக்களறியான முகத்தோடு கைகளை உயர்த்திக் கும்பிட்டான்.

"இல்லை. இனியாவை நான் கொல்லலை. அந்த நேரத்தில் நான் சிங்கப்பூரில் இருந்தேன். இது சத்தியம்" என்றான் கருப்பையா அலறலான குரலில்.

"சிங்கப்பூரில் உனக்கு என்ன வேலை?" என்று உறுமினான் பார்த்திபன்.

MITHRAVINTHA

"அங்கே எனக்கு ஒரு ஓட்டல் இருக்கு. அதைத் தவிர ஒரு ரொட்டிக்கடை இருக்கு. அதுவுமில்லாமல் சிங்கப்பூர் அரசாங்க காண்ட்ராக்டு ஒண்ணு எனக்குக்கிடைச்சிருக்கு. மேட்டையெல்லாம் அழிச்சி சம தளமாக்கிக் கொடுக்கிற காண்ட்ராக்டு. இங்கே இனியா கொலையான நேரம் நான் சிங்கப்பூர் அதிகாரிங்கிட்ட காண்ட்ராக்டு சம்பந்த மான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தேன்."

"சரி இனியாவை கேளம்பாக்கம் பங்களா நீச்சல் குளத்துல வைச்சிக் கொல்லப் பார்த்தது நீதானே?" என்று அவன் தலைமுடியைப் பற்றி உலுக்கினான் பார்த்திபன்.

"ஆமா"

"ஏன்?"

"இனியா என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னாள். பாரிவேன் பின்னால போகப் போறேன்னு சொன்னாள். அவளை சின்ன வயசுலேர்ந்து எனக்குத் தெரியும். நான் வளர்த்த பச்சைக்கிளி. சிறகு வளந்துட்டதுன்னு என்னை விட்டுப் பறந்து போனதை என்னால தாங்க முடியல. அதனால கொல்ல முயற்சி பண்ணினேன். தப்பிச்சிட்டா. நான் அவளைக் கொல்லலை. என்னை விட்டுடுங்க."

"போன்ல யார்கூடப் பேசிக்கிட்டிருந்தே?"

"என் நண்பன் கூட."

"பொய்!" என்று கத்தினான் பார்த்திபன். "மோகன் வீட்டில் உன் கைரேகை தெளிவாப் பதிவாகியிருக்கு. இனியா கொலை சம்பந்தமான ஏதோ ஒரு முக்கியமான தடயம் மோகன் கையில் இருந்தது. அவன் அந்தத் தடயத்தை வைச்சிக்கிட்டு கொலை பண்ணின ஆளை மிரட்டியிருக்கான். அதனால மோகனைப் பேசவிடாமல் பண்ணச்சொல்லி உனக்கு உத்தரவு வந்தது. நீ மோகன் வீட்டுக்குப் போனே. அவன்கிட்ட இருக்கிற தடயத்தைக் கேட்டே. அவன் கொடுக்க மறுத்தான். அதனால உன் கையில் இருக்கிற சிகரெட்டு லைட்டர்ல நெருப்பை வரவழைச்சி மோகனைச் சுட்டு சித்திரவதை பண்ணினே. அவன்கிட்ட இருந்த தடயத்தை வாங்கிக்கிட்டு அவனைக் கொன்னுட்டே. இனியாவைக் கொன்ன குற்றவாளி யோட போன்ல பேசினே. நீயும் அந்தக் குற்றவாளியுமா தப்பிச்சி வெளிநாடு போறதுக்கு தயாரா டிக்கெட்டு எல்லாம் ஏற்பாடு பண்ணியிருக்கே சொல்லு. இனியா வைக் கொன்னது யாரு? விமான டிக்கெட்டை நீ வேற பெயர்ல வாங்கி இருப்பே. திருட்டு பாஸ்போர்ட் ஏற்பாடு பண்ணியிருப்பே. அதனால உன் வாயால நீயே சொல்லிடு. எப்படியும் மோகனைக் கொன்னதுக்காக நீ தண்டனையை அனுபவிச்சித்தான் ஆகணும்."

"நான் மோகனைக் கொன்னேன்ங்கறதுக்கு உங்கள் கிட்ட எந்த ஆதாரமும் கிடையாது. என்னை நீங்க ஒண்ணும் பண்ண முடியாது. இனியாவைக் கொன்னது யாருன்னு எனக்குத் தெரியாது. நான் என் வக்கீலைப் பார்க்கணும்" என்றான் கருப்பையா பிடிவாதமாக.

"மயிலே, மயிலே இறகு போடுன்னு கேட்டு எந்த மயிலும் இறகு போட்டதா சரித்திரமே இல்ல பிளாக்கி மோகன்கிட்டேர்ந்து சாவிக்கொத்து எடுத்தியே அது எங்கே?"

"எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது. எனக் குத் தெரியாது."

கீதம்பா கான்ஸ்டபிள் இருதயசாமியை நெருங்கி னாள்.



MITHRAVINTHA

"அண்ணே! மோகன் செத்துப்போறப்ப அவனோட சேர்த்து ஒரு அயல்நாட்டுப் பேனாவை வைச்சிப் புதைச் சோமே. ஞாபகமிருக்கா?"

"அதுக்கென்ன தங்கச்சி?" என்றார் இருதயசாமி.

"அதுல ஏதோ செய்தி இருக்குண்ணே. இல்லன்னா மோகன் சாகிற நேரத்தில் அப்படி ஒரு கடிதத்தை எழுதி யிருக்க மாட்டான்."

"அதுக்கென்னம்மா, பிணத்தை ஒரு தடவை தோண்டி எடுத்து அந்தப் பேனாவைப் பார்த்தாப் போச்சி."

மோகன் புதைக்கப்பட்ட இடம், மறுபடி தோண்டப் பட்டு, மோகனுடன் சேர்த்து வைக்கப்பட்டிருந்த பேனாவை எடுத்துத் திறந்தால் மை ஊற்றும் இடத்தில் ஒரு துண்டு பேப்பர் இருந்தது. அதில் 'பாங்க்' என்று எழுதப்பட்டிருந்தது.

கதம்பா மகிழ்ச்சியில் ஆறடி எம்பினாள். "நான் சொல்லலேண்ணே?"

மோகனின் வங்கிக்கணக்கு இருக்கும் பாங்கிற்குச் சென்று மோகன் பெயரில் ஒரு லாக்கர் இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். லாக்கர் உடைக்கப்பட்டு உள்ளே ஒரு கவர் இருக்க, கவரில் இருந்து வெளியே நழுவி வந்த புகைப்படங்கள் மூன்றைப் பார்த்தவுடன் கதம்பாவின் இதயம் தொண்டைவரை வந்தது. அவள் விழிகள் கடல்போல் விரிந்தன. "இல்லை...இல்லை... இப்படி இருக்க முடியாது" என்று அலறினாள் அவள்.

"தம்பி...தம்பி" என்று மூச்சிரைக்க வந்து சேர்ந் தார் கான்ஸ்டபிள் இருதயசாமி. பின்னாலேயே கதம்பா வும், அவள் கையில் அந்த புகைப்படங்கள்.

"குற்றவாளியைக் கண்டு பிடிச்சாச்சி தம்பி" என்றார் இருதயசாமி. 'இதோ இந்த போட்டோவுல இருக்கு. இனியாவைக் கொலை பண்றப்ப எடுத்த போட்டோ இது."



"குற்றவாளி யாருன்னு எனக்குத் தெரியும்" என்றான் பார்த்திபன்.

"யாரு...சொல்லேன்."

"அந்த போட்டோவுல இனியாவைக் கொலை பண்றது..."

"பண்றது...? சொல்லு தம்பி" என்று பரபரப்பாய் கேட்டார் இருதயசாமி.

"மாதவி...இனியாவோட அம்மா. கரெக்டா?"

"தம்பீ...எப்படி தம்பி கண்டுபிடிச்சே?" என்று போட்டோவை நீட்டினார் இருதயசாமி. மூன்று படங் களிலும் இனியாவை ஆவேசமாகக் கத்தியால் குத்திக் கொண்டிருந்த மாதவியின் படம் மிகத் தெளிவாகப் பதிவாகியிருந்தது.

"கதம்பா, இந்தக் கொலையை ஒரு பெண்தான் செய்ஞ்சிருக்கணும்னு உள்ளுணர்வு சொல்றதா சொன்னா. அதுவுமில்லாமல் மோகனோட முகவரியை நமக்கு எடுத்துக் கொடுத்தது மாதவி. மோகனை நாம பிடிச்சிக் கேள்வி கேட்டா அவன் எங்கே, போட்டோவை எடுத்து நீட்டிடப் போறானோன்னு அவனைக் கொன்னு அந்தப் புகைப் படத்தை எல்லாம் கைப்பற்றச் சொல்லி போன்ல சொல்லியிருக்கா மாதவி. கருப்பையா அவள் சொன்னபடிசெய்திட்டான்மோகன்சாகறதுக்குமுன்னால இப்படி ஒரு நிலைமை வரும்னு எதிர்பார்த்து வங்கியில் கொஞ்சம் போட்டோவைப் பத்திரப்படுத்தியிருக்கான். அதைத்தான் மறைமுகமா சிகரெட்டு காகிதத்தில் எழுதி யிருக்கான். மாதவி முகவரி கொடுத்த உடனே மோகன்

MITHRAVINTHA

செத்துக் கிடந்தான்னு சொல்லும்போதே எனக்கு மாதவி
மேல சந்தேகம் வந்திடுச்சி. இதோ ஆதாரம் கிடைச்
சிடுச்சி. இனிமேல் நம்ப வேலை சுலபம். மாதவியைக்
கைது பண்ணிக் கூட்டிவரச் வரச் சொல்லி ஆள் அனுப்
பிட்டேன். இதோ வந்துடுவா'' என்று அவன் சொல்லி
முடித்த நேரம் மாதவியின் தலை அவன் மேசையை
மோதியது. பார்த்திபன் நிமிர்ந்தான். அவளைப் பிடித்து
தள்ளிய போலீஸ்காரனை முறைத்தான்.

''மாதவி...எல்லாத்தையும் சொல்லிடும்மா. இந்த
போட்டோவைப் பார்த்தல்ல?''

மாதவி கதறினாள். உடல் குலுங்கியது. ஓய்ந்தாள்.

''இனியா என் சொந்தப் பொண்ணு இல்ல இன்ஸ்
பெக்டர். நான் வளர்த்த பொண்ணு அவள் மூலமா
நிறைய சம்பாதிக்கணும்னுதான், நான் காபரே டான்ஸ்
ஆடற தொழிலை விட்டேன். இனியாவை தயார் பண்ணி
னேன். நான் வளர்த்த பொண்ணு, நல்லா சம்பாதிக்க
ஆரம்பிச்ச உடனே, என்னை விட்டுப் பாரிவேளைக்
கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னதால
கோபம் வந்தது. தடுத்துப் பார்த்தேன். அவள் கேக்கறதா
இல்ல. இருக்கற சொத்தையாவது காப்பாத்தணும்னா
அவளைக் கொல்றதுதான் ஒரே வழின்னு தோணிச்சி.
கருப்பையா என் தம்பிதான். அதனால நீச்சல் குளத்துல
வைச்சி கொல்லச் சொன்னேன்.

இனியா தப்பிச்சிட்டா. போராட்டத்துல தம்பி
கையில் போட்டிருந்த மோதிரம் ஒண்ணு தண்ணியில்
நழுவி விழுந்திருச்சி. அதை அவன் போன்ல சொன்னான்.
அவசர அவசரமா வந்து அந்த மோதிரத்தை இனியாவுக்
காகப் பண்ணதுன்னு சொல்லி சமாளிச்சேன்.

இளங்கோ போன்ல கொலை பண்ணுவேன்னு மிரட்
டினதாலத்தான் எனக்கு இனியாவைக் கொன்னுடணும்ங்



கற யோசனை வந்தது. ஒரு தடவை தப்பிச்சவள் திருந்து
வான்னு நினைச்சேன். திருந்தல. மறுபடி பாரிவேள்
கூடச் சேர்ந்து கூத்தடிச்சா. அதனால நானே அவளைக்
கொன்னேன்.

பாரிவேளும், இனியாவும் நெருக்கமா இருக்கறதைப்
படமா எடுத்து அதை வைச்சி மிரட்டலாம்னு திட்டம்
போட்டு மோகன் காமிராவோட வந்து அலமாரியில்
காத்துக்கிட்டிருந்தான். நான் கொலை பண்ணதைப்
படமா எடுத்துட்டான். அதுக்கப்புறம் என்னை மிரட்ட
ஆரம்பிச்சான். வீட்டுல ஒரு மறைவான அறையிலே
போட்டோவையும் நெகடிவையும் வச்சிருந்தான். அதுக்
கான சாவியை இங்கே தவற விட்டான். அவன் வீட்டு
லாக்கரை மூடிட்டா திறக்கறதுக்கு சாவி வேணும். அதைத்
தான் அவன் இங்கேயே விட்டுட்டுப் போயிட்டான். அதை
எடுக்கத்தான் அவன் வந்திருக்கான். உங்களுக்கு அதனால்
அவன் மேல் சந்தேகம் வந்திடுச்சி.

அவன் முகவரியைக் கேட்டீங்க. அவனைப் பிடிச்சி
அடிச்சா எங்கே உண்மையைச் சொல்லிடுவானோன்னு
நான்தான் பினாக்கியைக் கூப்பிட்டு அவனைத் தீர்த்துக்
கட்டச் சொன்னேன். அவன்கிட்ட இருக்கிற போட்
டோவையும் நெகடிவையும் கொளுத்தச் சொன்னேன்.
வங்கி லாக்கர்ல படம் வச்சிருப்பான்னு நான் கொஞ்சம்
கூட எதிர்பார்க்கலே'' என்று திக்கித் திணறி அழுகை
யினூடே சொல்லி முடித்தாள் மாதவி.

கதம்பா கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள் ஒரு
தாய் நிலையில் இருந்த மாதவி இவ்வளவு கீழ்த்தரமாகப்
போவாள் என்பதை அவளால் நம்பவே முடியவில்லை.

''தம்பியோட சேர்ந்துதானே இருக்கணும்னு திட்
டம். போங்க...அந்த லாக்கப்புலதான் கருப்பையா இருக்
கான்'' என்று மாதவியை லாக்கப்பில் அடைத்துவிட்டு
ஒரு பெருமூச்சுவிட்டான் பார்த்திபன்.

MITHRAVINTHA

''இப்படியே உம்முனு இருந்தா என்ன அர்த்தம்?'' என்று கேட்டான் பார்த்திபன்.

''நான் என்ன செய்யணும்?'' என்று கேட்டாள் கதம்பா.

''சிரிக்கணும். ஜாலியா இருக்கணும். எனக்கு முத்தம் கொடுக்கணும்.''

''என்னது?''

''மன்னிச்சிக்கோம்மா. கடமை முடிஞ்சது. காதல் வந்திரிச்சி. நான் உனக்கு முத்தம் கொடுக்கணும்'' என்று எழுந்தான் பார்த்திபன்.

''தம்பி...தம்பி...இரு...இரு...அதோ லாக்கப் ஒண்ணு காலியா இருக்கு பாரு. அதுக்குள்ள போயிருங்க. தனியா இருக்கும். யார் தொந்தரவும் இருக்காது'' என்றார் இருதயசாமி.

''போங்கண்ணே'' என்று சொல்லி வெட்கமாகத் திரும்பினாலும், பார்த்திபன் கதம்பாவை நோக்கி முன்னேறினான்.

''தம்பி...இரு...இரு...தாலி ஒண்ணு வாங்கிட்டு வந்திட்டேன். அதையும் கட்டிட்டீங்கன்னா உங்களை எந்தப் பயலும் தட்டிக் கேக்க முடியாது. போலீஸ் ஸ்டேசன்ல இன்ஸ்பெக்டர் காதலர்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணுங்கறது மட்டுமில்ல, கல்யாணமும் பண்ணிக்கலாம்'' என்று சொல்லிவிட்டு வெளியே ஓடினார் இருதயசாமி.

பார்த்திபன், கதம்பா இருவரும் இருதயசாமி சொன்னதைக் கவனிக்காமல் ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவதைப் போல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் இருவரின் இதழ்களும் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றை ஒன்று நெருங்கின.

**முற்றும்**

MITHRAVINTHA